2980

T.N.L.A. Debates

Official Report

Vol a No 3

25th April 1987

C

D
211,31 N87
N87.40.3
136525

## உள்ளடக்கம்

**25—4—1987**


| | பக்கங்கள் |
|---|---|
| 1 வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 703—729 |
| 2 கவன ஈர்ப்பு— | |
| (அ) தஞ்சை மாவட்டம் பாபநாசத்தில் காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் | 729—731 |
| (ஆ) நிரந்தரமாக்கப்படாத அரசு ஊழியர்களின் நிலை. | 731—735 |
| (இ) நீலகிரி மாவட்டம் கூடலூர் மருத்துவ மனையில் படுக்கை வசதிகளை அதிகரித்தல் | 735—737 |
| (ஈ) தூத்துக்குடி மருத்துவமனையில் படுக்கை வசதிகளை அதிகரித்தல் | 737—741 |
| (உ) வாலாஜாபாத் ஒன்றியத்திலுள்ள சாயத் தொழிற்சாலைகளின் கழிவு நீரால் பாதிப்பு | 741—743 |
| (ஊ) தோப்பூர்—மேட்டூர்—பவானி சாலையில் காவிரி ஆற்றின் குறுக்கேயுள்ள பாலத்தில் பழுது | 743—746 |
| (எ) திருச்சி மாவட்டம், கோட்டத்தூர்-புத்தனாம்பட்டி சாலையில் காட்டாற்றின் குறுக்கே பாலம் கட்டவேண்டியதன் அவசியம் குறித்து | 746—747 |
| (ஏ) சேலம்-ஆத்தூர் சாலையில் ஏற்பட்ட விபத்து | 747—749 |
| (ஐ) காட்டுமன்னார்கோயில் ஆதி திராவிடர் மாணவியர் விடுதி | 749—752 |
| (ஒ) காவிரி நீர்ப் பிரச்சினை | 752—759 |
| 3 வரவு-செலவுத் திட்டம் 1987–88 வாக்கெடுப்பு —(தொடர்ச்சி) | |
| (அ) கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் | 759—863 |
| (ஆ) கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் | |
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் .. | 842—862 |
| திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா .. | 761—767 |
| திரு. ஆ. பிரேம்குமார் .. .. | 767—773 |
| திரு. அ. ரகுமான்கான் .. .. | 773—785 |


டி 2 எ 68—1

| | |
|---|---|
| திரு. கே. குப்புசாமி .. | .. 785—794 |
| திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் | .. 795—799 |
| திரு. ஆர். தியாகராசன் .. | .. 799—800 |
| திரு. மு. மாரிமுத்து .. | .. 800—806 |
| திரு. கே. சுப்பராயன் .. | .. 806—814 |
| திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் | .. 814—817 |
| திரு. ஆ. சந்திரசேகரன் .. | .. 817—820 |
| திரு. வை. பாலச்சந்திரன் .. | .. 820—824 |
| திரு. வி. பி. சிந்தன் .. | .. 824—932 |
| திரு. கே. பாலாஜி .. | .. 838—834 |
| திரு. டி. ஆர். வேங்கடரமணன் | .. 835—843 |
| 4 அரசினர் தீர்மானம்— விதி 32-ஐத் தளர்த்தல் .. | — 794 |
| 5 பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் | .. 864 |


2950.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**1987, ஏப்ரல் 25, சனிக்கிழமை**

சித்திரை 12, பிரபவ—திருவள்ளுவர் ஆண்டு 2018

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில் ''.

குடிகளைப் பிறர் வருத்தாமல் காத்து, தானும் வருத்தாமல் காப்பாற்றி அவர்களுடைய குற்றங்களைத் தக்க தண்டனையால் ஒழித்தல் அரசனுடைய தொழில், பழி அன்று.

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 494 முதல் 500 வரை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

### மாவட்டங்களில் பனைப் பொருள் உறபத்தி மையங்கள் ஏற்படுத்தல்

501—(*வினா எண். 9323) திரு. பி. என். இராமச்சந்திரன் : மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எல்லா மாவட்டங்களிலும் பனைப்பொருள் உற்பத்தி மையங்கள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. பி. என். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனையிலிருந்து கிடைக்கின்ற, அதன் துணைப் பொருள்களாக இருக்கின்ற நாரிலிருந்து செய்யப் படுகின்ற பொருள்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்

படுகின்றனவா ? அப்படி என்றால் எந்தெந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது ? அதன் மூலமாக நமக்குக் கிடைக்கின்ற அன்னியச் செலாவணி என்ன என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனை நாரிலிருந்து செய்யப் படுகின்ற பல்வேறுவிதமான பைகள், அது போலவே, பன்னப் பொருளிலே இருந்து உற்பத்தியாகின்ற சின்னச் சின்ன, அழகான வண்ணப் பெட்டிகள் இவற்றையெல்லாம் வெளிநாடுகளிலிருந்து வருகின்ற வெளிநாட்டுப் பயணிகள் மிகுந்த ஆர்வத்தோடு வாங்கிச் செல்கின்றார்கள். பனைத் தும்பு என்று சொல்லப் படுகின்ற நார்ப் பொருள் இங்கேயிருந்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. சென்ற ஆண்டு ரூ. 75 இலட்சம் பனைத் தும்பு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. ஜப்பான் போன்ற நாடுகள் அவற்றை நம்மிடத்திலேயிருந்து வாங்குகின்றன.

திரு. பி. என். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனைத் தும்புகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். பனைத் தும்புகளிலிருந்து பிரஷ் போன்றவற்றைத் தயாரிப் பதற்கு ஏதேனும் ஆய்வுகள் நடத்தப்பட்டிருக்கின்றனவா ? பனையிலிருந்து வேறு ஏதாவது பிற பொருள்கள் தயாரிக்க ஆய்வு நடத்தப்படுகிறதா ? அல்லது, அது குறித்து வெளிநாடுகளில் எல்லாம் முதிர்ந்த அணுகு முறையில், நன்கு உயர்ந்த வகையில் பொருள்கள் தயாரிக்கின்றார்களே, அது குறித்து ஆய்வு செய்ய வெளிநாடுகளுக்கு யாரையேனும் அனுப்பியிருக்கிறதா ? இல்லை யென்றால், இனி வரும் காலங்களில் அனுப்புமா ? அதுபற்றி ஏதேனும் தொழில் தொடங்க அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனைத் தும்பு என்று அழைக்கப் படுகிற ஃபைபர் பொருள்மூலம் மூக்குக் கண்ணாடிக்குத் தேவைப் படும் ஃப்ரேம் தயாரிக்கப்படுவதாக அறியப்படுகிறது. அதைப் போலவே, வேகமாகச் செல்கின்ற பந்தயக் கார்களுக்குத் தேவை யான கார் பாகங்களைக் கூட அந்த ஃபைபர் பொருளைக் கொண்டு ஜப்பான், ஜெர்மன் போன்ற நாடுகளிலே தயாரிக் கிறார்கள் என்று அறியப்படுகிறது. இதையெல்லாம், நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களிடத்திலே எடுத்துச் சொன்னபொழுது அதை நல்ல முறையிலே ஆய்ந்து அறிவதற்கு யாராவது ஒருவரை நாம் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று சொல்லி யிருக்கிறார்கள். விரைவில் அப்படி அனுப்பி வைக்கப்படும். அவர்கள் சென்று வந்ததற்குப் பிறகு, வெளிநாட்டில் எப்படி அதைத் தயாரிக்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து பிறகு நம்முடைய நாட்டிலும் அத்தகைய ஒரு தொழிற்சாலை





நிறுவுவதற்கும் அதன்மூலமாகப் பல கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு தருகின்ற சூழ்நிலை இருக்குமானால் வெளி நாட்டுத் துணையோடு நாமும் அத்தகைய ஒரு தொழிற்சாலையை உருவாக்க இந்த அரசு ஒரு வாய்ப்பு உருவாக்கித் தரும் என்று மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் அவர்கள் கருத்து தெரிவித்து இருக்கிறார்கள்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பனைவெல்லத்திற்கு, சர்க்கரைக்குச் சமமாக விற்பனை வரி விதிக்கிறார்கள். அதன் காரணமாக, பனைவெல்ல உற்பத்தி பாதிக்கப்பட்டு பனையேறும் தொழி லாளர்களுடைய தொழில் பாதிக்கப்படுகின்றது. அதே நேரத்திலே தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற சர்க்கரைக்குச் சமமாகப் பனை வெல்லத்திற்கு விற்பனை வரி விதிப்பது நியாயம் அல்ல. ஆகவே, அரசு மறுபரிசீலனை செய்து பனை வெல்லத் திற்கு விற்பனை வரியை ரத்து செய்வதற்கு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனை வெல்லத்தின் மூலமாக தனியார் வியாபாரிகள் நிறைந்த இலாபத்தைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, வரியை விலக்குவதன் மூலமாக வியாபாரிகளுக்குத்தான் நாம் இலாபத்தை ஏற்படுத்தித் தருவோமே தவிர, அதனால் உற்பத்தியாளர்களுக்கு எந்த இலாபமும் கிடைக்கப் போவதில்லை.

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனையிலிருந்து அதிகமான பொருள்கள் அளிப்பதற்கு தோதுவாக இருந்துவருகிறது. பனை வாரியம் தனியாக அமைக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா? அப்படி அமைக்கப்படக்கூடிய வாரியத்தை பனை மரங்கள் அதிக மாக இருக்கக்கூடிய நெல்லைமாவட்டம், சிதம்பரனார் மாவட்டத்தில் அமைப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே, பனை மரத்திலிருந்து கிடைக்கிற அத்தனைப் பொருள்களும் பயன்படுகின்றன. கற்பக விருட்சம் என்று ஒரு காலத்திலே அழைக்கப்பட்டது இந்தப் பனை மரந்தானோ என்று நினைக்கிற அளவுக்கு சூழ்நிலை இருந்து வருகிறது. இந்தியாவில் இருக்கிற 8 கோடி பனை மரங்களிலே 5 கோடி பனைமரங்கள் தமிழகத்திலே நாம் பெற்றிருக்கிறோம். பனைவாரியம் தனியாக அமைக்கப்படுகிற கருத்து அரசின் ஆய்வில் உள்ளது. அப்படி அமைக்கப்படுகிறபோது அதிகமாக பனைத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற மக்கள் இருக்கிற மாவட்டத்தில் அமைப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இசைவைத் தருவார்கள், என்ற நம்பிக்கை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இருக்கவேண்டுமென்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

[1987 ஏப்ரல் 25

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் திருக்குறளை பனையோலையிலே தான் எழுதினார். நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள்கூட சட்டமன்றத்தைத் துவக்குகிறபோது தினமும் திருக்குறள் சொல்லித்தான் துவக்குகிறார்கள். சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகளை பனையோலையிலேயே அச்சடித்துக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ? இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு வேலைவாய்ப்பை அதிகமாக ஏற்படுத்துவதற்கு ஏற்ற முறையிலே, சட்டசபை நடவடிக்கைக் குறிப்புகளை பனையோலையிலேயே அச்சடித்துக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனையோலையிலே அதை அச்சடித்துத் தருவது என்பது அதிகமான செலவை ஏற்படுத்தும். இன்னொன்று பனையோலையிலே இருந்தால் அதை நாம் ஜாக்கிரதையாகக் கையாளவேண்டும். இல்லாவிட்டால் நொறுங்கிவிடும். மாண்புமிகு உறுப்பினர் சில நேரங்களிலே பொறுமை இழந்துவிடுகிற காரணத்தினாலே அது உசிதமல்ல. (சிரிப்பு)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: சட்டமன்றத்தையும் ஆலமரத்தடிக்குக் கொண்டுபோய் அங்கேயே நடத்துவது என்று முடிவு செய்வோமானால் அதைப் பனையோலையிலே தரலாம். (சிரிப்பு)

திரு. வி. பி. சிந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஆலமரத்தடிக்கு வருவார்களா என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆலமரத்தடியிலிருந்து தான் நாம் எல்லோரும் இங்கே வந்திருக்கிறோம். (பலத்த சிரிப்பு.)

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனைப் பொருள்களில் எதுவுமே வீணாவதில்லை என்பது பழமொழி. பனைப் பொருட்களிலே என்ன என்ன செயல்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புவதோடு பனையோலைத் தொழில் சம்பந்தப்பட்ட சொசைட்டிகள் இருக்கின்றன, அங்கே வேலை பார்க்கிற பெண்களுக்கு சம்பளம் குறைவாக இருக்கிறது. அந்தப் பனைத் தொழில் செய்யக்கூடிய சொசைடிகளுக்கு மானியம் கொடுக்க இந்த அரசு முன்வருமா ? அதைப்போல பனங்கற்கண்டு போன்ற பொருள்களுக்கு கலப்படத் தடைச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கச் சொல்லி மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யுமா ?



1987 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனைப் பொருட்களில் என்ன என்ன பொருட்கள் தயாரிக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார்கள். அது ஒரு நீண்ட பட்டியல். தனிக் கேள்வி போட்டால் தனியாக வழங்கப்படும். தற்போது அங்கே வேலை செய்கிற பெண்கள் 3 ரூபாயிலிருந்து 10 ரூபாய்வரை சம்பாதிக்கிறார்கள். அது அவரவர்களின் கைத் திறமையைப் பொறுத்தது. ஆகவே வேறு வகையிலே சம்பளத்தை உயர்த்தலாம் என்றால் தயாரிக்கப்படுகிற பொருட்களின் விலை அதிகமாகும். பொருள் விலை அதிக மாகிறபோது வாங்குகிறவர்களின் எண்ணிக்கை குறைய வாய்ப்பு ஏற்படும். அடுத்து பனங்கற்கண்டிற்கு கலப்படத் தடைச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு தர வேண்டும் என்று கோருகிறார்கள். எதெதிலோ கலப்படத்தை செய்து விடுகிறார்கள். இது சாப்பிடுகிற முக்கியமான பொருள். பனங் கற்கண்டு இன்னும் குறிப்பாக வைத்தியத்திற்கு முக்கியமானது. ஆகவே கலப்படத் தடைச் சட்டத்திலிருந்து விதிவிலக்குத் தருவது முடியாத காரியம்.

திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பனைப் பொருட்கள் வாரியம் அமைக்கப்படவேண்டுமென்பது நீண்ட நாட்களாக கேட்கப்பட்டு வந்து பெருந் தலைவர் காமராஜர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லப்பட்டு, இப்போது வரை பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. உண்மையிலேயே அந்த வாரியத்தை அமைப்பதிலே அரசுக்கு இருக்கிற சங்கடங்கள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர் சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல் காமராஜர் ஆட்சிக் காலத்திலே துவங்கப் பட்டது இடையிலே, விடப்பட்டது. அதற்குப் பிறகு பிரச்சினையே எழவில்லை. ஆனால் தமிழக முதல்வராக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகுதான் கிராம மக்கள் நலன் கருதி கிராம மக்களின் பொருளாதாரத்தை உயர்த்தவேண்டுமென்று கருதி, கிராமங்களிலே—கிராமங்கள் சிறு நகரங்களாக மாற வேண்டு மென்ற முறையிலே—சிறுதொழில்களை உருவாக்கவேண்டு மென்ற உணர்வோடு கதர் கிராமத்தொழில் துறையில் உள்ள பனைப்பொருட்கள் சம்பந்தப்பட்டு ஒரு தனி வாரியம் அமைக்க வேண்டுமென்று அவர்கள் தான் உரிய நடவடிக்கையை மேற் கொண்டிருக்கிறார்கள். விரைவில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணம் நிறைவேறும்.

[1987 ஏப்ரல் 25

கதர்த்துறை சார்பில் கிராமங்களை தத்து எடுத்தல்.

502.—( *வினா எண். 9746) திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர்த்துறை சார்பில் கிராமங்களை தத்து எடுக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்ன என்ன கிராமங்கள் தத்து எடுக்கப் பட உள்ளன ? மாவட்ட வாரியாக.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

(அ) மற்றும் (ஆ) விடை** அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 10.10)

திரு. எஸ். இராசாராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, கதர்த் துணிகள் நகராட்சிப் பகுதிகளில்தான் இப்பொழுது கிடைத்துக் கொண்டிருக்கின்றன. கிராமப் பகுதிகளிலும் பேரூராட்சிப் பகுதிகளிலும் சரிவர கிடைப்பதில்லை. அதனால் தள்ளுபடி காலங்களில் கிராமப் பகுதிகளிலே கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதும் தள்ளுபடி காலங்களில் அந்த அந்த ஒன்றியத்திலே கொண்டு வந்து வைத்து, நம்முடைய கதர் வாரியமே விற்பனை செய்து வருகிறது. அது மட்டுமல்லாமல், நடமாடும் கதர் அங்காடியைக் கூட தற்போது துவங்குவதற்கு ஆய்வு செய்து 3 நடமாடும் கதர் அங்காடிகள் ஆங்காங்கே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய எண்ணம் ஈடேறும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கதர் வாரிய கைத்தொழில்கள்.

503—(*வினா எண் 12455) திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் கதர் வாரியத்தின் மூலம் மேற்கொண்டுள்ள கைத் தொழில் பணிகள் என்னென்ன ?

** 865-866ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



1987 ஏப்ரல் 25]

(ஆ) அதன் மூலம் பயனடையும் குடும்பங்கள் எண்ணிக்கை எத்தனை ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) விடை **அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் கதர் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் கைத்தொழில் பணிகள் குறித்தும் அதன் மூலமாக 5,852 குடும்பங்கள் பயன் அடைந்து வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், குளத்தூர் தொகுதியில் என்ன என்ன பணிகள், எந்த எந்த இடத்தில் நடைபெற்று வருகின்றன என்ற விவரத்தையும், பயன் அடைந்து வரும் குடும்பங்கள் விவரங்கள் பற்றியும் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலக் கேள்வியாகக் கேட்டிருப்பது புதுக்கோட்டை மாவட்டத்தில் கதர் வாரியத்தின் மூலம் மேற்கொண்டுள்ள கைத்தொழில் பணிகள் என்னென்ன? அதன்மூலம் பயனடையும் குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனை ? என்பதாகும். ஆகவே, ஒட்டுமொத்தமாக அதற்கு விடை அளிக்கப்பட்டிருக்கிறது. குளத்தூர் தொகுதி என்று அவர் தனியாகக் கேட்டிருப்பாரானால் தனியாகத் தந்திருக்க முடியும்.

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்ட அளவிலும் தனித் தொகுதியான குளத்தூர் தொகுதியிலும் விவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ள கைத்தொழில்கள் மூலம் பயன் அடைந்த ஆதி திராவிட குடும்பங்கள் எண்ணிக்கை என்ன என்பதை அறிய விரும்புவதோடு, குளத்தூர் தொகுதியில் கதர்த் துறையின் மூலம் கிராமங்களைத் தத்தெடுத்துக் கொண்டு அதிக அளவில் ஆதிதிராவிட மக்கள் பயன்படுமாறு இந்த ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் வாரிய அலகுகளின் மூலமாகவும் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும் தனிப்பட்ட நபர்கள் மூலமாகவும் 5,852 கைவினைஞர் குடும்பத்தினர் முறையான வேலை வாய்ப்பு பெற்று இந்த வாரியத்தினால் அவர்கள் வாழ்க்கையினை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அது போலவே, அம்மாவட்டத்தில் பல்வேறு தொழில்கள் மூலமாக 1,137 தனிப்பட்ட நபர்களுக்கு நிதி உதவி வழங்கப்

**866ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

பட்டு அவர்களும் தொழிலைச் செய்து கொண்டிருக்கிறார்கள். குளத்தூர் தொகுதியில் தனியாக வேண்டுமானால் எந்த எந்தப் பகுதியில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கதர் வாரியத்தின் மூலமாக, தொழில்கள் எல்லாம் அமைக்கப்பட வேண்டுமென குறிப்பிட்டால் உரிய நடவடிக்கையை இந்தத் துறை மேற்கொள்ளும்.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் பெண்களுக்குப் பணி கிடைக்கும் வகையில், கிராமங்களில் உள்ள பெண்களை ஒவ்வொரு ஊராட்சி மன்றமும் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு அம்பர் ராட்டை வழங்குவதற்கு வழிவகை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பர் ராட்டையின் மூலமாகவும் தற்போது பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அம்பர் ராட்டையின் மூலம் பணியாற்றுகின்றபொழுது அவர்களுக்குக் கிடைக்கிற கூலி போதுமானதாக இல்லை. ஆகவே, நேப்பாளித் தறியின் மூலமாக அவர்களுக்கு அதிகமான கூலியை வழங்கலாம் என்ற நிலையில் நம்முடைய கதர் வாரிய அலகு எடுத்துச் சொன்னதையொட்டி, தற்போது அந்தத் தறிகளை நாங்கள் கிராமங்களில் அமைத்து வருகிறோம். அதன் மூலமாக முன்பு பெற்றதைவிட தற்போது 1/2 பங்கு அதிகமான சம்பளத்தை அவர்கள் பெறுகிறார்கள். அந்தத் தறியிலே பெண்கள் நூற்பதன் மூலமாக வேகமாகவும் பணியாற்றுகின்ற ஒரு திறமையை பெற்றிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பணிகளை இப்போது நாம் மேற்கொண்டிருக்கிறோம்.

திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கதர்த் துறை வாரியத்தின் மூலமாக மலைப் பகுதியிலே வாழ்கிற மக்கள் எந்தத் தொழிலும் செய்யத் தெரியாமல் கஞ்சா, அபின் போன்ற பயிர்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதையும் மீறினால் மரத்தை வெட்டி விற்று அதிலே பிழைப்பு நடத்துகிறார்கள். நாம் சமுதாயக் காடு வளர்க்க வேண்டுமென்ற அடிப்படையில், புரட்சித் தலைவர் அவர்கள் மரங்களை நட திட்டமிட்டுக் கொண்டிருக்கிற நேரத்தில் இது போன்ற மலைவாழ் பகுதியிலே இந்த கச்சாப் பொருளை, மூலப் பொருளைக் கொடுத்து தொழில் செய்யலாம் என்று கற்றுக் கொடுத்து, கிராமத் தொழில் திட்டத்தை மலைவாழ் மக்களுக்கு தமிழக அரசு செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் மீது மிகுந்த கவனத்தோடு, மிகுந்த ஈடுபாட்டோடு கதர் கிராமத் தொழில் துறை, அவர்களையும் இந்தப் பணியில் ஈடுபடுத்தியிருக்கின்றது. குறிப்பாக தேன் சேகரித்தல், கடுக்காய் போன்றவைகளை சேகரித்து அளித்தல் இவைகளையெல்லாம் வழங்குகின்ற அந்த வாய்ப்பினையும்





அதோடு மட்டுமல்லாமல் வேறு எந்தத் தொழில் செய்ய வேண்டுமென்று அவர்கள் பிரியப்படுகின்றார்களோ அந்தத் தொழிலுக்குத் தேவையான உதவிகளையும் செய்கின்றது. சில இடங்களில், அவர்கள் கூட நூல் நூற்பதற்கு எங்களுக்கு உதவி தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். அவைகளையும் செய்து கொண்டிருக்கிறோம்.

### உதவித் தொகைகளை மணியார்டர் மூலம் அனுப்புதல்

504 (*வினா எண் 12876) திரு. பி. பழனிமுத்து : மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதியோர் உதவித் தொகை, ஊனமுற்றோர் உதவித் தொகை, விவசாயக் கூலிகள் உதவித் தொகைகள் மணியார்டர் மூலம் அனுப்புவதால் தாமதம் ஏற்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) உதவித் தொகைகளை கிராம நிர்வாக அலுவலர்கள் மூலமாக பணத்தை விநியோகம் செய்ய அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) காலதாமதம் தவிர்ப்பதற்குரிய தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. நடைமுறையில் தாமதங்கள் நிகழக் கூடும். குறிப்பாக தவறுகள் சுட்டிக் காட்டப்படுமானால் அதற்குரிய காரணங்கள் ஆராயப்படும்.

(ஆ) கிராம நிர்வாக அலுவலர்களின் மூலம் பணம் விநியோகம் செய்வது நிர்வாக காரணங்கள் பொருட்டு ஏற்பதற்கில்லை.

திரு. கு. சிவராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முதியோர் உதவித்தொகையைப் பெறுகிறன்வர்கள் குறிப்பாக கிராமப் புறத்திலே இருக்கின்றவர்கள், முதிர்ந்த, கல்வி அறிவு இல்லாதவர்களாக, ஒரே இடத்தில் நிலையாக இல்லாதவர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த மணியார்டர் மூலமாக அனுப்புகின்ற பணம் போய்ச் சேரவில்லை என்ற புகார் நிறைய இடத்தில் இருந்து கொண்டிருக்கிறது. அவர்களுக்கு கிராம நிர்வாக அலுவலர்கள் மூலமாக அல்லது அங்கேயிருக்கின்ற ஊராட்சி மன்றங்கள் மூலமாக உதவித் தொகையை வழங்குவதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, இந்த முதியோர் உதவித் தொகை சம்பந்தப்பட்டவர்களுக்கு முறையாகப் போய்ச்சேருகின்றதா என்று ஒவ்வொரு கால் ஆண்டிலேயும் கோட்டாட்சியரால் தணிக்கை செய்யப்படுகிறது.

அத்தகைய இடையூறுகள் ஏதாவது பணம் கொடுப்பதிலே ஏற்படுமானால் உடனடியாக அவைகளை நீக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. புதுக்கோட்டை மாவட்டத்தில் அஞ்சலகத்தில் முதியோர் உதவித் தொகையை மணியார்டர் மூலம் அனுப்புவதில் கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தவுடன், சென்னை தலைமை அஞ்சலகத் துறைத் தலைவரை அணுகி எல்லா மாவட்ட அஞ்சலகத்துறை கண்காணிப்பாளரும் முதியோர் உதவித் தொகை மணியார்டர்களை உடனுக்குடன் தாமதம் இன்றி அனுப்பிவைக்க வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு நம்முடைய ஆணையாளர் அவர்கள் கூறியுள்ளார்கள்.

திரு ஐ. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, தற்போது முதியோர் உதவித் தொகை மாதக் கடைசியில் கிடைக்கின்ற நிலைமை இருந்து வருகிறது. இதற்கிடையே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தற்போதுள்ள 23.000 முதியோர் உதவித் தொகைக்கான மனுக்களுக்கும் பணம் அளிப்பதாக அறிவித்திருப்பதாக செய்திகள் வருகின்றன. அதற்கு நன்றிதெரிவிக்கும் அதே நேரத்தில் ஒரு அஸிஸ்டென்ட் 300 பேர்களுக்கு முதியோர் உதவித் தொகைகளை மணியார்டர் மூலமாக அனுப்ப வேண்டும் என்று அரசு அறிவித்துள்ளதால் புதியதாக இந்த 23,000 பேர்களுக்கு முதியோர் உதவித் தொகை அனுப்பப் போகிறார்களே அதற்காக கிளார்க் போஸ்ட்கள சாங்ஷன் ஆகின்றதா? சாங்ஷன் ஆகின்றது என்றால் அவர்களை உடனுக்குடன் நியமித்து இந்த 23,000 பேர்களுக்கும் முதியோர் உதவித் தொகையை காலாகாலத்தில் கொடுக்கின்ற உதவியை, அதிலும் முதல் வாரத்திலேயே அவற்றை அனுப்புவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா? ஏனென்றால் அவர்களுக்கு 25, 26 தேதிகளில் தான் கிடைப்பதாக முதியோர்கள் வருத்தப்படுகிறார்கள். ஆகவே இந்த முயற்சிகளை அரசு செய்யுமா? அவைகளை அனுப்புவதற்கு கிளார்க் போஸ்ட்களை சாங்ஷன் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:— தலைவர் அவர்களே, 23,039 முதியோர்களுக்கு பணம் வழங்குவதற்கு முதலமைச்சர் அவர்கள் ஆணை இட்டதாக கேள்விப்படுகிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். இதை ஆணையாகவே அன்றைக்கு, முதலமைச்சர் அவர்கள் கட்டளையோடு நான் இங்கே சொன்னேன். அந்த நேரத்தில் அவர் இந்த அவையிலே இல்லை என்பதை அவரே தெரிவித்திருக்கிறார். 23,039 முதியோர்களுக்கும், சென்னையிலிருந்து அனுப்புவதில்லை. அந்தந்த மாவட்டத்தில் இருக்கின்ற மாவட்ட அலுவலர்கள் தான் அனுப்புகிறார்கள். தனியாக அவர்களுக்கு அலுவலர்கள் போட வேண்டிய தேவை இருக்காது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பிரச்சினைக்கும் தேவை இருக்காது.



## குழந்தைகள் சத்துணவுத் திட்டம்

505 (*வினா எண். 13570). திரு. டி. எம். வெங்கடாசலம் : மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவுக்காக ஆகும் செலவு எவ்வளவு?

(ஆ) மாணவர்களுக்கு சீருடை வழங்குவது போல் குழந்தைகள் காப்பகத்தில் உள்ள குழந்தைகளுக்கும் சீருடை வழங்கும் திட்டம் உள்ளதா?

(இ) சத்துணவுத் திட்டத்தினை தனி இலாக்காவாக பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சத்துணவுக்காக ஆகும் செலவு வருடத்திற்கு சுமார் ரூ. 175 கோடி.

(ஆ) இல்லை.

(இ) சத்துணவுத் திட்டத்தினை தனி இலாக்காவாக பிரிக்கலாமா என்பது பற்றிய கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 10.20)

திரு. டி. எம். வெங்கடாசலம் தலைவர் அவர்களே, சத்துணவுக்காக ரூ. 175 கோடியை புரட்சித் தலைவர் அரசு செலவு செய்கிறது. இங்கே மாணவர்களுக்கு சீருடை வழங்குகிறார்கள். அதேபோல், கிராமங்களில் இருக்கின்ற ஏழை எளிய குழந்தைகள் எல்லாம் ஆடைகள் இல்லாமல் அங்கே அவதிப்படுகின்ற சூழ்நிலையை நாங்கள் பார்க்கிறோம். அப்படிப்பட்ட குழந்தைகளுக்கு எல்லாம் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே சீருடை வழங்கி நல்வாழ்வுக்கு ஏற்பாடு செய்யுமா என்பதை உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். அது மறு பரிசீலனை செய்யப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக்கு வருகின்ற எல்லா குழந்தைகளுக்கும் இப்போது நாம் சீருடை வழங்கிக் கொ இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் எந்தக் குழந்தை பற்றிச் சொல்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை.

திரு. டி. எம். வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் காப்பகத்திலே இருக்கின்ற குழந்தைகளுக்கு சீருடை வழங்குவதைப் பற்றி மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1987 ஏப்ரல் 25

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் காப்பகத்திலே இருக்கின்ற குழந்தைகளுக்கும் சீருடை வழங்கவேண்டும் என்று பல்வேறு கோரிக்கைகள் வரப்பெற்று, அது அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. ரா. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களிலிருந்து, துணை மையங் களாகச் செயல்பட்டுக் கொண்டிருப்பது—குழந்தைகள் குறை வாக இருக்கிற காரணத்தால் துணை மையங்களாகச் செயல் பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த மையங்கள் ஆண்டு கால அளவில், 100 எண்ணிக்கைக்கு மேலாக இருக்கிற குழந்தைகள் வருகிறபடியால், அதையே மெயின் சென்டராக ஆக்குவதற் கான, மேம்பாடு அடைவதற்கான வாய்ப்பு இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 70 குழந்தைகளுக்குக் குறையா மல் இருந்தால் ஒரு மையம் ஆரம்பிக்கலாம். 30 அல்லது 40 குழந்தைகள் இருக்கின்ற இடங்களிலேதான் துணை மையங் களை நாம் நிறுவியிருக்கிறோம். அந்த 40 குழந்தைகள் இருக்கிற இடம், திடீரென்று 100 குழந்தைகள் இருக்கிற மையங் களாக மாறுகின்றது என்றால், ஜனத்தொகை வேகமாகப் பெருகுகிறது என்று பொருள். ஆகவே, அரசாங்கத்தினுடைய திட்டத்துடன் நாம் ஒத்துழைக்கவேண்டும். ஆனாலும், அவர்களுக்கு அந்த மையங்கள், நிரந்தர மையங்களாக இல்லாவிட்டாலும் சமைக்கின்ற இடத்திலிருந்து கொண்டு போய் கொடுப்பதை எந்தக் காரணத்தை முன்னிட்டும் நிறுத்தாமல் இந்த அரசு வழங்கிக் கொண்டே இருக்கும்.

### திருச்சி—தஞ்சை நெடுஞ்சாலையிலுள்ள குவளை வாய்க்கால்

506. (*வினா எண். 3988). திரு. எம். அண்ணாதாசன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி- தஞ்சை நெடுஞ்சாலையில் திருவெறும்பூர் பகுதியில் ஓடுகின்ற குவளை வாய்க்காலில் மழைக் காலங் களில் உடைப்பு ஏற்பட்டு, திருவெறும்பூர், வேங்கூர், நடராஜ புரம், அரசங்குடி ஆகிய ஊர்களில் உள்ள விளைநிலங்கள் பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இந்த வாய்க்காலை அகலப்படுத்தி பாதிப்பு ஏற்படாமல் தடுக்க அரசு செலவிட்ட தொகை எவ்வளவு ?



1987 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இவ்வாய்க்காலை அகலப்படுத்தி மேம்பாடு செய்யும் பணிகளுக்கு ரூ. 61,800-க்கு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு, இதுவரை ரூ. 50,600 செலவிடப்பட்டுள்ளது.

### குமரி மாவட்டம், நீரேற்றுத் திட்டங்கள்

507 (*வினா எண். 8007). திரு. எப். எம். இராசரத்தினம் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம், இரணியல்-வள்ளியாறு நீரேற்றுத் திட்டம், இராசாக்கமங்கலம்—பன்றி வாய்க்கால் நீரேற்றுத் திட்டம், ஆகிய திட்டங்கள் பற்றி அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மேற்கண்ட இரண்டு திட்டங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த கோதையாறு நீர்ப்பாசன மேம்பாட்டுத் திட்டத்தை தலைமைப் பொறியாளர் (ஆய்வு) தயாரித்து வருகிறார்.

திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு திட்டங்களும் உடனடியாக நிறை வேற்றப்படவேண்டிய திட்டங்கள் என்று அங்கே இருக்கின்ற மக்கள் விரும்புகிறார்கள். ஆகவே, அந்த வேலை எப்போது ஆரம்பிக்கப்படும் ? அது எப்போது முடிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது யு.எஸ். எய்டோடு நடக்கின்ற திட்டம். ஆகவே, அது மத்திய அரசாங்கத்திலே ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு இருக்கிற நேரத்தில் அவர்கள் ஒரு சில தகவல்களை எங்கள் மத்தியிலே கேட்டு இருந்தார்கள். அதை நாங்கள் தெரிவித்து இருக்கிறோம். அந்தத் திட்டத்திற்கு ரூ. 4,289 இலட்சங்கள் ஆகும்.

[1987 ஏப்ரல் 25

தஞ்சை மாவட்டம், காவேரி பாசன வாய்க்கால்கள்

508. (*வினா எண். 8346). திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் காவேரி பாசன பகுதி வாய்க்கால்களையும் வடிகால்களையும் அரசு செலவிலேயே பராமரித்துக் கொடுக்க செயற்குறிப்பு உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயலுக்கு வரும் ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பி.டபிள்யூ.டி.யைப் பொறுத்தவரை, 'ஏ' சானல், 'பி' சானல் ஆகியவற்றை அவர்கள் செய்கிறார்கள். ஒரு 'ரீச்' செய்து விட்டு, விட்டுவிடுகிறார்கள். அதிலே அடுத்த பகுதி பாதிக்கப்பட்ட பகுதியாக இருந்து, தண்ணீர்ப் பாசனத்திற்கு மிகவும் கஷ்டப்படுகிறது. ஆகவே, ஆண்டாவது அதை அரசு மறுபரிசீலனை செய்து, இந்த பகுதியிலே தண்ணீர் வரத்து கம்மியாக இருக்கக்கூடிய எங்கள் நேரத்தில், விவசாயிகளைக் காப்பாற்றுவதற்கு, இந்த வாய்க்கால் வடிகால்களையும் மராமத்து செய்து, எல்லா ஒழுங்காகப் போவதற்கு அமைச்சர் அவர்கள் தண்ணீர் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன். நடவடிக்கை

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை 123 'ஏ' கிளாஸ் சானலை மட்டும்தான் இன்றைக்கு ரிப்பேர் செய்து கொண்டிருக்கிறோம். அதேபோல் 696 வடிகால் ரிப்பேர் செய்கிறோம். 36 ஆறுகளில் உள்ள அந்த பாசன வாய்க்கால்களைத்தான் நாங்கள் இன்றைக்கு ரிப்பேர் செய்து கொண்டிருக்கிறோம். மீதி எல்லாம், குடிமராமத்து முறையில், இரண்டாயிரம் ஆண்டுக் காலமாக உள்ள நடை முறையிலே செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூரிலிருந்து தண்ணீர் வரத்து ஒரு நிலை இல்லாமல் வந்து கொண்டிருக்கிற காரணத்தால்— திடீரென்று தண்ணீர் கிடைக்கிறது. திடீரென்று தண்ணீர்



1987 ஏப்ரல் 25]

நின்று விடுகிறது. அந்த நிலையிலே, தஞ்சை மாவட் டத்திலே இருக்கின்ற வாய்க்கால்கள் எல்லாம் சில இடங்களிலே மேடாகவும், சில இடங்களிலே பள்ளமாகவும் உள்ளதால், சரியான முறையில் நீர்ப்பாசனத்திற்கு வசதி இல்லாமல் இருக்கிறது. இந்தக் காலம் மிகவும் வறட்சியான காலமாக இருக்கின்ற காரணத்தால், இந்த ஆண்டு, அந்தப் பகுதி மக்களுக்கு வேலை கொடுப்பதற்கு வாய்ப்பாகவும், அந்த வாய்க்கால்களை தூர் எடுக்க வாய்ப்பாகவும், போது மான விசேஷ நிதியை ஒதுக்கி இந்த ஆண்டிலே மராமத்து வேலைகளைச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வருஷம் ஏறத்தாழ இதற்காக ரூ. 1½ கோடி அளவுக்கு ஒதுக்கியிருக்கி றோம். மாண்புமிகு உறுப்பினர் எந்த வாய்க்கால் என்று குறிப்பிட்டுச் சொன்னால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டம் பாலாறு அணைக்கட்டு.

509—(*வினா எண் 9088) திரு. த. பழனி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் பாலாறு அணைக்கட்டில் உள்ள அணைக்காவலர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அதனை உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்சமயம் நான்கு கரைக்காவலர்கள் பணிபுரிகின்றனர்.

(ஆ) ஆம்.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, வடாற்காடு மாவட்டத்தில் இருக்கிற பாலாறு அணைக் கட்டில் ஏற்கெனவே 12 கரைக் காவலர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். அந்த 12 பேரில் 8 கரைக் காவலர்கள் இறந்துவிட்ட பிறகு அந்த இடங்களுக்கு புதிதாக ஆட்களை நியமித்து அந்தப் பதவிகள் பூர்த்தி செய்யப்படவில்லை. அப்படிப்பட்ட இடங்களைப் பூர்த்தி செய்ய அரசு முன்வருமா என்று கேட்டுக் கொள்வதோடு, அப்படிச் செய்யும்போது இறந்து

போன கரைக் காவலர்களுடைய பிள்ளைகளுக்கே அந்தப்
பணி கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்
றால் அவர்கள் பணியில் இருக்கும்போதே இறந்துவிட்டதால்
அந்தக் குடும்பத்தில் உள்ள அவர்களுடைய வாரிசுகளுக்கே
அந்த வேலைகள் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :
மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்தில் இப்போது
கரைக் காவலர் பதவிகளை நிரப்புவது தொடர்பாக சில
நார்ம்ஸ் ஃபிக்ஸ் செய்து அந்த அளவுக்குக் கரைக் காவலர்கள்
நியமிக்கப்படலாம் என்று அந்தந்தப் பகுதியில் உள்ள அதிகாரி
களுக்குச் சொல்லியிருக்கிறோம். அப்படிக் குறைவாக
இருந்தால் அந்தப் பகுதிகளில் கரைக் காவலர்களை அதிகரிக்க
வேண்டும் என்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறோம்.
பணிக் காலத்தில் இறந்தவர்களுடைய குடும்பத்தில் உள்ளவர்
களுக்கே அந்த வேலை கொடுக்க முடியுமா என்பதை ஆராய்ந்து
பார்த்துதான் சொல்ல முடியும்.

திரு. த. பழனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
அங்கே போடப்பட்டிருக்கிற கரைக் காவலர்கள் எல்லாம் அங்கே
இருக்கிற பொதுப்பணித்துறை இல்லங்களிலேதான் வாட்ச்
மென்களாகப் போடப்பட்டிருக்கிறார்கள். கரையைக் காப்பதற்
காக நியமிக்கப்பட்ட அந்தக் கரைக் காவலர்கள் அணைக்கட்டில்
பணியாற்றுவது கிடையாது. பொதுப்பணித் துறை ஆய்வாளர்
மாளிகையிலேயே அவர்கள் குடியிருக்கிற காரணத்தால் அங்கேயே
வாட்ச்மென்களாகப் பணியாற்றுகிறார்கள். எனவே கரைக்
காவலர்களாகப் போடப்படுகிறவர்கள் கரைக் காவலர்களாகவும்,
பொதுப் பணித் துறையைச் சார்ந்த ஆய்வாளர் மாளிகைக்கு
தனியாக வாட்ச்மென்கள் நியமிக்கப்பட்டு பணி புரிய வேண்டும்
என்றும் அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :
அப்படி எங்காவது தவறுதலாக நடந்து கொண்டிருக்கிறது என்று
எனக்குச் சுட்டிக்காட்டினால் அதுபற்றி தகுந்த நடவடிக்கை
எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## உசிலம்பட்டி தாலுக்கா வைகை மேம்பாட்டுத் திட்டம்.

510—(*வினா எண் 9386) திரு. பி. கே. எம். முத்துராம
லிங்கம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்
கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தாலுக்காவில், வைகை மேம்பாட்டுத்
திட்டத்தின் கீழ், வைகை கால்வாய் நவீனப்படுத்துதல் திட்டத்
தில், 58 கிராம கால்வாய் திட்டம் நிறைவேற்றப்பட உள்ளதா?



(ஆ) அந்த திட்டம் பற்றி என்ன நடவடிக்கை அரசு மேற்
கொள்ள விருக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ):
வைகை அணையின் கீழே கட்டப்பட்டிருக்கும் எடுப்பு அணையின்
(pickup anaicut) வலப்புறத்தில் ஒரு கால்வாய் அமைத்து
தற்போதுள்ள மல்லாட்டு ஓடைமூலம் மதுரை மாவட்டம், உசிலம்
பட்டி வட்டத்தைச் சேர்ந்த 58 கிராமங்களுக்குப் பாசன வசதி
அளிப்பதற்கான திட்டம் சிக்கனமற்றதாக இருப்பதால் கைவிடப்
பட்டது.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 1916ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒரு
சுதந்திரப் போராட்டக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்கள்
என்ற முறையில் அதற்குப் பின்னாலே 1928 ஆம் ஆண்டிலே
ஆங்கிலேயர்களே இந்தப் பகுதி மக்களை மேம்படுத்த வேண்டும்
என்ற நோக்கத்தோடு இந்த அமைப்பை உருவாக்கினார்கள்.
அதற்கு இந்த மன்றத்தின் முன்னாள் உறுப்பினராக இருந்த
அன்பிற்குரிய மறைந்த திரு. மூக்கையா தேவர் அவர்களே 1958-ம்
ஆண்டிலே பரிந்துரை செய்து எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.
அதற்குப் பின்னாலே 1985 ஆம் ஆண்டில் கூட இது ஆய்வு
செய்யப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள்
இருக்கின்றன என்பதைக் கூட ஆணையரிடத்திலிருந்து பெற்ற
குறிப்புகள் கூறிக் கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட சூழ்
நிலையில் பெரிய தொழில்கள் ஏதுமில்லாத நிலையில் அந்தப்
பகுதி மக்கள் இருக்கிறார்கள். எனவே அவர்கள் விவசாயத்தை
மட்டுமே நம்பி இருக்கக் கூடிய மக்கள் என்கிற காரணத்தால்,
அந்தப் பகுதிக்கு இந்தத் திட்டம் அத்தியாவசியமான திட்டம்.
எனவே இதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்
கள் இதை மீண்டும் மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில்
கிராமங்கள் தான் 58 என்று இருக்கிறது. ஆனால் 15 கண்
மாய்களுக்குத் தான் இதில் பாசன வசதி கிடைக்கிறது, அதாவது
900 ஏக்கருக்கு மட்டும்தான் பாசன வசதி கிடைக்கிறது. மேலும்
கால்வாயை வெட்டுகிற போதே கால்வாயைவிட கண்மாய் உயரம்
10 அடி உயரமாக இருந்த காரணத்தால் கால்வாயிலிருந்து கண்
மாய்க்குத் தண்ணீர் ஏறாது என்று அதிகாரிகளும் சொல்லியிருக்
கிறார்கள். எனவே 900 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி
கிடைக்கும். அந்தத் திட்டத்தின் மதிப்பீடு 16,80,00,000
ரூபாய் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். வேலை ஆரம்பித்தால்
20 கோடி ஆகி விடும். ஆனால் பாசனத்திற்கு 900 ஏக்கருக்கு
மட்டும்தான் பயன் கிடைக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப் படுகிற அமைப்புகளை ஏற்படுத்துகிறபோது அதில் பொருளாதார ரீதியாக அரசுக்கு உதவியாக இருக்குமா என்று பார்ப்பதில் நியாய மிருப்பதாக எனக்குப்படவில்லை. மக்களுக்குத் தேவை என்கிற முறையில் இதை அரசு மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 1985 ஆம் ஆண்டில் இதைப்பற்றி சொல்லும்போது பேரணையிலிருந்து வரக்கூடிய பத்தாறு என்கிற இடத்தில் இருந்து இதை அமைக்க முடியாது என்றும் ஆனால் பிக்-அப் அணைக் கட்டிலிருந்து எடுத்து 15 கண்மாய்களுக்கும் தண்ணீரை விடமுடியும் என்று நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்கள். எனவே அந்த அடிப்படையில் மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் பொருளாதார ரீதியாக அதை அணுகாமல் தேவை அடிப்படையில் பரிசீலனை செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10—30)

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்றிலே போட்டாலும் அளந்துபோட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. மேலும் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, மறுபடியும் அந்த திட்டத்தை நிறைவேற்ற முடியுமா என்று ஆராய்ந்து பார்க்கச் சொல்லப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியின் உதவியோடு வைகை மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் திருமங்கலம், உசிலம்பட்டி தாலுக்காவில் கால்வாய் கட்டும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேறும் நிலையிலே இருக்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ் விட்டுப்போன ஒன்றிரண்டு கண்மாய்களை உலகவங்கி திட்டத்தின்கீழ் நிறைவேற்றியவுடனே-இந்த அரசாங்கமே தனது சொந்த திட்டத்தின் கீழ் நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்படும் என்று முன்னரே வாக்குறுதி அளிக்கப்பட்டது. அப்படி விடுபட்ட கண்மாய்களை இந்த ஆண்டு அரசு எடுத்துக் கொள்ள முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அது சம்பந்தமாக என்னிடத்திலே குறிப்பு இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் எந்தெந்த கண்மாய்கள் விடப்பட்டிருக்கின்றன, அவற்றையெல்லாம் எடுக்க முடியுமா என்பதைப் பார்த்துச் சொல்லப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக மொத்தம் எத்தனை ஏக்கருக்கு பாசன வசதி செய்து கொடுப்ப



தாக இருக்கிறது? ஏற்கனவே சாங்ஷன் செய்யப்பட்டு கெஜட்டில் நோட்டிபிகேஷன் வந்து நிலக்கோட்டை பகுதியில் நாலாயிரம் ஏக்கருக்குத் தண்ணீர் கொடுக்க நான்கு கோடி ரூபாய் செலவாகும் என்று இருந்தது. உலக வங்கி கடன் கொடுக்கும் போது இது கட்டுப்படியாகாத திட்டம் என்று நிறுத்திவிட்டது. அப்போது இந்தத் திட்டத்தை இந்த அரசாங்கத்தின் பணத்திலிருந்து செய்வோம் என்று வாக்குறுதி கொடுக்கப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை நிறைவேற்றும் அளவிற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது புதிய திட்டத்திற்கான கேள்வி. மூலக்கேள்வி வைகை மேம்பாட்டுத் திட்டத்தைப் பற்றிய கேள்வி. எந்தெந்த பகுதிகள் விடுபட்டுப்போயின. அது சம்பந்தமாக—கொடுக்கப்பட்ட வாக்குறுதி சம்பந்தமாக— தனியாக கேள்வி போட்டால் தனியாக பதில் அளிக்கப்படும்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைகை மேம்பாட்டுத் திட்டத்தில் 52 கிராமங்களை சேர்க்க முடியாது என்று முதலில் சொன்னார்கள். பிறகு பார்ப்போம் என்று சொல்லுகிறார்கள். இந்தப் பகுதி பிற்பட்ட மக்கள் வாழும் பகுதி. சீர்மரபினர் வாழும் பகுதி. ஆகவே இப்பகுதிகளையும் இத்திட்டத்திலே சேர்த்துக்சொள்ள நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தமிழ் நாட்டில் இது போன்று பிற்பட்ட பகுதியாக, யாரும் ஏறெடுத்துப் பார்க்காத பகுதிகள் இருக்கின்றன. எந்தெந்த பகுதிகளில் ஓரளவிற்கு இலாபகரமாக இருக்குமோ அதை எடுத்து முடித்துவிட்டு, அதற்குப் பிறகு இப்படிப்பட்ட பகுதிகள் எடுக்கப்படும்.

டாக்டர் த. முகம்மது சலீம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை கால்வாயில் ஆண்டிபட்டிக்கு அருகில் தனியார் டீசல் பம்புசெட் வைத்து தண்ணீர் எடுத்து தங்களுடைய சொந்த நிலத்திற்கு உபயோகப்படுத்துவது அரசுக்குத் தெரியுமா? அதற்கு தக்க நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** அப்படிப்பட்ட பம்புசெட்டுக்களை உடனே அகற்றுவதற்கு முயற்சி எடுக்கப்படும். அப்படி எடுக்கிற போது மாண்புமிகு உறுப்பினர் [illegible] வராமல் இருக்க வேண்டும்.

[1987 ஏப்ரல் 25

**வாணியம்பாடி வட்டம், புல்லூரில் பாலாற்றில் அணைக்கட்டு.**

*511—(*வினா எண் 9617)* **திரு. எஸ். பி. மணவாளன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடி வட்டம் புல்லூர் அருகில் பாலாற்றின் குறுக்கே அணைகட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி வட்டம் பாலாற்றின் குறுக்கே ஒரு நீர் நிரப்பு நீர்த் தேக்கம் அமைப்பது பற்றிய கருத்துரு ஒன்று வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவருடன் தொடர்பு கொண்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. எஸ். பி. மணவாளன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியின் விவசாயப் பெருங்குடி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை இது. சுமார் 30 வருடங்களாக அந்தப் பகுதி மக்கள் பாலாற்றின் குறுக்கே அணை கட்ட வேண்டுமென்று கோரி வருகிறார்கள். இதிலே காலதாமதம் ஏற்படுவதற்குக் காரணம் என்ன ? மேற்கொண்டு எப்போது பரிசீலனை முடியும்? எப்போது இந்த திட்டத்திற்கு ஒப்புதல் அளிப்பார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாறு சமமான பகுதியில் பாயும் ஆறு என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். அணை கட்டும் பகுதி மிகவும் குறைவாக இருக்கிறது. பாலாற்றில் மிகப் பெரிய அணை ஏதுமில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய இடத்திலே கட்ட வேண்டும் என்றால் சுமார் 192 ஏக்கர் நிலப் பரப்பு ஆந்திர மாநில நிலம் நீரில் மூழ்க வேண்டிய நிலை இருப்பதால் நீண்ட காலமாக ஆந்திரப் பிரதேச மாநில அரசோடு பேசி பார்க்கும் போது, எங்கள் பகுதி நீரில் மூழ்கக் கூடாது, உங்கள் பகுதியில் வேண்டுமானால் அணையைக் கட்டலாம் என்று சொல்லி இந்த திட்டத்தை நிராகரித்திருக்கிறார்கள். நம்முடைய பகுதியில் இந்த அணையைக் கட்டும் போது ஏறத்தாழ ஒரு டி.எம்.சி. தண்ணீரை தேக்கி வைக்கும் வாய்ப்பு இருக்கிறது. இந்த நீர்த்தேக்க திட்டத்தின் மூலமாக நேரிடையாக விவசாயத்திற்கு பாசனம் செய்ய முடியாது. கிரவுண்டு வாட்டர் டெவலப்மெண்ட் செய்யப்படுகிற திட்டத்திற்காக அரசாங்கம் முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**திரு. எஸ். பி. மணவாளன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லியது போல நிலத்தடி நீரை அதிகப்படுத்தும் திட்டம்தான் இது. இதனால் பாலாற்றின்



1987 ஏப்ரல் 25]

அருகில் உள்ள பல நகரங்களுக்குக் குடிநீர் திட்டம் தடையின்றி செயல்படவும், அதே நேரத்திலே அந்தப் பகுதியினுடைய விவசாயப் பெருங்குடி மக்களுடைய தேவைக்காக கிணறுகளிலே நிலத்தடி நீரை அதிகமாகப் பெறுவதற்குமான காரணத்தைக்கொண்டும், வட ஆற்காடு மாவட்டத்தின் முக்கியத்துவத்தைக் கருதி, மாண்புமிகு அமைச்சரவர்களும், மாண்புமிகு முதலமைச்சரவர்களும் ஆந்திர அரசோடு நேரடியாக இது பற்றிப் பேசி, அந்த நீர்த்தேக்கத்தில் தேங்குகின்ற தண்ணீர் பகுதியைக் கேட்டு, அந்த உரிமையைப் பெற ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினுடைய முக்கியத்துவம் அரசுக்குத் தெரியாமல் இல்லை. நாங்கள் பேசவும் தயாராக இருக்கிறோம். பல ஆண்டுகளாகப் பேசியிருக்கிறார்கள். எத்தனை தரம் பேசினாலும் அவர்கள் இடங்களை விடத் தயாராக இல்லை. ஆந்திரா மட்டும் அல்ல, எந்த மாநில அரசும் விடத் தயாராக இல்லை. முயற்சி மேற்கொள்வதில் தவறில்லை. வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. என். சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாறு மேல் புறத்திலே எந்த அணைக்கட்டு கட்டுவதாக இருந்தாலும், கீழேயுள்ள ஆயக்கட்டுதாரர்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு அரசு செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மேலே அணை கட்டுவதால் கீழே இருக்கிற விவசாயிகள் பாதிக்கப் படுவதில்லை. பாலாற்றிலே வருஷத்திலே 10, 15 நாட்கள்தான் தண்ணீர் வருகிறது. வருகிற தண்ணீரும் அப்படியே ஆற்றுக்குள் போய்விடுகிறது. எப்படியாவது அங்கே நாம் செக்-டாம் அல்லது பெரிய டாம் போட்டு, கிரவுண்டு வாட்டரை டெவலப் செய்ய வேண்டும். பாலாறு மணற் பாங்கு அதிகமாக உள்ள ஆறு என்ற காரணத்தால் நாம் டேம் கட்டவில்லை என்றால் வெய்யில் காலத்திலே மணல் வழியாக தண்ணீர் அடிப்பாகத்திற்குப் போகுமே ஒழிய, கீழே இருக்கிற ஆயக்கட்டுதாரர்களைப் பாதிக்காது.

**திரு. கே. பாலாஜி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பாலாற்றிலே அணை கட்டுவது பாசனத்திற்கு பயனுள்ளதாக இராது என்று சொன்னார்கள். ஆனால் பாலாற்றுக்கு அருகாமையிலே உள்ள கர்நாடக மாநிலத்திலிருந்து இதற்கு முன்னால் ஆண்டுக்கு ஒரு முறை தண்ணீர் விட்டார்கள். இப்போது 6, 7 ஆண்டுகளுக்கு ஒரு முறை கூட தண்ணீர் விடுவதில்லை. எப்படி தஞ்சைக்கு காவிரியில் தண்ணீர் விடுகிறார்களோ அதைப் போல இதற்கும் விட வேண்டும்.

அவர் சொன்னதுபோல், அணை கட்டுவதில் இலாபம் இல்லை என்றாலும், வட ஆற்காடு மாவட்டத்திலும், செங்கற்பட்டு மாவட்டத்திலும் பல நூறு ஏரிகள் அந்த ஆற்றிலே தண்ணீர் வரும்போது, நிரம்புகின்றன. அப்படி நிரம்பும்போது இலட்சக் கணக்கான ஏக்கர் நிலங்கள் அதனால் பயனடைகின்றன. ஆகவே தயவு செய்து ஆண்டுக்கு ஒரு முறை அந்த ஆற்றிலே தண்ணீர் விடவும், தேவைப் பட்ட இடத்திலே 3 அடி உயரத்திற்கு தடுப்புச் சுவர்கள் கட்டி, நீரைத் தேக்கிடவும் மாண்புமிகு அமைச்ச ரவர்கள் இந்த ஆண்டு ஏற்பாடு செய்வார்களா என்பதை தலைவ ரவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, நமக்கிருக்கிற துரதிருஷ்டமெல்லாம் கர்நாடகத்திலிருந்துதான் நம்முடைய பகுதிக்குத் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. கடந்த 10 ஆண்டுகளாக அங்கே உள்ள கண்மாய்களுக்கு அந்தத் தண்ணீரை திருப்பிவிட்டிருப்பதாகத் தகவல் உள்ளது. இருந்தாலும் வெள்ள நேரங்களில் முழுவதை யும் பயன்படுத்த முயற்சிகளை எடுக்க வேண்டுமென்ற உணர்வை பொதுப் பணித் துறை அதிகாரிகளுக்குச் சொல்லி இருக்கிறோம்.

கோழகம்பட்டி, அய்யனாபுரம் வாரிகளில் அணை கட்டுதல்.

512—(*வினா எண். 12257) திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை, திருச்சி மாவட்டங்களில் பெய்கின்ற மழை தண்ணீரை சோழகம்பட்டி, அய்யனாபுரம் வாரிகளில் அணை கட்டி தடுத்து தஞ்சை மாவட்டம் செங்கிப்பட்டி பகுதிக்கு பாசனத்திற்கு பயன்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம் ஏதும் ஆய்வில் இல்லை.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சுருக்கமாக இப்படிப் பட்ட திட்டம் ஆய்வில் இல்லை என்று சொன்னதற்கு வருத்தத் தோடு நன்றியை சொல்ல வேண்டும். காரணம் புதுக்கோட்டை, திருச்சி மாவட்டங்களிலே பெய்கிற மழை செங்கிப்பட்டி வழியாக சோழகம்பட்டி, அய்யனாபுரம் பகுதிகளில் காட்டாறு வழியாக, வந்து, அந்தத் தண்ணீர் காவிரி ஆற்றிலே மழைக் காலங்களிலே போய்ச் சேருகிறது. அப்போது ஏற்படும் வெள்ளப் பெருக்கால் செய்திருக்கிற விவசாயம் பாதிக்கப்படுவதால், அந்தப் பகுதி களிலே இப்படிப்பட்ட அணைகளைக் கட்டி ஆயிரக் கணக்கான ஏக்கர்களுக்கு பாசனம் தேடும் வகையிலும், ஏரி குளங்களை வெட்டி கிரவுண்ட் வாட்டரை சேமிக்கும் வகையிலும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்தப் பகுதியை நானும் சுற்றிப் பார்த்தேன். கொரடாவின் தொகுதி என்பதால் அங்கே அணை கட்டித் தர முடியுமா என்று ஆராய்ந்து பார்க்கச் சென்றிருந்தேன். அந்தப் பகுதியெல்லாம் சமதளமாக இருப்பதால், நாம் செலவழிக்கும் அளவுக்கு தண்ணீர் நிரப்பக் கூடிய வாய்ப்பு வசதியில்லை. இப்போது முதலமைச்சரவர்கள் வரும்போது ஒரு அணைக்கட்டுத் திட்டத்தை ஆரம்பிக்கலாமா என்று நானே நேரடியாகப் போய் பார்த்தேன். சமதளப் பகுதியில் இன்றைக்கு கொரடா அவர்கள் குடியிருக்கிறார்கள். மேட்டுப் பகுதியான இடத்திற்கு மாறினால் அங்கே ஒரு அணை கட்டித்தரப்படும்.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே, இப்படிப்பட்ட முயற்சியை மேற்கொள்வதற்கு நன்றி தெரிவிக்கிற அதே நேரத்தில் புட் வேல்யு என்பதை மட்டும் அரசுத் துறையிலே இருக்கிறவர்கள், அதாவது வருகிற வரு மானத்தை மட்டுமே, கணக்கிலே கொள்கிறார்கள். இப்போது ஆண்டுதோறும் வறட்சி அதிகமாக ஏற்படுகிற காரணத்தால், கிரவுண்ட் வாட்டரை சேமிக்கும் வகையிலே, அந்தப் பகுதிக்கு வெள்ளப் பெருக்காலே வருகிற தண்ணீரைத் தடுக்கவும், ப்ளட் வேல்யு, கிரவுண்ட் வாட்டர் வேல்யு ஆகியவற்றை மனத்திலே கொண்டு, அந்த புஃட் வேலையூஎவ கணக்கிலே எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த அடிப்படையிலே இந்தத் திட்டங்களை மேற் கொள்வதற்கு அதிகாரிகளுக்கு ஆலோசனை சொல்ல இந்த நேரத்திலே அமைச்சவரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10.40]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கொறடா அவர்களுடைய அந்த உணர்வை நான் புரிந்து கொண்டிருக்கிறேன். வேண்டிய முயற்சிகளை எடுத்து வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க அதிகாரிகளுக்குச் சொல்லப்படும்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிடப்பட்ட அந்த ஏரியிலிருந்து திருச்சி மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டத்தினுடைய தண்ணீரை யெல்லாம் தாங்கி, அந்த ஏரி கொள்ளளவு குறைவாக இருக்கின்ற காரணத்தினால், அந்த தண்ணீர் தஞ்சை மாவட்டத்திலே வெண்ணாறு, வெட்டாறு, காவிரி ஆகிய ஆறுகள் பகுதியிலிருந்து வடியவிடுவதன் காரணமாக தஞ்சை மாவட்டம் வெள்ளக் காடாக ஆகிக்கொண்டிருக்கிறது. எனவே இந்த நிலைமைகளை பரிசீலிக்கப்பட வேண்டும். அந்த ஏரியை ஆழப்படுத்துவது அல்லது அந்த தண்ணீர் வடிக்கப்படுவதற்கும் தனி திட்டங்கள்

தயாரித்து ஆவன செய்யவேண்டும். இந்த திட்டம் திட்டக்குழு தயாரித்திருக்கின்ற திட்டப்பட்டியலிலே இருக்கின்றது. அது கடைசியிலே இருக்கின்றது. அதை முதல் பகுதியாக எடுத்துக் கொண்டு செயல்படுத்தவேண்டும். அதை நம்முடைய அரசும் பரிசீலித்து அந்த தண்ணீரை வடிப்பதற்காகவும் அல்லது கொறடா அவர்கள் சொன்னது போல செயற்கை முறையில் ஒரு ஏரியை உருவாக்கி தண்ணீரை தேக்கி பம்ப்பின் மூலமாக நீர்பாசனத்திற்கு பயன்படுத்த முடியுமா என்றும் ஆராய்ந்தால் தஞ்சை மாவட்டத்திலே பாசன மேம்பாடு ஏற்படும் என்பதைக் கருத்திலே கொண்டு தனியாக ஒரு தண்ணீர் திட்டம் தயாரிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி பல கோரிக்கைகள் அந்த தஞ்சைப் பகுதியிலே இருக்கின்றன. நான் இரண்டு தடவை அந்த பகுதிகளைப் பார்வையிட்டேன். கடலுக்குப் போகிற மிச்சம் மீதி தண்ணீரை ஏதாவது ஒரு பக்கம் திருப்பிவிட்டு விவசாயத்திற்கு பயன்படுத்த முடியுமா என்றெல்லாம் அதிகாரிகளிடம் பேசிய நேரத்தில், கடல் மட்டத்திலிருந்து பூமி பள்ளத்திலே இருக்கின்ற காரணத்தினால் உள்ளே தண்ணீர் திருப்பி விடுவதிலே கஷ்டம் இருக்கின்றது. அங்கே 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு தண்ணீர் உள்ளேயே வரக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. பல சிக்கல்கள் அதிலே இருக்கின்றன. இருந்தாலும், அவ்வப்போது ஆய்வுகளை அரசாங்கம் நடத்தி அதிகாரிகள் மத்தியிலே பேசி ஏதாவது பிரயோசனமானதாக, அந்த கண்மாய்களை ஆழப்படுத்துவதா அல்லது உயர்த்துவதா என்பதையெல்லாம் பார்த்துதான் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. என். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட காட்டாறுகளில்; ஆறுகளில் சிறிய அணைகள் கட்டி நீரைத் தேக்குகின்ற நேரத்தில் அங்கே அந்த நீர் பாசனத்திற்கு பயன்படுகின்ற அளவுக்கு சப்ளை வாய்க்கால்கள் இல்லை. பொதுப்பணித்துறையினர், சப்ளை வாய்க்கால்கள் அமைப்பதற்கு எங்களுக்குப் புரவிஷன் இல்லை என்று சொல்கிறார்கள். அங்கு அதிகாரிகள் அப்படி சொல்கிறார்கள். ஆகவே சிறு சிறு வாய்க்கால்களை அமைத்து அந்தத் தண்ணீரை போகச் செய்வதற்கு வசதியில்லை. ஆகவே சப்ளை வாய்க்கால்களை—எப்படி நெடுஞ்சாலை துறையிலே சாலைகளுக்கு என்று இடங்களை ஆர்ஜிதம் செய்து கொள்கின்றார்களோ அது போல—சப்ளை வாய்க்கால்களுக்கு இடம் ஆர்ஜிதம் செய்து—ஆர்ஜிதம் செய்வதற்கு சட்டத்தைத் திருத்த வேண்டும்—நான் இரண்டு தினங்களுக்கு முன்னால் கேட்டபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டத்துறை அமைச்சரோடு கலந்து பேசிச் சொல்லுகிறேன் என்று சொன்னார்கள். இதை ஒரு எமர்ஜென்சி மெஷராக கருதிச் செய்யவேண்டும். எங்கள் தொகுதியிலே கூட அண்மையில் 4, 5 நாட்களுக்கு முன்னால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்து ஒரு அணைக்கு அடிக்கல் நாட்டியிருக்கின்றார்கள். இதையெல்லாம் கருத்தில் கொண்டு உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கான சட்டத்தை உருவாக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களோடு கலந்து பேசி சாத்தியக் கூறுகள் ஆராயப்படும்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது ஆரம்பத்திலேயே ' இல்லை ' என்று சொல்லிவிட்டார்கள். நான் அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம் 1961–லே ஸ்ரீனிவாச ஐயங்கார் என்ற ஒரு என்ஜினியர் மூலம் ஒரு வரை படம் போடப் பட்டு இருக்கின்றது. இந்த சட்டசபையிலே கேள்வியாகக் கேட்கப்பட்டு முன்னாலே இருந்த பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் தஞ்சை ஜில்லாவிற்கு சென்று அங்கே என்ஜினியர் அவர்களோடு ஒரு எஸ்டிமேட் போட்டு இருக்கின் றார்கள். ரூ. 125 லட்சம் திட்டம் இருக்கின்றது. முதலை முத்து வாரி, சோழகன்பட்டி வாரி திட்டம் என்ற பெயர்களிலே இரண்டு அணைகள் கட்டி திருச்சி தஞ்சை மாவட்டத்தினுடைய தண்ணீரை தேக்கி, வறட்சி பகுதிகளுக்குத் தண்ணீர் கொடுப் பதற்கும் வெண்ணாறு, காவிரியிலிருந்து வருகின்ற வெள்ளத்தைத் தடுப்பதற்கும் இந்த திட்டத்திற்கு என்று உலக வங்கியில் இருந்து ரூ. 125 லட்சம் கடனுதவி கேட்டு இருப்பதாகவும், கர்நாடக அரசு அதற்கு அனுமதி கொடுக்க காலதாமதம் இருந்து வருவதாகவும் அமைச்சர் அவர்கள் அவையில் அறிவிக்கப்பட்ட தாகவும் தெரிகிறது. அந்த திட்டம் கைவிடப்பட்டதா ? கர்நாடக அரசு அனுமதி வழங்கவில்லையா? உலக வங்கியிடமிருந்து பெறுகின்ற ரூ. 125 லட்சம் திட்டம் என்ன ஆயிற்று ? அதைக்கைவிடாமல், தஞ்சையின் நலனைக் கருத்தில் கொண்டு இந்த இரண்டு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகள் அவ்வப்போது எடுத்துச் சொல் கின்ற பதிலை கேட்டுச் சொல்லாமல், இதிலே நிரந்தரமான தீர்வு காண அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலைமுத்துவாரித் திட்டம் குறித்து மாண்புமிகு கொறடா அவர்கள்கேட்டுக்கொண்ட தால் நான் நேரடியாக சென்று பார்த்தேன். அதை நிறைவேற்ற 6½ கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும் என்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். வெள்ளக் காலங்களில் வெள்ளத்தை தடுத்து நிறுத்துவதாகவும் இருக்கும், மீதி நேரங்களில் அந்த நீரை பயன்படுத்துவதாகவும் இருக்கும் என்று அதிகாரிகள்

சொன்னார்கள். ஆனால் அந்தப் பகுதி சமதளமான பகுதியாக இருப்பதால் அங்கே நாம் நினைக்கிற அளவுக்கு தண்ணீர் நிற்க வாய்ப்பில்லை. உலக வங்கி திட்டத்தில், காவிரி மாடர்னைசேஷன் ஸ்கீமில் முன்பு அதை சேர்த்திருந்தார்கள். அதிகாரிகள் வந்து பார்த்ததில், அது லாபகரமானதாக இல்லை என்றும், திட்டத்தில் சேர்த்துக்கொள்ள முடியாது என்றும் சொல்லி விட்டார்கள். ஆகவே, இந்த அரசுப் பணத்திலிருந்துதான் நாம் அதற்காக செலவழிக்க வேண்டிய காலக் கட்டத்தில் இருந்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகுபேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை, திருச்சி மாவட்டங்களில் போகின்ற மழைதண்ணீர் தஞ்சை மாவட்டத்தின் கடைகோடியான சீர்காழி பகுதியில் வந்து தேங்குகிறது. அதனால்பல கோடி ரூபாய் செலவு செய்து மழை வெள்ளத்தால் மக்களுக்கு நிவாரணம் செய்ய வேண்டிய நிலைமை அரசுக்கு ஆண்டுக்காண்டுஏற்படுகிறது. கடல் மட்டத்திலிருந்து 10 மீட்டர் அந்தப் பகுதி பள்ளத்தில் இருந்தாலும் கூட கடலிலிருந்து அது 150 கிலோ மீட்டர் மேற்கே வெகு தொலைவில் இருப்பதால் யாருக்கும் எந்தவிதமான பாதிப்பையும் ஏற்படுத்தாது. ஆகவே இத்திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் வெள்ளப் போக்கையும் தடுக்கலாம், கடைகோடியில் ஏற்படுகிற வெள்ளத்தையும் தவிர்க்கலாம், நிலத்தடி நீரும் நமக்கு அதிகமாக கிடைக்கிற வாய்ப்பிருப்பதால் மறு பரிசீலனை செய்து இதனை கட்டுவார்களா ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் காவிரி நீரிலிருந்து ஒரு சொட்டு நீரை கூட பயன்படுத்தாமல் விட நாங்கள் தயாராக இல்லை ஆனால் அந்த நிலத்தின் அமைப்பு நமக்கு சாதகமாக இல்லை. நானும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு சென்று அந்த இடத்தை இரண்டு முறை பார்வையிட்டுள்ளேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஆய்ந்துப் பார்த்து இந்த அரசு வேண்டிய முயற்சிகளை எடுக்கும்.

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, வீரசோழன் ஆற்றில் நீர்த்தேக்கம் அமைத்தல்.

*513—(*வினா எண். 12292)* திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குத்தாலம் ஒன்றியம், கந்த மங்கலம் பாசன வசதிக்காக வீரசோழன் ஆற்றில் 73/7-ல் நீர்த் தேக்கம் அமைத்துத் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?





மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ், ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது செயற் குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

(அ) தஞ்சை மாவட்டம் பாபநாசத்தில் காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல்.

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் பேரூராட்சியில் காவல் துறையினருக்காக குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கி சுமார் ஆறு ஆண்டுகள் ஆகியும் இன்னும் குடியிருப்பு கட்டப்படாமல் இருப்பது குறித்தும் இதனால் காவல் துறையினர் குடியிருப்புகள் கிடைக்கப்படாமல் துன்புறுவதும் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதல் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

தஞ்சை மாவட்டம் (மேற்கு), பாபநாசம் நகரின் அருகிலுள்ள திருப்பலாத்துறை கிராமத்தில் 1.08 ஏக்கர் நிலம் காவல் துறையினருக்கு குடியிருப்புகள் கட்ட ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. இந்த இடத்தில் பாபநாசம் காவல் நிலையத்தில் பணியாற்றும் 1 ஆய்வாளர், 1 உதவி ஆய்வாளர், 3 தலைமைக்காவலர்கள் மற்றும் 20 காவலர்கள் ஆக மொத்தம் 25 நபர்களுக்கு ரூ. 16.40 லட்சம் செலவில் குடியிருப்பு கட்ட காவல் துறை இயக்குநரிடமிருந்து நவம்பர் 1986 இல் செயற்குறிப்பு பெறப் பட்டு அரசின் ஆய்வில் உள்ளது. கட்டிடம் கட்ட அரசு அனுமதி ஏற்கெனவே அளிக்கப்படவில்லை.

**திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூபாய் 16.40 லட்சம் செலவில் காவல் துறையின ருக்கு கட்டடம் கட்டுவதற்காக இயக்குநரிடமிருந்து நவம்பர் 1986லேயே அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டிருப்பதாக அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இதுநாள் வரை அதற்கு டெண்டர் விட்டதாகவும் தெரியவில்லை. ஏற்கெனவே கட்டடம் கட்ட அரசு அனுமதி அளிக்கவில்லை என்றும் அறிக்கை யிலே கூறியிருக்கிறார்கள். அப்படி அங்கே கட்டடம் கட்டுவதற் கேற்ற நல்ல இடமாக இல்லாவிட்டால் ஏன் அந்த இடத்தை கையகப்படுத்தினார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பாபநாசத்தில் கட்டடம் கட்ட இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு, நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக் கிறது. கட்டடம் கட்ட 16.40 லட்சம் ரூபாய் தேவை என்ற செயற் குறிப்பினை அரசுக்கு காவல் துறை இயக்குநர் அனுப்பி யிருக்கிறார். சென்ற ஆண்டு இறுதியில் அது வந்ததால் அந்த நேரத்தில் அதற்கான நிதி ஒதுக்கீட்டை செய்ய முடிய வில்லை. இந்த ஆண்டு அதை நாம் செய்ய வேண்டி வரும். அரசு நிதி ஒதுக்கிய பிறகுதான் டெண்டர் விட முடியும். அதற்குப் பிறகுதான் அங்கே கட்டடம் கட்ட முடியும். அத னால்தான் இதுவரை கட்டடம் கட்டப்படவில்லை. இந்த ஆண்டு அதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும் என்று தெரி வித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டிலேயே அந்தக் கட்டடம் கட்டப்படு மென்ற உத்தரவாதத்தை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புவதோடு இந்த இடத்தில் சில தனியார்கள் ஆக்கிரமித்திருக்கிறார்கள், அவர்களை உடனடியாகக் காலி செய்யவும் அரசு நடவடிக்கை எடுக்குமா ? அப்படி அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்திருப்பவர்கள் மீது அரசு கிரிமினல் நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

(முற்பகல் 10.50)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டாகிவிட்டது. காவலர்களுக்கு இடம் கட்டுவது என்று முடிவாகியிருக்கிறது. அதற்கான செயற்குறிப்பை அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, நிதி ஒதுக்கீடு செய்ய வேண் டும். நிதி ஒதுக்கீடு செய்ததற்குப் பிறகு டெண்டர் மூலமாகக் கட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். ஆகவே, இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதா என்கின்ற விவரக் குறிப்புக்குத் தனியாகக் கேட்டால்தான் சொல்ல முடியும். ஆனால் ஆரம்பக் கட்ட வேலைகள் எல்லாம் முடிவு செய்யப்பட்டு





விட்டதன் காரணமாக, அடுத்த கட்ட வேலைகள் நடைபெறு வதில் அதிக சிரமம் இருக்க நியாயம் இல்லை. அநேகமாக இந்த ஆண்டிலே அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட வேண் டும். அந்தக் குறிப்பிட்ட இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக் கிறது என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்திருக்கிறார் கள். ஆகவே, காவலர்களுக்கான இடங்கள் கட்டுவதற்காக ஏற் பட்ட இடத்திலே ஆக்கிரமிப்பு இருந்தால் அது அகற்றப்படும். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இல்லாவிட்டால் கிரிமினல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## (ஆ) நிரந்தரமாக்கப்படாத அரசு ஊழியர்களின் நிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் அ. இரகு மான்கான், டி.ஆர். வேங்கடரமணன், ஜே.முகமது கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள் ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத் திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, ''1984ஆம் ஆண்டு செப்டெம்பர் திங்கள் 22ஆம் நாளிட்ட பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையின் அரசு ஆணை எண் 996ன் படி தற்காலிக ஊழியர்களின் பணி நிரந்தரம் ஆக்கப்பட்டது. நிரந்தரம் ஆக்கப்படாத தற்காலிக அரசு ஊழி யர்களின் நிலை குறித்து'' அவசரப் பொது முக்கியத்தும் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

தற்காலிகமாக அரசு அலுவலகங்களில் பணிபுரிந்த இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள் மற்றும் சுருக்கெழுத்து தட்டச் சர்களின் வேண்டுகோளுக்கிணங்க வேலை வாய்ப்பகத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு அமைச்சுப் பணி/தமிழ் நாடு நீதி அமைச்சுப் பணி ஆகியவற்றில் தற்காலிகமாக வேலை பார்த்து வந்த இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக் கெழுத்துத் தட்டச்சர்கள் மற்றும் தலைமைச் செயலக பணியில் தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் அனைவரையும் 1984ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 25ஆம் நாளன்று அவரவர்கள் பணி புரிந்த துறையிலேயே பணியினை வரன்முறை செய்ய 1984ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 22ஆம் நாளிட்ட அரசு ஆணையின்படி அரசு உத்திரவிட்டுள்ளது.

2. 1984ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 25ஆம் நாளன்று
பணியில் இல்லாதவர்களும், மேற்கூறிய 1984ஆம் ஆண்டு செப்
டெம்பர் திங்கள் 22ஆம் நாளன்று வெளியிடப்பட்ட அரசு ஆணை
யின்படி, பணியினை வரன்முறை செய்யப் படாத பணியாளர்
களிடமிருந்தும் பெறப்பட்ட கோரிக்கைகளை பரிசீலனை செய்யப்
பட்டது.

3. தேர்வாணையம் சில ஆண்டுகளுக்கு தேர்வு நடத்தாததி
னால், தேர்வாணையம் மூலம் ஆட்கள் தேர்ந்தெடுக்க முடியா
மல் போனதன் காரணமாக வேலை வாய்ப்பகம் மூலம் ஏராள
மான துறைகளில் தற்காலிகமாகத் தேர்வு செய்யப்பட்டவர்களின்
பணியினை முறைப்படுத்துவதற்கு அரசு இசைவளித்தது. தேர்
வாணையம் மூலம் இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள்,
சுருக்கெழுத்து தட்டச்சர்கள் பதவிகளுக்கு நபர்கள் தற்போது
தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இதனால் கடுமையான போட்டித்
தேர்வின்மூலம் மிகத் தரமுள்ளவர்களும், கட்டுப்பாடு உள்ளவர்
களுமான ஊழியர்களை அரசுப் பணிக்கு தேர்ந்தெடுக்க வாய்ப்பு
உள்ளது. அடிக்கடி தற்காலிகப் பணியாளர்களை அரசுப் பணி
யில் இருந்தமைக்காகவும் இரக்கம் காரணமாகவும் நிரந்தரப்படுத்
துவதென்பது முறையான செயலாகாது என்பதால், தற்போது
குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு அளிப்
பதற்கில்லையென முடிவு செய்யப் பட்டுள்ளது.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, உங்கள் மூலம் நான் ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்
புகிறேன். 'கவன ஈர்ப்புத் தீர்மானம் பிரச்சினை சம்பந்தமாகப்
பேசுகின்றபொழுது அது குறித்து வேறு பிரச்சினை எதுவும் பேசக்
கூடாது. தரப்பட்டிருக்கக் கூடிய விவர அறிக்கையில் தகவல்கள்
தவறாகத் தரப்பட்டிருக்கின்றன. விளக்கம் கேட்டால் தங்க
ளிடத்திலே நான் தனியாகச் சொல்கிறேன் அல்லது சபையிலேயே
சொல்கிறேன். அப்படித் தவறான தகவல்கள் தந்திருக்கப்படு
மானால் அது தரப்பட்டிருக்கிறது என்பதை நிரூபிக்க நான்
தயாராக இருக்கிறேன். தாங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.
அவையை திசைத் திருப்புகின்ற நோக்கத்தோடு தவறான தக
வல்களை வைக்கக் கூடாது. இப்பொழுது நான் கேட்டுக்
கொள்வது அரசு ஆணை எண்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தவறான தகவல் என்று
என்னிடம் நீங்கள் சொல்வீர்களேயானால் நடவடிக்கை எடுக்கப்
படும்.

**திரு. அ. ரகுமான்கான் :** பேரவைத் தலைவர் அவர்களே,
அரசாணை எண் 996, 1984ஆம் ஆண்டு செப்டெம்பர் 22ஆம்
நாளிலே நம்முடைய முதலமைச்சர் வேண்டுகோளுக்கு இணங்க
ஒரு உத்தரவு போடப்படுகிறது. அதன்படி 1984ஆம்
ஆண்டு ஜூன் திங்கள் 25ஆம் நாள் அன்று நீண்டகாலமாகப்





பணிபுரிகின்ற தற்காலிக ஊழியர்களையெல்லாம் அந்தத் துறை
யில் பணி நிரந்தரம் செய்யப்படும் என்பது உத்தரவு. இதிலே
என்ன ஒரு தப்பு வந்துவிட்டது என்று கேட்டால், 1984ஆம்
ஆண்டு ஜூன் திங்கள் 25ஆம் நாள் வரை தற்காலிகமாக வேலை
செய்த தற்காலிக ஊழியர்கள் நிரந்தரம் ஆக்கப்படுவார்கள்
என்பதற்குப் பதிலாக 1984ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 25ஆம்
நாளன்று என்று போட்டு விட்டார்கள். அதன் காரணமாக
1981ஆம் வருஷம் ஒருவர் தற்காலிக ஊழியராக பணியாற்றினா
லும் அந்த 1984ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 25ஆம் நாள் அன்று
வேலைக்கு வராவிட்டால் அவர் நிரந்தரமாக்கப்பட
மாட்டார். இதனால் பாதிக்கப்பட்டவர்கள் மூவாயிரம் பேர்.
இதை ரெக்டிஃபை பண்ணுவதற்காக மறுபடியும் தகவல்கள்
கேட்டார்கள். நீங்கள் தகவல்களைக் கொடுங்கள், எங்கே
வேலை பார்க்கிறீர்கள் என்று, உடனடியாக நடவடிக்கை
எடுக்கப்படும் என்று உத்தரவே போடப்பட்டது. அதிலே
நிரந்தரம் ஆக்கப்படுவார்கள் என்று விளக்கம் தரப்பட்டது.
ஆனால் இதுவரைக்கும் யாரும் நிரந்தரமாக்கப்படாததற்கு
என்ன காரணம்? நிரந்தரமாக்கப்பட்டிருக்கிறார்களா?
இது மாதிரி குழப்பமான உத்தரவுக்கு என்ன காரணம் என்று
நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
அவைத் தலைவரவர்களே, இதிலே குழப்பம் ஒன்றும் ஏற்பட
வில்லை. 25-6-1984 அன்று தற்காலிகமாக வேலையிலே
இருப்பவர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்று திட்ட
வட்டமாக, தெளிவாக உத்தரவு இடப்பட்டிருக்கிறது.
அவர்கள் நிரந்தரம் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். 24ஆம்
தேதி வேலையிலிருந்து போய்விட்ட தற்காலிக ஊழியர்களுக்கு
வேலை இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைத்
தெளிவாகவும் சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு ரகுமான்
கானைவிட அவர்களே பல தடவை முறையிட்டிருக்கிறார்கள்.
அவர்கள் தேர்வாணைக்கு விண்ணப்பிக்கலாம், முறைப்படி
விண்ணப்பிக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு
முன்னால் 4 நாட்களுக்கு முன்னால், ஒரு வாரத்திற்கு முன்னால்,
இரண்டு மாதங்களுக்கு முன்னால் வேலையைவிட்டு போனவர்
களையெல்லாம் மறுபடியும் கூப்பிட்டுக் கொடுப்பது என்று
அல்ல. அன்றைக்கு யார் வேலையில் இருக்கிறார்கள் என்று
22-9-1984-லே நாம் ஆணையிடுகிறோம். 25-6-1984-லே
இருந்தவர்கள் என்று சொல்கிறபொழுது அன்றைக்கு இருந்தால்
உண்டு, முதல் நாளே வேலையில் இல்லை என்றால் அவர்களுக்கு
இல்லை என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். இதிலே
குழப்பமே எதுவும் இல்லை.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவரவர்களே.....

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : தலைவரவர்களே....

மாண்மிகு பேரவைத் தலைவர் : ரகுமான்கானுக்கு இரண்டு கொடுத்துவிடட்டுமா ? (குறுக்கீடு) ஆளுக்கு ஒரு கேள்வி தான் விதி.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : இரண்டு கேள்விகள் கொடுக்கலாம். நேரம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் இருக்கிறது என்பது அல்ல. நேரம் இல்லை. பத்து கவன ஈர்ப்புகள் இருக்கின்றன. (குறுக்கீடு) ஒரு கட்சிக்கு ஒருவருக்குக் கொடுப்பதுதான் விதி. நீங்கள் கேட்பதற்குப் பதிலாக ரகுமான்கானுக்குக் கொடுத்துவிடலாம்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, மாண்புமிகு நாவலர் அவர்கள் இங்கே குறிப்பிட்டபோது 22–9–1984 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். 25–6–1984 அன்று வேலையில் இருந்த தற்காலிக ஊழியர்கள் மட்டும் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்றால் 24-ந்தேதி 23-ந்தேதி, 22-ந்தேதி அதற்கு முந்திய ஆண்டுகளில் வேலை பார்த்த யாரும் நிரந்தரமாக்கப்படமாட்டார்கள் என்ற எண்ணத்தோடு உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில், யார், யார் டெம்பரரியாக வேலை பார்த்தீர்களோ அவர்கள் தகவலைத் தாருங்கள், நிரந்தரமாக்கப்படும் என்று 13–5-1985-ல் ஒரு உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அந்த உத்தரவுப்படி வேலை பார்த்தவர்கள் தகவல்களைத் தந்திருக்கிறார்கள். 25–6–1984 அன்று வேலையில் இருப்பவர்கள் மட்டுமே நிரந்தரமாக்கப்படுவார்கள் என்று சொன்னால் 13–5–1985-ல் தகவல் கொடுங்கள், நிரந்தரமாக்கப்படும் என்று ஒரு உத்தரவு போடுவதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தகவல் கொடுங்கள், நிரந்தரமாக்கப்படும் என்ற வகையில் உத்தரவு போட்டதாக எனக்கு நினைவு இல்லை ; வேண்டுமானால் தனியாகக் கேள்வி போட்டால் விவரம் கிடைக்கும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : தலைவரவர்களே, 240 நாட்கள் தற்காலிகமான வேலை பார்த்தால் கூட நிரந்தரமாக்கப்படும், நிரந்தரமாக்க வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. 5 ஆண்டு, 6 ஆண்டு, 7 ஆண்டுகளாக வேலை பார்த்தவர்கள்கூட நீங்கள் போட்டிருக்கிற உத்தரவினால் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்னதைப் போல 'ஆஸ் ஆன்' என்பதற்குப் பதிலாக 'அப்டு' என்று போட்டிருந்தால் இந்தப் பிரச்சினையே வந்திருக்காது. 240





நாட்கள் வேலை பார்த்தாலே நிரந்தரமாக்க வேண்டுமென்று சட்டம் இருக்கும் போது 240 நாட்கள் வேலை பார்த்தவர்களையெல்லாம் நிரந்தரமாக்க வேண்டும். ஒரு நாள், இரண்டு நாள் வேலை பார்த்திருந்தால்கூட அவர்கள் நிரந்தரமாக்கப்பட்டு, வருடக்கணக்கில் வேலை பார்த்தவர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருப்பது நியாயமில்லை. வயது அதிகமாகி விட்ட காரணத்தால் அவர்கள் வேறு வேலைக்குச் செல்ல முடியாது. அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, மீண்டும் டெம்பரரியாக வேலை பார்த்தவர்களுடைய விவரங்களை அரசாங்கம் கேட்டு, அந்த விவரங்களைப் பெற்றிருக்கிறது. ஆகவே, அந்த உத்தரவை மறுபரிசிலனை செய்து, ஏற்கெனவே வேலை பார்த்து, இப்போது வேலையில் இல்லாமல் இருப்பவர்களை அரசுத் துறையில் அல்லது வேறு துறைகளில் நேரடியாக நியமிக்க அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, வேலையில் சேரும்போது தற்காலிகமான வேலை என்று சொல்லிதான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். நிரந்தரமான வேலைதான் பார்க்க வேண்டுமென்றால் அவர்கள் தற்காலிக வேலைக்கு வந்திருக்கக்கூடாது. அதற்கான நிலைமைகளை ஏற்கெனவே தெள்ளத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். டி. ஆர். வேங்கடரமணன் போன்றவர்களும் அவர்களுக்கு யோசனை சொல்லியிருக்க வேண்டும். எந்த அளவுக்கு நிரந்தரமாக்க முடியுமோ அந்த அளவுக்கு நிரந்தரமாக்கியிருக்கிறோம். தேர்வாணைக்குழு அவர்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று சொல்லும்போது தற்காலிகமாக இருப்பவர்களை அனுப்பிவிட்டுத்தான் அவர்களைத் தேர்வுசெய்து நியமிக்க முடியும். அதற்குப் பின்னாலே இருக்கின்ற வாய்ப்புக்கு ஏற்ப தேர்வாணைக்குழு மூலமாக அவர்கள் வேலைவாய்ப்புப் பெறலாம் என்று உத்தரவிட்டிருக்கிறோம். இதற்கான விளக்கங்களை பலமுறை தந்திருக்கிறோம்.

### (இ) நீலகிரி மாவட்டம் கூடலூர் மருத்துவ மனையில் படுக்கை வசதிகளை அதிகரித்தல்

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்திலுள்ள அரசினர் மருத்துவ மனையில் போதுமான படுக்கை வசதிகள் இல்லாததால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

நீலகிரி மாவட்டம், கூடலூர் அரசு மருத்துவமனை தற்போது 94 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. 1985ஆம் ஆண்டில் தினசரி சராசரியாக 109 உள்நோயாளிகளும், 270 வெளிநோயாளிகளும் சிகிச்சை பெற்றுள்ளனர். அதே ஆண்டில் மொத்தமாக 473 மகப்பேறு சிகிச்சையும், 266 சிறு அறுவை சிகிச்சையும், 33 பெரிய அறுவை சிகிச்சையும் செய்யப்பட்டுள்ளன. மேலும் அகில இந்திய பேறுகால பிற்காப்புத்திட்ட விரிவாக்கப் பணியின் (Post Partum Extention Programme) கீழ் 6 படுக்கைகளுடன் கூடிய அறுவையரங்கு ரூ. 5.20 லட்ச மதிப்பீட்டில் கட்டிடம் கட்ட ஆணை வழங்கப்பட்டுள்ளது. கூடலூர் மருத்துவமனையில் பொது மக்களின் மருத்துவத் தேவைக்கேற்ப போதுமான அளவில் உள்படுக்கை வசதியுள்ளது.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் அங்கே 94 படுக்கை வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த 94 படுக்கைகளில் பாதிக்கு மேல் நோயாளிகள் படுக்க லாயக்கு அற்றவையாக இருக்கின்றன. அந்த அளவுக்கு மோசமாக இருக்கிற படுக்கைகளை மாற்றிவிட்டு, அவைகளுக்குப் பதிலாக புதிய படுக்கைகளை அளிக்க அரசு முன்வருமா? அது மட்டுமல்ல. 1985 ஆம் ஆண்டு சராசரியாக 109 உள் நோயாளிகளும் 270, வெளி நோயாளிகளும் சிகிச்சை பெற்றுள்ளனர் என்ற விவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் 1986ஆம் ஆண்டு, 1987ஆம் ஆண்டுகள் பற்றிய விவரங்கள் ஏன் கொடுக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே. அரசாங்கம் அனுமதித்திருக்கிற படுக்கைகளின் எண்ணிக்கை 94, அந்தப் படுக்கைகளில் படுக்க வசதி இல்லாதவை, சரியாக இல்லாதவை இருந்தால் அவற்றை பழுதுபார்க்கலாம் அல்லது மாற்றலாம். அது வேறு விவகாரம். 1985ஆம் ஆண்டு புள்ளி விவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள்; 1986, 1987 ஆம் ஆண்டுகள் பற்றிய புள்ளி விவரங்களை ஏன் கொடுக்கவில்லை என்று கேட்டார்கள். தற்போது என்னிடம் அந்த விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரங்கள் தரலாம்.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, இந்த கூடலூர் அரசு மருத்துவமனையில் இடவசதி மிகவும் குறைவாக இருக்கிறது. தாயகம் திரும்பிய தமிழர்கள் ஏராளமாக அங்கே குடியேறி இருப்பதால் படுக்கை வசதிகளை அதிகப்படுத்த வேண்டும் என்று





கேட்டதற்குப் பின்னால் அகில இந்திய பேறுகால பிற்காப்புத் திட்ட விரிவாக்கப்பணியின் கீழ் 6 படுக்கைகளுடன் 5.20 இலட்சம் ரூபாய்ச் செலவிலான கட்டடம் ஒன்று கட்ட ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதற்காக நம்முடைய அமைச்சர் அவர்களுக்கும், புரட்சித்தலைவரின் அரசுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பணி எப்போது முடிவடையும், எப்போது துவங்கப்படும் என்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்களா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 11-00]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, விரைவிலே துவங்கி, விரைவிலே முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஈ) தூத்துக்குடி மருத்துவ மனையில் படுக்கை வசதிகளை அதிகரித்தல்

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி அரசு பொது மருத்துவமனையில் போதிய படுக்கை வசதி மற்றும் வெறி நாய்க்கடி தடுப்பு மருந்து இல்லாததால் அப்பகுதி நோயாளிகளின் கவலை குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தூத்துக்குடி அரசினர் தலைமை மருத்துவமனையில் தற்போது அனுமதிக்கப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கை 236. புதிதாக 260 படுக்கைகள் கொண்ட புதிய வார்டு கட்டப்பட்டு வருகின்றது. அதற்குத்தேவையான பணியாளர்கள் தொகுதி மற்றும் செலவினங்கள் வழங்க அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்த புதிய 260 படுக்கைகள் கொண்ட புதிய வார்டு துவங்கப்பட்டால் அனுமதிக்கப்பட்ட மொத்த படுக்கைகளின் எண்ணிக்கை 496 ஆக உயரும். இம்மருத்துவமனையில் தற்போது உள்நோயாளிகளாக சிகிச்சை பெற்று வருபவர்களின் சராசரி எண்ணிக்கை 328. ஆகவே புதிய வார்டு உபயோகத்தில் கொண்டுவரும் நிலையில் இம்மருத்துவ மனையில் படுக்கை வசதிகள் போதுமானதாக அமையும்.

[திரு. ப.உ. சண்முகம்] [1987 ஏப்ரல் 25

2. இம்மருத்துவமனை பற்றிய மற்ற விவரங்கள்

| | 1986ஆம் ஆண்டில். |
|---|---|
| தினசரி சராசரி வெளிநோயாளிகளின் எண்ணிக்கை .. .. .. | 3,356 |
| தினசரி சராசரி உள்நோயாளிகளின் எண்ணிக்கை .. .. .. | 328 |
| பிரசவ எண்ணிக்கை .. .. .. | 3,199 |
| பெரிய அறுவை சிகிச்சைகள் .. .. | 474 |
| சிறிய அறுவை சிகிச்சைகள் .. .. | 1,849 |

இம்மருத்துவமனையில் கீழ்க்கண்ட துறைகளில் சிறப்புப் பிரிவுகள் இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

(1) குழந்தைகள் பிரிவு.

(2) கண்நோய்ப் பிரிவு.

(3) காது, மூக்கு, தொண்டை பிரிவு.

(4) பல் பிரிவு.

(5) எலும்பு முறிவு பிரிவு.

(6) பால்வினை நோய் பிரிவு.

(7) மனநலப் பிரிவு.

(8) குருதி வங்கி.

3 தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு மருத்துவ நிலையங்களுக்கும் தேவையான வெறிநாய்க்கடி தடுப்புச் சிகிச்சைக்குப் பயன்படும் உயிர்காக்கும் மருந்துப் பொருளான ஏ.ஆர்.வி.யை சென்னை கிங் நிலையமும், மற்றும் குன்னூர் பாஸ்டியூர் நிலையமும் வழங்கி வருகின்றன. இவ்விரு நிலையங்களிடமிருந்து இம்மருந்துப் பொருளை போதுமான அளவுக்குப் பெற்று மருத்துவ நிலையங்களின் பண்டகசாலைகளின் இருப்பில் வைத்து பேணிக்காக்கப்படவேண்டுமென்று மாவட்டம் மற்றும் தாலூக்கா மருத்துவ அலுவலர்களுக்கும் அவ்வப்போது அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையங்கள் வழங்கத் தவறும் தருணத்தில் அவசரத் தேவையை கருத்திற்கொண்டு



1987 ஏப்ரல் 25] [திரு. ப. உ. சண்முகம்]

கீழ்க் கண்ட வேறு நிறுவனங்களிடமிருந்து தங்களது அதிகார வரம்புக்குட்பட்டு, பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மாவட்ட மருத்துவ அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

(1) இயக்குநர், ஹேப்கிங் நிலையம், பம்பாய்.

(2) இயக்குநர், மத்திய ஆராய்ச்சிமையம், காசோலி, இமாசல பிரதேசம், வட இந்தியா.

(3) சீரம் நிலையம், பூனா.

மேற்கூறிய அறிவுரைகளைப் பின்பற்றி இம்மருத்துவப் பொருள் மருத்துவ நிலையங்களின் இருப்பில் இல்லையென்று முறையீடுகளுக்கு வழிவகுக்காது மாவட்ட மருத்துவ அலுவலர்களும் ஏனையோரும் கண்காணித்து வருகின்றனர். சிதம்பரனார் மாவட்டத்தின் தலைமை மருத்துவமனை, தூத்துக்குடியில் இம்மருந்து பொருள் போதுமான அளவுக்கு பண்டகசாலையின் இருப்பில் வைத்து பேணிகாக்கப்படுகிறது. அம்மாவட்ட மருத்துவ அலுவலரின் தகவல்படி இம்மருத்துவமனையில் வெறிநாய்க்கடி தடுப்புச் சிகிச்சை மருந்துப் பொருளின் தற்போதைய கையிருப்பு 1,420 (எம்.எல்.) (142 வயல்கள்) எனவே தூத்துக்குடி தலைமை மருத்துவமனையில் வெறிநாய்க்கடி தடுப்பு மருந்து இல்லையென்ற முறையீடு சரியானதல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே புதிதாக 260 படுக்கைகள் கொண்ட புதிய வார்டு கட்டப்பட்டு வருகிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 1981ஆம் ஆண்டு 55 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 260 படுக்கைகளையும், 2 அறுவை சிகிச்சைக் கூடங்களையும் கொண்ட கட்டிடப் பணி ஆரம்பிக்கப்பட்டு 1984ஆம் ஆண்டு அந்தக் கட்டிடப் பணி முடிக்கப்பட்டுவிட்டது. ஆனாலும் இதுவரையில் அந்தப் புதிய கட்டிடத்தைத் திறக்கவில்லை. அதற்கான காரணம் என்னவென்றால் அதனை பொதுப்பணித்துறையினர் ஒப்படைக்க முன்வந்த போது மாவட்ட மருத்துவ அதிகாரி அவர்கள் அதை ஒப்புக் கொள்ளத் தயங்குகிறார்கள். அதற்காக காரணம் என்னவென்று மாவட்ட மருத்துவ அதிகாரி அவர்களிடம் கேட்டால் கழிவு நீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி போதுமான கொள்ளளவில் கட்டவில்லை என்றும் கழிவுநீர் இணைப்பைப் புதிய பாதாளச் சாக்கடைத் திட்டத்துடன் இணைக்கவேண்டும் அல்லது புதிய செப்டிக் டாங்குடன் இணைக்கவேண்டும் என்றும், அதே நேரத்தில் பாதியில் நிறுத்தப்பட்டிருக்கிற ரேம்ப்-ஐ முழுமையாகக் கட்டிக் கொடுக்கவேண்டும் என்றும் சொல்லி அவற்றை எல்லாம் செய்து கொடுத்தால் பொதுப்பணித்துறையிடமிருந்து

ஒப்புக் கொள்ளத் தயாராக இருப்பதாகவும் மாவட்ட மருத்துவ அதிகாரி தெரிவிக்கிறார். ஆகவே இந்தப் பணியினை பொதுப் பணித்துறையினர் உடனடியாக முடித்து மாவட்ட மருத்துவ அதிகாரியிடத்தில் அதனை ஒப்படைக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியது போல் அந்தக் கட்டிடம் ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்டது உண்மைதான். அதற்கு வரைபடம் போட்டபோதோ அல்லது பொதுப்பணித்துறையினர் அதைக் கட்டியபோதோ ஏதோ ஒரு இடத்தில் தவறு நடந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன். 240 படுக்கை வசதி கொண்ட மருத்துவ மனைக்குத் தேவையான சாக்கடை வசதியும், தண்ணீர் வசதியும் செய்து கொடுக்க வேண்டும். அது இல்லாமல் செய்திருக்கிறார்கள். இது குறித்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தார்கள். அப்போதே அதிகாரி களைக் கூப்பிட்டு உத்தரவு போடப்பட்டிருக்கிறது. எவ்வளவு படுக்கை வசதிகளுக்குத் தண்ணீரும், சாக்கடை வசதியும் இருக்கிறதோ அவ்வளவு படுக்கை வசதிகளையும் கொண்ட மருத்துவ மனையாக உடனடியாகத் துவங்குவதற்குரிய வேலை செய்யுங்கள், ஆரம்பியுங்கள் என்று நான் சொல்லியிருக்கிறேன். மேலும் சாக்கடை வசதியைப் பெருக்குவதற்கும், ரேம்ப்-ஐ கட்டி முடிக்கவும் பொதுப்பணித்துறையோடு தொடர்பு கொண்டு செய்து முடிக்க அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது. விரைவில் முடியும் என்று நம்பிக்கை இருக்கிறது.

திரு. எஸ். டேனியல் ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் வெறி நாய்த் தடுப்பு ஊசி அரசு மருத்துவமனையில் போதுமான அளவில் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. தடுப்பூசி இருந்த போதிலும் வெறிநாய் கடித்தவர்களின் உயிரைப் பாதுகாக்க உலகத்திலேயே இதுவரையில் மருந்து கண்டுபிடிக்கவில்லை என்று சொல்கிறார்கள். இந்தக் கோரப்பிடியிலிருந்து மக்களைப் பாதுகாக்க வீட்டில் வளர்க்கப்படும் நாய்கள் வெறி நாய்களாக மாறாதபடி தடுப்பு ஊசி போடவும், தடுப்பு ஊசி போட்ட அத்தாட்சிச் சான்றிதழை கால்நடை மருத்துவர்கள் வழங்கினால் மட்டும் நகராட்சி, பஞ்சாயத்து நிர்வாகம் போன்றவை லைசென்ஸ் வழங்கவும், எல்லா கால்நடை மருத்துவமனைகளிலும் இந்தத் தடுப்பு ஊசி போதுமான அளவுக்கு இருப்பதற்கான ஆணை பிறப்பிக்கவும், லைசென்ஸ் இல்லாமல் தெருவில் அலையும் நாய்களைப் பிடித்துக் கொ வதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, லைசென்ஸ் இல்லாமல் தெருவிலே திரிகிற நாய் களைப் பிடிக்கும் அதிகாரம் உள்ளாட்சித்துறைக்கு இருக்கிறது.



நாய்களுக்கு வெறி பிடிக்கக்கூடாது என்பதற்காகத் தடுப்பு ஊசி போடுகிற வகையில் மருந்து தனியாக இருக்கிறது. நாய் வளர்ப்போர் அந்த மருந்தைப் போய் போட்டுக்கொள்ளலாம். நாய் கடித்துவிட்டால் பரிகாரம் இல்லை என்று சொல்வது தவறு. அதற்கான மருந்து இருக்கிறது. அந்த மருந்தை முறைப்படி போட்டால் நிச்சயமாக உயிர் காப்பாற்றப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (உ) வாலாஜாபாத் ஒன்றியத்திலுள்ள சாயத் தொழிற்சாலைகளின் கழிவு நீரால் பதிப்பு

திரு. க. நரசிம்மபல்லவன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ''செங்கை மாவட்டம், வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஐயம்பேட்டை, முத்தியால்பேட்டை, வள்ளுவபாக்கம், வன்னியப் பேட்டை போன்ற கிராமங்களில் உள்ள சாயத் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவு நீரால் பொது மக்கள் பாதிப்பு குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

1974ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 26ஆவது பிரிவின்படி அன்றாடக் கழிவுநீர்/தொழிற் சாலைக் கழிவுநீரினை வெளியேற்ற செங்கல்பட்டு மாவட்டம், வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஐயம்பேட்டை, முத்தியால் பேட்டை, வள்ளுவபாக்கம், வன்னியப்பேட்டை போன்ற கிராமங்களில் உள்ள 40 சாயத் தொழிற்சாலைகளி லிருந்து விண்ணப்பங்கள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத் தில் பெறப்பட்டன.

வெளுத்தல், பசையிடுதல், சாயம் போடுதல் முதலியன தயாரிப்பு முறைகளாகும். மேற்கண்ட செய்முறைகளின் போது தொழிற்சாலைக் கழிவுநீர் வெளியேற்றப்படுகிறது. இத்தொழிற்சாலைகள் 2–4–1987 அன்று ஆய்வு செய்யப்பட்ட பொழுது சுத்திகரிக்கப்படாத தொழிற்சாலைக் கழிவுநீரானது கீழ்கொட்டிவாக்கம் கால்வாயில் விடப்பட்டு தேங்கியிருப்பதும் தெரியவந்தது. தொழிற்சாலைக் கழிவுநீரானது நிறமுடைய தாகவும், இது அதிக அளவில் கரைந்துள்ள திடப் பொருட் களையும், உயிர் இரசாயன உயிரகத்தேவை, இரசாயன உயிரகத் தேவையும் கொண்டுள்ளது. தொழிற்சாலைக் கழிவு நீர் நிலத்திலோ அல்லது நீர் நிலைகளிலோ சுத்திகரிக்கப் படாமல் வெளியேற்றப்பட்டால் அது நிலத்தடி நீர் மற்றும் நீர்நிலைகளில் மாசு ஏற்படக் காரணமாகும்.

தொழிற்சாலைக் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்து வெளி விடுவதற்கு இணைந்த கருத்துருவை சமர்ப்பிக்கும்படி தொழிற் சாலைகள் கேட்டுக் கொள்ளப்பட்டது. கருத்துரு தொழிற் சாலைகளிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. கருத்துரு பெற்ற பிறகு தொழிற்சாலைகளின் தகுதி அறிந்து வாரியம் தொழிற் சாலைகளுக்கு அனுமதி வழங்க வேண்டியிருந்தால், நிர்ணயித் துள்ள வரைமுறைகளுக்கேற்ப தொழிற்சாலைகள் க ்வுநீரை சுத்திகரிப்பு செய்து வெ. யேற்ற வேண்டும் என்ற நிபந்தனை யுடன் அனுமதி வழங்கப்படும். தேசிய சுற்றுப்புற பொறி யியல் ஆராய்ச்சி கழகத்திடம் ஒரு பொதுவான சுத்திகரிப்பு முறை பற்றிய திட்டம் கேட்டு அணுகியுள்ளதாக தொழிற்சாலை கள் தெரிவித்துள்ளன. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

திரு. க. நரசிம்மபல்லவன் : பேரவைத் தலைவர் அவர் களே, இந்த விவர அறிக்கையில் தொழிற்சாலைக் கழிவு நீரை சுத்திகரிப்பு செய்து வெளியிடுவதற்கு இணைந்த கருத்துருவை சமர்ப்பிக்கும்படி தொழிற்சாலைகள் கேட்டுக் கொள்ளப் பட்டன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி கழிவு நீரை சுத்தம் செய்யாமல் வெளியிடுவதால் அந்தப் பகுதி மக்களுக்கு குடிக்க-குளிக்க போதிய சுகாதாரமான நீர் கிடைக்கக் கூடிய வாய்ப்பு இல்லை. ஆகவே அந்த தொழிற்சாலைகளுக் குள்ள லைசென்சை தற்காலிகமாக ரத்து செய்து சுத்திகரிப்பு ஆலை கட்டி முடித்ததும் லைசென்சை திரும்பக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்ய அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அவர்கள் எல்லாம் கைத்தறி துறையைச் சார்ந்தவர்கள். சிறு சிறு சாயப் பட்டறை கள் வைத்திருப்பவர்கள். பெரிய சுத்திகரிப்பு ஆலை தேவை என்று சொன்னால் அவர்களுக்கு பொருளாதார ரீதியில் அது சாத்தியமாக இருக்காது என்று அரசு கருதுகிறது. அதற் காகத்தான் கேட்டுக் கொண்டிருக்கிறோம். கூட்டுறவுத் துறை முறையிலேயோ அல்லது அரசே முன் வந்தோ அந்த சுத்திகரிப்பு ஆலையைக் கட்ட வேண்டும். அதற்கு ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறது. முதலில் ஏதேனும் ஒரு இடத்தில் கரூரிலோ, சேலத்திலோ அல்லது குமாரபாளையத்திலோ அல்லது வேறு இடத்திலோ அமைத்து அது பயன் உள்ளதாக இருக்குமானால் மற்ற ஊர்களுக்கு விரிவாக்கம் செய்யலாம். அதை காலதாமதம் இன்றி விரைவாக செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். தொழிற்சாலைகளை நிறுத்துவது இப்போது சாத்தியம் இல்லை.

திரு. க. நரசிம்மபல்லவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிச் செய்யும்போது என்னுடைய பகுதியை முதன்மையாக எடுத்துக் கொண்டு விரைந்து செய்வதற்கு நட வடிக்கை எடுக்கப்படுமா ?





மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : முதலிலே சுத்திகரிப்பு ஆலையாக ஒரு மாடல் அமைத்துப் பார்க்கும்படி சொல்லி இருக்கிறோம். அது நடக்கட்டும். இடத்தைப் பற்றி அரசு பிறகு முடிவு செய்யும்.

### (ஊ) தோப்பூர்-மேட்டூர்-பவானி சாலையில் காவிரி ஆற்றின் குறுக்கேயுள்ள பாலத்தில் பழுது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கே. சுப்ப ராயன், பொ. உத்திராபதி, எஸ். கோவிந்தசாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத் துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதை கொண்டுவருவார்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டூர் அணையில் காவிரியின் குறுக்கே கட்டப் பட்ட பாலத்தில் இரண்டாவது முறையாக விரிசல் ஏற்பட் டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளது, தோப்பூர்-மேட்டூர்-பவானி சாலையில் கி.மீ. 37/2–6-ல் காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட பாலத்தை சார்ந்ததாகும். இப்பாலம் 1928ஆம் ஆண்டு பொதுப்பணித்துறையால் கட்டப் பட்டு நெடுஞ்சாலை துறைக்கு ஒப்படைக்கப்பட்டது. இப்பாலம் 20 மீட்டர் நீளம் கொண்ட 16 கண்கள் உடையதாகும் ஒவ்வோர் கண்ணிலும் இரண்டு இரும்பு முக்கிய கர்டர்களும் (Iron Main Gur-ders) அதன்மேல் 9 குறுக்கு கர்டர்களும் (Cross Gurders) உள்ளன. இதன்மேல் ஆர்.சி.சி. பலகை (R.C.C. Slab) போடப்பட்டுள்ளது. இதற்கு முன்பாக 1982-ல் இப்பாலத்தில் பழுது ஏற்பட்டு, இதன் மீது பளுவான வாகனங்கள் செல்ல தடை செய்யப்பட்டது. உடனடியாக பரிசீலிக்கப்பட்டு இப்பாலம் "வலுவிழந்த" பாலமாக குறிக்கப்பட்டது. இதில் விரிசல்கள் நெடுகே உள்ளன. அண்மையில் 22-3-1987 அன்று மூன்றாவது கண்ணின்மேல் மேல்தளக் கான்கிரீட் சுமார் 2 X 2.2 மீ. அளவுக்கு உடைந்து கீழே இறங்கிவிட்டது. உடனடியாக போக்குவரத்து தடை செய்யப்பட்டது. இப்பழுதை சீர்செய்ய உடனடியாக 12 அங்குல கன மரக் கட்டைகள் தருவிக்கப்பட்டு சீர்செய்யும் பணி முடிக்கப்பட்டு 29-3-1987 அன்று முதல் கார்கள், ஸ்கூட்டர்கள், சைக்கிள்கள் போன்ற பளு இல்லாத வாகனங்கள்

(Light Vehicles) மட்டும் இப்பாலத்தின்மீது அனுமதிக்கப்பட்டு வருகிறது. இவ்வலுவிழந்த பாலத்திற்கு பதில் புதிய பாலம் கட்டும் பணி அரசால் அங்கீகரிக்கப்பட்டு தமிழ்நாடு மின்வாரியத்தினிடம் ஒப்படைக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. இப்பாலம் 1988ஆம் ஆண்டு மத்தியில் கட்டி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பாலம் 1928ஆம் ஆண்டு கட்டப்பட்டது. 1982ஆம் ஆண்டு அந்தப் பாலத்திலே பழுது ஏற்பட்டிருக்கிறது. 34 ஆண்டுகள் ஆன பிறகு 1982ஆம் ஆண்டுக்குப் பிறகு 1987ஆம் ஆண்டுதான் மூன்றாவது கண்ணில் உள்ள கான்கிரீட் கீழே இறங்கிவிட்டது என்று சொல்லி போக்குவரத்தை தடை செய்திருக்கிறார்கள். 1982 முதல் 1987 வரையில் இடையில 4 ஆண்டுகாலம் அது இறங்கும் வரையில் ஏன் கவனிக்கவில்லை? இடையிலேயே சரி செய்து வாகனங்களை விட்டிருக்கலாம. அடுத்து 1988ஆம் ஆண்டு மத்தியில் புதிய பாலம் கட்டி முடிக்கப படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பாலம் பழைய பாலத்தினுடைய அளவிலும், அந்த அமைப்பிலும் கட்டப் படுகிறதா? இதற்கு எவவளவு பணம் ஒதுக்கப்பட்டது? எவ்வளவு செலழிக்கப்படுமென்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, 1982-ம் ஆண்டு ஒருமுறை அதில் பழுது ஏற்பட்டதென்றாலும் அது சரி செய்யப்பட்டு மீண்டும் வாகனங்கள் அனுமதிக்கப் பட்டன. மிக அதிகமான எடையோடு வருகிற வாகனங்கள்தான் வருவதற்கு தடை செய்யப்பட்டது. அதற்குப் பின்னால் 1987ஆம் ஆண்டு இப்போது மீண்டும் பழுது ஏற்பட்டிருக்கிறது. இடையில் அந்தப் பாலத்தை முழுமையாக பழுது பார்த்து விடவேண்டுமென்று அரசாங்கம் கருதினாலும் அங்கே வருகிற வாகனங்கள் அத்தனையையும் தடை செய்து, போக்குவரத்தை முழுமையாக தடை செய்தால் தான் அந்தப் பணியைச் செய்ய முடியும். அப்படி தடை செய்யப்படுகிறபோது நடந்து போவதற்குக் கூட வாய்ப்பு இருக்காது. மேட்டூர் டேமிற்கும், மேட்டூர் ஆர்.எஸ்.-க்கும் மிகுந்த தொடர்பிருக்கிறது. தொழில் மற்றும் எல்லா வகையிலும் தொடர்பு இருக்கிற காரணத்தால் குறைந்தபட்சம் நடந்து வருகிற வாய்ப்பையாவது அவர்களுக்குச் கொடுக்க வேண்டும். எனவே இந்தப் பாலத்தைப் பழுதுபார்க்கிறபோது, நடந்து வர முடியாது. சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள் போன்ற வாகனங்கள் வர முடியாது. எனவே அப்படிப்பட்ட ஒரு தடையை ஏற்படுத்துகிறபோது மக்களுக்கு மிகப் பெரிய இடையூறு ஏற்படும் என்ற காரணத்தால்தான் அதிகமான பளு ஏற்றி வருகிற வாகனங்களை மட்டும் தடுத்துவிட்டு, குறைந்த பளுவோடு





வருகிற லைட் வெகிகிள்சை மட்டும் அனுமதித்துக் கொண்டிருந்தோம். மீண்டும் அதிலே இந்தப் பிரச்சினை ஏற்பட்டு விட்டது. இப்போதுகூட நாம் அதைப் பழுது பார்த்து சாதாரண வெகிகிள்ஸ் அதாவது லைட் வெகிகிள்ஸ் போவதற்கான ஏற்பாட்டைச் செய்து விட்டோம். இப்போது நாம் காத்துக் கொண்டிருப்பது புதிய பாலம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டால், இந்தப் பாலத்தை முழுமையாகப் பழுது பார்ப்பதற்கு வாய்ப்பாக இருக்குமென்று அரசு கருதி அந்தப் புதிய பாலம் கட்டி முடிக்கப்படுவதற்காக காத்துக் கொண்டிருக்கிறது. 1988-ம் ஆண்டில் அது முடிக்கப்படும். இதைவிட மிகப் பெரிய பாலமாக, இப்போது இருக்கிற அந்தப் போக்குவரத்துக்கு எவ்வளவு அவசியமோ அதற்கேற்ப செய்யப் பட்டிருக்கிறது. எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. அந்தப் பாலம் கட்டப்பட்டால் பெரும்பாலான போக்குவரத்துப் பிரச்னைகள் தீர்க்கப்படும். இந்தப் பாலம் ரிப்பேர் செய்யப்பட்டால் இந்த இரண்டு நகரங் களுக்கும் இடையிலிருக்கும் தொடர்பு துண்டிக்கப்படாமல் வசதியாக இருக்கும்.

திரு. பொ. உத்திராபதி : தலைவர் அவர்களே, இதுபோல 40, 50, 60 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட பாலங்கள் பெரும்பாலானவை தமிழ் நாட்டில் இருக்கின்றன. என்னுடைய தொகுதியில் திருத்துறைப்பூண்டிக்கும் திருவாரூருக்கும் இடையில் மாவூர் அருகில் இருக்கும் பெரிய பாலம் உடைந்து போக்குவரத்து தடை ஏற்பட்டிருக்கிறது. அதைப்போல மன்னார்குடிக்கும் திருத்துறைப்பூண்டிக்கும் இடையில் கோட்டூர் அடப்பாற்றில் இருக்கிற ஒரு பாலம் உடைந்து போக்குவரத்து தடை ஏற்பட்டி ருக்கிறது. இப்படி பழைய பாலங்கள் திடீரென்று உடைந்து விடுவதால் பல நெருக்கடிகள் ஏற்படுகின்றன. இதனைப் போக்குவதற்கு இரண்டு அல்லது மூன்று என்ஜினியர்களைக் கொண்ட குழுக்களை அமைத்து தமிழ் நாட்டில் இருக்கும் பழைய பாலங்களை சர்வே செய்து, அந்தப் பாலங்கள் உடைவதற்கு முன்னால் அவற்றைப் பாதுகாக்கக்கூடிய அளவிற்கு நடவடிக்கை யெடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே இருக்கிற முறைப்படி அந்தந்தப் பகுதியில் இருக்கிற அதிகாரிகள் ஆங்காங்கு இருக்கிற பாலங்கள் எவ்வளவு ஆண்டு களுக்கு முன்னால் கட்டப்பட்டன என்ற விவரங்களை கையில் வைத்திருக்கிறார்கள். அந்தப் பாலம் எவ்வளவு காலத்திற்குப் பயன்படுத்துவதற்குத் தகுதியுடையது என்ற ஆய்வை வைத்திருக் கிறார்கள். அப்படி 50, 60 ஆண்டுக்காலம் ஆன பிறகு அதனுடைய ஆயுள் முடிந்து விட்டது. இனிமேல் பயன்படுத்தக்கூடாது என்ற நிலையில் அதனை நேரடியாகப் பார்த்து ஆய்வு செய்கிறார்கள். அப்படிச் செய்கிறபோது மீண்டும் அதில் வாகனங்கள் போவதற்குத் தகுதியுடையவையாக இருந்தால் தான் அனுமதிக் கிறார்கள். இல்லையென்றால் அதனைத் தடுக்கிறார்கள். சில

இடங்களில் இப்படிப்பட்ட பிரச்சினை ஏற்பட்டு விடுகிறது. சில பாலங்கள் எதிர்பார்க்காமல் உடைந்து பிரச்சினைகள் ஏற்பட்டு விடலாம். ஏற்கனவே ஒரு அமைப்பு இருக்கிற காரணத்தால் இதற்குத் தனியாக புதிய அமைப்புத் தேவையில்லையென்றே கருதுகிறேன். வேண்டுமானால் இந்தக் கருத்தைச் சொல்லி கண்காணிப்பாக இருக்க வேண்டுமென்று குறிப்பிட்ட அதிகாரி களுக்கு நாம் அறிவுறுத்தலாம்.

(ஏ) திருச்சி மாவட்டம், கோட்டத்தூர்—புத்தனாம்பட்டி சாலையில் காட்டாற்றின் குறுக்கே பாலம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. செ. இரத்தினவேலு : தலைவர் அவர்களே, "திருச்சி மாவட்டம், கோட்டத்தூர்—புத்தனாம்பட்டி சாலையில் காட்டாற்றின் குறுக்கே சறுக்கு பாலம் கட்டப்படாததால் போக்குவரத்து பாதிப்பு குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணி யானது பெரமங்கலம்கிளவாடி சாலையில் கி.மீ. 14/6ல் ஒரு உயர் மட்டப் பாலம் கட்டும் பணியாகும். இச்சாலை ஒரு அரசு இதர மாவட்ட சாலையாகும். இச்சாலை திருச்சி—துறையூர் தம்மாம்பட்டி சாலை (மாவட்டப் பெருஞ்சாலை)யில் பிரிந்து திருச்சி பெரம்பலூர் சாலையில் (மாவட்டப் பெருஞ்சாலை) இணைகிறது. இச்சாலையின் நீளம் 20 கி.மீ. ஆகும். இச் சாலை ஒரு வழித்தடம் அகலம் கொண்ட தார்ச்சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 14/6ல் 15 மீட்டர் நீர்வழிப் பாதையுடன் கூடிய ஓடை ஒன்று குறுக்கிடுகிறது. இந்த இடத்தில் ஒரு உயர் மட்டப் பாலம் கட்டுவதற்கு உத்தேசமாக ரூ. 5.00 இலட்சங்கள் தேவைப்படும். இப்பணி இதுவரை அரசின் ஒப்புதல் பெற்ற திட்டங்கள் எதிலும் இடம் பெறவில்லை. இப்பணியினை எதிர் வரும் காலங்களில் மாநில சாலைகள் திட்டத்தில் இதர மாவட்ட சாலைகள் பிரிவின் கீழ் அரசின் நிதி நிலைமையைப் பொறுத்து மேற்கொள்ள பரிசீலிக்கப்படும்.

திரு. செ. இரத்தினவேலு : தலைவர் அவர்களே, அந்தச் சாலை தாலுகா தலைநகரான துறையூரை இணைக்கக் கூடிய சாலையாகும். புத்தனாம்பட்டி, ஓமாந்தூர் போன்ற நான்கு பஞ்சாயத்துக்கள் அடங்கிய கிட்டத்தட்ட 20 கிராமங்களை



இந்தச் சாலை துறையூரோடு இணைக்கிறது. மழைக் காலங் களில் கிட்டத்தட்ட 5, 6 அடி அளவிற்கு தண்ணீர் இந்தச் சாலையின் குறுக்கே போகிறது. அந்த காலத்தில் இந்தப் பகுதி யிலிருந்து துறையூருக்கு செல்வதற்கும், துறையூரில் இருப்பவர்கள் புத்தனாம்பட்டியில் இருக்கிற கல்லூரி, மருத்துவமனைக்குச் செல்வதற்கும் இடையூறு ஏற்படுகிறது. ஆகவே இந்தச் சாலை யினுடைய அவசியத்தைக் கருதிஇந்த ஆண்டு அமைச்சர் அவர்கள் இந்த சறுக்குப் பாலத்தைக் கட்ட ஆணை பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அதை எடுத்துக் கொள்வதற்கான வாய்ப்பு இல்லை. காரணம் ஏற்கனவே பட்டியல் தயாரிக்கப்பட்டு விட்டது. ஆனால் இதிலே இருக்கிற சிக்கல்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எதிர்காலத்திலே நிதி நிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. செ. இரத்தினவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு உயர்மட்டப் பாலம் கட்டுவதற்காக கிட்டத்தட்ட 5 இலட்சம் ரூபாய் செலவில் திட்டம் தீட்ட வேண்டும் என்று சொன்னால் அதுமுடியாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தப் பாலத்தின் அவசியத்தைக் கருதி, ஒரு சறுக்குப் பாலம் அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆலோசனை செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, பாலம் கட்டுகிறபோது, என்ன அவசியமோ, அதைக் கட்டுவது நல்லது. ஏற்கனவே அரசாங்கத்திலே நிதிப் பிரச்சினை என்று சொல்கிறபோது, தற்காலிகமாக ஒரு பாலம், பிறகு நிரந்தரமாக ஒரு பாலம் கட்டுவது என்பது, அரசு வீணாக பணத்தைச் செலவழிப்பதாகும். எனவே இன்று இருக்கக் கூடிய சூழ்நிலையில் அது முடியாத காரியம். எனவே அதற்கு எப்படித் தேவையோ அப்படியே திட்டம் தீட்டி, நிதிநிலைமை சரியாக இருக்கிறபோது, இதைக் கட்டுவதற்கான நடவடிக்கையை எடுக்கலாம்.

(ஏ) சேலம்–ஆத்தூர் சாலையில் ஏற்பட்ட விபத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. பழனிமுத்து, திருமதி தா. இராசாம்பாள், திருவாளர்கள் கு. ரமணி, வி.பி. சிந்தன், ஜே. ஹேமச்சந்திரன், சோ. வீரய்யன், மற்றும் எம். செல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " சேலம்—ஆத்தூர் சாலையில் 8—4—1987 அன்று காலை அக்கிசெட்டிப்பாளையம் அருகே தனியார் பஸ், லாரி மோதியதில் 4 பேர்கள் இறந்தும், 20 பேர்கள் காயம் அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதும் குறித்த " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

8—4—1987 ஆம் நாளன்று காலை 8 மணி அளவில் சேலம்— ஆத்தூர் சாலையில் வலைப்பாடி காவல் எல்லைக்குட்பட்ட அத்திப்பட்டி என்னுமிடத்தில் ஒரு லாரியும் ஒரு தனியார் பேருந்தும் மோதியதால் விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் மூன்று பேர்கள் விபத்து நடந்த இடத்திலேயே இறந்து விட்டனர். மற்றும் ஒருவர் ஆத்தூர் அரசு மருத்துவமனையில் இறந்து விட்டார். மேலும், இவ்விபத்தினால் 19 பேர்கள் காயமுற்றனர். இதில் 12 பேர்கள் படுகாயமுற்றனர். மற்றும் 7 பேர்கள் இலேசான காயமுற்றனர். காயமுற்ற 19 பேர்கள் ஆத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். சேலம் மாவட்ட ஆட்சியர், இவ்விபத்தினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உடனடியாக இடருதவிகளுக்கு ஏற்பாடுசெய்தார். மேலும், மரணமுற்றவர்களின் சட்டப்படிக்கான வாரிசுதாரர் களுக்கும், காயமுற்றவர்களுக்கும் முதலமைச்சர் விபத்து நிவாரண நிதியிலிருந்து இடருதவித் தொகை அளிப்பதற்காக சேலம் மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில், மாண்புமிகு முதல் அமைச்சர் விபத்து நிவாரண நிதியிலிருந்து இடருதவித் தொகை அளிப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்று கூறியிருக்கிறார்கள். இந்த விபத்திலே இறந்தவர்களுடைய குடும்பம் ஒவ்வொன்றுக்கும் கொடுத்த தொகை எவ்வளவு, காயம் அடைந்தவர்கள் குடும்பத்திற்கு கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்று அறிவிக்க இயலுமா? மேலும், இப்படிப்பட்ட கோர விபத்துக்கள் தமிழகத்தில் இனி நடக்காமல் இருப்பதற்கு அரசு என்ன திட்டம் வைத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, எவ்வளவு கொடுப்பது என்பதற்கான ஆய்வுகள்தான் இப்போது நடந்து வருகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவருடைய பரிந்துரை வந்த பின்பு அதை உங்களுக்கு அறிவிக்க முடியும்.



இதைத் தடுப்பதற்கான நடவடிக்கை என்பது பொதுவாக வாகனத்தை ஓட்டக் கூடியவர்கள் மட்டுமல்ல, பாதசாரிகளும், பொதுமக்களும் முழுமையான ஒத்துழைப்பைக் கொடுத்தால் தான் இதிலே ஒரு முடிவை நாம் ஏற்படுத்த முடியும். பல இடங்களில் நாம் பார்க்கிறோம், வாகனங்கள் போய்க் கொண்டிருக்கிறபோது, யாராவது நடந்து செல்லக் கூடியவர்கள், அல்லது சைக்கிளிலே செல்லக் கூடியவர்கள் திடீரென்று குறுக்கே வந்து விடுகிறார்கள். அப்படி வருகிறவர்களைக் காப்பாற்று வதற்காக இந்த வண்டிகளை திசை திருப்பும்போது, பெரிய விபத்துக்கள் ஏற்பட்டு விடுகின்றன. மேலும் நடந்து வருபவர் களும், சைக்கிளில் வருபவர்களும், இந்த வண்டிகளுக்கு ஏற்பட்ட விபத்தைப் பார்த்துவிட்டு அவர்கள் கவலைப்படாமல் போய்க் கொண்டிருக்கக் கூடிய நிலை கூட இருக்கிறது. எனவே இதை யெல்லாம் கடுமைப்படுத்த வேண்டும், சாலை விதிகளை எல்லோருமே, ஓட்டுநர் முதற்கொண்டு பொதுமக்களும் கடைப் பிடிக்க வேண்டும் எ்பதற்காகத்தான் அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்கான துவக்கத்தை இப்போது ஏற்பாடு செய்திருக்கிறது. அதற்காக காவலர்களுக்கு வேண்டிய எல்லாவகையான வசதிகளும் அந்தப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டிலே இருக்கிற காவல் துறையினருக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(உ) காட்டுமன்னார்கோயில் ஆதிதிராவிடர் மாணவியர் விடுதி.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காட்டுமன்னார் கோயில் ஆதி திராவிடர் மாணவியர் விடுதியில் கதவுகள் இல்லாத நிலையும், குளிப்பதற்கு தண்ணீர் இல்லாமல் மாணவியர்கள் வாய்க்காலில் சென்று குளிக்கின்ற நிலை குறித்த " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

காட்டுமன்னார்கோயில் அரசு ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதியானது 1963ம் ஆண்டு முதல் தனியார் கட்டிடத்தில் இயங்கி வந்தது. அக்கட்டிடத்தில் போதிய இடவசதி இல்லை. தரை மண்ணாக உள்ளது என்றும், பலமுறை வற்புறுத்தியும் கட்டிடச் சொந்தக்காரர் கட்டிடத்தை செப்பனிடவில்லை என்றும், காட்டுமன்னார்கோயில் ஆதிதிராவிடர் நல தனித் தாசில்தார் தெரிவித்திருந்தார். கட்டிடத்தில் மாணவியர்கள் குளிக்க இடவசதி இல்லையாதலால் விடுதிக்குப் பின்புறமுள்ள

பெரிய வாய்க்காலில் ஒதுக்குப்புறமான பகுதியில் 15 மாணவிகள் விதம், பகுதி பகுதியாக குளிப்பதாகவும் மேற்படி வாய்க்காலில் தான் பொதுமக்களும் குளிப்பதாகவும் கடந்த 23 ஆண்டுகளாக இதே நிலைதான் தொடர்கிறது எனவும் இதனால் எந்த பிரச்னையும் எழவில்லை எனவும் மாணவிகள் காலைக் கடன் கழிக்க டிரைலெட்ரின் ஒன்று உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

2. வாடகை விடுதிக் கட்டிடத்தில் போதிய இடவசதிகள் மற்றும்அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தால் இப்பொழுது இவ்விடுதி மாணவியர்களுக்கென்று தனியாக, அரசுக்குச் சொந் மாக 'தாட்கோ' மூலம் கட்டிடம் ஒன்று, போதிய வசதிகளுடன் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. 23—2—1987 அன்று காட்டு மன்னார்கோயில் ஆதி திராவிடர் நல தனி வட்டாட்சியரும் விடுதியின் கட்டிடத்தை தாட்கோவிடமிருந்து பொறுப்பு ஒப்புக் கொண்டு விட்டார். வாடகை கட்டிடத்தில் இருந்த காட்டு மன்னார்கோயில் விடுதி மாணவிகள் அனைவரும் தாட்கோவால் கட்டப்பட்ட புதிய அரசு கட்டிடத்திற்கு 9—3—1987 அன்று முதல் மாற்றப்பட்டு விட்டனர். மேலும் இவ்விடுதிக்குச் சுற்றுச் சுவர் கட்டப்பட்டு வருகிறது.

3. காட்டுமன்னார்கோயில் விடுதி மாணவிகள் போதிய வசதிகள் உள்ள புதிய அரசு கட்டிடத்திற்கு மாற்றப்பட்டு விட்டதால் விடுதி மாணவிகள் வாய்க்காலில் சென்று குளிக்கும் நிலை இனி ஏற்படாது.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையில் வருத்தம் தரக் கூடிய செய்தி இருந்தாலும்கூட, 15 மாணவிகள் விதம், பகுதி பகுதியாக, விடுதிக்குப் பின்புறமுள்ள பெரிய வாய்க்காலில் ஒதுக்குப்புறமான இடத்தில் குளிப்பதாக சொல்லியிருப்பதை இந்த அறிக்கையிலே பார்க்கிறபோது மிகவும் சங்கடமாக இருக்கிறது. இளம் வயதுடைய இந்த மாணவிகள் பொது இடங்களில் குளிக்கின்ற நிலை இங்கு மட்டுமல்ல, வேறு பல இடங்களிலும் நிரம்ப இருக்கிறது. எனவே அப்படிப்பட்ட இடங்களை ஆய்வு செய்து, உடனடியாக விடுதிகளைத் திறப்பதற்கு அரசு முன்வர வேண்டும். 23—2—1987 அன்று காட்டுமன்னார்கோயில் ஆதி திராவிடர் நல தனி வட்டாட்சியர் பொறுப்பேற்றுக் கொண்டார் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கட்டிடம் எப்போது கட்டி முடிக்கப்பட்டது ? அவர் எப்போது பொறுப்பேற்றுக் கொண்டார்? பொறுப்பேற்றதற்குப் பிறகு, இந்த விடுதியைத் திறப்பதற்கு இவ்வளவு இடைவெளி ஏற்படுவதற்குக் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடம் 9—3—1987 அன்று திறக்கப்பட்டு உள்ளது. அதேபோல் 23—2—1987 அன்று





[முற்டகல் 11.20]

இந்தக் கட்டிடம் தாட்கோவிலிருந்து ஆதி திராவிட நலத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆனால் கட்டிடத்தை ஒப்படைப்பதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அந்தக் கட்டிடம் கட்டிய பிறகு அங்கே மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கு, அதற்கு ஒரு சுற்றுச் சுவர் எழுப்ப வேண்டும். ஏனென்றால் மாணவியர் நலத்திலே இந்த அரசு அக்கறை கொண்டிருக்கிறது. அந்தச் சுற்றுச் சுவர் எழுப்பவில்லையென்றால் அதற்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கேள்வி கேட்பார்கள்.. ஆகவே பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்திலே, சுற்றுச் சுவர் கட்டிய பிறகு அந்தக் கட்டிடத்தை ஒப்படைக்கலாம் என்பதால் 9—3—1987 முதல் அந்த மாணவியர் அங்கே தங்கி சௌகரியமாக குளித்துக் கொண்டிருக்கிறார்கள். அதில் இனிமேல் எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் ஒன்றை மட்டும் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். 1963லிருந்து இந்த ஹாஸ்டல் தனியார் கட்டிடத்திலேதான் நிரந்தரமாக இருந்து கொண்டிருக்கிறது. அதற்குப் பின்னாலே ஆண்டவர்கள் இதை மறந்து விட்டார்கள். ஆனால் புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பின்னாலேதான் அங்கிருக்கின்ற மாணவியருக்கு 17½ லட்சம் ரூபாய் செலவிலே கட்டிடம் கட்டி, அது அவர்களின் நலனுக்காக பயன்பட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டுக் கூடாது என்றாலும்கூட அமைச்சர் அவர்கள் இப்படிச் சொல்லி விட்டார்கள். ஆனால் 1975க்குப் பின்னாலே 150 விடுதிகளை எல்.ஐ.சி.யிடம் அரசாங்கம் லோன் எழுப்பிக் கட்ட வேண்டுமென்ற குறிப்புகள் இருந்தன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன். என்றாலும் பரவாயில்லை. சுற்றுச்சுவர் கட்டுவதைவிட திறந்த வெளியில் குளிப்பது சரியா? ஆனால் சுற்றுச்சுவர் கட்டாத காரணத்தால் காலதாமதம் என்று சொன்னால், சுற்றுச்சுவர் காரணமாக மாணவியர் திறந்த வெளியிலே, வாய்க்கால்களிலே குளிப்பது நியாயமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் ஓடுகின்ற ஆற்றில் எல்லோரும் குளிப்பது என்பது ஒரு முறையாக இருக்கிறது. ஏனென்றால், கிராமத்தில் அதை தப்பாக நினைப்பது இல்லை. மேலும் தனித்தனியாக இரண்டு துறைக்ள் இருக்கும். பெண்கள் ஒரு துறையில் குளிப்பார்கள். ஆண்கள் ஒரு துறையிலே குளிப்பார்கள். யாரும் பெண்கள் குளிக்கும் அந்தப் பகுதிக்குச் செல்ல மாட்டார்கள். அது தமிழர்களுடைய பண்பாடு.

ஆகவே அது நடைமுறையிலே இருந்தது. இனிமேல் அந்தப் பிரச்சினை எழாது. ஹாஸ்டலிலே கட்டிட வசதியோடு குளிப்பதற்கும் வசதி ஏற்படுத்தப்பட்டு செயலாற்றிக்கொண்டிருக்கிறது.

(ஊ) காவிரி நீர்ப் பிரச்சினை.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே " காவிரி நதிநீர் பிரச்சினையை நடுவர் மன்றத்திற்கு விட வேண்டுமென்று தமிழக அரசு கோரி மைய அரசு அது குறித்து பரிசீலித்துக் கொண்டுள்ள சூழ்நிலையில், கர்நாடக அரசு சில புதிய அணைகளை காவிரிப் பகுதியில் கட்ட முற்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்த " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

தமிழ்நாட்டின் பாசனத்திற்கு காவிரி ஒரு முக்கிய ஆதாரமாகும். இந்த நதியின் நீர் உபயோகம் குறித்து எழுந்துள்ள பிரச்சினை சுமார் 17 ஆண்டுகளுக்கும் மேலாக தீர்வுகாணப் படாமல் இருந்து வருகிறது. கர்நாடகம் 1958 முதல் 1966-ம் ஆண்டு வரையில் கபினி, ஹேமாவதி, ஹேரங்கி நீர்த்தேக்கப் பணிகளை 1892 மற்றும் 1924-ம் ஆண்டைய ஒப்பந்த விதிகளுக்கு முரணாக தமிழக அரசின் இசைவைப் பெறாமலேயே துவக்கி, மத்திய அரசின் ஒப்புதலைப் பெறாமலேயே, இந்நீர்த்தேக்கங்களை கட்டி முடித்ததுடன் 1975-ம் ஆண்டு முதல், 1924-ம் ஆண்டைய ஒப்பந்த விதிகளின்படி, தமிழ்நாட்டின் காவிரிப் படுகைக்குக் கீழேயுள்ள பாசனத்திற்கு விடுவிக்க வேண்டிய நீரை, விடுவிக்காமல், விதிகளுக்கு முரணாக, வருகின்ற நீர்வரத்து அனைத்தையும் தனது நீர்த்தேக்கங்களிலேயே தேக்கி, உபரி நீரை மட்டுமே கீழே விடுவித்து வருகிறது. இதனால், மேட்டூர் நீர்த்தேக்கத்தில் ஆண்டுக்காண்டு நீர் வரத்து குறைவாகவும், நிச்சயமற்றும் மற்றும் தாமதமடைந்தும் வருவதால், இந்நீர்த் தேக்கத்தின் கீழேயுள்ள சுமார் 16 இலட்சம் ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி மிக வெகுவாகப் பாதிக்கப்பட்டு வருகிறது.

இப்பிரச்சினைக்கு ஒரு சுமூகமான தீர்வு காணும்பொருட்டு கடந்த 17 ஆண்டுகளாக மத்திய அரசும் மாநில அரசுகளும் மேற்கொண்டு பேச்சுவார்த்தைகளும் மற்றும் தமிழக கர்நாடக மாநிலங்களிடையே நடைபெற்ற இருதரப்புப் பேச்சுவார்த்தைகளும் எந்த வித பயனும் அளிக்கவில்லை.





கர்நாடகம், தமிழக அரசின் மற்றும் மத்திய அரசின் இசைவினைப் பெறாமலேயே கட்டி முடித்துள்ள நீர்த்தேக்கங் களின் கொள்ளளவு, 1924ஆம் ஆண்டைய ஒப்பந்த விதிகளுக் கேற்ப அமைந்துள்ள போதிலும், இந்நீர்த்தேக்ககங்களின் மூலம் நீர் வழங்கும் விதிமுறைகள் தமிழ்நாட்டிற்கு கிடைக்க வேண்டிய நீரளவு 5 விழுக்காடுகளுக்குமேல், குறைபாடின்றி கிடைக்கும் வகையில் அமைக்கப்படவேண்டும் என்ற நிபந் தனையையும், இதற்கு தமிழ்நாட்டின் முன்னிசைவு பெற வேண்டும் என்ற நிபந்தனைகளையும் மீறி, இத்திட்டங்களின் கீழ் பாசன பரப்பும் நீர் உபயோகமும் மிக அதிக அளவில் திட்டமிடப்பட்டு பாசனப் பரப்பு விரிவாக்கப்பட்டு வருகிறது. இதனால், தமிழகத்திற்கு ஏற்பட்டு வரும் பாதிப்பை சுட்டிக் காட்டி, காவிரிப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரையில், இந்த புதிய நீர்த்தேக்கங்களின் கீழே உள்ள பாசனப் பரப்பை விரிவாக்கும் பணியையும் கூடுதல் நீர் உபயோகப் படுத்துவதையும் நிறுத்தி வைக்குமாறு தமிழக முதல்வர் கர்நாடக முதல்வருக்கு 1984—ம் ஆண்டு, ஜனவரித் திங்களில் நேர்முகக் கடிதம் அனுப்பியுள்ளார். இதுபற்றி மத்திய அரசுக்கும் கடிதம் எழுதி, கர்நாடகத்தில் பாசனப் பரப்பும் நீர் உபயோகமும் அதிகரிப்பதை நிறுத்திவைக்க ஆணையிடும்படி கோரப்பட்டது. கர்நாடக முதல்வர் இதற்கு இணங்கவில்லை. மத்திய அரசும் இதுபற்றி நடவடிக்கை எடுக்கவில்லை.

தமிழக அரசு ஒரு சுமூகமான தீர்வு காண வேண்டும் என்ற எண்ணத்தோடு, மாநிலங்களிடையே நடந்த பேச்சு வார்த்தைகளில் கலந்துகொண்டபோதிலும், கர்நாடக அரசு தனது எல்லைக்குள் வரும் காவிரி நீர் அனைத்தையும் தாங்களே பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்ற நோக்கத்துடன் மேற்கொண்டு வரும் பிடிவாதப் போக்கினால், பேச்சுவார்த்தைகள் மூலம் சுமூகமான தீர்வு காண வாய்ப்பில்லாமல் போய்விட்டது. இந்நிலையில் தமிழக அரசு, 1956ஆம் ஆண்டைய பன்மாநில நீர்த்தகராறுச் சட்டத்தின்படி, இப்பிரச்சினைக்குத் தீர்வு காண ஒரு நடுவர் மன்றம் அமைக்கக்கோரி. 1986ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில், மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியுள்ளது. இக்கடிதத்தில், இதுகாறும் மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்காமல் போனது பற்றியும் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ஏற்படும் காலதாமதத்தினால் தமிழகத்திற்கு ஏற்படும் பேரிழப்புப் பற்றியும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. மேலும், இக்காலதாமதத்தைப் பயன்படுத்திக் கொண்டு, கர்நாடகம் தனது அனுமதி பெறாத தனது திட்டங்களை நிறைவேற்றி அதன் கீழ் உள்ள கால்வாய் மற்றும் பாசனப் பரப்புகளை விரிவாக்கி வருவது பற்றியும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. தொடர்ந்து. விரைவில் நடுவர் மன்றம் அமைக்கக் கோரி ஆகஸ்ட் மற்றும் அக்டோபர், 1986-லும் ஜனவரி, 1987-லும் தமிழக முதல்வர் பாரதப்

பிரதமருக்கு நேர்முகக் கடிதங்கள் எழுதியுள்ளதுடன், பாரதப் பிரதமரை நேரில் சந்தித்தும் இது பற்றி வற்புறுத்தி கோரிக்கை விடுத்துள்ளார். மத்திய அரசு நமது கோரிக்கைக்கு இணங்கி, விரைவில் நடுவர் மன்றம் அமைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இதனிடையே, 1983-ல் காவிரி நீர்ப்பாசன விளைபொருள்கள் விவசாயிகள் நல உரிமைப் பாதுகாப்புச் சங்கம் உச்ச நீதிமன்றத்தில் தொடுத்துள்ள வழக்கில், நடுவர் மன்றம் அமைக்குமாறு மத்திய அரசுக்கு ஆணை பிறப்பிக்கும்படி வேண்டியுள்ள கோரிக்கையையும் தமிழக அரசு ஆதரித்து பதில் ஆணையுறுதி ஆவணம் தாக்கல் செய்துள்ளது.

அண்மையில், கர்நாடக முதல்வர், காவிரியில் ஏற்கனவே கட்டப்பட்டுவரும் திட்டங்களை விரைவில் முடிக்க, தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கர்நாடக சட்டமன்றத்தில் அறிவித்துள்ளதைச் சுட்டிக்காட்டி விரைவில் நடுவர் மன்றம் அமைக்குமாறு கோரி தமிழக முதல்வர் அவர்களிடமிருந்து பாரதப் பிரதமருக்கு நேர்முகக் கடிதம் அனுப்பப்படுகிறது. மத்திய அரசு இது குறித்து விரைவில் நட்வடிக்கை எடுக்கும் என நம்பப்படுகிறது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்** (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையின் மூலம் இந்த அரசும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களும் எடுத்துக் கொண்ட முயற்சிகள், பிரதம அமைச்சருக்கும், கர்நாடக முதல்வருக்கும் கடிதம் எழுதியும், நேரிலே சந்தித்தும் பல்வேறு வழிகளிலே பேசித் தீர்க்கவேண்டுமென்கிற விவரங்களும் அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகளும் தெளிவாக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல விவர அறிக்கையில் மத்திய அரசினுடைய கோரிக்கைக்கு இணங்கி விரைவில் நடுவர் மன்றம் ஒன்றை அமைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்த நம்பிக்கைகள் தகர்கின்ற வகையிலே சில நடவடிக்கைகளை மத்திய அமைச்சர் அவர்கள் அவருடைய கருத்துக்களிலே வெளியிட்டிருக்கிறார்கள் என்பது வேதனை அளிக்கிற நிகழ்ச்சி. கடந்த மாதம் இங்கு வந்திருந்த நீர்ப்பாசனத் துறை அமைச்சர் மாண்புமிகு சங்கரானந்த் அவர்கள் டிரிபியூனலுக்கு விடுவது பற்றிப் பரிசீலிக்கப்படும் என்ற கருத்தைச் சொன்னார்கள். ஆனால் இந்த மாதம் 9 ஆம் தேதி நாடாளுமன்றத்திலே மானியக் கோரிக்கையில் பதில் அளிக்கையில், முற்றிலும் மாறுப்பட்ட கருத்துக்களை வைத்து இருக்கிறார்கள். இதை பேசித்தான் தீர்க்கவேண்டுமென்றும், கோதாவரி நதிநீர்ப்





பிரச்சினையைத் தீர்ப்பதற்கு டிரிபியூனல் அமைத்து 11 ஆண்டுக்காலம் ஆகிவிட்டது. எனவே பேசித்தான் தீர்க்கவேண்டுமென்றும் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்போல, இந்த மாதம் 22-ம் தேதி நாடாளுமன்றத்திலே மத்திய திட்ட மந்திரி மாண்புமிகு சங்கரானந்த் அவர்கள் காவிரியிலே கர்நாடக அரசு மூன்றாவது கட்டப் பணியினைத் தொடங்குவதற்கு மத்திய சர்க்கார் அனுமதி அளித்து இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நேற்று நாடாளுமன்றத்தில் உலக வங்கியினுடைய உதவிபெற்று 300, 400 கோடி ரூபாய்க்கு தமிழக அரசு வைத்துள்ள திட்டங்களை, அங்கே காவிரி நதிநீர் பிரச்சினைகள் தீர்க்கப்படாத சூழ்நிலையில் அவர்களுக்கு அனுமதி வழங்க இயலாது என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி அரசு கொண்டிருக்கிற நம்பிக்கை, மாநில அரசினுடைய நம்பிக்கை. டிரிபியூனல் அமைக்கப்படும் என்ற நம்பிக்கை தகர்கின்ற வகையில் முன்னுக்குப்பின் முரணாக மத்தியிலே இருக்கிற அமைச்சர் அவர்கள் பேசி இருக்கிறார்கள். உண்மையிலேயே இது தேசிய ஒருமைப்பாட்டிற்கு ஒரு சவாலாக உள்ளது. இந்த நிலையிலே நம்முடைய மாநில அரசினுடைய நிலை என்ன? மேலும், ஒரு வழக்கு தொடரப்பட்ட விவரமும் இந்த விவர அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வழக்கிலே தமிழக அரசையும் ஒரு பார்ட்டியாகச் சேர்க்கவேண்டும் என்பதற்காக அரசு நடவடிக்கை எடுக்குமா என்கிற விவரங்களை அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்,

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமக்குக் கிடைக்க வேண்டிய நியாயங்களை கர்நாடக அரசு மறுத்ததன் விளைவாகத் தான் நாம் மத்திய அரசினிடம் டிரிபியூனலைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இங்கே வருகின்ற நேரத்தில் மாண்புமிகு சங்கரானந்த் அவர்கள் டிரிபியூனலைப் பற்றி யோசிக்கலாம்; பரிசீலனை செய்யலாம் என்று எங்கள் மத்தியிலே சொல்லி விட்டுச் சென்றார்கள். ஆனால் அங்கே நாடாளுமன்றத்திலே சொல்லுகின்ற நேரத்திலே பேசித்தீர்க்கவேண்டுமென்ற உணர்வினை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் பேசித் தீர்க்கவேண்டும் என்ற உணர்வுமாறி ஒரு ஆண்டுக் காலம் ஆகிவிட்டது என்பதை நான் இந்த நேரத்தில் அவருக்கு இந்த சட்டமன்றத்தின் மூலமாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் காலத்திலிருந்து இந்தப் பிரச்சினை மெதுவாக உருவெடுத்து முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு திரு. கருணாநிதி அவர்கள் காலத்தில் மிகப் பெரிய விஸ்வரூபம் எடுத்து இன்றைக்கு அதை முடிக்க முடியாது திணறிக்கொண்டு இருக்கிறோம். பேசித் தீர்க்கவேண்டும் என்று சொல்லி 20, 25 ஆண்டுக்காலமாக பல முதலமைச்சர்கள் முயற்சி செய்தும், மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சராக முன்னால் இருந்த அத்தனை நீர்ப்பாசன அமைச்சர்களும் திரு கே. எல். ராவிலிருந்து

கடைசியாக இப்போது இருக்கின்ற அமைச்சர் திரு. சங்கரானந் வரைக்கும் அதேபோல் மத்திய பிரதம அமைச்சர் திரு. ஜவகர்லால்நேருவிலிருந்துஇன்றைக்கு இருக்கின்றமத்திய பிரதம அமைச்சர் மரியாதைக்குரிய ராஜீவ் காந்தி அவர்கள் வரைக்கும் பல தடவைகள் முயற்சிகள் மேற்கொண்டும் பலிக்கவில்லை. நமக்குக் கிடைக்கவேண்டிய நியாயங்களை கர்நாடக அரசு மறைத்து, மறுக்கிற காரணத்தால் தான் இன்றைக்கு நாம் டிரிபியூனல் வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இருக் கிறோம். டிரிபியூனலைக் கேட்பதைவிட வேறு வழி இல்லை என்பதை நான் இந்த சட்டமன்றத்தின் மூலமாகமத்திய அமைச் சருக்கு மிக தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதேபோல் மத்திய அமைச்சர் அவர்கள் நமக்கு உலக வங்கி உதவி கொடுக்கமுடியாது என்ற உணர்வில் சொல்லியிருக் கிறார்கள் என்று பேப்பரில் பார்த்து இருக்கிறோம். ஆனால் எந்தவகையில் சொன்னார் என்று எனக்குத் தெரியவில்லை. பெங்களூர் நகரத்தில் குடிநீர் திட்டத்திற்காக உலக வங்கியின் உதவியுடன் தான் அந்தத் திட்டத்தை நிறைவேற்றி இருக் கிறார்கள். அந்தத் திட்டத்தை நிறைவேற்றும்போது பேச்சு வார்த்தை நடத்திய நேரத்தில் நாம் சொன்னது காவிரியை நவீனப்படுத்தும் திட்டத்தையும், மேட்டூருக்கு கீழே பவானி, கட்டளை கால்வாய் ஆகிய அந்த 3 இடங்களுக்கு மின்சார திட்டம் அமைப்பது பற்றியும் சேர்த்து மொத்தமாக தான் பேசி முடிவு எடுக்க வேண்டும். தனியாக முடிவு எடுக்கமுடியாது என்று சொல்லி 1985ல் நடந்த கூட்டத்தில் நாம் அதை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறோம். அதேபோல் பாண்டிச்சேரியும் அதையே சொல்லியிருக்கிறார்கள். கேரள அரசு இந்தத் திட்டத்தை ஒத்துக் கொள்ளமாட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு திட்டமாகப் பேசாமல் ஒட்டுமொத்தமாகத் திட்ட மாகப் பேசி காவிரிப் பிரச்சினையில் ஒரு முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்று சொல்லி அத்தனை மாநிலத்தைச் சேர்ந்த வர்களும் அன்றைக்கு சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசு அதைக் கொடுத்து இருப்பதாகச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். நான் அதை நம்பவில்லை. அப்படிக் கொடுத்து இருந்தால் அதுசம்பந்தமாக நான் என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமக்கு வேண்டியது எல்லாம் நமக்கு வேண்டிய நியாயங்கள் கிடைத்து ஆகவேண்டும். பேசிப் பார்த்ததில் பயன் இல்லை என்பதை நான் இந்த நேரத்தில் மிகத் தெளிவாக சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே 17 ஆண்டு கால பேச்சு வார்த்தை களும் தம்முடைய நியாயமான உணர்வுகளும் சிதைக்கப்பட் டிருக்கின்றன. புறக்கணிக்கப்பட்டு இருக்கின்றன, என்றும் 17 ஆண்டுகாலமாக இது பேசித் தீர்க்கப்படாமல் இருக்கிற





பிரச்சினை என்றும் தெரிகிறது. இந்த விவர அறிக்கையில் ஒரு விவரத்தைச் சொல்லியிருக்கிறார்கள். 1983 ஆம் ஆண்டு காவிரி நீர் பாசன விளைபொருள்கள் விவசாயிகள் நல உரிமைப் பாதுகாப்பு சங்கம் உச்ச நீதி மன்றத்தில் இது தொடர்பாக ஒரு வழக்குத் தொடர்ந்து இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக முன்பே அந்த கேள்வியைக் கேட்டேன், அதிலே மாநில அரசை ஒரு பார்ட்டியாக சேர்க்க வேண்டும் என்று. அதில் சேர்த்து இருந்தால் கூட அதில் பிரதிவாதியாகச் சேர்த்து இருக்கிற வாய்ப்புத்தான் இருக்கும். இப்படிப்பட்ட முயற்சியை அந்த சங்கம் மேற்கொண்டதற்காக நான் அதை வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏதாவது ஒரு சூழ்நிலையில் அந்த வழக்கைத் தொடர முடியாமல் போய்விட் டாலோ, இல்லை ஒரு கால கட்டத்தில் பல நிபந்தனைகள் காரணமாக அந்த வழக்கை வாபஸ் பெறுகிற சூழ்நிலை ஏற்பட்டு விட்டாலோ இந்த மாநிலத்தினுடைய முழு உரிமையும் பாதிக்கிற சூழ்நிலை ஏற்படும். எனவே மாநில அரசை அதில் வாதி யாக சேர்க்கவேண்டும் என்று ஒரு கோரிக்கை வைக்கப்படுமா?

அதேபோல் பல்வேறு காலக் கட்டங்களில் 1892 ஆம் ஆண்டி னுடைய ஒப்பந்தத்தையும், 1924ஆம் ஆண்டு ஒப்பந்தத்தையும் நிர்தாட்சண்யமாக கர்நாடக அரசு மதிக்காமல் அணைகள் கட்டி யிருப்பதைப் பார்த்தோம். இப்போதும் கூட மாண்புமிகு அமைச்சர் திரு சங்கரானந்த் அவர்கள் அனுமதி கொடுத்த தாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் நம்மை அதில் பார்ட்டியாக இணைக்கவேண்டும் என்ற கோரிக்கையை யும் அதே போல் கர்நாடக அரசு, டிரிபியுனல் நியமிக்கப் படுகிற வரையில் எந்தப் பணிகளையும் தொடரக் கூடாது என்ற வகையில் உச்ச நீதிமன்றத்தின் மூலம் கர்நாடக அரசு மீது தடை ஆணை பெறுவதற்கு சட்ட நிபுணர்களைக் கலந்து ஆலோ சிக்கவும் மாநில அரசு நடவடிக்கை எடுக்குமா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வழக்கில் அன்றைக்கு நம்முடைய அரசைச் சேர்த்து இருந் தார்கள். ஆனால் அப்போது நாம் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டு இருந்த காரணத்தால் அப்போது நாம் பேச்சு வார்த் தையில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கிறோம் என்று உச்ச நீதி மன்றத்தில் சொல்லியிருந்தோம். பேச்சு வார்த்தை முடிந்து முறிவு பெற்ற உடனே நாம் டிரிபியூனல் கேட்கிறோம் என்று இப்போது உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்து அதற்கு வேண்டிய நியாயங்களை நீங்கள் பெற்றுத் தரவேண்டும் என்று இப்போது கேட்டிருக்கிறோம். அதிலே எந்த விதமான கருத்து வேறுபாடும் இல்லை. இன்றைக்கு உச்ச நீதிமன்றத்தில் அந்த விவசாயிகள் சங்கம் போட்ட அந்த வழக்கில் நாம் வாதியாக இருந்து நியாயம் கொடுக்கவேண்டும்

என்ற அந்த உணர்வைச் சொல்லியிருக்கிறோம் இங்கே கடைசியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது கூட பெங்களூரில் குடிநீர்த் திட்டத்திற்கு ஒப்புதல் கொடுத்து இருப்பதைப் பற்றிச் சொன்னார்கள். நான் இன்னும் சொல்லிக்கொள்வது எல்லாம் நமக்கு வேண்டிய நியாயங்களை கர்நாடக அரசு கொடுக்க வேண்டும் என்று தான் டெல்லி அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டு இருக்கிறோம். இன்னும் நமக்கு நம்பிக்கை இருக்கிறது. நம்முடைய முதலமைச் சருக்கு நம்பிக்கை இருக்கிறது. நமக்கு வேண்டிய நியாயங்கள் நமக்கு எப்போதும் பரம்பரையாக கிடைத்து வருகிற தண்ணீர் பாத்தியத்தை நமக்கு கிடைக்கும் என்ற உணர்வு நமக்கு இனனும் குறையவில்லை. நம்பிக்கை யோடு இருக்கிறோம். காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

(முற்பகல் 11-30)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவை யினுடைய தலைவர் அவர்களே. மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்கள், தெளிவாகவும், திட்டவட்டமாகவும் இந்த மாநில அரசினுடைய கொள்கையைச் சொல்லியிருக் கின்றார்கள். அந்த வகையில் நாம் திரும்பத்திரும்பச் சொல்லி யிருக்கின்றோம். பேச்சு வார்த்தைகளின் மூலமாக, எல்லா அரசுகளுடனும். எல்லா மட்டத்திலும். எல்லோரையும் வைத்துப் பேசியாகிவிட்டது. மத்திய அமைச்சகத்திலிருந்து வந்த நீர்பாசனத் துறை அமைச்சர், மற்ற அமைச்சர்கள் அதிகாரிகளை வைத்துப் பல தடவை பேசியாகிவிட்டது. யார் இந்தப் பிரச்சினைகளில் ஈடுபட்டிருக்கிறார்களோ. அவர்களே திரும்பத் திரும்ப பேசுவதில் எந்த ஒரு புண்ணி யமும் இல்லை என்ற முடிவிற்கு வர வேண்டுமே தவிர வேறு எந்த நிலையும் இல்லை என்றுதான் கடைசியில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அழுத்தந்திருத்தமாக எடுத்துக் சொன் னார்கள். நடுவர் தீர்ப்புக்கு விடுவதைத் தவிர வேறு வழி யில்லை. அங்கேயும் மத்திய நீர்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். மறுபடியும் பேசிப் பார்க் கலாமென்று பல தடவை முயன்று பார்த்தாகவிட்டது. 10, 12 ஆண்டுகளுக்கு முன்பாக, 1974.லேயே முடிய வேண்டிய ஒன்று இவ்வளவு காலமாகியும் முடியாததற்குக் காரணம் என்னவென்று கேட்டால் மத்தியஅரசினுடைய அனுமதியைப் பெறாமலேயே பல அணைக்கட்டுகள் கட்டப்பட்டு நமக்கு வர வேண்டிய தண்ணீரைத் தேக்கித் தேக்கி அவைகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றனா அதைத் தடுத்து நிறுத்து வதற்கு மத்திய அரசால் முடியவில்லை. ஆனால் அனுமதி யைப்பெறாமல் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். என்ற புகாரும் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, நடுவர் தீர்ப்புக்குத்தான் விடவேண்டும் என்று மறுபடியும் மீண்டும் மீண்டும் முதலமைச்சர் அவர்கள் இந்தியப் பிரதமருக்குச் சொல்லி யிருக்கிறார்கள். கடிதமும் எழுதியிருக்கிறார்கள். மீண்டும்





வற்புறுத்தியும் வருகிறார்கள். அதுமட்டுமல்லாமல். அங்கே
அவர்கள் தடுத்து நிறுத்தமுடியவில்லை என்பது மட்டுமல்
லாமல் நடுவர் மன்றத் தீர்ப்பிற்கு விட்டத்தில் 12 ஆண்டு
களாயிற்று. 16 ஆண்டுகளாயிற்று என்று இந்த விஷயத்தில்
சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால், நடுவர்
தீர்ப்பிற்கு விட்டால் 1½ ஆண்டுகள். 2 ஆண்டுகளுக்குள்
முடியக் கூடிய அளவிற்கு, புள்ளி விவரங்கள், மற்றவைகள்
எல்லாம் திட்டவட்டமாகத் தெளிவாக எல்லாவகையிலும்
இருக்கிறது. இதில் தகராறு இல்லை என்று அந்த மாநிலத்
தினுடைய பொறியியல் வல்லுநர்கள் சொல்லியிருக்கிறார்கள்.
நம்முடைய மாநிலத்து பொறியியல் வல்லுநர்கள் சொல்லி
யிருக்கிறார்கள். மத்திய அரசினுடைய பொறியியல் வல்லு
நர்கள் சொல்லியிருக்கிறார்கள். காலத்தாழ்விற்கு இடமே
யில்லை. நடுவர் தீர்ப்பிற்கு விட்டு, நாம் தீர்ப்பு வாங்கு
வதைத்தவிர, வேறு எந்த வழியும் இல்லை, கர்நாடகத்தில்
இருக்கிற எல்லா அரசியல் கட்சிகளும் ஒற்றுமையாக இருந்து
அந்தப் பணிகளுக்கு ஈடுகொடுக்கிறார்கள். ஆகவே இங்கேயும்
அது மாதிரி ஒற்றுமையாக இருந்து எங்களுக்கு ஆதரவு
தரவேண்டுமென்றும். திரு. ஆறுமுகம் போன்றவர்களுடைய
ஒத்துழைப்பு வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

3. வரவு-செலவுத் திட்டம், 1987-88, வாக்கெடுப்பு—(தொடர்ச்சி.)

(அ) கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 19,30,85,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் "

திரு. எஸ். ரெத்தினராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டம் நாகர்கோவில் நீதிமன்ற வளாகத்திற்குள் வழக்குரைஞர் அறைகள் (Lawyers Chambe ) கட்ட வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.19,30.85,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் "

[1987 ஏப்ரல் 25

திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரான வேலூரில் நீதிமன்றங் களுக்குப் புதிய வசதியான கட்டிடங்கள் கட்ட வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண். 13— நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 19,30,85,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும். ''

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்கள் உள்ள இடங்களில் வழக்கறிஞர்கள் இருந்து பணியாற்ற கட்டிட வசதியும். போதுமான மேஜை நாற்காலிகளும் இல்லாத நிலையை போக்குவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண். 13— நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 19,30,85,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(ஆ) கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியத் கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 11,77,98,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ''.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண் 14.—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,77,98,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. சோ. மா. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் ;

'' மானியக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,77,98,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும். ''



1987 ஏப்ரல் 25]

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தமிழ்நாட்டில் பெண் குற்றவாளி களுக்கு தனிச் சிறைச்சாலை, பெண் அதிகாரிகளின் மேற் பார்வையில் அமைக்க வேண்டியதின் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,77,98,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலையில் 10 ஆண்டுகள் சிறை தண்டனை பெற்று இருந்தால் அவர்களை விடுதலை செய்வது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண் 14.—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,77,98,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக் கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அரசினுடைய கொள்கைக் குறிப்புகள் * இந்த அவை யிலே வைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களை கேட்டு பின்னர் அரசினுடைய பதிலை நான் சொல்கிறேன்.

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா : பேரவைத் தலைவர் அவர் களே, இன்றைக்கு நீதி நிர்வாகம், சிறைச்சாலை நிர்வாகம் என்ற மானிய கோரிக்கையின்மீது நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை வைக்க விரும்புகிறேன். இன்றைக்கு The law is the basis of the society. Law must respond to the demands of the society. Law and Judicial p ocess should herald a sccial change. It should become an instrum:nt for the r.alisation of the hopcs and asipra- tions of all men. Law without justice is blind. Justice without law is lame. Law geared to justice is o.der. என்ற கருத்து ஏற்கப் பட்டுள்ளது.. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு மணிக்குள் முடிக்க வேண்டும் என்பதால் தொடர்ந்து எல்லோரும் சுருக்கமாக பேசி முடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

---

*761—969-ம் பக்கங்களில் இணைப்புகள் III, IV ஆக அச் சிடப்பெற்றுள்ளன.

[1987 ஏப்ரல் 25

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா: பேரவைத் தலைவர் அவர்களே, ஆனால் இன்றைக்கு தமிழகத்தில் இருக்கின்ற நிலைமை இந்தக் கருத்திற்கேற்ப இருக்கின்றதா என்று பார்புகின்றபோது இல்லை என்றகருத்துதான் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே இருக்கின்ற நிலைமை Courts without judges; cases escaping into decades; litigation becoming immortal; this is the seenario we are now facing. இன்றைக்கு எல்லா நீதிமன்றங்களிலும் நீதிபதிகள் பற்றாக்குறை. உயர்நீதிமன்றமும் அதற்கு விதிவிலக்கு அல்ல. இருக்கின்ற பிரச்னை arreais in courts—explosion of litigation. இன்றைக்கு ஒரு உயர்நீதிமன்றத்திற்கு சென்றாலும்கூட, எந்த வழக்காக இருந்தாலும் பதிவு செய்த பிறகு இத்தனை நாட்களுக்குள் அந்த வழக்கு முடிக்கப்படும் என்று வரையறை கிடையாது. டிஸ்ட்ரிக் முன்சிப் கோர்ட்டாக இருந்தாலும், சப்-கோர்ட்டாக இருந்தாலும் மாவட்ட நீதிமன்றமாக இருந்தாலும் இந்த நிலைமை தான் தமிழகமெங்கும் இருந்து வருகிறது. இன்றைக்கு இந்த நிலைக்கு காரணம் பல நீதிமன்றங்களிலே நீதிபதிகள் கிடையாது. முக்கிய மாக கீழ் மட்டத்தில் இருக்கின்ற மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளில் பலவற்றில் பல வருடங்களாக மேஜிஸ்ட்ரேட்டே கிடையாது. என்னுடைய தொகுதியான பூவிருந்தவல்லி சப்-மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டிலே ஒரு வருடத்திற்கு மேலாக நீதிபதி கிடையாது. சப்-கோர்ட்டிலே பல , மாதங்களாக நீதிபதி கிடையாது. ஏற்கனவே இந்த மன்றத்திலே பேசுகின்றபோது ராமசாமி என்பவர் அங்கே சப்-ஜட்ஜாக பணியாற்றுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர் இன்றைக்கு அடிஷனல் சார்ஜ் எடுத்துக் கொண்டிருக்கிறார். திருவள்ளூரி விருந்து இரண்டு நாட்கள் பூவிருந்தவல்லிக்கு வந்து சென்று கொண்டிருக்கிறாரே தவிர, அங்கே ஒரு நீதிபதி நியமிக்கப்பட வில்லை. இதனால் வழக்குகள் தேங்கிக் கொண்டிருக்கின்றன. இன்றைக்கு தகுதியான நபர்கள் இல்லையா என்றால் தமிழகத் திலே தகுதியானவர்கள், அது உயர்நீதிமன்றம் என்றாலும் சப்-கோர்ட் என்றாலும், டிஸ்ட்ரிக்ட் முன்சிப் மேஜிஸ்ட்ரேட் கோர்ட் என்றாலும் தலைமையிடத்திலே தகுதி உள்ளவர்கள் ஏராளமானவர்கள் நம்முடைய மாநிலத்தில் இருக்கிறார்கள். திறமை படைத்தவர்கள் இருக்கிறார்கள். ஆனால் இந்த நீதிபதிகளை நியமிக்கப்படாததற்கு காரணம் நம்முடைய அரசி னுடைய தவறான கொள்கை என்பது என்னுடைய கருத்து. ஏற்கனவே இந்த மாவட்ட நீதிமன்றங்களிலே உள்ள நீதிபதிகள் முதல் வகுப்பு மேஜிஸ்ட்ரேட்டுகளை நியமிக்கின்ற நேரத்திலே, இந்த ஜூடிஷியல் எக்ஸ்பீரியன்ஸ் என்று சொல்லக்கூடிய நீதிபதி களாக அனுபவம் மிக்கவர்களை போடாமல், மீனளத்துறையி லிருந்து, கூட்டுறவுத் துறையிலிருந்து மற்றும் பல்வேறு துறையி லிருந்து இந்த நீதிபதிகளை நியமிக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

[முற்பகல் 11.40]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அரசுதான் காரணம் என்ற தவறான தகவலைத் தருகிறார்.



1987 ஏப்ரல் 25] [திரு. சி. பொன்னையன்]

1963-ஆம் ஆண்டில் தற்காலிகமாக, சப்-மாஜிஸ்டிரேட், டிஸ்ட்ரிக்ட் முன்சிப்-ஐ நியமிக்கலாம் என்ற அதிகாரத்தை உயர்நீதிமன்றத்திற்கு அன்றைய அரசே தந்து விட்டது. தொடர்ந்து 12 ஆண்டுகளாக அதுவே இருந்து வந்தது. இந்த அரசு வந்த பிறகுதான், 1981-ஆம் ஆண்டில் மீன்வளத் துறை விவசாயத் துறை போன்ற துறைகளிலிருந்து சட்டப் படிப்புப் படித்தவர்களை போடக்கூடாது; வழக்கறிஞர்களிலிருந்து போட வேண்டும் என்ற ஆணை போடப்பட்டு, அந்த அடிப்படையில் 79 பேரை நாம் முதன்முறையாக நியமித்தோம். 12 ஆண்டுகளாகத் தொடர்ந்து வந்த தவறு. அதன் பலன், தற்போது பாதிப்பைத் தந்திருக்கிறது.

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா : மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 1963-லிருந்து இந்த நிலை தொடர்ந்து கொண்டிருக் கிறது என்று சொல்கிறார்கள். யாரால் துவக்கப்பட்டிருந்தாலும் தவறு என்றுதான் சொல்வேன். இன்றைக்கு இந்த அரசு பல்வேறு வழக்கறிஞர்கள் மன்றங்களிலிருந்து எடுத்துச் சொன்ன பிறகாவது ஏற்றுக் கொண்டமைக்கு நன்றி. ஆனால்........

மாண்புமிகு சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுவும் தவறான தகவல். காரணம், வழக்கறிஞர்கள் மத்தியிலேயிருந்துதான் இனிமேல் நீதிபதிகளை நியமிக்க வேண்டும் என்ற ஆணையை அமைச்சரவை கூட்டத்தில் எடுத்து, உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பிய பிறகு, வழக்கறிஞர்கள் மத்தியிலிருந்து அனுப்பினால், நாங்கள் 20 ஆண்டுக் காலமாகப் பணியில் இருப்பவர்கள் வீட்டிற்குச் செல்ல வேண்டுமே என்ற ஒரு போராட்டத்தை தற்காலிக நீதிபதிகள் துவக்கியபோது, அன்றைக்கு அந்தப் போராட்டத்திற்கு மாற்றுப் போராட்டத்தை வழக்கறிஞர்கள் துவக்கினார்களே யொழிய, வழக்கறிஞர்கள் மூலம்தான் அந்த நியமனத்தைச் செய்ய வேண்டுமென்று ஆணையிட்டது இந்த அரசுதான். 81ஆம் ஆண்டு தெளிவாக ஜி.ஓ. மூலம் இட்டது.

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பல நிலைமைகள் இருப்பதை உடனடியாகப் பார்த்து, எங்கெங்கு காலியாக இருக்கின்றதோ, அங்கு நீதிபதிகளைப் போட்டு நிறைவு செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. இன்றைக்கு நீதிமன்றங்களிலே—ஒரு மாவட்ட முன்சீப் நீதிமன்றத்திலே 81-வது ஆண்டு துவங்கிய வழக்கு இன்றும், ட்ரையல்-க்கு வராத நிலையில் இருக்கிறது. நான் 20 வருடங்களாக வழக்கறிஞராகப் பணி புரிகின்றேன். 'I can claim, I am a seeker of justice'. அந்த நிலையிலே, இன்றைக்கு வழக்குமன்றங்களிலே நிலுவைகள் இருக்கக்கூடாது. எப்படி ஏழைகள் வழக்காடு வதற்கு வழக்குமன்றத்திற்கு வருகிறார்கள் ; வழக்கறிஞர்களிடம் வருகிறபோது அவர்கள் நிலை என்ன ; வழக்காடி வெற்றி

பெறுகிறார்களோ, தோல்வியுறுகிறார்களோ, அவர்கள் வீட்டுக்குச் செல்கிற நேரத்தில் அவர்களுடைய நிலை என்ன என்பதையெல்லாம் கண்கூடாகப் பார்த்து இருக்கிறோம். எனவே, வழக்குமன்றங்களிலே நிலுவைகளைக் குறைக்க வேண்டும்.

இன்னொரு முக்கியமான அம்சம். 'வெக்ஸேஷியஸ் அண்டு ஃப்ரிவலஸ் லிட்டிகேஷன்' என்று இருக்கிறது. அந்த முறையிலே வருகின்ற வழக்குகளைத் தடுக்க வேண்டும் என்பதும் இன்னொரு கோரிக்கையாக வைக்கிறேன். ஏனென்று சொன்னால், இன்றைக்கு வழக்குமன்றங்களிலே இருக்கின்ற 'அரியர்ஸ் ஆப் கேஸஸ்' என்பதற்கு இந்த 'வெக்ஸேஷியஸ் அண்டு ஃப்ரிவலஸ் லிட்டிகேஷன்' கூட ஒரு காரணம் என்று சொல்லக் கடமைப் பட்டிருக்கின்றேன். எந்த வழக்கானாலும் வழக்குமன்றத்திலே போடலாம் என்கிற நிலை இன்றைக்கு இருக்கின்றது.

இன்றைக்கு எங்களுடைய பூவிருந்தவல்லி—மாவட்டத்தினுடைய முன்சீப் நீதிமன்றத்திலே ஒரு சப்-ரிஜிஸ்டிரார் ஒரு டாக்குமெண்ட்டை ரிஜிஸ்டர் செய்யக் கூடாது என்று கூட அவர்கள் வழக்கைப் போட்டார்கள். அதை நம்பர் செய்து இருக்கிறார்கள், ஒரு தலைமையாசிரியர்மீது, பெற்றோர் ஆசிரியர் கழகத்தினுடைய பணத்தை செலவிடக்கூடாது என்று அவர் ஒரு அரசு அதிகாரி. செக்ஷன் 80-சி.பி.சி. நோட்டீஸ். அந்த நோட்டீஸ் இல்லாமலேயே அவர்மீது ஒரு வழக்கைத் தொடர்ந்து ஒரு வருடமாக தடை ஆணை விதிக்கப்பட்டு, பி.டி.ஏ.யிலிருந்து பணம் எடுத்து—ஒரு கம்ப்யூட்டர் வாங்க வேண்டும். அதைக் கூட வாங்க முடியாத நிலையிலே இன்றைக்கு வழக்குமன்றத்திலே, 'வெக்ஸேஷியஸ் அண்டு ஃப்ரிவலஸ் லிட்டிகேஷன்' இருக்கிறது. இதுபோன்ற பல்வேறு குறைகளைத் தீர்ப்பது அரசினுடைய கடமை. வழக்கறிஞர் என்ற முறையில், 'I am also a wing of justice' என்கிற முறையில் அதையெல்லாம் நிறுத்தியாக வேண்டும். பல சீர்திருத்தங்கள் அங்கு கொண்டு வர வேண்டும் என்பது என்னுடைய கருத்தாக இருக்கிறது. ஏற்கனவே அந்த நீதிமன்றங்களில் நீதிபதிகளாக்குவது பற்றி அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள்.

இன்றைக்கு சென்னை உயர்நீதிமன்றத்திலே பப்ளிக் ப்ராசிக்யூட்டர் இல்லை. இன்றைக்கு நீதிபதிகள் நியமிப்பதில் தான் பல சிக்கல்கள் இருக்கின்றன. பப்ளிக் பிராசிக்யூட்டர், கவர்ன்மென்ட் ப்ளீடர் போடுகின்ற நிலையிலேயும், அசிஸ்டென்ட் பப்ளிக் பிராசிக்யூட்டர் நியமிப்பதிலேயும் தாமதம் இருக்கின்றது. பல வழக்குமன்றங்களிலே பப்ளிக் ப்ராசிக்யூட்டர் இல்லாமலேயே பல மாதங்கள் அடிஷனல் சார்ஜோடு நடந்து கொண்டு இருக்கும் நிலையைப் பார்க்கிறோம். எங்களுடைய பூவிருந்தவல்லியிலேயே சான்றாகக் கூட எடுத்துக் கொள்ளலாம். சப்கோர்ட்டை பார்த்தால் கவர்ன்மென்ட் ப்ளீடர் கம் பப்ளிக் ப்ராசிக்யூட்டர் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள்.





அதற்கு முன்பு முன்சீப் கோர்ட்டிலிருந்து 'ப்ளீடர் டேயிங் கவர்ன்மென்ட் ஒர்க்' போய் சப் கோர்ட்டிலே அந்த வேலையைப் பார்த்துக்கொண்டிருந்தார். எனவே இப்படிச் செயல்படுவதன் காரணமாக இந்தஇடைவெளியில் நிறைய வழக்குகள் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை உருவாகின்றது. அதைப்போலவே உயர்நீதிமன்றத்தில் கூட பப்ளிக் பிராசிக்யூட்டர் இல்லாத காரணத்தால் துணை பப்ளிக் பிராசிக்யூட்டர்கள் இல்லாத காரணத்தால் அரசு வழக்குகளை நடத்துவதில் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. பல வழக்கு மன்றங்களில் அரசு வழக்குகளைப் பொறுத்த வரையில் எக்ஸ்-பார்டியாகவே தீர்ப்பளிக்கப்படுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் "இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் இல்லை" என்று சொல்லுகிறார்கள். எனவே இனிமேல் எதிர்காலத்திலாவது பப்ளிக் பிராசிக்யூட்டர் மற்றும் கவர்ன்மென்ட் ப்ளீடர் பதவிகள் எப்போது காலாவதியாகின்றனவோ அந்த பீரியடுக்குள்ளாகவே பப்ளிக் பிராசிக்யூட்டர்களையும் கவர்மென்ட் ப்ளீடர்களையும் அரசாங்கம் நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. வழக்கு மன்றங்களில் இருக்கும் ஃபெசிலிடீஸ் பற்றியும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பல வழக்கு மன்றங்கள் இன்றைக்கு வாடகைக் கட்டிடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எங்கள் மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் பொன்னேரி மாவட்ட முன்சீப் நீதி மன்றம் வாடகைக் கட்டிடத்தில்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதைப்போலவே மதுராந்தகம் கோர்ட்டும் வாடகைக் கட்டிடத்தில்தான் நடக்கிறது. இவ்வாறு பல்வேறு இடங்களில் முன்சீப் நீதிமன்றங்களும், சப் கோர்ட்டுகளும் வாடகைக் கட்டிடங்களிலேயே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதன் காரணமாக அங்கே வழக்குரைஞர்களுக்கும் வசதி இல்லை. நீதிபதிகளுக்கும் வசதி இல்லை. அதைப்போலவே வழக்காடுகிறவர்களுக்கும் வசதி இல்லை என்கிற நிலைதான் இருக்கிறது.

மேலும் தமிழகத்தைப் பொறுத்த வரையில் பல்வேறு வழக்கு மன்றங்கள் 100 ஆண்டுகள் நிறைவு விழாவை கொண்டாட வேண்டிய நிலையில் இருக்கின்றன. அன்றைக்கு இருந்த அரசுகள் பழமையான அந்த கோர்ட்டு கட்டிடங்களையெல்லாம் முறையாகப்புதுப்பிக்கவில்லை. அதோடு அங்கெல்லாம் வழக்கு மன்றம் துவக்கப்பட்டபோது ஒரே ஒரு வழக்கு மன்றம் தான் இருந்திருக்கும். ஆனால் இப்போது பல்வேறு அடிஷனல் வழக்கு மன்றங்களும் அதே கட்டிடத்திற்குள் வந்து விட்டன. அடிஷனல் வழக்கு மன்றங்கள் தகுந்த கட்டிட வசதியில்லாமலேயே கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இதைக் கேட்டால் வழக்கு மன்றங்களுக்குக் கட்டிடங்கள் கட்டுவது என்பது பிரையாரிட்டி செக்டாரில் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னைப் பொறுத்த வரையில் சட்ட நிர்வாகம்—நீதி நிர்வாகம் என்பது ஒரு முக்கியமான அம்சமாக இருக்கிறது. சமுதாய மாற்றத்திற்குக் கூட இது அவசியமாக இருக்கிறது.

[திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா] [1987 ஏப்ரல் 25

எனவே வாடகைக் கட்டிடங்களில் இருக்கின்ற வழக்கு மன்றங்களையும் பழுதுபட்டிருக்கிற வழக்கு மன்றங்களையும் அரசாங்கம் விரைவில் செப்பனிட்டுத் தர வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது என்பதால் அதை உடனடியாகச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொளகிறேன்.

மேலும் இன்றைக்கு அடிஷனல் அகாமடேஷன் பல வழக்கு மன்றங்களில் தேவைப்படுகிறது. அது மட்டுமல்ல, அடிஷனல் வழக்கு மன்றங்கள் அமைகிறபோது அதற்கு எல்லா விதமான வசதிகளையும் அரசு செய்து தர வேண்டிய பொறுப்பு இருக்கிறது. சரியாக இதுவரை செய்யப்படவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

வழக்குகள் இன்றைக்கு நீண்ட நாட்களுக்கு நீடித்து நடப்பதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்று நகல்கள் கிடைக்காததாகும். ஒரு மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து அதன் மீது ஜட்ஜ்மெண்ட் அண்டு டிக்கிரி பிறப்பித்த பிறகு, அதன் நகல் எடுக்க பல நேரங்களில் ஓராண்டுக் காலம் ஆகிறது. ஓராண்டுக்குப் பிறகுதான் நகல் கிடைக்கிறது. நகல் கிடைத்த பிறகு வாங்கிப்பார்த்தால் அதில் ஏராளமான தவறுகள் இருக்கின்றன. டைப்போகிராபிகள் எரர் மற்றும் கிளரிகல் எரர் இருக்கின்றன. இவைகளைத் திருத்த வேண்டும் என்று வக்கீல் கொடுத்தால் மேலும் 6 மாதம் அதற்காக ஆகிறது. எனவே மேல்முறையீடு செய்ய வேண்டுமென்று நினைத்தால் நகல் வாங்கிக் கிட்டத்தட்ட 1 வருஷம் 2 வருஷம் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே காப்பி வாங்குகிற நிலைமைகள்—முறைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வழக்கில் தீர்ப்பு அளிக்கும்போதே ஃபேர் ஜட்ஜ்மென்டோடு நகல் எடுத்துக் கொடுத்தால் மிகவும் நல்லதாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். நகல்கள் கொடுப்பதில் உள்ள புரொவிஷன்களை மாற்றி அமைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-50]

இன்றைக்கு சிறைச்சாலைகளை எடுத்துக் கொண்டால், அங்கே ஏராளமான சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன. இதற்கு நரசிம்மன் கமிட்டி ரிப்போர்ட் இருக்கிறது. அந்தக் கமிட்டியினுடைய பரிந்துரைகளை வேகமாகச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்று சிறைச்சாலைகளில் இட நெருக்கடி இருக்கிறது. இட நெருக்கடியைப் போக்குவதற்கான வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வேண்டிய வசதிகளைச் செய்து தர வேண்டும்.

என்னுடைய பகுதியில், அம்பத்தூரில் இரண்டாம் நிலை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் துவக்க அரசு உத்திரவிட்டு இரண்டாண்டுகள் ஆகியும் இதுவரையில் இந்த நீதிமன்றம் துவக்கப்படவில்லை.



1987 ஏப்ரல் 25] [திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா]

அதற்குக் கட்டிடம் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். அதற்கு கட்டிடம் கிடைக்க அரசு உடனடியாக துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அது மட்டுமல்லாமல் என்னுடைய தொகுதியான பட்டாபிராம் காவல் நிலைய கிரிமினல் வழக்குகளுக்கு திருவள்ளூர் வழக்கு மன்றத்திற்கு போக வேண்டிய நிலை இருக்கிறது. திருவள்ளூர் [illegible] கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. ஆகவே அம்பத்தூரில் ஒரு நீதிமன்றத்தை அமைத்து அந்த நீதி மன்றத்தில் பட்டாபிராம் காவல் நிலையத்தை இணைக்க வேண்டும் என்ற கோரிக்கை மக்கள் மத்தியிலே நீண்ட நாட்களாக இருக்கிறது. அதை அரசு செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப் பெற்றது).

*திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம், சிறைச் சாலைகள் மானிய கோரிக்கையை வரவேற்று ஒரு சில கருத்துக்களை நான் கூற விழைகிறேன்.

இதய தெய்வம் புரட்சித் தலைவர் அரசில் ஏழைகளுக்கும் எளிதில் நீதி கிடைக்கும் அளவிற்கு இலவச சட்ட உதவிகள் சிறப்பாக நடைபெறுவது பாராட்டக் கூடிய அம்சமாகும். நீதி தேவதை சுதந்திரமாக ஆட்சி செய்வது இதய தெய்வம் புரட்சித் தலைவர் ஆட்சியில் தான் என்றால் அது மிகையாகாது. வழக்கறிஞர்களுடைய நிலையானது தமிழகத்திலே புனிதமான தொழிலாக இருக்கிறது. இந்த புனிதமான தொழிலில் இருக்கிறவர்கள் வளமாக இருக்கிறார்களா, வளமான வாழ்வு வாழ்கிறார்களா என்றால் சந்தேகத்திற்குரிய நிலையிலே தான் இருக்கிறார்கள். எந்தத் தொழிலில் இருப்பவர்களாக இருந்தாலும் லீவ் எடுப்பதில் நன்மை இருக்கக் கூடிய நிலை இருக்கிறது. ஆனால் வழக்கறிஞர்களைப் பொறுத்த வரையில், ஒரு மாத காலம் உடல் நிலை சரியில்லை என்றால் அவர்களுடைய குடும்பத்திற்கு வரக்கூடிய வருமான அளவைப் பார்க்கும்போது என்ன ஆவது என்ற கேள்விக்குறி எஞ்சியிருக்கிறது. இந்த நிலையைக் கருதி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் நலத் திட்டங்கள் என்று சொல்லி வழக்கறிஞர்கள், குமாஸ்தாக்கள் நலத்திட்டங்கள் என்று புரட்சித் தலைவர் அரசு அறிவித்தது அறிவித்ததோடு நின்று கொண்டிருக்கிறது. கேரளாவில் எப்படிப்பட்ட நலத் திட்டம் இருக்கிறதோ அப்படி நல்லது செய்யக் கூடிய அளவிற்கு ஒரு இன்ஷூரன்ஸ் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

Junior Law Graduates and raw graduates சட்டப் படிப்பை முடித்துவிட்டு ஏறத்தாழ ஐந்தாண்டுகளுக்குப் பிறகு அவர்கள் தொழில் செய்யும்போதுதான் அவர்கள் வருமானம் ஈட்டக்கூடிய நிலையைப் பார்க்கிறோம். அதற்குள்ளாக அவர்கள் படுகிற இன்னல்கள் மிகவும் பரிதாபமான நிலையில் இருக்கின்றன. இந்த

நிலையைப் போக்க அருள்கூர்ந்து ஃபிரஷ் கிராஜுவேட்களுக்கு உதவ வேண்டும் இப்போது வக்காலத்து அட்டெஸ்ட் செய்ய வேண்டும் என்ற கட்டாய சூழ்நிலை இருக்கிறது. வக்காலத்து அட்டெஸ்ட் செய்வதைப் பொறுத்த வரையில் இரண்டு வருடங்கள் அனுபவம் உள்ள ஜுனியர்ஸ் அட்டெஸ்ட் செய்ய வேண்டும் என்று வைத்து அதற்காக ஒரு (Fees) சம்பளத்தை நிர்ணயித்து ஒரு ஐந்து ரூபாய், பத்து ரூபாய் அ[illegible] பெறக்கூடிய அளவிற்கு அதை சட்ட விதிகளாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இன்றைக்கு போலீஸ் ஜாமினில் ஒருவர் இரண்டு ஷூரிட்டிகளைத் தர வேண்டும் என்ற நிலை இருக்கிறது. சொத்தின் அடிப்படையில் அந்த ஷூரிட்டிகளைத் தர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இவற்றைப் பெறுவதற்காக கிராம அதிகாரிகளையும் மற்றும் இருக்கக்கூடிய ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களையும் நாட வேண்டியிருக்கிறது. இதைத் தருவதற்கு சாதாரணமாக ரூபாய் இருபத்தைந்திலிருந்து ஐம்பது வரை பெறக்கூடிய அளவிற்கு அனைவருமே நடந்துகொள்ளக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதை மாற்றி அங்கேயிருக்கக்கூடிய வழக்கறிஞர்கள் குறிப்பாக மூன்றிலிருந்து ஐந்து வருடங்கள் பார் எக்ஸ்பீரியன்ஸ் உள்ள வழக்கறிஞர்கள் சான்றிதழ் வழங்கலாம் என்று வைத்து, எப்படி நோட்டரி பப்ளிக்குகளுக்கு அதிகாரம் வழங்கியிருக்கிறோமோ அதைப் போலவே இவர்களுக்கும் வழங்கி மாவட்ட நீதிமன்றத்திலேயும் மற்ற நீதிமன்றங்களிலேயும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவிற்கு வழி முறை செய்தால் அங்கேயுள்ள ஜுனியர்ஸ் நல்வாழ்வு வாழக்கூடிய அளவிற்கு அமையும். அந்த அளவுக்கு நீதி மன்றங்களில் வழக்கறிஞர்களுக்கு ஷ்யூரிடீஸ் கொடுக்கக்கூடிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, a legal cell should be formed in each and every Department. Particularly, this should be done in respect of all the Boards like the Slum Clearance Board, Housing Board, etc. ஏன் என்று சொன்னால், எந்த வாரியத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, அந்த வாரியத்திற்கு என்று ஒரு லீகல் செல் இருக்க வேண்டும். ஒவ்வொரு வாரியத்திற்கும் தனிப்பட்ட முறையில் rules and regulations ப்ரேம் செய்திருக்கிறார்கள். அவற்றை இம்ப்ளிமெண்ட் செய்வதற்கு ஒவ்வொரு வாரியத்திற்கும் வழக்கறிஞர்கள் இருந்தால், அவற்றை அவர்கள் நல்ல முறையில் செயற்படுத்த முடியும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், இங்கே இருக்கக்கூடிய ஹவுசிங் போர்ட் லயோலா கல்லூரிக்கு முன்னால் இருக்கக்கூடிய குடிசைகளை அகற்ற வேண்டுமென்பதற்காக, the basic issue is only that show-cause notices should be given to those particular persons. என்று அந்தச் சட்டத்திலே இருக்கிறது. ஆனால் அப்படிச்





செய்யாமல் அவர்களை எடுத்த எடுப்பிலேயே காலி செய்துவிட்ட காரணத்தால் ஏறத்தாழ அவர்கள் சுப்ரீம் கோர்ட்வரை போகும் ஒரு துர்ப்பாக்கியமான நிலை ஏற்பட்டது. இப்படி லீகல் செல் அங்கே ஏற்பட்டிருக்குமானால் இதைத் தடுத்திருக்கலாம். லீகல் லிடிகேஷனுக்காக அதிகப் பணச் செலவைக் குறைத்து, வழக்கறிஞர்களுக்கும் நன்மை செய்யக் கூடிய நல்ல நிலை ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசிலே, training for the fresh Law Graduates belonging to the Backward Class என்ற ஒரு அருமையான ஸ்கீமை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதற்காக சென்ற ஆண்டுகூட ஜி. ஓ. வந்தது என்று நினைக்கிறேன். புதிதாக வருகின்ற வழக்கறிஞர்கள் சீனியரிடம் சேர்ந்து பணி கற்றுக்கொள்ளும் காலத்திற்கு அரசே ஸ்டைபெண்ட் கொடுத்து, ஒரு வருடம், இரண்டு வருடங்களுக்கு அவர்களுக்கு ஒரு நிலையான ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். அதைப்போல எஸ்.சி., எஸ்.டி. (S.C. & S.T.) என்று இருக்கக்கூடிய ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த வழக்கறிஞர்களுக்கும் இந்த உதவியைக் கொடுக்கக் கூடிய அருமையான திட்டத்தை புரட்சித்தலைவர் அவர்கள் செய்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு அதைச் செயல்படுத்தவில்லை. அதையும் அருள்கூர்ந்து செயல்படுத்த வேண்டுமென்று நான் அன்புக் கட்டளையாக வைக்கிறேன்.

டெனன்சி கோர்ட்டுகளைப் பொறுத்த வரையில் தாசில்தார்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். டெனன்சி சட்டதிட்டங்களைக் கூட தெரிந்துகொள்ளாமல் பலர் இருந்துகொண்டிருக்கிறார்கள். இந்த நிலையிலே குத்தகைதாரர் ஒருவர் ரெஜிஸ்டர் செய்துகொண்டு விட்டாலும், அதுசம்பந்தமான வழக்கில் ஹைக்கோர்ட்வரை வந்து கஷ்டப்படக்கூடிய மோசமான சூழ்நிலைதான் இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே டெனன்சி கோர்ட்டுகளில் தாசில்தார் விசாரிக்க வேண்டுமென்பதை மாற்றி, அதற்கும் வழக்கறிஞர்களை ஏற்படுத்தி, தனி நீதிபதியோ அல்லது மாற்று ஏற்பாடுகளோ செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டுகோளாக வைக்கிறேன்.

அடுத்து, ஸ்கேர்சிட்டி ஆஃப் ஸ்டாம்ப் பேப்பர். மாண்புமிகு உறுப்பினர் திரு டி. ஆர். வெங்கடரமணன் அவர்கள்கூட கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தார்கள். நானும்கூட கொடுத்திருந்தேன். இன்றைக்கு சாதாரணமாகக் கிடைக்கும் ஸ்டாம்ப் பேப்பர்கள் கிடைக்காத சூழ்நிலை தமிழகம் முழுவதும் இருக்கிறது என்றால் மிகையாகாது. 2½ ரூபாய், 5 ரூபாய் ஸ்டாம்ப் பேப்பர்கள் 25 ரூபாய்வரை விற்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. காப்பி பேப்பர்ஸ்கூட கிடைக்கவில்லை. மிக மிக ஸ்கேர்சிட்டியாக இருக்கிறது. அதைப்போல கோர்ட்

ஸ்டாம்புகளும் மிக அதிகமான விலைக்கு விற்கும் நிலைமை இருக்கிறது. ஆகவே இவை அதிகமாக இலகுவில் கிடைக்க என்னென்ன முயற்சிகள் செய்ய வேண்டுமோ அதை அரசு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து வழக்கறிஞர்களுக்கு டெலிபோன் இணைப்பில் பிரபிரன்ஸ் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இது மத்திய அரசைக் கட்டுப்படுத்துவதாக இருந்தாலும், இதைச் செய்ய வேண்டும். டாக்டர்கள் போர்டு வைத்து, கிளினிக் ஆரம்பிக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு டெலிபோன் கனெக்ஷன் அளிப்பதில் (Preference) பிரபிரன்ஸ் கொடுக்கிறார்கள். அப்படி அனைத்து வழக்கறிஞர்களுக்கும் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. குறைந்தது 3 வருடம் அனுபவம் பெற்ற வழக்கறிஞர்களுக்கு டெலிபோன் கனெக்ஷன் கொடுத்தால், மக்களுக்கு இலகுவான சூழ்நிலையிலே அவர்கள் லீகல் லிடிகேஷன்களைத் தீர்க்கும் அளவுக்கு அருமையான சூழ்நிலை இருக்குமென்று கூறி, அதற்கு அருள்கூர்ந்து காங்கிரஸ் கட்சி மெம்பர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கூற விரும்புகிறேன்.

அடுத்து, touts and convassing system ஒழிக்கப்பட வேண்டுமென்பதற்கு தனிப்பட்ட சட்ட திட்டம் இருக்கிறது. ஆனால் அது இன்றைக்கு ஒழிக்கப்பட்டிருக்கிறதா என்றால் மிகவும் பரிதாபகரமான நிலைதான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கிரிமினல் கோர்ட்டுகளிலே மிகமிக அதிகமாக டவுட்ஸ் இருக்கிறார்கள். வழக்கறிஞர்களுக்கு ஒரு குமாஸ்தாதான் இருக்க வேண்டுமென்று கூறிக்கொண்டு, அதே நேரத்தில் டவுட்சை ஒழிக்க ஒரு கமிட்டி வைத்து, அதை எந்த அளவுக்கு ஒழிக்க வேண்டுமோ அந்த அளவுக்கு ஒழிக்க வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்து எம். ஏ. சி. ஓ. பி. (M.AC.O.P.) என்று சொல்லக்கூடிய மோட்டார் ஆக்சிடன்ட் க்ளெய்ம்ஸ்களிலே எங்கேயாவது ஒரு ஆக்சிடென்ட் நடந்தால், அந்த இடத்திற்கு டவுட்சுகள் சென்று, அவர்களுக்கு அட்வான்ஸ் கொடுத்து, வழக்கறிஞர்களிடம் அழைத்துச் செல்லும் நிலைமை இன்றைக்கு இருக்கிறது.

(நண்பகல் 12-00)

அனைத்து வழக்கறிஞர்களையும் சொல்ல முடியாது. ஒரு சிலர் அப்படி கேட்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. அதையும் மாற்றியமைப்பதற்கு அரசு என்ன என்ன ஏற்பாடுகளை செய்ய வேண்டுமோ அவைகளை அவசியம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், (மணியடிக்கப் பெற்றது).

இப்போதுதான் பேச்சை ஆரம்பித்திருக்கிறேன். இன்னும் ஐந்து நிமிடங்கள் கொடுங்கள். வழக்கறிஞர்கள் சிலர்தான் பேச இருக்கின்றார்கள்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேசுங்கள், பேசுங்கள் நேரம் ஓடிக்கொண்டிருக்கிறது.

திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே லீகல் பிராக்டீசனர்ஸ் ஃபீஸ் ரூல்ஸ் 1973 என்று வைத்திருக்கின்றார்கள். இதன் பிரகாரம் ரூ. 5 000 வரை ஒரு கேசிலே ஈடுபடுவது என்றால் 10 பர்செண்ட் வசூல் பண்ணவேண்டும் என்றும் அதுபோல் ரூ. 5.000 முதல் ரூ. 10 000 வரை இருந்தால் 5 பர்செண்ட் அதற்காக பீஸ் வசூல் செய்யலாம் என்றும் அதுபோல ரூ. 15.000 முதல் 20 ஆயிரம் என்று இருந்தால் 3 பர்செண்ட் என்று சொல்லியும்; ரூபாய்.20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் என்று இருந்தால் ஒரு பர்செண்ட் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இது 1973-லே போடப்பட்ட பீஸ் வசூல் ரூல்ஸ் ஆகும். ஆனால் இன்றைக்கு உயர்ந்திருக்கக்கூடிய விலைவாசிகள் பொறுத்து இதை அதிகமான அளவுக்கு மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வழக்கறிஞர்களுக்காக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கூறிக்கொளகிறேன்.

யூனிபார்மிட்டி ஆஃப் ஜட்ஜ்மெண்ட் என்று சொல்ல வேண்டும் என்றால் இன்றைக்கு இங்கே இருக்கக்கூடிய ஹைகோர்ட்டிலே, சிட்டி சிவில் கோர்ட்டுகளிலே குறிப்பாக ரெண்ட் கண்ட்ரோல் கோர்ட்டுகளிலே இருக்கக்கூடிய இந்த வழக்குகள் எல்லாம் வழக்கு மன்றங்களிலே தேங்கி இருக்கின்றன. ஏறத்தாழ 1985-லே வழக்கு கொடுத்து இருக்கின்றது என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த வழக்கு முடியாமலே இருக்கின்றது. ஆனால் 1987-ல் கொடுத்த வழக்கு முடியக்கூடிய சூழ்நிலையிலே இருக்கின்ற நிலைமையும் இருக்கின்றது. சம்மரி புரோசீடிங்கஸ் என்று சொல்வார்கள். அந்த சம்மரி புரோசீடிங்க்ஸ்-லேகூட கால தாமதம் ஆகிக்கொண்டிருக்கின்றது.

இங்கே குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், 12வது ஸ்மால் காஸ் கோர்ட்டிலே இன்றைக்குப் பார்க்கிறோம். தேஆர் யூசிங் தெயர் டிஸ்கிரிஷனரி பவர்ஸ். அவர்கள் இஷ்டத்திற்கு எடுத்துக் கொள்கின்றார்கள். வரிசை வாரியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற நிலை மாறியிருக்கிறது. சீரியல் நெம்பர்களை மாற்றிக் கூட எடுத்துக் கொள்கின்றார்கள். முன்னாலே வந்தவர்களுக்கு முன்னதாக நீதி கிடைக்காமல் பின்னாலே வந்தவர்களுக்கு நீதி கிடைக்கின்ற நிலை இருக்கின்றது. இந்த நிலைமைகளை மாற்றி வரிசைப் பிரகாரம் எடுத்துக் கொள்வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீதிபதிகளை ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றுகின்ற சமயத்திலே அவர் உடனே வந்து பணியிலே சேர்ந்து கொள்கின்றார்களா என்றால் இல்லை. ஒரு மாதம் 3 மாதங்கள், 4 மாதங்கள் என்று ஆகின்றன. அந்த நேரத்திலே.

அந்தப் பகுதியிலே வருகின்ற வழக்குகள் எல்லாம் நிலுவையில் இருந்து கொண்டு இருக்கின்றன. மிக மிக பகுதியிலே இருக்கின்ற மக்கள் எல்லாம் அதனால் அந்த மைகள் இருக்கின்றன. கஷ்டப்படுகின்ற நிலை

இன்னும் கூட சொல்லப்போனால், சென்னை ஸ்மால் காஸ் கோர்ட்டிலே, 13-வது கோர்ட்டிலே ஏறத்தாழ இரண்டு வருடங் களாக நீதிபதி நியமிக்கப்படாத சூழ்நிலை இருக்கின்றது. ஸ்மால் காஸ் கோர்ட்டில் ரிஜிஸ்டிரார் என்பவர் இருக்கின்றார். அவர்தான் அட்மினிஸ்ட்ரேடிவ் ஹெட். அவருக்கு அதிகமான வேலைகள் இருக்கின்றன. அவர் இல்லாத நேரத்திலே அவரிட மிருந்து இன்னொருவரிடத்திலே கொடுக்கப்படுகின்றது. இன்னொருவருக்கு இன்சார்ஜ் கொடுக்கின்றார்கள். அந்த இன்சார்ஜ் இருப்பவர் அவருக்கு வேலை அதிகமாக இருப்பதால் இந்த வேலைகளை கவனிக்க முடியாத நிலைமைகள் ஏற்படு கின்றன. இதையும் சேர்த்து கவனிப்பது மிகமிகக் கஷ்டமாக இருக்கின்றது. ஒரு வழக்கு மன்றத்திற்கு நீதிபதி மாற்றுவது என்று சொன்னால் ஒரு வாரத்திற்குள்ளாக அவர் வந்து சேர வில்லை என்று சொன்னால் உடனடியாக மாற்று நீதிபதி நியமனம் செய்ய அரசு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோலவே ஐக்கோர்ட்டிலே ஒரு டைரக்ஷன் கொடுத்து இத்தனை வழக்குகளை நீங்கள் முடிக்க வேண்டும் என்று கீழ்க் கோர்ட்டுகளுக்கு உத்தரவு கொடுக்கின்றார்கள். அந்த வழக்கு களினுடைய எண்ணிக்கையைப் பொறுத்து அவைகளை வேகமாக முடிக்கின்றார்களே தவிர அதிலே எந்த அளவுக்கு உண்மையான நிலை என்று அலசி ஆராய்ந்து நீதி சொல்லக்கூடிய நிலைமைக்குப் பதிலாக அவர்கள் சரியான முறையில் சிக்கல் தீர்ப்பதில்லை. இதை வழக்கறிஞர்கள் சங்கத்தினர்கள் எடுத்துச் சொல் கின்றார்கள்.

இலவச சட்ட உதவி மையத்திலே நிர்வாக உதவியாளர்கள் ஏறத்தாழ அதிகமான பேர்கள் இருக்கின்றார்கள். அவர்க ளுடைய பணியை நிரந்தரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திண்டுக்கல்லைப் பொறுத்தமட்டில் அங்கு வழக்கறிஞர்கள் சேம்பர் அமைக்கப்பட வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயமாக செயல்படுத்துவதாகச் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு 2 ஆண்டுகள் ஆகின்றன. அதற்கான வேலைகள் செய்யவில்லை. அதை அருள் கூர்ந்து செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அண்ணா மாவட்டமாக இருக்கக்கூடிய திண்டுக்கல் நகருக்கு ஒரு லேபர் கோர்ட்டும் இல்லை. அதை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோலவே சி.ஜே.எம்.





கோர்ட்டும் இல்லை. அதையும் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் மோட்டார் ஆக்சிடெண்ட் டிரிபியூனல் ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். இன்னும் சொல்லப்போனால். அப்பீல் ஜூரிஸ்டிக்ஷன் என்று இருக்கக்கூடிய நத்தம், நிலக் கோட்டை, கோடைக்கானல் போன்ற பகுதிகளிலேயிருக்கின்ற மக்கள் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கோர்ட்டுக்கு வர வேண்டிய சூழ்நிலையில், அவர்கள் மதுரைக்கு செல்கின்ற சூழ் நிலை இருக்கின்றது. அதை மாற்றி அனைவரும் திண்டுக்கல் வரக்கூடிய நிலையை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டைம் இல்லை. அப்புறம் பேசிக்கொள்ளலாம்.

திரு. ஆ. பிரேம்குமார்: ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுங்கள், பேசுகின்ற உறுப் பினர் அவர்கள் உட்காரவும். நேரம் இல்லை. இனியும் நேரம் எடுக்க வேண்டாம். இப்போதே 12–05 ஆகிறது. 2 மணிக்கு நாம் விவாதத்தை முடிக்க வேண்டும். வேறு வழியில்லை. ஒவ்வொருவரும் இப்படி நேரம் கேட்டால் எப்படி? இன்றைக்கு மாலை வைக்கக்கூடிய நிலைமை இல்லை. இதற்குள் டிமாண்ட் நிறைவேற்ற வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை உயர் நீதிமன்றத்திற்கு "தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டுமென்ற கோரிக்கையை 10 ஆண்டுக் காலமாக நாம் கோரிக் கொண்டிருக்கிறோம். கடிதம் எழுதி விட்டோம், தந்தி அடித்து விட்டோம், வலியுறுத்துகிறோம், பரிசீலிக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருப்பதால் மாத்திரம் பிரச்சினையை தீர்க்க முடியாது. மத்திய சர்க்காரை எதிர்த்துப் போராடிப் பெற்றாக வேண்டும். அதைப்போலவே உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி தமிழ் தெரிந்தவராக இருக்க வேண்டும். இல்லை யென்றால், போராட்டமே நடத்துவோம் என்று முதலமைச்சர் அவர்கள் பல்வேறு வாக்குறுதிகளைக் கூடச் சொன்னார்கள். ஆனால் தமிழ் தெரிந்த தலைமை நீதிபதி இல்லை, போராட்டமும் இல்லை, போர்க் கொடியும் இல்லை. எனவே மத்திய சர்க்காருடன் கணவன்—மனைவி உறவு என்று சொல்லிக் கொண்டு இதுபோன்று செயல்படுவதெல்லாம் தமிழுக்குச் செய்கிற துரோகம் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதைப்போலவே சுப்ரீம் கோர்ட்டினுடைய பெஞ்சைப் பொறுத்த வரையில் ஒன்றைச் சொல்கிறேன்.

[1987 எப்ரல் 2

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, உயர் நீதி மன்றத்தின் பெயரை
தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என்று மாற்றுவதற்கும், அதுபோலவே
தமிழ் தெரிந்தவர்தான் தலைமை நீதிபதியாக இருக்க வேண்டு
மென்பதற்கும் அதனை வற்புறுத்தி அதை கட்டாயம் மாற்றி
யமைக்க வேண்டுமென்று பலமுறை வற்புறுத்தி மைய அரசுக்கு
கடிதம் எழுதியிருக்கிறோம்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, எழுதிக் கொண்டிருப்பதாலேயே பிரச்சினை
தீராது. சுப்ரீம் கோர்ட்டின் பெஞ்ச் ஒன்று தமிழ் நாட்டிலே
இருக்க வேண்டும். அது சென்னையிலே இருக்க வேண்டும்
என்று வலியுறுத்துகிறோம் ஆனால் சுப்ரீம் கோர்ட்டினுடைய
தலைமை நீதிபதி, அது இயலாது என்று சொல்லிவிட்டால், வாய்
மூடி மௌனியாக இருந்தால் அதில் பிரயோஜனம் இராது. அதை
எதிர்த்துப் போராட வேண்டும். சென்னைக்கு சுப்ரீம் கோர்ட்
பெஞ்ச் வர வேண்டுமென்று வலியுறுத்த வேண்டும், அரசு தூக்கத்
தில் ஆழ்ந்துவிடக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.
அதுபோல சென்னை உயர்நீதிமன்ற பிராஞ்ச் ஒன்றை மதுரையில்
அமைக்க வேண்டுமென்று இந்த சபையிலே 10 ஆண்டுகளாக
பேசிக் கொண்டிருக்கிறோம். செத்துப்போனவன் முன்னாலே
தாரை வாசித்தால் என்ன வீணை வாசித்தால் என்ன, தப்பட்டை
வாசித்தால் என்ன என்கிற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது.
இதுசம்பந்தமாக ஜெஸ்வந்த் சிங் கமிட்டி தன்னுடைய
ரிப்போர்ட்டை கொடுத்து விட்டது. இனி அரசு தான் முயற்சி
கள் எடுக்கவேண்டும் அவர்கள் சொல்லியிருக்கின்ற கண்டிசன்களை
எல்லாம் புல்பில் செய்து நடவடிக்கை எடுக்கவேண்டுப் அதுபோல
உயர் நீதிமன்றம் ஒப்புதல் அளித்துள்ள மொத்த நீதிபதி பதவிகள
25. ஆனால், தற்போது இருப்பதோ 19 நீதிபதி பதவிகள்
மீதியிடங்கள் காலியாக இருக்கின்றன.

வழக்கமான பாடலை அமைச்சர் பல்லவியில் பாடிக்
கொண்டேயிருக்கிறார். சில சமாதானங்களைச் சொல்கிறார்.
இன்றைக்கு ஆயிரக்கணக்கானவர்கள் வழக்குக்காக காத்துக்
கொண்டிருக்கிறார்கள். வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன.
மாதவரம் பால்பண்ணையில் 1,500 தொழிலாளர்களை டிஸ்மிஸ்
செய்து 8 ஆண்டுகள் ஆகின்றன. ஹைகோர்ட்டில் அவர்கள்
போனார்கள். டிரிபியூனலில் ஒரு டைரக்சன் கொடுத்தார்கள்
'விசாரியுங்கள்' என்று. அதை விசாரணை நடத்த இன்றைக்கு
நீதிபதி கிடையாது. அவரை நியமிப்பதைக் காட்டிலும் சட்ட
அமைச்சருக்கு வேறு என்ன வேலை இருக்கிறது என்று நான்
தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதைப்போலவே எக்மோர்
ரெயில்வே ஸ்டேசனிலும், சென்ட்ரல் ரெயில்வே ஸ்டேசனிலும்
டிக்கெட் இல்லாமல் போகிறவர்களைப் பற்றி ஒன்றைச் சொல்ல
விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, சட்ட அமைச்சருக்கு அந்தப்பதவி
களை நியமிக்கின்ற அதிகாரம் இல்லை. உயர்நீதிமன்றத்திற்குத்
தான் இருக்கிறது. இதுபற்றி பலமுறை இதே மன்றத்தில்
சொல்லியிருக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, ** ** **

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, தவறான அணுகுமுறையை
உறுப்பினர் கடைப்பிடிக்கிறார். இந்த ஆட்சியைப் பொறுத்த
வரையில் ஒரு அட்ஜெர்ன்மென்டுக்குக் கூட போய் இந்த அரசு
தலையிடுவதில்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே
அதுபற்றி குறிப்பிட்டவற்றை அவை நடவடிக்கைக்குறிப்பிலிருந்து
நீக்க உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த மாதிரி
உறுப்பினர் இனிமேல் பேச வேண்டாம். ஆகவே, இங்கே
உறுப்பினர் குறிப்பிட்ட வார்த்தைகள் அவை நடவடிக்கைக்
குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நான் சொன்னதை
தவறாக புரிந்துகொண்டிருக்கிறார்கள். In the interest of
the public பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளைக்
குறித்து இன்றைக்கு இருக்கிற தலைமை, உயர்நீதிமன்றத்
தினுடைய நீதிபதிகளின் கோப்புகளின் மூலம், கட்டடம்
வேண்டுமானாலும் பதவிகள் நியமனம் செய்ய வேண்டுமானாலும்
நாம் கடிதம் எழுதுவது இல்லையா ? சிபாரிசு செய்வது
இல்லையா ? ஆகவே, இதிலேயும் அக்கறை காட்ட வேண்டு
மென்று தான் நான் இங்கே சொல்கிறேன்.

அடுத்து, எக்மோர் மற்றும் சென்ட்ரல் ரெயில்வே ஸ்டேசன்
களில் டிக்கெட் இல்லாமல் போகிறவர்களை விசாரிக்க என்று
ஒரு கோர்ட் இருக்கிறது. அங்கே மாஜிஸ்ட்ரேட் இருக்கிறார்
களா ? கிடையாது. அதைப்போல இங்கே நிறைய சொல்ல
முடியும். மெட்ராஸ் ஜார்ஜ் டவுன் கோர்ட்டிலே 7 மாஜி
ஸ்ட்ரேட் பதவிகள் இல்லை. பெருநகர நீதிமன்றங்களை
எடுத்துக்கொண்டால், மொத்தமுள்ள 26 நீதிபதி பதவிகளில்
13 இடங்களில் நீதிபதிகள் கிடையாது. இப்படிப்பட்ட
ஒரு சூழ்நிலை அங்கே இருக்கிறது. அதுபோல பெரியார்
மாவட்டத்தில் ஈரோடு மாவட்டதலைமை நீதிமன்ற கட்டடம்

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலை... ஆணைக்
கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு அ. ரகுமான்கான்] [1987 ஏப்ரல் 25

கட்டப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும் அந்த நீதிமன்றம் இதுவரை செயல்படவில்லை. என்ன காரணம் என்று தெரியவில்லை. விருத்தாசலத்தில் மாவட்ட முனிசிப் கோர்ட் கட்டடம் இடிக்கப்பட்டு, 1975ஆம் ஆண்டிலேயே அது கட்டித் தரப்படும் என்று சொல்லி 12 ஆண்டுகளாகியும் சப் கோர்ட்டும், முன்சிப் கோர்ட்டும் ஒரே இடத்தில் இருக்கிறது என்று சொல்லி வக்கீல்மார்கள் கோர்ட்டை புறக்கணித்தார்கள். உடனே கைது, அவர்கள் மீது வழக்கு.

[பிற்பகல் 12-10]

ஆக, கட்டிடத்தைக் கட்டித் தர முடியாதவர்கள் வழக்குப் போடுவது எந்த விதத்திலே நியாயம்? நீதி மன்றங்களிலே கழிப்பிட வசதி கிடையாது; மேசை நாற்காலி கிடையாது, குடி தண்ணீர் வசதி கிடையாது; அறைகள் கிடையாது மின்விசிறி வசதிகள் கிடையாது லைப்ரரி கிடையாது; ஜெர்னல்ஸ் கிடையாது; ஐ. ஏ. எஸ். ஆபீசர் ரூமைப் பார்த்தால் ஏர்கன்டிஷன் ரூம்; மாஜிஸ்ட்ரேட் ரூமைப் பார்த்தால் ரொம்ப மோசமான நிலைமையிலே இருந்துகொண்டிருக்கிறது.

சைதாப்பேட்டை மாஜிஸ்ட்ரேட் முத்துசாமி தமிழ்நாட்டிற்கு ரொம்பவும் அறிமுகமானவர். அவரே நீதிமன்றத் தீர்ப்பு வழங்குகின்றபொழுது சொல்கிறார்; இங்கே இன்ட்ரப்ரேட்டர் இல்லை; ஸ்டெனோகிராபர் இல்லை; நானே எழுத வேண்டியிருக்கிறது. எனவே வந்திருக்கக் கூடியவர்கள் அமைதியாகச் சொல்லுங்கள்; எழுதுங்கள் என்று சொல்கிறார். அவர் இன்னும் சொல்லப்போனால் தமிழிலேதான் தீர்ப்பு எழுதவேண்டுமென்று—அப்படி நாம் ஒரு உத்தரவைக்கூடப் பிறப்பித்திருக்கிறோம். ஆனால் அவர் இங்கிலீஷிலேதான் தீர்ப்பு எழுதுகிறார்கள். அந்த அளவிற்கு இந்த அரசாங்க உத்தரவின்மீது அக்கறை உடையவராக இருக்கிறார்கள்.

பல வழக்குகள் பெண்டிங்காக இருக்கின்றன. புள்ளி விவரங்கள் தந்திருக்கிறீர்கள். இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. வழக்கை முடிக்க வேண்டியவர்கள் முடிக்க வேண்டும்.

நம்முடைய அமைச்சர் மீது—அமைச்சரவர்கள் ஒரு மான நஷ்ட வழக்கைப் போட்டிருக்கிறார்கள். அசோக் லேலண்ட் கேசிலே ஊழல் செய்து விட்டார்கள் என்று திராவிட முன்னேற்றக் கழகப் பேச்சாளர் ஸ்டெல்லா என்ற ஒரு பெண்மணி பேசிவிட்டார் என்று மான நஷ்ட வழக்கு போட்டார். எட்டு வருடங்களாகின்றன.

* *

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1987 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவரவர்களே, தவறான தகவலை அவைக்குத் தந்திருக்கிறார். மான நஷ்ட வழக்கு போட்டதே அரசுதான். நாம்தான் போட்டிருக்கிறோம். தவறான தகவலை ஆதாரமின்றி அவைக்குச் சொல்வதைக் கட்டாயம் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

** ** ** *

அப்புறம் எப்படி அதற்கு எதிரான கருத்து இருக்க முடியும்? அந்த மாறுபட்ட பகுதியை நீக்கிவிடுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் மான நஷ்ட வழக்கு, தன்னை ஊழல் பேர்வழி என்று திராவிட முன்னேற்றக் கழகப் பேச்சாளர் ஒருவா பேசிவிட்டதற்காக போட்டிருப்பது உண்மை.

** ** **

** ** *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

** ** **

அரசாங்கத் தரப்பிலே விளக்கம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவேதான் நீக்கச் சொல்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: அமைச்சர்மீது ஊழல் குற்றச்சாட்டு சொன்ன நேரத்தில் அரசாங்கத்தின் சார்பில்.........

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தவறான தகவலை அவைக்குச் சொல்கிறார். அவைக் குறிப்பிலேயிருந்து அதைத்தான் நீக்க வேண்டுமென்று கோருகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் தவறான தகவலைச் சொல்லவில்லை. பொறுப்பேற்றுக்கொள்கிறேன். தவறான தகவல் தந்தால் உரிமைக் குழுவிற்கு அனுப்பி என்மீது என்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ அத்தனை நடவடிக்கைகளையும் எடுக்கலாம். மான நஷ்ட வழக்கு ஸ்டெல்லா என்ற திராவிட முன்னேற்றக் கழகப் பேச்சாளருக்கு எதிராக, ஊழல் செய்தார் ஒரு அமைச்சர்......

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1987 ஏப்ரல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

** ** **

என்று அரசாங்கத் தரப்பிலே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் ப்ளோரிலே சொன்ன பிற்பாடு

** ** *

சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். ஹவுசைப் பொறுத்தவரையில் கன்வென்ஷன் தெரியும். அமைச்சருடைய ஸ்டேட்மெண்டை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுதான் கன்வென்ஷன். (குறுக்கீடு) அவர் சம்பந்தப்பட்ட வழக்கு. உங்களைச் சொல்லவில்லை. அந்த வழக்கு சம்பந்தப்பட்டது உங்களுக்கு எப்படித் தெரியும் ?

** ** *

ஆகவேதான், அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கினேன்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் துணைத் தலைவரவர்களே,

** ** *

உண்மை நிலவரத்தை நான் ஆதாரத்தோடு கொண்டு வந்து சொல்கிறேன். அதுவரைக்குமாவது சபைக் குறிப்பிலே இருக்கலாம் அல்லவா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆதாரம் வரும் வரை இருக்காது. ஆதாரம் வரும் என்று சொல்லிவிட்டு பிறகு ஆதாரம் வரவில்லை என்றால் என்ன செய்வது ? ஆதாரம் கொடுத்தால் வரலாம். நீங்கள் சொல்கிறீர்கள், அதுவும் ஒப்பன் கோர்ட்டிலே என்று சொல்கிறீர்கள். ஆதாரம் வரும் வரையில் இருக்கட்டும் என்றால், எப்படி இருக்க முடியும் ? ஆதாரங்களைக் கொண்டு வாருங்கள். அப்புறம் வேண்டுமானால் சபைக்குறிப்பிலே ஏற்றுவதைப்பற்றி யோசிப்போம். ஆதாரம் கொண்டு வாருங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலைவரவர்களே, அதுசம்பந்தமான விளக்கங்கள் கிடைத்ததற்குப் பிறகு அது இருக்கட்டும். ஆனால் அமைச்சர் மீது வழக்கு ஏழாண்டுக் காலமாக நடைபெறுகிறது. அடுத்து, இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அமைச்சர் மீது வழக்கு அல்ல. பொய்க்குற்றச்சாட்டு சொன்னதற்காக மாண்புமிகு உறுப்பினரவர்களின் இயக்கத்தைச் சார்ந்த ஒரு பேச்சாளர் மீது வழக்கு ஏழாண்டுக் காலமாக நடக்கிறது.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



987 ஏப்ரல் 25]

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலைவரவர்களே, ஏழாண்டுக் காலமாக நடந்து கொண்டிருக்கிறது. இந்த வழக்கு சீக்கிரம் முடிய வேண்டுமானால், எப்படி முடிய வேண்டும் ? இந்த வழக்கு முடிவதற்கு நாம் முயற்சிகள் செய்ய வேண்டும். ஆக வழக்கு............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் போட்ட வழக்கு என்று சொல்லுங்கள். அமைச்சர் மீது என்று சொல்வதாலேதான் இன்டரப்ஷன் வருகிறது. எனவே, நீங்கள் இன்ட்ரப்ஷனை இன்வைட் பண்ணாமல் பேசுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் மான நஷ்ட வழக்கை எங்கள் கழகப் பேச்சாளர் மீது தொடர்ந்திருக்கிறார். எங்களுடைய கழகப் பேச்சாளர் ஊழல் குற்றச்சாட்டு சொன்ன காரணத்திற்காக. அந்த வழக்கு ஏழாண்டுக் காலமாக நடைபெறுகிறது. இது போன்ற வழக்குகள் காலதாமதமாக நடைபெற்றுக்கொண்டிருப்பது நல்லதல்ல. சீக்கிரம் முடிவடைய வேண்டும்.

** ** **

மற்றவர்களும் ஒத்துழைக்க வேண்டும். இன்னொன்றையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வழக்குகள் ஏன் தேங்கிக் கிடக்கின்றன ? தெரிந்தோ, தெரியாமலோ வழக்குகளைப் போடுகிறார்கள். அதனால் லிட்டிகேஷன் அதிகமாகி, நீதிபதிகளுடைய நேரம்தான் வீணாகிறது. ஒருவர் பாஸ்போர்ட் வைத்திருந்தால் ஃபாரின் போகலாம். அவரைத் தடுக்கின்ற அதிகாரம் ரீஜினல் பாஸ்போர்ட் ஆபீசருக்கு உண்டு. அதைப் போன்று எமிகிரேஷன் ஆபீசருக்கு உண்டு ; மத்திய சர்க்காருக்கு உண்டு. மாநில அரசாங்கம் ஒரு டெலிபோன் உத்தரவு போட்டு அவரை போகக்கூடாது, அவர்மீது கிரிமினல் கேஸ் இருக்கிறது என்று சொல்லி தடுத்து நிறுத்த முடியாது ; அந்த அதிகாரம் இல்லை என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்குகிறது. மதுரை ஆதீனம் சிங்கப்பூர் போவதைத் தடுத்து நிறுத்தினீர்கள். இதைப் போன்ற அதிகாரம் இருக்கிறதா, இல்லையா என்று தெரியாமல். தேவையில்லாமல், சட்டத்தைப் புரிந்துகொள்ளாமல் வழக்குகள் போடுவது சரிதானா?

அதைப்போன்று இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

* * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; எதை வைத்து இவற்றை எல்லாம் பேசுகிறீர்கள் ?

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. அ. ரகுமான்கான் : * * *

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரத்தை அவைத் தலைவரிடம் காட்டிவிட்டுத்தான் பேச முடியுமே தவிர, அவையின் விதிகளை மீறிப்பேசுவது சரியல்ல. அதை தாங்கள் எப்படி அனுமதிக்கிறீர்கள் என்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர்கள் ஆதாரத்தைக் கொடுத்துவிட்டு குற்றச்சாட்டுகள் சொல்வது தான் சரி. எப்.ஐ.ஆர். இருந்தால் அதையாவது காட்டுங்கள். ஆதாரம் இருக்கிறது, இருக்கிறது என்று சொல்லி பேசிக் கொண்டே போக முடியாது. ஆதாரம் காட்டாமல் நீங்கள் சொல்வதால் இந்தக் குற்றச்சாட்டுகளை அவைக் குறிப்பி லிருந்து நீக்கிவிடுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவரவர்களே, கோர்ட்டில் 'ஃபைல்' ஆகியிருக்கிற வழக்குகளுக்கு நீங்கள் ஆதாரம் கொடுத்துவிட்டுச் சொல்லுங்கள் என்று சொல்கிறீர்கள். * * *

அப்படி இருந்தும் ஆதாரத்தைக் காட்டுங்கள் என்று சொல் கிறீர்கள். சென்னை கோர்ட்டில்தான் வழக்கு இருக்கிறது. நான் அதைக் கொண்டுவந்து காட்டுகிறேன் ; பேசுவதற்கு அனுமதி கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்போது அந்தக் குற்றச்சாட்டுகளை நீக்கிவிடுகிறேன். நீங்கள் கொண்டுவந்து காட்டிய பிறகு பேச அனுமதிக்கிறேன். இப் போது ஆதாரம் இருக்கிறது என்று சொல்கிறீர்களே தவிர, என்னிடம் காட்டவில்லை.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவரவர்களே, கோர்ட்டிலே இருப்பதற்கும் ஆதாரம் காட்ட வேண்டுமா? அரசாங்கத்தின் மூலமாக தகவல் தெரிந்துகொள்வதற்காக சொல்கிறேன். நான் ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், 'இன் தி இன்டரஸ்ட் ஆஃப் பப்ளிக்' கேட்கிறேன். * * *

இன்னொரு முக்கியமான பிரச்சினை. * மான நஷ்ட வழக்கு கள் போடுகிறீர்கள். போட்டுவிட்டு, கோர்ட்டிலே வந்து 'நான் தவறு இல்லாதவன்' என்று நிரூபிக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக, தைரியம் இருந்தால் வெளியே பேசு என்று சொல்லிவிட்டு, வெளியே பேசியதற்குப் பின்னாலே, 'பாட்லிங் அன்ட் பிளன்டிங்' சம்பந்தமாக வெளியே பேசிய பின்னால்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



முதலமைச்சர் மான நஷ்ட வழக்கு போட்டார். அவர் கோர்ட்டுக்கு வந்து நிரூபிப்பார் என்று ஆவலோடு எதிர் பார்த்தோம் ; கோர்ட்டுக்கு வரவில்லை. அதனால் என்ன இல்லை ? தேவையில்லாமல் லிட்டிகேஷன் வளர்ந்து கொண்டு போகிறது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவ ரவர்களே, தமிழ்நாட்டு மக்கள் தீர்ப்பு அளித்த பிறகு, பொன் மனச் செம்மல் ஆட்சி குற்றமற்ற ஆட்சி என்று நிரூபித்த பின்னால், அந்த வழக்கு திரும்பப் பெறப்பட்டது.

திரு. அ. ரகுமான்கான் : மக்கள் மன்றத்தினுடைய தீர்ப்பு போதுமானது என்று சொன்னால் கோர்ட்டுக்கு போக வேண்டிய அவசியம் இல்லை. கோர்ட்டிலே சந்திக்கலாம் என்று சொல்ல வேண்டிய அவசியமே இல்லை.

அடுத்து, 'பப்ளிக் மென் கிரிமினல் மிஸ்காண்டக்ட் ஆக்ட்' ஒன்று இருந்தது. முதலமைச்சராக இருந்தாலும், அமைச்ச ராக இருந்தாலும், எம்.எல்.ஏ.யாக இருந்தாலும் அந்தச் சட்டத்தின்படி தப்பு செய்தார் என்று தெரிந்தால் புகார் கொடுக்கலாம். எம்.எல்.ஏ. அமைச்சர் மீது புகார் கொடுத்து அந்த புகார் நிரூபிக்கப்பட்டால் அமைச்சருக்குத் தண்டனை ; குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்றால் புகார் கொடுத்த எம்.எல்.ஏக்கு தண்டனை என்று அந்தச் சட்டத்தில் இருந்தது. அதை விசாரிக்க வெங்கடாத்திரி கமிஷன் இருந்தது. அந்தக் கமிஷனை நீங்கள் கலைத்துவிட்டீர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : முன்னாள் ஆட்சிக் காலத்தில் அந்த அமைப்புகள் எல்லாம் முன்னாள் அமைச்சர் சௌந்திரபாண்டியன் போன்றவர்களை பழிவாங்க ஏற்படுத்தப் பட்ட எதேச்சாதிகார அமைப்புகள் என்பதை தமிழ்நாட்டு வரலாறு அறிவிக்கும். ஆகவே, அந்தக் கமிஷன் நீக்கப்பட்டது.

[பிற்பகல் 12-20]

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேபினட் கமிட்டி கொண்டு வந்தீர்கள். ஊழலை விசாரிப்பதற்காகக் கொண்டு வந்தீர்கள். அது யாரை விசாரிக்கும் என்று கேட்டால் எம்.எல்.ஏ., எம்.பி., மந்திரி ஆகியோர் ஊழல் செய்தால் விசாரிக்கும். இதை விசாரிப்பவர்கள் யார் ? இப்போது அமைச்சராக இல்லை, அவர் திரு. காளிமுத்து. இப்போது அமைச்சராக இல்லை. அவர் திரு. கே. ஏ. கே. இப்போது அமைச்சராக இருக்கிறார் நாவலர் அவர்கள். இப்போது அமைச்சராக இருக்கிறார் பண்ருட்டியார் அவர்கள். அவர்கள் எல்லாம் இங்கே இருக்கக் கூடிய எம்.எல்.ஏ.க்கள் அத்தனை பேரையும் விசாரிக்கலாம், ஊழல் பேர்வழியென்று விசாரிக்கலாம். எம்.எல்.ஏ.க்களை

விசாரிக்கலாம், மந்திரிகளையும் அந்த கேபினட் கமிட்டி விசாரிக்கலாம். அந்த வகையில் கேபினட் கமிட்டி போட்டீர்கள். ஆனால் திடீரென்று அதை ஏன் வாபஸ் வாங்கினீர்கள் என்பது எனக்குத் தெரியாது. நான் கேட்க விரும்புவது என்ன வென்றால், இதுதான். கர்நாடகத்தில் இதை விசாரிப்பதற்கு 'லோக் ஆயுக்த்' இருக்கிறது. ஆனால் இங்கே கோர்ட்டுக்கு வரத் தயங்குகிறீர்கள். உங்கள் மீது உள்ள குறைபாடுகளை எடுத்துச் சொல்வதற்குரிய வகையில் ஒரு சட்டம் வரும் என்று அதாவது, a Comprehensive Act will come என்று அஸ்ஸுரன்ஸ் கொடுத்திருக்கிறீர்கள். இந்தயெல்லாம் கரக்டாகப் படித்து ஆய்வு செய்து இந்த நிலையைச் சரிப்படுத்து வதற்காகச் சட்டம் கொண்டு வருகிறோம் என்று சொன்னீர்கள். அந்தச் சட்டம் எப்போது வரும் என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. எனினும் இன்டரப்ஷன் வந்த காரணத்திற்காக மேலும் இரண்டு நிமிடங்கள் தருகிறேன். அதற்குள் முடித்து விடுங்கள். ஆளும் கட்சியினைச் சேர்ந்தவர்களைப் பொறுத்தவரையிலே 11ஆவது நிமிஷமே மணியை அடித்துவிட்டேன். ஆகவே நீங்களும் முடித்து விடுங்கள்.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். சிறையைப் பொறுத்தவரையில் 10 ஆண்டுகளுக்கும் மேலாகப் பலபேர் சிறையில் வாடுகிறார்கள். 14 ஆண்டு, 15 ஆண்டு என்று வாடுகிறார்கள். அவர்களை எல்லாம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது விடுதலை செய்யலாம் என்ற வகையில் அதாவது 10 ஆண்டுகள் ஆனால் விடுதலை செய்யலாம், அட்வைசரி போர்ட் வைக்கலாம் என்ற நிலைமை ஏற்படுத்தப்பட்டது. இப்போது அப்படி விடுதலை செய்ய வேண்டும் என்று சொல்கிறபோது அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். கிரிமினல் ப்ரசிஜர் கோட் செக்ஷன் 433(8) என்பது மத்திய சர்க்காரின் சட்டம். 14 வருஷங்கள் ஒருவர் சிறைக் கைதியாக இருந்தால்தான் விடுதலை செய்ய முடியும் என்று இருக்கிறது. ஹைக்கோர்ட்டிலே ஒரு ரூலிங் கொடுத்திருக்கிறார்கள். அது என்ன வழக்கு என்று கேட்டால், 19–12–1978-ல் கொடுக்கப்பட்ட அந்த வழக்கில் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். கைட்லைன்ஸ் கொடுத்திருக்கிறார்கள், சுப்ரீம் கோர்ட்டில். ஆகவே 14 வருஷங்கள் முடிந்தால் தான் அவர்களை விடுதலை செய்ய முடியும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தொடர்ந்து வாதிட்டார்கள். ஆனால் நான் கேட்டுக்கொள்வது, இந்த 14 வருஷம் என்பது யாருக்குப் பொருந்தும் என்றால்— சுப்ரீம் கோர்ட் [illegible] கொடுத்திருக்கிறது. —1978 ஆவது வருஷத்துக்கு முன்னால் இருப்பவர்களுக்கு இது பொருந்தாது; அவர்களை விட்டால்



என்று இருக்கிறது. தம்முடைய அமைச்சர் அவர்கள் அப்படி விட்டிருக்கிறார்களா என்றால் விட்டிருக்கிறார்கள். அதற்கு இந்தச் சபையிலே 10 வருஷம் ஆதாரங்களைச் சொல்லியிருக்கிறோம். இப்போதும் கொண்டு வந்திருக்கிறேன். ஆனால் இதை நான் தப்பு என்று சொல்ல மாட்டேன். Criminals are not born but are made due to the circumstances. குற்றவாளிகள் குற்றவாளிகளாகப் பிறப்பதில்லை; சூழ்நிலை காரணமாகத்தான் குற்றம் செய்கிற சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே அவர்களை ப்ரிமெச்சூர் ரிலீஸ் செய்து அதாவது மன்னித்து விடுதலை செய்து நல்வாழ்வு வாழ்வதற்காக அவர்களுக்கு உதவியாக விடுதலை செய்கிறோம் என்றால் அதை மனப்பூர்வமாக ஆதரித்து, அமைச்சரை மனம் திறந்து பாராட்டி நான் வரவேற்கிறேன். ஆனால் அந்தப் பட்டியலை எல்லாம் இங்கே சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். 5 ஆண்டுகளுக்கு முன்னதாக விடுதலையானவர்கள், 2 ஆண்டுகளுக்குள்ளாகவே விடுதலை ஆனவர்கள் என்று இப்படிப் பலபேர் இருக்கிறார்கள்.

நான் இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். எங்களுடைய கட்சியைச் சேர்ந்த சகோதரர் திரு. மாசிலாமணி என்பவர், ஒரு கொலை வழக்கில் சம்பந்தப்பட்டார் என்று குற்றம் சுமத்தப்பட்டு— திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நீதித்துறையில் தலையீடு இல்லாத காரணத்தால்— நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டு தண்டனை பெற்று 13 ஆண்டுக் காலமாக சிறையில் வாடுகிறார். அவரைப் பொறுத்தவரையில் சிறை அறிவுரைக்கழகம் விடுதலைக்காக சிபாரிசு செய்தது. ப்ரபேஷன் ஆஃபீஸர் விடுதலைக்காக சிபாரிசு செய்திருக்கிறார். இவ்வளவுக்கும் பிறகு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.....

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திரு. மாசிலாமணியைப் பற்றிப் பேசியதற்காக நான் கேட்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நீதிமன்றத்தில் தலையீடு இல்லை என்று சொன்னார்கள். ஆனால் சமீபத்தில் அவர் பரோலில் வெளியே வந்தபோது அவருக்குத் திருமணம் நடத்தப்பட்டது. அவர்களுடைய கட்சித் தலைவரே போய் திருமணத்தை நடத்தி வைத்து மாவீரனே, உன் வீரச் செயலைப் பாராட்டுகிறேன் என்று பாராட்டி வாழ்த்துக் கூறினார்களே. கொலை வழக்கில் உள்ள ஒருவரை மாவீரனே என்று பாராட்டுகிற அளவுக்கு அந்தக் கட்சியின் தலைவரும் பேசுகிறார்கள், அந்தக் கட்சியும் நடக்கிறது. இப்படி கொலை செய்பவர்களை எல்லாம்கூட மாவீரன் என்று பாராட்டுவதுதான் இந்தக் கட்சியினுடைய லட்சியமா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[1987 ஏப்ரல் 25

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, நான் மிக மிக வருத்தப்படுகிறேன். மாசிலாமணி அவர்களுக்கும் அவர்களுடைய துணைவியார் மல்லிகா அவர்களுக்கும் திருமணம் நடைபெற்றபோது, சிதம்பரத்தில் நடைபெற்ற அந்தத் திருமண விழாவில் எங்கள் தலைவரோடு நானும் இருந்தேன். அவர்களை வாழ்த்தினேன். எங்கள் தலைவர் பேசிய பேச்சு டேப் செய்யப்பட்டிருக்கிறது, பத்திரமாக. அதிலே கொலை செய்த மாவீரன் என்றோ அல்லது சென்னை உயர்நீதி மன்றத்திலே இந்த வழக்கிற்காக அவர் முயற்சி செய்தார் என்றோ எந்தத் தடயமும் இல்லை, எந்த ஆதாரமும் இல்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்காக மன்னிக்கவும். டேப் இருக்கிறது என்று சொன்னார்கள். அவர்கள் கட்சிப் பத்திரிகை என்னிடத்தில் இருக்கிறது. அவர்கள் கட்சிப் பத்திரிகை முரசொலியில் வெளிவந்த செய்தி என்னிடத்தில் இருக்கிறது. அதிலே கொலை செய்த மாவீரனே என்று பாராட்டினார்கள் என்று நான் சொல்லவில்லை. அதிலே 'மாவீரனே உன்னுடைய வீரத்தையும் தீரத்தையும் நாடு மறக்காது' என்று பேசிய செய்தி இருக்கிறது. அங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் இருந்தார்கள் என்று சொன்னார்கள். மகிழ்ச்சி.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சுப்ரீம் கோர்ட்டினுடைய ஆதாரம் இங்கே இருக்கிறது. * * சுப்ரீம் கோர்ட்டினுடைய ஆதாரம் என்னிடத்திலே இருக்கிறது. அதை இங்கே படிக்கலாம் என்று கருதுகிறேன்.

அதிலே We accordingly direct the State Government to consider the case of the Petitioner, Thiru Masilamani, for his Premature release within four weeks from today. Today means, டுடே என்றால் அவர்களே தெளிவாக போட்டிருக்கிறார்கள். 13–2–1986 என்று. The Write Petition is accordingly allowed.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்.—மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தைப் பொறுத்தவரைக்கும், "has directed only consideration, not an order"

திரு. அ. ரகுமான்கான் : டைரக்ஷனைத்தான் சொல்கிறேன். சுப்ரீம் கோர்ட் நல்ல முறையில் அதைப் பரிசீலித்து ப்ரிமெச்சூர் விடுதலை செய்யுங்கள் என்று சொல்லிய பிறகும் நம்முடைய ஹோம் டிபார்ட்மென்டிலே என்ன விளக்கம் என்று கேட்டால் Conduct and character are not satisfactory

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1987 ஏப்ரல் 25] [திரு. அ. ரகுமான்கான்]

நடத்தை சரியில்லை, ஒழுக்கம் இல்லை. சிறையின் உள்ளேயே ஹங்கர் ஸ்டிரைக் நடத்துகிறார், மொட்டை பெட்டிஷன் கொடுக்கிறார். (குறுக்கீடு) இந்தப் பிரச்சினையோடு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கோரிக்கை ஏதாவது இருந்தால் அரசாங்கத்திற்கு வையுங்கள். கதை எல்லாம் வேண்டாம்.

திரு. அ. ரகுமான்கான் : அடுத்து அந்த மனோதத்துவ நிபுணர்கள் சொல்லுகிறார்கள். You are not suitable to join the mainstream of life in your village. உங்களுடைய கிராமத்தில் உள்ள மக்களுடைய வாழ்க்கை நீரோட்டத்தோடு உங்களால் கலக்கமுடியாது என்று மனோதத்துவ நிபுணர்கள் சொல்லுகிறார்கள். நான் கேட்கிறேன் அந்த நிலைமை, அந்த நியாயம் பல பேர்களை பிரிமெச்சூர்டாக விடுதலை செய்திருக்கிறீர்களே, அவர்களுக்கு இல்லையா......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் கே. குப்புசாமி. நீங்கள் மைக் இல்லாமல் பேசுவதெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது. அவர் பேசும்போது * * என்று சொன்னது நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) எத்தனை முறை ஆதாரம் கொடுக்கிறேன் என்று சொல்லுவீர்கள்? வேண்டாம். உட்காருங்கள். கே. குப்புசாமி.

திரு. கே. குப்புசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற நீதி நிர்வாகம் மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களை நான் எடுத்து வைக்க விரும்புகிறேன். சென்னை உயர்நீதி மன்றத்திற்குத் தமிழ்நாடு உயர்நீதி மன்றம் என்ற பெயர் வைக்க வேண்டும் என்றும், தமிழ் தெரிந்த ஒருவர் உச்சநீதிமன்றத்தின் 'உச்ச நீதிபதியாக வரவேண்டும் என்றும் உயர் நீதிமன்றத்தினுடைய ஒரு கிளை மதுரையிலே அமைய வேண்டும் என்றும், உச்சநீதி மன்றத்தின் கிளை சென்னையிலே அமைய வேண்டும் என்றும் ஆகிய இந்த பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் பத்தாண்டு காலமாக புரட்சித் தலைவர் ஆட்சியில்தான் எழுப்பப் பட்டு வந்தன என்று மாண்புமிகு உறுப்பினர் ரகுமான் கான் அவர்கள் ஒத்துக் கொண்டதற்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். ஏனென்றால் தெளிவாக அவர்கள் கூறினார்கள்---பத்தாண்டுக் காலமாக இந்தப் பிரச்சினைகளை நீங்கள் எழுப்பி வருகிறீர்கள், ஆனால் முடியவில்லை என்று சொன்னார்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. கே. குப்புசாமி] [1987 ஏப்ரல் 29

[பிற்பகல் 12-30]

அதற்கு நன்றி தெரிவிப்பதோடு, அதற்கு முன்னாலே அவர்கள் ஏழு ஆண்டுகாலம் ஆட்சி நடத்தியபோது இவற்றையெல்லாம் எண்ணிக்கூட பார்க்கவில்லையென்று அவர்களே ஒப்புக் கொண்டதற்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் வழக்கைப் போட்டு விட்டு கோர்ட்டிற்குக் கூட வரவில்லையென்று குற்றச் சாட்டைச் சொன்னார்கள். நான் அவரிடம் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். எங்களுடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் பற்றி முரசொலியில் இல்லாது பொல்லாதுகளையெல்லாம் எழுதினார்கள். இதைக் குறித்து எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் பிரஸ் கவுன்சிலுக்கு ரிப்போர்ட் செய்தார்கள். பிரஸ் கவுன்சிலில் விசாரணைக்கு வரச் சொல்லி ஆண்டாண்டு காலம் சொல்லியும் முரசொலி பத்திரிகையோ, அதனுடைய உரிமையாளர் முன்னாள் முதல்வர் கலைஞரோ இதுவரையில் செல்லவில்லை. இதற்குக் காரணம் என்னவென்பதை நண்பர் ரகுமான்கான் அவர்கள் அடுத்த முறை விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கண்ணாடி வீட்டிற்குள் இருந்து கல்லெறிந்தால் அது திரும்ப எந்த அளவிற்குத் தாக்கும், அதன் விளைவுகள் என்னவென்பதை உணராமல் அரசியல் நோக்கத்தோடு பேசிய அவருடைய குற்றச்சாட்டுகளை நான் வன்மையாக மறுக்கிறேன்.

அடுத்து ஒன்றைச் சொன்னார்கள். மக்கள் மன்றத் தீர்ப்பு போதுமென்று சொல்கிறீர்களே, நீதிமன்றத்திற்கு ஏன் போக வேண்டுமென்று பேசினார்கள். நான் அதையே திருப்பிக் கேட்க விரும்புகிறேன்.

* * * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதைப்பற்றி யெல்லாம் பேச வேண்டியதில்லை.

திரு கே. குப்புசாமி :—துணைத் தலைவர் அவர்களே,

* * * * *

* * * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெளியே சொன்னதை கோட் பண்ணி இங்கே பேச வேண்டாம். அதை நீக்கி விடுகிறேன். மேலே பேசுங்கள். (குறுக்கீடுகள்) யார் சொன்னாலும் ஸ்விப்பிங்தான். அதை எடுத்தாகிவிட்டது. வெளியே பேசியதைச் சொல்லக்கூடாது. (குறுக்கீடு) அவருக்கு அதே தீர்ப்புதான். உங்களுக்கும் அதே தீர்ப்புதான்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1987 ஏப்ரல் 29]

திரு. கே. குப்புசாமி : மக்கள் மன்றத் தீர்ப்பு போதும் என்றால் நீதிமன்றத்திற்கு ஏன் போக வேண்டுமென்று அவர்கள் கேட்டார்கள். அதற்குத் தான் நான் பதில் சொல்கிறேன்.

* * * * *

எங்கள் மீது குற்றச்சாட்டைச் சொல்வதற்கு முன்னால் இந்தக் குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் நீங்கள் பதில் சொல்லிப்பேசியிருப்பீர்களானால் நான் மனமுவந்து பாராட்டியிருப்பேன். ஆனால் எதையெடுத்தாலும் அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு இந்த அரசின் மீது எப்படியாவது சேற்றைவாரி இறைக்க வேண்டுமென்ற எண்ணத்தில் நீங்கள் குற்றச்சாட்டுகளைச் சொல்கிறீர்கள் என்றால்....

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, உங்கள் கண்கள் கட்டப்பட்டு இருக்கின்றனவா? இதை எல்லாம் அனுமதிக்கிறீர்களே?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்கள் கண்கள் வேண்டுமானால் கட்டப்பட்டிருக்கலாம். என்னுடைய கண்கள் கட்டப்படவில்லை. வெளியே இருக்கிற விஷயங்களைச் சொல்லிப் பேசக்கூடாது என்று அவருக்கும் சொல்லிவிட்டேன். உங்களுக்கும் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) அவர் பேசியதை எடுத்து விட்டோம். எல்லோரும் உட்காருங்கள். கடைசியில் பேசுங்கள்.

திரு. கே. குப்புசாமி : தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கட்டிலில் ஏறிய பிறகு இந்த பத்தாண்டுகாலத்தில் நீதித்துறைக்கு அவர்கள் ஆற்றியுள்ள பணியை இந்த பத்தாண்டு கால வரலாறு எடுத்துச் சொல்கிறது. நீதிபதிகளுக்கு பல்வேறு வசதிகள், புதிய நீதிமன்றக் கட்டடங்கள், சம்பள உயர்வு, நூல் நிலையங்கள் இப்படிப் பல்வேறு வசதிகளை இந்தப் பத்தாண்டு காலத்தில் நீதித்துறைக்கு இந்த அரசு செய்திருக்கிறது. இதனை யாரும் மறுக்க முடியாது. ஆனால் சில நேரங்களில் தாமதம் ஏற்படுகிறபோது எங்கே தாமதம் ஏற்படுகிறது என்பதை யெல்லாம் கவனிக்காமல், இந்த அரசின் மீது அந்த முழுச் சுமையைப்போடவேண்டுமென்ற எண்ணத்தில் தாமதத்திற்கு இந்த அரசுதான் காரணம், ஏன் போராடவில்லையென்று கேட்கிறார்கள் கேட்டவர்கள் யார் தெரியுமா? இந்தத் தமிழகத்தில் அவர்கள் ஆண்ட பிறகு இந்த பத்தாண்டு காலத்தில் 200-க்கு மேற்பட்ட போராட்டங்களை அவிழ்த்து விட்டு அத்தனையிலும் தோல்வி அடைந்தவர்கள், எங்களைப்பார்த்து ஏன் போராட்டம் நடத்தவில்லையென்று கேட்பது உண்மையில் கேலிக்குரிய ஒன்றாகும்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு.கே. குப்புசாமி] [1987 ஏப்ரல் 25

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் வரையறுக்கப் பட்டுள்ள நியதிகளுக்கு ஏற்ப, சமுதாயததின் அடித்தளத்தில் உள்ள சாதாரண மக்களுக்கு சம நீதி, சமுதாய நீதி வழங்குவதை இந்த அரசினுடைய நோக்கமாகக் கொண்டு, இந்த அரசு செயலாற்றி வருகிறது என்பதைப் பாராட்ட அவர்களுக்கு மனமில்லை. மாநிலத்தில் சட்ட நீதி வழங்க நீதி நிர்வாகத்தை நிர்வகிக்கிற பொறுப்பு உயர் நீதிமன்றத்திடம் இருக்கிறது என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 125 வருட கால வரலாற்றைக் கொண்டது இந்த உயர்நீதி மன்றம். இந்த நீதிமன்றத்தை விரிவுபடுத்துகிற முறையில், அண்மையில் நமது மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களும், சட்ட அமைச்சர் அவர்களும், 555 லட்சம் ரூபாயை இதற்கு ஒதுக்கி யிருக்கிறார்கள். கூடுதலாகக் கட்டிடங்களைக் கட்டுவதற்கான 555 லட்சம் ரூபாயை நம்முடைய உயர்நீதிமன்றத்திற்கு அளித்த வரலாறு இதற்கு முன்னால் எப்போதும் இல்லை. அதற்காக நான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இவ்வளவு பாரம்பரியம் உள்ள இந்த உயர்நீதிமன்றத்தில் 18, 19 நீதிபதிகள்தான் இருக்கிறார்கள். இதனுடைய அங்கீகரிக்கப் பட்ட எண்ணிக்கை 25. இந்த மன்றத்தினுடைய கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். இங்கே கொடுக்கப் பட்டுள்ள புள்ளிவிவரக்குறிப்பில், தேங்கிக் கிடக்கிற வழக்கு களின் எண்ணிக்கை சொல்லப்பட்டு இருக்கிறது. ஆண்டுக்காண்டு வழக்குகளின் தேக்கம் அதிகரித்தே வருகிறது. ஆனால் இங்குள்ள உயர் நீதிமன்ற நீதிபதிகளுடைய எண்ணிக்கை குறைந்தே வருகிறது. இதற்கு இந்த மாநிலத்தின் அரசு மட்டும்தான் காரணமா என்றால், நிச்சயமாக இல்லை. வேறொன் இங்கே தேங்கிக் கிடக்கிற வழக்குகளை விசாரிப்பதற்கு உயர் நீதிமன்றத்தினுடைய கிளை ஒன்றை, மதுரையிலே கொண்டுவர வேண்டும் என்று இந்த அரசு 10 ஆண்டுக்காலமாக மத்திய அரசோடு வாதாடி வருகிறது என்பதை இந்த மன்ற உறுப் பினர்கள் நன்றாக அறிவார்கள். ஆனால் ஒன்றை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் தாமதத்திற்கு இந்த மாநில அரசுதான் காரணம் என்ற குற்றச்சாட்டைச்சாட்டுபவர்களுடைய கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டுவருகிறேன். பீகார் மாநிலத்தில் ரெகுலர் கோர்ட் பாட்னாவிலே இருக்கிறது. ஆனால் அதற்கு ஒரு பெஞ்ச் ராஞ்சியிலே இருக்கிறது. மத்திய பிரதேசத்திலே ரெகுலர் கோர்ட், ஜபல்பூரிலே இருக்கிறது. அதனுடைய பெஞ்ச் இந்தூரிலே இருக்கிறது. மகாராஷ்டிராவிலே ரெகுலர் கோர்ட் பம்பாயில் இருக்கிறது, பெஞ்ச் நாக்பூரிலே இருக்கிறது. ராஜஸ்தான் மாநிலத்தில் ரெகுலர் கோர்ட் ஜோத்பூரிலே இருக்கிறது, அதற்கு ஒரு பெஞ்ச் ஜெய்ப்பூரிலே இருக்கிறது. உத்திரப்பிரதேசத்திலே ரெகுலர் கோர்ட் அலகாபாத்திலே இருக்கிறது. அதனுடைய பெஞ்ச் லக்னோவிலே



1987 ஏப்ரல் 25] [திரு. கே. குப்புசாமி]

இருக்கிறது. ஆக வட மாநிலங்களில் உள்ள பல மாநிலங்களில் உயர் நீதிமன்றத்தினுடைய கிளைகள் பல்வேறு இடங்களிலே செயல் புரிந்து வருகின்றன.

அதோடு உத்திரப் பிரதேசம், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்கள், மீண்டும் கூடுதலாகக் கிளைகளைத் துவக்கவேண்டும் என்று அவர்கள் வாதாடி வருகிறார்கள் என்று சொல்வதைவிட போராடி வருகிறார்கள் என்று சொல்லலாம். எனவே நீண்டகாலமாக உயர் நீதிமன்றத் தினுடைய கிளை ஒன்று மதுரையிலே அமைக்கவேண்டும் என்ற கோரிக்கை இன்னும் நிறைவேறாமல் இருந்து வருகிறது. இப்போதுதான் காலம் கனிந்திருக்கிறது. புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு எடுத்துள்ள நடவடிக்கைக்கு இப்போது பலன் கிடைத்திருக்கிறது என்பதை, அண்மையிலே நம்முடைய முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி சர்க்காரியா அவர்கள் பாராளுமன்றத்திற்கு அளித்துள்ள அறிக்கையின் வாயிலாக நாம் அறிய முடிகிறது. அந்த அறிக்கையிலே அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள தென் மாவட்டங் களிலிருந்து மூன்றில் ஒரு பங்கு வழக்குகள் இங்கே, உயர் நீதிமன்றத்திலே பெண்டிங்காக இருக்கின்றன. மூன்றில் ஒரு பகுதி நீதிபதிகள் இங்கேயிருந்து மதுரைக்குச் சென்றால் பெரும்பகுதி வழக்குகள் தீரும், காலதாமதம் தவிர்க்கப்படும். அதற்காகஇரண்டு கண்டிஷன்களைப் போட்டிருக்கிறார்கள்.ஒன்று இப்போது அங்கீகரிக்கப்பட்ட ஸ்ட்ரென்த் 25 ஆக இருக்க வேண்டும். 25 என்று சொன்னால், காலியாக உள்ள 6 இடங்களை நிரப்பவேண்டும். அத்தோடு மேலும் கூடுதலாக 5 முதல் 7 ஜட்ஜுகளை நியமிக்கவேண்டும் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, காலியாக உள்ள 6 இடங்களை நிரப்பி, கூடுதலாக 7ஜட்ஜுகளை நிரப்பியபிறகுதான்மதுரையிலே ஒரு பெஞ்ச் ஏற்படுத்த முடியும் என்று அறிக்கையை அவர்கள் பாராளுமன்றத்திலே சமர்ப்பித்திருக்கிறார்கள். இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், மாநில அரசு மட்டும்தான் இதற்குக் காரணம் என்று சொல்பவர்களுக்காகத்தான் சொல்கிறேன். மாநில அரசு அவ்வப்போது காலியாக உள்ள இடங்களுக்குப் பல்வேறு சட்ட நிபுணர்களை, நீதிபதிகளாக ஆக்குவதற்கான பரிந்துரைகளை ஆண்டாண்டு காலத்திற்கு முன்னாலே மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது. மத்திய அரசு அதனுடைய கருத்துக்களை மாநில அரசிடம் கேட்கிறது உயர் நீதிமன்றத்திடம் கேட்கிறது, உச்சநீதிமன்ற நீதிபதிகளிடம் கேட்கிறது. அதனால்தான் காலதாமதம் ஆகிறதே தவிர, மாநில அரசுக்குக் காலியாக உள்ள இடங்களை நிரப்புவதில் காலதாமதத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணம் கிஞ்சித்தும் இல்லை என்பதை இந்த மன்றத்தினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-40)

இந்த நேரத்திலே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன் நீதிபதிகள் நியமனம் செய்யப்படும்போது, அவர்கள் சமுதாயத்தினுடைய உணர்வுகளைப் புரிந்தவர்களாக, சட்ட நுணுக்கங்களைத் தெரிந்தவர்களாக மட்டும் அல்லாமல், சட்ட அனுபவம் பெற்றவர்களாக மட்டுமல்லாமல், சமுதாய உணர்வுகளை, சமுதாயத்தின் அடித்தளத்திலே உள்ள மக்களுடைய உணர்வுகளையெல்லாம் தெரிந்தவர்களாக நீதிபதிகள் இருந்தால், சமநீதி, சமூக நீதி நிச்சயமாகக் கிடைக்கும். தமிழ்நாட்டிலே நீதிபதிகளாக இயங்குபவர்களுக்கு அனுபவமும், ஆற்றல் உள்ள சட்ட நிபுணர்கள் இல்லையா ? நிச்சயமாக இருக்கிறார்கள். நான் ஒன்றைக் குறிப்பிடுவதில் தவறு இல்லை என்று எண்ணுகிறேன். நீதிபதி பதவி என்பது ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினருக்கு, ஒரு குறிப்பிட்ட மேட்டுக் குடி மக்களுக்கு மட்டும் சொந்தம் என்ற உணர்வு நிச்சயமாக இருக்கக்கூடாது. சாதாரண மக்களிடம் அந்த உணர்வு தற்போது ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் அண்மையில் இந்தக் காலியிடங்களை நிரப்புவதற்கு ஒரு குறிப்பிட்ட மேட்டுக்குடி ஜாதியைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் மட்டும் உயர்நீதிமன்றத்தால் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று இங்கே தகவல் கிடைத்திருக்கிறது. ஆகவே, சமுதாயத்தினுடைய ஒரு பகுதி மக்களுடைய உணர்வுகளை மட்டும் பிரதிபலிக்கின்ற ஒருவரால், சமுதாயத்தினுடைய தாழ்த்தப்பட்ட, அடிமட்டத்தில் இருப்பவர்களுக்கு சமூக நீதி, சம நீதி எப்படிக் கிடைக்கும் ? தமிழ்நாட்டில் அறிவாளர்களுக்குப் பஞ்சமா அல்லது சிறந்த சட்ட மேதைகளுக்குப் பஞ்சமா ?

நான் ஒன்றைக் குறிப்பிடுவதில் தவறு இல்லை என்று எண்ணுகிறேன், ஹைகோர்ட்டிலே இருந்து பதிவாளர்—ரிஜிஸ்டிரார் அவர்கள் இங்கே வந்து இருக்கிறார்கள் என்று எண்ணுகிறேன். அற்புதமான சட்ட அறிவு பெற்றவர்; அற்புதமான அனுபவத்தைப் பெற்றவர்; நியாயம் வழங்குவதிலே ஆர்வம் உள்ளவர். சாதாரணக் குடியிலே பிறந்த அவர், அவரைப்போன்ற பலபேர் சட்ட நிபுணர்களாக இருக்கிறார்கள். எனவே, நியமிப்பதற்கு ஆளில்லை என்ற நிலைமை இங்கே இல்லை. ஆனால் யாரை நியமிப்பது, ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தைச் சார்ந்தவர்களைத்தான் நியமிப்பது என்ற நிலைமையை இந்த அரசு ஒத்துக்கொள்ளவில்லையே தவிர, அனுபவம் உள்ளவர்களை, ஆற்றல் உள்ளவர்களை, சமுதாய உணர்வுகளைப் புரிந்துகொண்டவர்களை நியமிப்பதிலே இந்த அரசுக்கு எந்தவிதமான காழ்ப்புணர்ச்சியும் கிடையாது என்பதை நான் இந்த நேரத்திலே பணிவோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த நேரத்திலே இன்னொன்றையும் சுட்டிக்காட்டுவது தவறு இல்லை என்று நான் கருதுகிறேன். இங்கிலாந்து நாட்டைப் பொறுத்தவரை அங்கே சட்டத்துறை அமைச்சர் என்று ஒருவர் இல்லை. பாராளுமன்றமே சட்டத்தை





இயற்றுகிறது. பாராளுமன்றம் என்ன சொல்லுகிறதோ அதைத்தான் நீதிமன்றம் நிறைவேற்றியாக வேண்டும். ஆனால் இங்கே அப்படிப்பட்ட நிலைமை இல்லை. பாராளுமன்றம், சட்டமன்றம் இயற்றுகின்ற சட்டங்களை பரிசீலனை செய்து அங்கீகரிப்பதற்கும் தூக்கி எறிவதற்கும் இங்கே உள்ள நீதிமன்றங்களுக்கும் உச்ச நீதிமன்றத்திற்கும் அதிகாரம் இருக்கிறது. ஆனால், இங்கிலாந்தைப் பொறுத்தவரை, பாராளுமன்றத்தில் அவர்கள் முடிவு எடுத்துவிட்டால் அதை ஏன் என்று கேட்கிற அதிகாரம் அங்கே நீதிமன்றத்திற்கு இல்லை. அதைத்தான் அமல்படுத்தியாக வேண்டும். அங்கே 'லா சான்ஸலர்' என்பவர்தான் பாராளுமன்றத்தில் சட்ட அமைச்சரவையிலே உயர்நீதிமன்ற நீதிபதிகள் உட்பட எல்லாவற்றையுமே அவர்தான் பார்க்கிறார். அங்கே நீதித் துறைக்கு மரியாதை இருக்கிறது. ஒரு கட்சியைச் சேர்ந்தவர் சான்ஸலராக நியமிக்கப்பட்டார் என்றாலும் அனைவரும் பாராட்டுகின்ற வகையிலே நீதித்துறை அங்கே செயல்படுகிறது. நீதித் துறைக்குத் தனி மரியாதை இருக்கிறது. அதேபோன்று அமெரிக்க ஐக்கிய நாடுகளிலே, யுனைட்டெட் ஸ்டேட்ஸ் ஆப் அமெரிக்காவில் நீதிபதிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். சாதாரண நீதிபதிகளிலேயிருந்து உச்சநீதிமன்றத்தின் நீதிபதிவரை எலெக்ஷன் மூலமாக—They are not nominated but elected-தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஏ. வாரன் என்ற ஒரு சட்ட நிபுணர் 7 ஆண்டுக்காலம் வழக்கறிஞராக இருந்து இருக்கிறார். அதற்குப் பின்னாலே அவர் 24 வருடங்கள் கலிபோர்னியாவிலே கவர்னராக இருந்து இருக்கிறார். 24 வருடங்கள் கவர்னராக இருந்த அவரை அமெரிக்காவினுடைய உச்ச நீதிமன்றத்திற்கு நீதிபதியாக நியமித்து இருக்கிறார்கள், அமெரிக்க மக்கள். அவர் கோர்ட்டிலே பிராக்டிஸ் செய்யவில்லை. அவருக்குத் தகுதி இல்லையென்று அந்த மக்கள் எண்ணவில்லை. ஆனாலும்சாதாரண மக்களுடைய உணர்வுகளைத் தெரிந்து அவர் மக்களுக்குத் தொண்டாற்றியதன் காரணமாக அந்த மக்கள் அவரை உச்ச நீதி மன்றத்தினுடைய நீதிபதியாக்கினார்கள். அவருடைய காலத்திலேதான் புகழ்பெற்ற தீர்ப்புகளெல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றன. வெள்ளையர்களும் நீக்ரோக்களும் ஒன்று என்ற தீர்ப்பை ஏ. வாரன்-தான் கொடுத்தார் இதை ஏன் நான சொல்கிறேன் என்றால், ஏ. வாரன்-உடைய தனிச் சிறப்பு, சாதாரண மக்களோடு கலந்து, பழகி அவர்களுடைய உணர்வுகளைப் புரிந்து சமுதாய நீதி, சமநீதி வழங்கினார் என்ற காரணத்திற்காகத்தான் அமெரிக்காவிலே அவருக்குஅபரிமிதமான புகழ் ஏற்பட்டது. அதே போன்று இங்கே நியமிக்கப்படும் நீதிபதிகளும், சாதாரண மக்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொள்பவர்களாக இருப்பார்களேயானால் அந்த மக்களுக்கு நீதிமன்றத்தின்மீது, நீதிபதிகள்மீது எந்தவிதமான அருவருப்பும் ஏற்பட இடமிருக்காது என்ற காரணத்தால்தான் நான்இதைச் சொல்கிறேன். ஆகவே, இங்கே ஏதாவது ஒரு நீதிபதி சாதாரணமாக, ஆற்றல் உள்ள ஒருவர் நீதிபதியாக வந்தால் கூட இந்த அரசு தலையிடவில்லையென்றால் பாராட்டுகிறார்கள்,

ஆற்றல் மிக்க, அனுபவம் மிக்க ஒருவரை எல்லாத் தகுதிகளும் இருந்துஅவரைப் பரிந்துரை செய்தால் உடனே அதற்கு ஆயிரத்து நூறு போராட்டங்களைத் தூண்டி விடுகிறார்கள். நான் இவைகளை எல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால் அண்மையில்கூட இங்கே பேசிய மத்திய இணை அமைச்சர் அவர்கள் உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞர்கள் இந்த பெயில் வாங்குவதிலே கூட கரப்ஷன் ஏற்பட்டிருக்கிறது என்றும், வழக்கறிஞர்களை எல்லாம் திருத்த வேண்டும் என்றும் நீதித் துறையில் இந்த புகார் வராத வகையில் நடந்து கொள்ள வேண்டும் என்றும் வழக்கறிஞர்கள் ஒரு டிரேடு யூனியன் போல் நடந்து கொள்ளக் கூடாது என்றும் இது ஒரு நோபுள் புரபஷன் என்று எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் வழக்கறிஞர்கள் பல அரசியல் நோக்கத்தோடு பல போராட்டங்களை நடத்தினார்கள் இந்த மாநில அரசுக்கு எதிராக. நான் கேட்கிறேன், இவ்வளவு நாட்களாகத் தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என்று பெயர் வைக்கவில்லையே, அதை எதிர்த்து அவர்கள் போராடவில்லை. உச்சநீதிமன்றத்தின் கிளை இங்கே வரவில்லை என்பதற்கு அதை எதிர்த்து அவர்கள் எதுவும் சொல்லவில்லை, உயர்நீதிமன்றத்தின் கிளை இல்லை என்பதற்கு அவர்கள் போராட்டம் நடத்தவில்லை மத்திய அரசை நோக்கி, எதை எடுத்தாலும் மாநில அரசின்மீது அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக வழக்கறிஞர்கள் போராட்டங்கள் நடத்தினார்களே தவிர உண்மையான காரணங்களைப் பார்த்து, தவறு எங்கு இருக்கிறது, இவைகள் எல்லாம் யார் ஆற்ற வேண்டிய காரியங்கள் என்று எல்லாம் அவர்கள் எடுத்துச் சொல்லி போராட்டங்கள் நடத்தியிருப்பார்களானால் இந்த நாட்டு மக்களுடைய ஆதரவு அவர்களுக்குக் கிடைத்து இருக்கும். ஆனால் அந்த நிலை இல்லாமல் இதை எங்கோ திசை திருப்பி விட்டதற்கு உண்மையிலேயே என்னுடைய வருத்தத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இப்போது Bailable Offence என்று இருக்கிறது. சாதாரணமாக Mandatory Provision அரசியல் சட்டத்திலே ஐ.பி.சியிலே Bailable Offence என்றால் போலீசாரேவிட்டு விடலாம். சில வழக்குகள் போகின்றபோது கோர்ட்டிலே அவர்களை விட்டு விட முடியும். ஆனாலும் Bailable Offence-ல் கூட சில பேர்களை பெயிலில் விடுவது இல்லை. கோர்ட்டில் கூட Bailable Offence-ல் சிலயிடங்களில் நிராகரித்து இருக்கிறார்கள். இந்த நிலைமையை அங்கே மாற்ற வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இந்த வகையில் நான் ஒன்றைக் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். இந்த பெயிலில் போலீஸ் கஸ்டடியில் Bailable Offence-ல் பெயிலில் விடுவதாக இருந்தால் கோர்ட்டில் பெயிலைப் பொறுத்தவரையில் Police-க்கு corruption அல்லது நீதிபதிகளைப் பொறுத்தும் corruption என்ற அந்த பேச்சுக்கே இடம் இருக்காது.

நேரம் இல்லாத காரணத்தால்—நான் பல உயர்நீதிமன்றத்தினுடைய தீர்ப்புகளை எல்லாம் எடுத்துச் சொல்லலாம் என்று இருந்தேன்—சொல்ல முடியவில்லை.





அதோடு இப்போது ரெவின்யூ கோர்ட்டில் Record of Tenancy, Deposit of titles இவற்றை எல்லாம் வைத்து இருக்கிறார்கள். இவைகளில் எல்லாம் சட்ட சம்பந்தப்பட்ட பிரச்சினை வரும் போது சட்ட ஞானம் இல்லாதவர்கள் எல்லாம் இதைப்பற்றி சரியான தீர்ப்பு கூற முடியவில்லை. ஆகவே இவற்றை எல்லாம் மீண்டும் நீதித்துறைக்கே மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, Legal aid to the poor என்று நாம் வைத்து இருக்கிறோம். The aid is noble. The idea is laudable. But the result is not encouraging என்றுதான் சொல்ல வேண்டும். இந்த விபத்துக்களுக்காக நடக்கிற வழக்குகளைத் தவிர மற்றவற்றில் இந்த Legal aid to the poor சரியான முறையில் இயங்கவில்லை என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. அதோடு இப்போது அரசியல் சட்டத்திலே 'Indian Succession Act'-லே 'Right by birth' ஆண்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆண் மகனாகப் பிறந்த உடனேயே அவனுக்கு சொத்து உரிமை வந்து விடுகிறது என்ற நிலைமை இருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இதை மாற்றி பெண்களுக்கும் சொத்தில் சம உரிமை கொடுக்க வேண்டிய ஒரு நிலையை உருவாக்க வேண்டும் என்ற கருத்தைப் பல காலமாகச் சொல்லி வருகிறார்கள். எனவே 'Indian Succession Act'-ஐ திருத்துகிற முயற்சியில் இந்த அரசு ஈடுபட வேண்டும். ஆண்களுக்கு 'Right by birth' இருப்பதைப் போல பெண்களுக்கும் 'Right by birth' இருந்தால் இந்த டவ்ரி-வரதட்சிணை கொடுமை என்பது இந்த நாட்டை விட்டு ஒழிவதற்கு ஒரு நல்ல சூழ்நிலை ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து கோர்ட் ஃபீ சம்பந்தமாக ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கோர்ட் பீஸ்-ஐ ரேஷனலைஸ் செய்ய வேண்டும், ஒருமுனைப்படுத்த வேண்டும். பெரிய, பெரிய கோடிக் கணக்கான சொத்துக்களை எல்லாம் பாக விஸ்தி என்று வரும்போது கிஸ்தி வாங்கியபின் அது போல் 30 முறை கட்டினால் போதும் என்று இருக்கிறது. அந்த பிராமிசரி நோட்டுகள் போகும் போது அது 100க்கு 7½ ரூபாய் பாண்டு கட்ட வேண்டும் என்ற நிலைமை இருந்து வருகிறது. ஆனால் கோடி ரூபாய் சொத்து உள்ள பாக விஸ்திக்கு 100 ரூபாய் கட்டினால் போதும் என்றும், இந்த பிராமிசரி நோட்டுகளுக்கு எல்லாம் 100—க்கு 7½ ரூபாய் கட்டவேண்டும் என்ற நிலையை மாற்றி இந்த கோர்ட் ஃபீஸ்-ஐ ரேஷனலைஸ் செய்து நல்ல முறையில் அதை சாதாரண மக்கள் பயன்படுத்துகிற அளவுக்கு கொண்டு வர வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நாளை பழனியில் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களால் புதிய முனிசிப் கோர்ட் திறந்து வைக்கப்பட இருக்கிறது. உயர்நீதிமன்ற நீதிபதி அவர்கள் வருகிறார்கள். 15 லட்ச ரூபாயை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அதற்குக்

[திரு. கே. குப்புசாமி] [1987 ஏப்ரல் 25

கொடுத்து இருக்கிறார்கள். மாநிலத்திலேயே அற்புதமான ஒரு கட்டிடம் முன்சீப் கோர்ட்டுக்கு என்று கட்டப்பட்டு, நாளை நம்முடைய நாவலர் அவர்கள் தலைமையில் திறந்து வைக்கப்பட இருக்கிறது. அந்த நல்ல வாய்ப்பினைக் கொடுத்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு அங்கே ஒரு முதல் வகுப்பு நீதிமன்றம் வேண்டும் என்று நீண்ட நாட்களாக கோரிக்கை இருந்து கொண்டு வருகிறது. சென்ற ஆண்டில் கோர்ட் ஆரம்பிக்க ஒரு சில ஏற்பாடுகள் நடந்த பிறகு ஆள் இல்லை, நிதி இல்லை என்ற காரணத்தால் நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது.

[பிற்பகல் 12.50]

அங்கேயிருந்து முதல் வகுப்பு நீதிமன்றம், திண்டுக்கல்லுக்கு வர, 60 கிலோ மீட்டர் தூரத்திற்கு வர வேண்டியிருக்கிறது. நடப்பு ஆண்டில் பழனியில் ஒரு முதல் வகுப்பு நீதிமன்றம் ஏற்படுத்திக் கொடுக்க, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பு கொடுத்த தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் நன்றி கூறி, அமைகிறேன்.

## 4. அரசினர் தீர்மானம்.

### விதி 32—ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கடந்த சில நாட்களாக இலங்கையிலே பயங்கரமான முறையில் படுகொலை செய்யப்படுகின்ற வேதனைக்குரிய நிகழ்ச்சிகளை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இந்தப் பிரச்சினையைப் பற்றி, இந்த அவையிலே விவாதிக்க வேண்டும். நம்முடைய கருத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று நேற்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் கலந்து கொண்ட கட்சியினுடைய தலைவர்கள் எடுத்துச் சொன்னதற்கிணங்க 27—4—1987 அன்று, இதை விவாதத்திற்கு எடுத்துக் கொண்டு, எல்லாக் கட்சிகளுடைய தலைவர்கள் மட்டும் இதிலே கலந்து கொண்டு பேசுவது என்ற முடிவை எடுத்திருக்கிறோம். அதற்கிணங்க அன்று கேள்வி நேரத்தையும், கவன ஈர்ப்புத் தீர்மானங்களின் நேரத்தையும் ஒத்தி வைக்கலாம் என்ற முடிவு எடுக்கப்பட்டது. அதற்கிணங்க கேள்வி நேரத்தை ஒத்தி வைப்பதற்கு அதற்கான விதியைக் கைவிட வேண்டுமென்ற முறையில் கேட்டுக்கொள்கின்ற வகையில், கீழ்க்கண்ட தீர்மானத்தை மட்டும் இப்போது நான் முன்மொழிய விரும்புகிறேன்.

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்—விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 3 ஐ 27—4—87 அன்று தளர்த்தப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருதாக நிறைவேற்றப் பெற்றது.



1987 ஏப்ரல் 25]

## 3. வரவு-செலவுத் திட்டம், 1987–88—வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)

### கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம், 14—சிறைச்சாலைகள் (தொடர்ச்சி)

*திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற நீதி நிர்வாகம் மற்றும் சிறைச்சாலைகள் பற்றிய மானியக் கோரிக்கைகளின்மீது, ஜனதா கட்சியின் சார்பாக பேசும்போது, இப்போது தமிழ்நாட்டில் நீதியைப் பொறுத்தவரையில், அது வழங்கப்படவில்லை, நீண்ட காலதாமதமாகிறது என்பதைத்தான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே கொள்கை விளக்கக் குறிப்பிலே சென்னை உயர்நீதி மன்றத்தில் 25 நீதிபதிகள் இருக்க வேண்டும். தற்சமயம் இருப்பது 19 தான் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதுமாதிரி தமிழ் நாட்டிலுள்ள அனைத்து மன்றங்களிலுள்ள நீதிபதிகளைப் பொறுத்தவரையில், பல இடங்களில் நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் இல்லாமலே இருக்கிறார்கள். அதனால் நீதி வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது. அதுதவிர, நீதிபதிகளின் இடங்களை நிரப்புவதற்கு, நான் முன்பே கேள்வி எழுப்பும்போது, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் ஏதோ தடையிருப்பதாகச் சொன்னார்கள். அந்தத் தடைகளையெல்லாம் நீக்கி, உடனடியாக நீதிபதிகளை, அவர்கள் இருக்க வேண்டிய இடங்களிலே அமர்த்தி வழக்குகளை சீக்கிரமாக முடித்து, நீதி வழங்குவதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோன்று இந்த வழக்குகள் சம்பந்தப்பட்ட நிலையிலே, பல நீதிமன்றங்களிலே வழக்குகளை எடுத்து, அதற்குப்பிறகு வாய்தா போடுவது என்று வழக்கமாக வைத்திருக்கிறார்கள். இரு தரப்பினரும் வந்தால் வாய்தா போட்டு விடுகிறார்கள். வாதி வராமல் இருந்தால் தள்ளுபடி செய்கிறார்கள். பிரதிவாதி வராவிட்டால் 'எக்ஸ் பார்ட்டி' தீர்ப்பு தந்து விடுகிறார்கள். இதையெல்லாம் தவிர்க்க வேண்டும். பல வாய்தாக்களுக்கு வந்துவிட்டு, ஏதாவது ஒரு வாய்தாவிற்கு வரவில்லை என்றாலும் வழக்கை அந்தக் காரணம் காட்டி முடித்து விடுகிறார்கள். அதற்குப் பிறகு மறுபடியும் ஒரு மனு போட்டு, அதற்காக நிற்க வேண்டியிருக்கிறது.

அதுபோன்று நீதிமன்றங்களில் எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இல்லை. நீதிமன்றங்களுக்கு மட்டும் என்று இல்லை. நீதிபதிகளுக்கும், அரசு அதிகாரிகளுக்கும் எந்த வித வசதிகளும் இல்லை. வழக்காடச் செல்பவர்கள் எந்த வசதியும் இல்லாமல் மரத்தடியில்தான் நிற்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இதை

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1987 ஏப்ரல் 25

யெல்லாம் இந்த அரசு சரி பார்த்து, உரிய இடங்களை, அவர்கள் காத்திருப்பதற்கான இட வசதியை செய்து கொடுத்து, கட்டிடங்களைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத் தலைமை நீதிபதி மதுரையிலே இருக்கின்றார். அவர் காமராஜர் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய மூன்றுக்கும் சேர்த்து அவர் இருக்கிறார். ஆனால் அவர் மதுரையில்தான் இருக்கிறார். இந்த மூன்று மாவட்டங்களும் பிரிக்கப்பட்டபோது தனித்தனியாகத் தலைமை நீதிமன்றம் வருவதாக இரண்டு வருடங்களாகச் சொல்லப்பட்டு வருகின்றது. ஆனால் மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு இது மூன்றாவது ஆண்டு நடந்து கொண்டு இருக்கிறது. இன்னும் அந்த மாவட்டத் தலைமை நீதிமன்றம் பிரிக்கப்படவில்லை. அவைகளைப் பிரிப்பதற்கு என்ன காலதாமதம் என்று புரியவில்லை. தலைமை நீதிமன்றம் அமைக்க விருதுநகரில் உள்ள மிளகாய் வியாபாரச் சங்கத்தின் கட்டிடத்தை அரசு வாடகைக்கு கேட்டது. அவர்களும் அதைக் கொடுப்பதாக எழுதிக் கொடுத்திருக்கிறார்கள் இராமநாதபுரம் தலைமை நீதிபதி வந்து அதை பார்வையிட்டார். அனைத்து வசதிகளும் இருக்கின்றது என்று சொன்னார். ஆனாலும் இன்னும் வராமல் இருக்கிறது. விருதுநகரில் வழக்கறிஞர்கள் சங்கத்திலிருந்த வழக்கறிஞர்கள் எல்லாம் என் மூலமாக மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களை பார்த்தார்கள். மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும் முதலமைச்சர் அவர்களும் ஒத்துக் கொண்டார்கள், ஏற்றுக் கொண்டார்கள் என்று சொல்லியிருக்கின்றார்கள். அதை உடனடியாக நிறைவேற்றி மாவட்ட நீதிமன்றங்களை காமராஜர், இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம் போன்ற மாவட்டங்களுக்கெல்லாம் தனித்தனியாக அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விருதுநகரில் இப்போது குற்றவியல் நீதிமன்றம் ஒன்றுதான் இருக்கிறது. சிவில் நீதிமன்றம் கிடையாது. அது மாவட்ட தலைநகரம். காமராஜர் அவர்கள் பிறந்து வளர்ந்த விருதுநகரில் சிவில் நீதிமன்றம் கிடையாது. 500 ரூபாய் வழக்கு போட வேண்டுமென்றாலும்கூட சாத்தூருக்குப் போய் வழக்கு போட வேண்டியிருக்கிறது. எனவே உடனடியாக சிவில் நீதிமன்றத்தை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே முதல் வகுப்பு மேஜிஸ்ட்ரேட் கூட சிவில் நீதிபதியாக இயங்கலாம் என்று நினைக்கின்றேன். அதைப்போல உங்களுடைய கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். உயர்நீதிமன்றத்திலே வழக்குகள் தாக்கீது 815. மொத்தம் இருப்பது 3,879. முடிந்த வழக்குகள் 374. நிலுவை 3,505. ஒரு வருடத்திற்கு வருகின்ற வழக்குகள் 800 அல்லது 900. ஆனால் நீதிபதி முடிப்பதோ 300, 200. அப்படியென்றால் இது எந்த நிலையிலே கொண்டுபோய் நிறுத்தும்? இதனால் வருடா வருடம் வழக்குகளின் எண்ணிக்கை கூடிக் கொண்டே போகிறது. அதேபோல, வட்டங்களில் பார்த்தால், ரிட் மனுக்கள் 43,000 என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாவட்ட நீதிமன்றங்களில்



1987 ஏப்ரல் 25] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 9,000. துணை நீதிமன்றத்தில் 72,000. மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பது 3 இலட்சத்திற்கு மேல். உயர்நீதிமன்றத்திலே குற்றவியல் சார்பாக நிலுவை 17,000. பெருநகர் குற்றவியல் நீதிமன்றங்களில் நிலுவை வழக்கு 29,000. மேஜிஸ்டிரேட் நீதிமன்றங்களில் 1,90,000. இப்படி எங்கு பார்த்தாலும் இலட்சக் கணக்கான வழக்குகள் தேங்கிக் கொண்டிருந்தால், இந்த நாட்டின் நிலை என்ன? இந்தத் தமிழ் நாட்டின் நிலை என்ன? மக்களுடைய நிலை என்ன? மக்கள் அலைந்து தங்களுடைய கையில் இருக்கின்ற பணத்தைச் செலவழித்தும் இன்றைக்கு நீதி வழங்குகின்ற நீதிபதி இல்லாத காரணத்தினால் அவதிக்குள்ளாகிறார்கள். நீதிபதிகள் தாமதமாகச் செயல்படுகிறார்கள் என்றெல்லாம் பல்வேறு புகார்கள். அதையும் நாங்கள் சொல்ல வேண்டிய நிலை இருக்கிறது. இந்தக் காரணங்களினால் சரியான தீர்ப்புகள் வழங்கப்படுகின்றதோ என்ற ஐயப்பாடும் இருக்கிறது.

இதுவரை நான் சொன்னது நீதிமன்றங்களைப்பற்றி. இனிமேல் நான் சொல்லவிருப்பது நீதிபதிகளைப்பற்றி. நீதிபதிகளுக்கும், கடைநிலை ஊழியர்களுக்கும் சம்பளங்கள் அதிகமாகக் கொடுக்க வேண்டும். குறைவான சம்பளங்கள் அவர்களுக்கு கொடுக்கப்படுவதாக நான் அறிகின்றேன். அதைப்போல அவர்களுக்குத் தனியாகக் குடியிருப்புகள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் போல அவர்கள் அரசியல் தலையீடு இல்லாமல் நீதி வழங்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அமீனாக்கள், சேவகர்களுக்கு கொடுக்கப்படுகின்ற பயணப்படி அலவன்சை அதிகமாக கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை நிறைவேற்றி வைக்க வேண்டும். பயணப்படி அலவன்ஸ் அதிகமாகக் கொடுத்தால் நீதி நிமிர்ந்து நிற்கும்.

[பிற்பகல் 1.00]

இல்லாவிட்டால் அங்கே அது வளைந்து விடுகிறது. அதை நான் உங்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சிறைச்சாலைகளைப் பொறுத்தவரையில் கைதிகளைப் பரோலிலே விடுவதிலே மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது. பல்வேறு நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன. முதலாவது, மருத்துவ அதிகாரிகள் சான்று. அதன் பிறகு நன்னடத்தை அலுவலரின் சான்று. அதன் பிறகு காவல்துறை அதிகாரியின் சான்று என்று பல்வேறு நடைமுறைகளைக் கடைப்பிடிக்கிறார்கள். நான் சொல்வது, மருத்துவ அதிகாரி சான்று சரிதான். அதனைப் போல் நன்னடத்தை அலுவலர் சான்று சரிதான். ஆனால், காவல்துறை அதிகாரி சான்று வேண்டுமென்று சொன்னால், அவர்கள் கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். காலதாமதம் செய்கிறார்கள். அவர்கள் வெளியிலே வரக்கூடாது என்று

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1987 ஏப்ரல் 25

நினைத்துக் கொள்கிறார்கள். பரோலிலே கைதிகள் வெளியிலே வந்தால், ஏதோ சிரமம் இருப்பதாகக் கருதிக் கொண்டு, அதற்கு காலதாமதம் செய்கிறார்கள் என்ற புகார் எங்களுக்கு வந்திருக்கிறது.

ஆதலால், மருத்துவ அதிகாரி சான்றும், நன்னடத்தை அலுவலர் சான்றும் இருந்தால் போதும் என்ற முறையில் இந்த அரசு பரோலில் விடுவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல், கைதிகளைப் பார்க்க அவர்கள் குடும்பத்தினர் வரும்போது, அவர்களை கம்பிக்கு அந்தப்புறமும், இந்தப்புறம் இவர்களையும் நிறுத்தி வைத்துப் பார்த்துப் பேச விடுவது நியாயம் தானா என்று கேட்க விரும்புகிறேன். இந்த சுதந்திரத் திருநாட்டிலே இந்த காலக்கட்டத்திலே, இருபதாம் நூற்றாண்டுக் காலத்திலே சாதாரணக் கைதியைப் பார்க்க வேண்டும் என்று குடும்பத்தினர்—மனைவி, குழந்தைகள் வந்து பார்க்கும்போது கம்பிக்கு அந்தப்புறம் கைதிகளையும், இந்தப்புறம் இவர்களையும் நிற்க வைத்துப் பார்க்க வைப்பது கொடூரமாக இருக்கிறது. இதைப் பார்க்கும்போது, மனைவி, குழந்தைகள் வருத்தப்படுகிறார்கள்.

உங்களுடைய மேற்பார்வையிலேயே சுதந்திரமாக பேச விட்டால் என்ன? சுற்றி காம்பவுண்ட் சுவர் இருக்கிறது. வலை இருக்கிறது. அவர்களையெல்லாம் சுதந்திரமாகப் பேச அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறைச்சாலைகளிலே எந்த வசதியும் இல்லை. உணவு வசதி இல்லை, தங்கும் வசதி கிடையாது. சுகாதார வசதி இல்லை. சுகாதார வசதி மிக முக்கியமாக வேண்டும். அங்கே நாங்கள் சென்றோமானால், ஏதாவது பிரிவென்டிவ் அரஸ்ட் அல்லது போராட்டத்தில் கலந்து கொண்டு சென்றோமானால், சுகாதார வசதி இல்லாத நிலையினாலே, சுகாதாரக் கேடு வந்திருக்கிறது. அந்த நிலையெல்லாம் இருக்கிறது. அதையெல்லாம் சரிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சுகாதார வசதி முக்கியமாக செய்து தரப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அரசியல் கைதிகள் அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தர வேண்டும், \ சிறைச்சாலைகளிலே, புதிய திறந்த வெளிச் சிறைச்சாலைகளை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாலை 6 மணிக்கு மேல் கால்நடைகளைப் போட்டுப் பூட்டுவதைப் போல, அரசியல்வாதிகளைப் பூட்டி வைப்பது நல்லதா என்று கேட்க விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது)



1987 ஏப்ரல் 25] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

அவர்கள் எல்லாம் போராட்டம் நடத்தினால், சிறைச்சாலைகளுக்கு அனுப்புவார்கள் என்று தெரிந்துதான் வந்திருக்கிறார்கள். அதனால் அவர்கள் தப்பியோட மாட்டார்கள். எனவே, அவர்களை திறந்த வெளிச் சிறைச்சாலைகளிலே வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதுவரை கைதிகளைப் பற்றிச் சொன்னேன்.

சிறை அதிகாரிகளைப் பற்றிச் சொல்ல இருக்கிறேன். சிறை அதிகாரிகளுக்கு ஊதிய உயர்வு கொடுக்க வேண்டும். காவல் துறை அதிகாரிகள் போல் சம்பளம் வழங்க வேண்டும். சிறைச்சாலைத் துறைக்கு ஐ.ஜி.யாக, காவல்துறையிலிருந்து நியமிக்கப்படுகிறது. அப்படி இல்லாமல், சிறைத் துறையிலிருந்தே ஐ.ஜி.யை அங்கு நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

சிறைச்சாலைகள் எல்லாம் மிகவும் பழுதடைந்து கிடக்கின்றன. ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டது. எல்லாம் அப்படியே இருக்கிறது. அதையெல்லாம் சரி செய்து, நல்ல முறையிலே மராமத்து செய்ய வேண்டும் என்று கேட்டு, தமிழ்நாடு பூராவும் 15,750 பேருக்குத்தான் தங்குமிடம் வசதிகள் செய்து வைத்திருக்கிறீர்கள். அதையும் அதிகப்படுத்த வேண்டும். சிறைச்சாலைகள நல்ல முறையில் நிர்மாணித்துத் தர வேண்டும். பழுதடைந்த கட்டிடங்களை புதிதாகக் கட்ட வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு மரியாதைக்குரிய சபாநாயகர் அவர்களே, நான் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் மட்டும் கேட்கிறேன். விருத்தாசலம் வட்டத்திலே முன்சீப் கோர்ட்டு 1975-லே, 100 ஆண்டுகளுக்கு முன்னேயே கட்டப்பட்ட அந்தக் கட்டிடம் இடித்து தரைமட்டம் ஆக்கப்பட்டு இன்றைக்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த நேரத்தில், 15 ஆண்டு காலமாக அந்தக் கட்டிடம் வரவில்லை என்ற காரணத்தைக் காட்டி, முதல்வர் அவர்கள் விருத்தாசலம் வந்திருந்தபோது, அந்த வழக்கறிஞர்கள் சங்கத்திலே பேசும்போது, உடனடியாக அதைக் கட்டிக் கொடுப்பதாக வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். அதுபோல் சபை முன்னவர் அவர்களும் அங்கே வாக்குறுதி அளித்தார்கள். 1981-இலே உண்ணாவிரதம் / இருந்தார்கள். அப்போது நாங்கள் சென்று சமாதானப்படுத்தி, அரசு பரிசிலனையில் அது இருக்கிறது. உடனடியாக நம் மாவட்டத்திற்கு கட்டிடம் வரும், பொறுங்கள், என்று சொன்னோம்.

ஆனால் இப்போது போன திங்கட்கிழமை 20ஆம் தேதி அந்தக் கோர்ட்டில் மறியல் செய்யப்போவதாக ஒரு சில வக்கீல்கள்—ஒரு பகுதியினர்—சொல்லி மறியலிலே ஈடுபட்டார்கள். அந்தக் காரணத்தால் மற்ற பகுதியினர் தாங்கள்

கோர்ட்டுக்குச் செல்ல வேண்டும் என்றும், கோர்ட்டில் வழக்குகளை நடத்தி பொதுமக்களுடைய சௌகர்யத்தையும் பார்த்து வழக்குகளை முடிவு செய்ய உதவ வேண்டுமென்றும் சொல்லிச் சென்றார்கள். அரசுத் தரப்பில் உள்ளவர்களும், எம்.பி. எம்.எல்.ஏ. ஆகியோரும் இதைப்பற்றி அரசாங்கத்திடம் பேசி எப்படியும் வாங்கி விடுவார்கள், நீங்கள் கோர்ட்டுக்குப் போவதைத் தடை செய்யக்கூடாது என்று கேட்டுக் கொண்டார்கள். நானும் அவர்களோடு சேர்ந்து பேசினேன். நானே அவர்களுக்கு ஒரு உத்திரவாதம் அளித்தேன். நான் பேசும்போது எப்படியும் கட்டிடம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்து விடுவேன் என்றும் உறுதி அளித்தேன். அதற்காக நீங்கள் நீதிமன்றத்திற்குப் போகாமல் மறியல் செய்வது மாநிலத்திலேயே ஒரு புதுமையாக இருக்கும். அப்படிச் செய்ய வேண்டாம் என்று நானே அந்த வக்கீல்கள் மன்றத்திலேயே பேசினேன். இருந்தாலும் அதையொட்டி அந்தச் சங்கம் உடைந்தது. அதில் ஒரு பிரிவினர் அன்றைக்கு உண்ணாவிரதம் இருந்தார்கள். அதனால் கிட்டத்தட்ட 46 பேர் அன்றைக்கு அரெஸ்ட் ஆனார்கள் அப்படி இரண்டாக உடைந்த காரணத்தால் அந்தச் சங்கத்தின் ஒரு பகுதியினர் வழக்காடு மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் கோர்ட்டுக்குச் சென்றார்கள். 30ஆம் தேதிவரை முதல் பிரிவினர் கோர்ட்டுக்குச் செல்ல மாட்டோம்—மறியல் செய்வோம் என்று நின்றார்கள். அதுமட்டுமல்ல. அந்தப் பகுதியினர் வியாபாரிகள் சங்கத்தை அணுகி எங்களுக்கு ஆதரவாக நீங்கள் கடையை மூடவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். திரும்பவும் உண்ணாவிரதம் இருப்போம் என்றும், ஊர்வலம் விடுவோம் என்றும், நீதிபதி போகும்போது மறிப்போம் என்றும் தொடர்ந்து ஒரு பகுதியினர் செய்து வருகிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிலையில் எங்களுக்கு ஒரு நல்ல விளக்கத்தைக் கொடுத்து எங்கள் கரத்தை வலுப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் நாங்களும் ஒரு நோட்டீஸ் போட்டிருக்கிறோம். வழக்காடு மக்கள் என்ற பெயரில் வக்கீல்கள் கோர்ட்டுக்குச் செல்ல வேண்டும் என்றும் அப்படி வக்கீல்கள் கோர்ட்டுக்குச் செல்லாவிட்டால் வழக்காடு மக்கள் சார்பிலும் பொதுமக்கள் சார்பில் நாங்களும் உண்ணாவிரதம் இருப்போம். நீங்கள் கோர்ட்டுக்குச் செல்லவில்லை என்றால் கண்டன ஊர்வலம் விடுவோம் கடையடைப்பு செய்வோம் என்று நாங்களும் ஆரம்பித்திருக்கிறோம். எனவே நீங்கள் எங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் புரட்சித் தலைவர் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் நல்லதொரு பதிலை இங்கே அளிக்க வேண்டும் என்று விரும்பி கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கைகளை ஆதரித்துப் பேசுகிற வாய்ப்பினைப் பெற்றமைக்காக நான் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னால் சென்னை உயர்நீதி மன்றம் 10 சட்டப் பேரவை உறுப்பினர்களை சட்டசபை நீக்கியது சரி என்று சொல்லி தீர்ப்பு வழங்கியது. ***

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகையை மேற்கோள் காட்டி இங்கே பேச முடியாது. அதை விட்டு விடுங்கள். அதைப் பேச முடியாது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

திரு. மு. மாரிமுத்து : *** *** ***

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதைத்தான் முதலில் நீக்கினோம். வெளியே நீதிமன்றத்தைப் பற்றி பேசியதை இங்கே வந்து ரிக்கார்டு பண்ண வேண்டாம் என்று முதலிலேயே நீக்கி விட்டோம். அதை விட்டுவிட்டுப் பேசுங்கள்.

*திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு சாதாரண நபர்—நாலாந்தரப் பேச்சாளர்—நீதிமன்றத்தைப் பற்றி இழிவாகவும், குறைவாகவும்—நான் அந்த வார்த்தைகளைச் சொல்லவில்லை—இழிவாகவும், குறைவாகவும் பேசினால்—நாம் அதை பொறுத்துக் கொள்ளலாம் *** *** ***
***

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த விவரத்தை மட்டும் விட்டு விடுங்கள். அவர் வெளியே பேசியதை இங்கே கொண்டு வந்து பேசி ரெக்கார்டு பண்ணாதீர்கள். நீதிமன்றத்தைப்பற்றி அது ஸ்வீப்பிங் ஆக இருக்கிறது. நீதிமன்றத்தைப்பற்றி அவர் பேசினால் அதை அவர்கள் கவனித்துக் கொள்வார்கள். எனவே அந்தப் பகுதியை மட்டும் நீக்கிவிட்டு நீங்கள் பேசுங்கள்.

திரு. வி. பி. சிந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிபதிகளைப் பற்றியும், நீதிபதிகளுடைய தீர்ப்புகளைப்பற்றியும் கண்டித்துப் பேசுவது இந்த நாட்டினுடைய ஜனநாயக உரிமை. அதை இந்தச் சபையாலோ இந்தச் சபையின் துணைத் தலைவராலோ பறிக்க முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இங்கே வேண்டாம் என்று சொல்வதற்குக் காரணம் வெளியே சொன்னது ஸ்வீப்பிங் ஆக இருக்கிறது. அங்கே ஒட்டு மொத்தமாக நீதித்துறையைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. நீதிமன்றத்

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

135525

தீர்ப்பைப் பற்றி சொன்னீர்கள். அதை அனுமதித்திருக்கிறேன். ஆனால் வெளியே சொன்னதை இங்கே கொண்டு வந்து ரெக்கார்டு பண்ணாதீர்கள். ஸ்வீப்பிங் ஆக இருக்கிறது. அங்கே சொன்னது. அதை இங்கே சொல்லாதீர்கள், அந்தப் பகுதியை நீக்கி விடுகிறேன்.

[பிற்பகல் 1.10]

திரு. மு. மாரிமுத்து: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் பேசும் போது உயர்நீதிமன்றத்திலே நீதிபதிகள் நியமிக்கப்படவில்லை, எனவே தமிழக அரசாங்கம் தூங்கிக் கொண்டிருக்கிறது என்று குற்றஞ்சாட்டினார்கள். நான் ஒன்றை அவர்களுக்கு குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசியல் சாசனம் 246-வது பிரிவின்படி உயர்நீதி மன்றத்தின் நீதிபதிகளை நியமிக்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்தது என்பதையும் தமிழக அரசு பலமுறை வற்புறுத்தி நீதிபதிகளை நியமித்திட வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறது என்பதையும் தான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அதைப் போலவே சென்னையிலே உச்ச நீதிமன்றத்தின் ஒரு பிரிவு அமைக்கப்பட வேண்டும் என்பதிலும், மதுரையிலே உயர் நீதிமன்றத்தின் ஒரு பிரிவு அமைக்கப்பட வேண்டும் என்பதிலும் தமிழக அரசு ஆணித்தரமாக இருந்து கொண்டிருக்கிறது என்பதை கொள்கை விளக்கக் குறிப்பிலே நாம் காணலாம். மாநிலத்தின் தென் பகுதி மக்களின் கோரிக்கையாக இருந்த மதுரையில் உயர்நீதி மன்றத்தின் பிரிவை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை இப்போது அரசின் கொள்கையாக கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது. இதுவே, இந்த அரசு தூங்க வில்லை, தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதாக அமைகிறது.

அது மட்டுமல்லாமல் Constitution of High Courts உயர் நீதிமன்றங்களை உருவாக்குவது என்பது மத்திய அரசின் பொறுப்பு. மத்திய அரசின் அதிகாரத்தின் கீழ் இது வருகிறது. உயர்நீதி மன்றத்தின் நீதிபதிகளை நியமிக்கும் பொறுப்பு—As per Article 217 of the Constitution, every Judge of the High Court shall be appointed by the President. என்று வருகிறது. இப்படி மிகத் தெளிவாக அரசியல் சாசனத்தில் சொல்லப்பட்டிருக்கும்போது மாண்புமிகு உறுப்பினர் எடுத்தேன், கவிழ்த்தேன் என்ற அளவிலே, ஏனோ தானோ என்று தமிழக அரசின் மீது பழியைப் போடுவது எந்த வகையிலே நியாயம் என்று எனக்குப் புரியவில்லை.





மாண்புமிகு உறுப்பினர் திரு ரகுமான்கான், இங்கே பேசும் போது, நீதிபதிகளை நியமிப்பதை பொறுத்த வரையிலும், மதுரையிலே உயர்நீதிமன்றத்தின் பிரிவை ஏற்படுத்துவதற்காகவும் போராட்டம் நடத்தப்பட்டதா என்று கேட்டார்கள். நான் கேட்கிறேன்—ஏழாண்டுக் காலம் இந்த நாட்டின் முதலமைச்சராக கலைஞர் இருந்தார். அப்போது மதுரைக்கு உயர் நீதிமன்றத்தின் பிரிவைக் கொண்டு வருவதற்கு ஏதாவது முயற்சி எடுக்கப்பட்டதா? 1971-ல் மட்டுமல்லாமல் 1969-ல் மதுரையில்கூட உயர்நீதி மன்றத்தின் பிரிவு வரவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டதே? அப்போதெல்லாம் ஆட்சிப் பீடத்திலேயிருந்த திராவிட முன்னேற்றக் கழகம் என்ன செய்து கொண்டிருந்தது என்று கேட்கவே பிரியப்படுகிறேன். ஆட்சிப் பீடத்திலிருந்து இறங்கி எதிர்கட்சி என்ற அந்தஸ்துக்கு வந்த பின்னலாவது ஏதாவது ஒரு போராட்டத்தை வழக்கறிஞர்களுக்காக நடத்தியிருக்கிறார்களா? மதுரையில் ஐக்கோர்ட்டின் பென்ச் வேண்டும் என்று போராட்டம் நடத்தியிருக்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன். ஆகவே தூங்குவது திராவிட முன்னேற்றக் கழகம்தான், புரட்சித் தலைவர் அரசு அல்ல என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்திய அரசின் நல்லெண்ணத்தால், புரட்சித் தலைவரின் முயற்சியால் ஜஸ்வந்த்சிங் கமிஷன் அமைக்கப்பட்டு பாராளு மன்றத்தில் ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. மூன்றில் ஒரு பங்கு நீதிபதிகள் மதுரை உயர்நீதிமன்ற பிரிவில் பணியாற்ற வேண்டும். அது சர்க்யூட் பென்ச்சாக பணியாற்றும். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு பரிசீலனை செய்து நிரந்தர பென்ச்சாக உருவாக்க வேண்டும் என்று ஜஸ்வந்த்சிங் கமிட்டி தன்னுடைய அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கிறது. மூன்றில் ஒரு பங்கு வழக்குகள் மதுரை மாவட்டம், அதை சுற்றியுள்ள மாவட்டங்களிலிருந்தும் வருகின்றன என்பதை கருத்திலே கொண்டு, ஏற்கனவே ஐந்தாறு நீதிபதிகள் உயர்மன்றத்திலே நியமிக்கப்படாமல் இருக்கிறார்கள். அவர்களை நியமித்துவிட்டு மேலும் ஏழெட்டு நீதிபதிகளையும் நியமித்து, 29, 30 என்ற அளவிலே சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகளை நியமித்துவிட்டு அதற்குப் பிறகு மூன்றில் ஒரு பங்கு நீதிபதிகளை மதுரைக்கு அனுப்ப வேண்டும் என்று கமிஷன் அறிக்கையிலே தெளிவுபட கூறியிருக்கிறார்கள். இவ்வளவு தெளிவான விளக்கங்கள் அந்த அறிக்கையில் இருந்ததற்குக் காரணமாக இருந்தது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவரின் தொய்வற்ற முயற்சி என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

மாண்புமிகு உறுப்பினர் திரு ரகுமான்கான் பேசும்போது "மக்கள் மன்றத்தின் தீர்ப்பைக் கருதி நாங்கள் வழக்கை திரும்பப் பெற்றோம் என்று அமைச்சர் சொல்லுவது சரிதானா" என்று கேட்டார். கலைஞர் கருணாநிதி அவர்கள் பல்வேறு

[திரு. மு. மாரிமுத்து] [1987 ஏப்ரல் 25]

நிகழ்ச்சிகளில் "மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு, மக்கள் மன்றம் எதைச் சொன்னாலும் அதை நாங்களும் தாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். நீதி மன்றம் எதைச் சொன்னாலும் அதைவிட மக்கள் மன்றம் எதைச் சொலலுகிறதோ அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்" என்று மாண்புமிகு உறுப்பினருடைய தலைவர் கலைஞரவர்கள் பேசி வருகிறார்கள். ஆனால் அந்தத் தலைமையின் கீழ் இயங்கிக்கொண்டிருக்கும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் இங்கே வந்து மாறுபட்டுப் பேசுகிறார். எனவே "முரண்பாட்டின் மொத்த உருவே, உன் பெயர்தான் தி.மு.க.வா?" என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இன்று நீதித் துறையிலே என்ன சாதித்து விட்டது என்று கேட்கிறார்கள். ஒவ்வொரு நீதிமன்றத்திற்கும் வழக்கு நடத்துநரைப் போட்டு, இன்றைக்கு செயல்படுத்திக்கொண்டிருக்கிறது புரட்சித் தலைவர் அவர்கள் அரசு என்பதை மறந்துவிட முடியாது. ஒவ்வொரு நீதி மன்றத்திற்கும் ஒரு அரசு வழக்கு நடத்துநர்; அரசு வழக்கு நடத்துநர்களுக்காக ஒரு இயக்ககம். இப்படிப்பட்ட வளர்ச்சிப் பணிகளிலே இன்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு கவனம் செலுத்துகிறது என்பதை மட்டும் மீண்டும் மீண்டும் ஞாடகப் படுத்த விரும்புகிறேன்.

தமிழ்நாடு உயர் நீதி மன்றம் என்று டெயர் வர வேண்டுமென்பதற்காக டெல்லிக்கு, மத்திய அரசுக்கு மாண்புமிகு புனிதத் தலைவர் புரட்சித் தலைவரவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள், வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஒரு கேள்விக்குக் கூட மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள் தெளிவாக பதில் சொன்னார்கள். அது எங்களுடைய கொள்கை, தமிழக உயர் நீதிமன்றம் என்று பெயர் மாற்றப்பட வேண்டுமென்று விரும்புகிறோம் என்று சொன்னார்கள். எனவே அதற்கு நாம் போராட்டம் நடத்தத் தேவையில்லை. மத்திய அரசை வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். காலம் ஆகத்தான் செய்யும். மத்திய அரசு, மாநில அரசு என்ற உறவு முறைகளிலே சில நேரங்களில் சில பிரச்சினைகளில் காலதாமதம் என்பது தவிர்க்க முடியாதது.

அடுத்து, வழக்குகள் தேக்கம் பற்றி இங்கே அதிகமாகப் பேசப்பட்டது. நான் ஒரு கருத்தை மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். வழக்குகளின் தேக்கத்தை, நீதிபதிகளையும், நீதி மன்றங்களையும் அதிகமாக்கினால்தான் போக்க முடியும். வழக்குகளுடைய தேக்கததைப் போக்க வேண்டுமென்பதில் கருத்து மாறுபாடு கிடையாது. அந்தத் தேக்கத்தைப் போக்க வேண்டுமென்றும் காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டுமென்றும் காரணம் காட்டி ஒரு சில நேரங்களில் சில கருத்துக்கள்



[1987 ஏப்ரல் 25] [திரு. மு. மாரிமுத்து]

சொல்லப்படுகின்றன. நீதிபதிகளுக்குத் தரப்படும் விடுமுறை காலங்கள் குறைக்கப்படவேண்டும் என்றும் சனிக்கிழமை விடுகின்ற விடுமுறை தவிர்க்கப்பட வேண்டுமென்றும் கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. ஆனால் இந்தக் கருத்துக்கள் ஏற்புடையதாக இருக்குமா என்பதை மாண்புமிகு சட்டத்துறை அமைச்சவரவர்கள் நீண்ட கவனம் எடுத்து, சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், வழக்கறிஞர் தொழில், நீதிபதி தொழில் என்பது சாதாரண விஷயமல்ல. காலையிலே நீதிபதி கோர்ட்டுக்கு செல்கிறார் என்றால் மாலை வரை இரண்டு பக்கத்து வழக்கறிஞர்கள் எடுத்து வைக்கும் வாதங்களைத்தான் கேட்க முடியும். மாலையிலே வீட்டுக்குச் செல்லும் நீதிபதி முடிந்தவரை படிக்கிறார் என்றால் சாட்சியங்களைத்தான் படிக்கமுடியும். சட்டப் புத்தகத்தை படிக்கமுடியாது பல்வேறு நீதி மன்றங்களின் சட்டப் பிரச்சினைகள் குறித்த தீர்ப்புகளை அவர்களால் படிக்க முடியாது. எனவே நீதிபதிகளுக்கு உள்ள காலம் மிகக் குறுகிய காலம். எனவே மிகக் கஷ்டமான சிக்கலான பிரச்சினைகளைத் தீர்க்க விடுமுறைக் காலங்களைத்தான் அவர் பயன்படுத்திக்கொள்ள முடியும். எனவே நீதி விரைவாகக் கிடைக்க வேண்டும், வேகமாகக் கிடைக்க வேண்டும் என்று காரணம் காட்டி, நீதியினுடைய போக்கிலே காயத்தை ஏற்படுத்திவிடக்கூடாது என்பதை மட்டும் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மிகப் பரவலாகப் பேசப்படுகிற பிரச்சினை—குற்றவியல் நடுவர்கள் மற்றும் சிவில் கோர்ட்டில் உள்ள முன்சீப்களின் பதவி உயர்வுப் பிரச்சினைதான். இந்த இரண்டு கேடர்களையும் ஒரே கேடராகக் கொண்டுவந்து, முனுசீப் கேடரையும் சப்மேஜிஸ்ட்ரேட் கேடரையும் ஒன்றாக இணைத்து அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுப்பது என்ற முடிவை அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. நீதிபதிகள், Second Class Magistrateலிருந்து First-class Magistrate ஆகவும், First-class Magistrateலிருந்து CJM or Assistant Sessions Judge ஆகவும் மேற்கொண்டு Sessions Judge ஆகவும்ப்ரமோஷன் வந்தால் போதுமென்று கருதுகிறார்கள். அதைப்போல, முனுசீப்பாக இருப்பவர்கள் சப்-கோர்ட்டிற்கு வந்து சப்-கோர்ட்டிலிருந்து டிஸ்டிரிக் கோர்ட்டுக்கு வந்தால் போதுமென்று நினைக்கிறார்கள். குற்றவியல், உரிமையியல் நடுவர்களை ஒன்றாக்கி ப்ரமோஷன் கொடுக்க வேண்டும். அல்லது செஷன்ஸ் கோர்ட்டிலே 2 விதமான வழக்குகளும் நடத்தப்படுகின்ற நிலையை மாற்றி, குற்றவியல், உரிமையியல் என்று இரண்டு water-tight compartments ஆகப் பிரித்து, நடுவர்கள் சப்-மேஜிஸ்டிரேட் கோர்ட்டிலிருந்து செஷன்ஸ் கோர்ட் வரை கிரிமினல் வழக்குகளை விசாரிக்கும் நீதிபதியாக—அதைப்போல முன்சீப் கோர்ட்டிலிருந்து டிஸ்டிரிக்ட் கோர்ட் வரை உரிமையியல் வழக்குகளை விசாரிக்கும் நீதிபதியாகவும் உயர்த்தப்பட்டால் நீதித்துறை பலன் பெறும்.

(பிற்பகல் 1—20)

மதுரை மாநகரத்திலே 1,500-க்கு மேற்பட்ட வழக்கறிஞர்கள் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கு தங்குகின்ற சேம்பர் அறை வசதியில்லை. நீண்ட காலமாக மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் பலமுறைகள் எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். சேம்பர் கட்டித் தரவேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். 1971-ம் ஆண்டிலே இருந்து கோரிக்கைகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த கோரிக்கைகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே மதுரை வழக்கறிஞர்களுக்கு என்று சேம்பர் அறைகள் கட்டித் தருகின்ற பணியினை அரசு மிக விரைவாக செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு நீதிமன்றத்திற்கும் சுருக்கெழுத்து தெரிந்த தட்டச்சர் ஒருவரை நியமிக்கவேண்டும். அப்படி நியமிப்பதின் மூலம் நீதிபதியினுடைய வேலைப் பளுவை ஓரளவுக்கு அவர்களுடைய கஷ்டத்தை குறைப்பதற்கு அரசு முனவர வேண்டும் என்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

' இலவச சட்ட உதவி ' என்பது நமது மாநிலத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கக்கூடிய அத்தனை மாநிலங் களிலேயும் தமிழகத்தில் மட்டும்தான் மிகச் சிறப்பாக இலவச சட்ட உதவி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஏறத்தாழ 57 ஆயிரம் மனுக்கள் இந்த ஆண்டில் தீர்த்து வைக்கப் பட்டிருக்கின்றன என்றும், தமிழகத்தினுடைய இலவச சட்ட உதவி முகாம்கள் தமிழ்நாடு அரசுக்கு பெருமைத் தேடிக் கொடுத்துக்கொண்டிருக்கின்றன என்பதையும் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அந்த அளவுக்கு ஏழை எளியவர்களுக்கு நீதியை வழங்குகின்ற வகையில் புனிதத் தலைவர் புரட்சித் தலைவர் அவர்கள் நல்லாட்சியை நடத்திக்கொண்டிருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லி நீதி நீர்வாகம் பற்றிய மானிய கோரிக்கைகளை வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

.*திரு கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே தமிழ்நாடு சிறைகளின் நிர்வாகம் மற்றும் நீதி நிர்வாகம் மீதான மானியக் கோரிக்கைகளின் மீது என் கருத்துக்களை வைக்க விரும்புகிறேன். குறிப்பாக சிறைத் துறையைப் பொறுத்த வரையில், குற்றம் புரிகிற நடவடிக்கை என்பது ஏதோ இன்றைக்கு நேற்றைக்குத் தோன்றிய நிகழ்ச்சியல்ல. மனிதன் தோன்றிய காலத்திலே கருத்து குற்ற உணர்வு நடவடிக்கைகள் எப்போதும் நிகழ்ந்து கொண்டு தானிருக்கின்றன. அத்தகைய குற்ற நடவடிக்கைகளை தண்டிப்பதற்கான தண்டனை முறைகளும் பல்வேறு





கட்டங்களில் பல்வேறு விதி முறைகளும் வடிவங்களும் இருந்து வந்திருக்கின்றன என்பதையும் தண்டனை முறை வரலாறு நமக்கு போதிக்கிறது. குற்றம் புரிபவர்களுக்கு அச்சம் ஊட்டி தடுக்கும் வகைகள் எல்லாம் அவர்களை வஞ்சம் தீர்த்து பழி வாங்குவது போன்ற நடைமுறை எல்லாம் ஏறத்தாழ 18வது நூற்றாண்டோடு ஒருவாறு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. ஒரு முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. ஆனாலும்கூட, நடைமுறையில் இன்றைய சிறை நிர்வாகத்தினுடைய நடைமுறைகளில் பழையவகைகளின் மிச்ச மீதி நடைமுறை இன்றைக்கும் இருந்துகொண்டு தானிருக்கிறது என்பதை வேதனையோடு குறிப்பிடாமல் இருக்க முடியாது. இங்கே நம்முடைய அமைச்சர் அவர்களால் முன் வைக்கப்பட்டிருக்கின்ற கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டிருப்பதைப் பார்க்கலாம். '' குற்றவாளிகள் மீண்டும் குற்றம் செய்யும் நிலைக்கு திரும்புவதை தடுத்து நிறுத்தவும், அவர்கள் விடுதலையான பின் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நன் மக்களாக வாழவும் மீண்டும் சமூகத்தோடு இணைந்து செயல்படவும் உரிய பயிற்சி நெறிக்கு சீர்திருத்தி அவர்களுக்கு புதிய வாழ்வு அளிப்பது அரசின் தலையாய நோக்கம் '' என்று தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நோக்கத்தை பொறுத்தவரையில் 100க்கு 100 சதம் மனப்பூர்வமான நிலையில் வரவேற்கிறேன். இத்தகைய உணர்ச்சிகளை நான் பாராட்டுகிறேன். அரசு அறிவித்திருக்கின்ற அந்த நோக்கம் நடைமுறையில் நிலவுகிறதா அனுஷ்டிக்கப்படுகிறதா என்று பரிசீலிப்பது தான் நம்முடைய பேரவையிலே இருக்கின்ற மையமான விஷயமாக இருக்கிறது. அதிலே நான் இங்கே குறிப்பிட விரும்புவது, தொடக்கத்திலேயிருந்து பல்வேறு கட்டங்களில் நீதிமான்களும் சரி. சமூக இயலாளர்களும் சரி, பல்வேறு அறிஞர்களும் தண்டிக்கின்ற, குற்றவாளிகளை நடத்துகிற முறைகள் எத்தன்மை வாய்ந்தவையாக இருக்கவேண்டும் என்பதைப் பற்றி மிகத் தெளிவாக குறிப்பிட்டிருக்கின்றார்கள். சுதந்திரம் பறிக்கப்பட்ட நபர்களும் மனிதர்களுக்குரிய உள்ளார்ந்த கண்ணியத்துடனும் மரியாதையுடனும் தங்களை நடத்தக்கோர முழு உரிமை படைத்தவர்கள் என்பதுதன் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்ற அறிவியல் நெறி முறையாகும்' எனவே கைதி என்கின்றவர்கள் ஏதோ காலால் இடறப்பட வேண்டிய ஒரு அற்ப ஜந்து போல பார்க்கிற ஒரு பார்வை,. நடத்தை சிறை நிருவாகங்களிலே இன்றைக்கு நிலவிக்கொண்டிருக்கின்றது. அரசியல் சட்ட ரீதியாகக் கருணையைக் காட்டுவதுதான் சிறைச்சாலை நிர்வாகத்தின் பிரிக்கமுடியாத அன்றாட நடவடிக்கையில் இருக்கவேண்டிய ஒன்றாகும் என்று சொல்லப் படுகிறது. நான் இங்கே இவற்றையெல்லாம் குறிப்பிட்டுக் காட்டி வலியுறுத்தவிரும்புகிறேன். வரவேற்கப்பட்டிருக்கின்ற கருத்துக்கு நடைமுறையில் அதிகாரிகளால் மதிப்பளிக்கப்படவில்லை என்பதற்கு நான் ஒரு உதாரணம் கூறுகிறேன். இங்கே அமைச்சர் அவர்களால் கொடுக்கப்

பட்டிருக்கின்ற கொள்கை குறிப்பிலே ஒரு இடத்திலே என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் 'சில மத்திய சிறைகளிலிருந்து சிறை அதிகாரிகள், புகார்ப் பெட்டிகளின் அடிப்பலகையினைக் கழற்றி, புகார் மனுக்களை எடுப்பதாக கைதிகளிடமிருந்து புகார் வந்ததையடுத்து, இதனைத் தவிர்ப்பதற்காக, முறைகேடு செய்ய இயலாவண்ணம் இரும்பினால். தயாரிக்கப்பட்ட புகார்ப்பெட்டிகள் மேற்காணும் நிறுவனங்களில் தற்போது வைக்கப்பட்டுள்ளன '' என்று போட்டிருப்பதை நான் அமைச்சர் அவர்களுக்கும் பேரவைக்கும் வேதனையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குற்றம் புரிந்த மனிதர்களுக்கு நல்வாழ்வு அளிப்பதற்கான பொறுப்பினை மேற்கொண்டுள்ள நிலையில் அந்த உயர்ந்த பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற அதிகாரிகள் மீது இது குறித்து அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன? குற்றவாளிகள் சிறை விதிகளின்படி நடத்தப்படுகிறார்களா என்று தெரிந்துகொள்வதற்கும் சிறை விதிகள் மீறப்படுமானால் அதைப் பற்றி குற்றவாளிகள் அரசுக்குப் புகார் செய்யவும் வைக்கப்பட்டிருக்கின்ற அந்த பெட்டிஷன் பெட்டியின் அடிப் பலகையை கழற்றியவர்கள் உள்ளபடியே குற்றவாளிகளா அல்லது அங்கே உள்ளே இருக்கிறவர்கள் குற்றவாளிகளா என்று நான் அறிய விரும்புகிறேன். எலியை பிடித்து பூனையிடம் ஒப்படைக்கலாமா? பெட்டிசன் பெட்டியின் அடிப்பலகையை கழற்றி பெட்டிசனை எடுக்கிறவர்கள் அந்த குற்றவாளிகளை எப்படி நல்ல முறையில் நடத்துவார்கள்? கைதிகள் புகார் எழுதி போடுகிற பெட்டிசன் பெட்டியின் அடிப்பலகையை கழற்றிய சம்பவம் எந்த சிறைச்சாலையில் நடைபெற்றது? எந்த சிறைச்சாலையிலிருந்து அது சம்பந்தமான புகார் வந்தது? இங்கே அமைச்சர் அவர்கள் அதுபற்றி தெளிவுபடுத்த வேண்டுமென்று விரும்புகிறேன்.

அடுத்து, சிறைச்சாலைகளில் கைதிகளை நடத்துவதைப் பொறுத்தவரையில் எவ்வளவோ நடைமுறைகள் இருக்கின்றன. தவறு நடைபெறுகின்ற போக்கினை மாற்றியமைக்க வேண்டுமென்ற உணர்வு அரசுக்கு இருக்கிறது என்பதில் எனக்கு மாறுபட்ட கருத்தில்லை. ஆனால் அந்த உணர்வுகளை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டுமானால் உள்ளபடியே அனைவரும் சேர்ந்து பாடுபட வேண்டாமா? அப்படிப்பட்ட ஒரு சிந்தனையை இன்றையதினம் தேர்ந்தெடுப்பதே அருமையான வளர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு. அந்த வகையில் இன்றைக்கு நடைமுறையில் கைதிகளுக்கு இருக்கின்ற தண்டனை முறைகளும், கைதிகளை நடத்துகிற அல்லது கையாளுகிற முறைகளும் அவசியம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதை நான் இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

அடுத்து, தமிழ்நாடு அரசின் சிறை சீர்திருத்தங்கள் பற்றிய அறிக்கையிலே கூட ஒன்றை குறிப்பிட்டிருக்கிறார்கள். கைதியும் அரசின் பராமரிப்புக்கு உரியவர்தான். அவர் அரசின் அடிமை



அல்ல. ஒவ்வொரு சிறை அதிகாரிகளுக்கு முன்பாகவும் போர்டு ஒன்றை மாட்டி அதில் பெரிய எழுத்தில் இந்த வார்த்தைகளை எழுத வேண்டுமென்கிற முறையில் அதிலே சொல்லியிருக்கிறார்கள். சிறையிலே என்னென்ன சீர்திருத்தம் செய்யப்பட வேண்டுமென்று அந்தக் குழு பரிவுணர்ச்சியோடு ஆய்வு செய்து தன்னுடைய அறிக்கையை இங்கே வைத்திருக்கிறது.

அடுத்து, சிறைச்சாலை விதி என்ன என்பது பற்றி கைதி
களுக்கு தெரிந்திருக்க நியாயம் இல்லை. அவர்கள் எப்படி
எப்படி நடத்தப்பட வேண்டும். அவர்களுக்கு இருக்கின்ற
உரிமைகள், கடமைகள் என்னென்ன என்பதைப் பற்றி தெரிந்து
கொள்வதற்காக அரசே அந்த விதிகளை அச்சடித்து ஒவ்வொரு
கைதி கையிலும் கொடுக்கின்ற முறையை மேற்கொள்ள வேண்டும்.
அதுபோல கைதிகள புகார் எழுதி பெட்டிசன் பெட்டியில்
போடுவது குறித்து இப்போது இருக்கிற முறையை அவசியம்
மாற்றியமைக்க வேண்டும். அதுபோல இன்றைக்கு தமிழ் நாட்டி
லுள்ள சிறைச்சாலைகளைப் பார்வையிட ஏற்படுத்தியிருக்கிற
நடைமுறைகள் எல்லாம் முற்றிலும் பொருத்தமற்றவை. நான்
அரசை மிக தாழ்மையோடு மன்றாடி கேட்டுக் கொள்கிறேன்.
தயவுசெய்து அந்தரங்க சுத்தியோடு இன்றைக்கு இதிலுள்ள
முறைகளை எல்லாம் மாற்றியமைக்க வேண்டும் என்ற எண்ணம்
உண்மையானால் மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும். எல்லோரும்
இந்த முறை மாற்றியமைக்க வேண்டுமென்று ஒப்புக்
கொள்கிறோம். குறிப்பாக இன்றைக்கு அரசு வகுத்துள்ள
விதி முறைகள் சிறைச்சாலைகளில் முறையாக கடைபிடிக்கப்பட
வேண்டுமானால் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட
ஒரு குழுவை உடனடியாக அமைக்க வேண்டும். அந்தக் குழு
தமிழ்நாட்டிலுள்ள சிறைச்சாலைகளுக்கு எல்லாம், சிறைச்சாலை
அதிகாரிகளின் துணை இல்லாமல். நேரில் சென்று கைதிகளைச்
சந்திக்க வேண்டும். சந்திக்கும்போது அங்கே அவர்கள் நடத்தப்
பட்ட முறைகளைக் கேட்டறிந்து பெற்று அவைகளை எல்லாம்
ஓர் அறிக்கையாக இங்கே பேரவை முன்பு வைத்து, விரிவான
முறையிலே அதுபற்றி விவாதம் நடத்துவது என்பது காலத்தின்
கட்டாயமாக இருப்பதால் அதை அரசு அவசியம் செய்யவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி நாம் செய்தால் தமிழ்
நாட்டிலுள்ள சிறைச்சாலைகள் பூராவிலும் இது வரை நடந்துள்ள
நிலைமைகளையும், இனிமேல் நடக்கவேண்டிய முறைகளையும்
பற்றி நல்ல முறையில் விவாதித்து முடிவுக்கு வர வாய்ப்பாக
இருக்கும்.

அடுத்து, சிறைச்சாலைகளில் விசாரணைக் கைதிகள் தண்டனைக் கைதிகளாக நடத்தப்படுகிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுத்து வாங்குகிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்கின்ற முறை. மற்ற கைதிகளைப் போல நடத்துகிற முறை முற்றிலும் ஒழிக்கப்படவேண்டும்.

அடுத்து. சிறைச்சாலைகளில் ஒரு முறை கைவிடப்பட வேண்டுமென்று காலம் காலமாக எதிர்த் தரப்பிலேயிருந்து மட்டு மல்ல, பல தரப்பிலேயிருந்தும் சொல்லிக்கொண்டே வருகிறோம். கன்விக்டட் வார்டன்கள் மூலமாக கைதிகளுக்கு ஏற்படுத்தப் படுகிற கொடுமை அகற்றப்பட வேண்டும். பிரிட்டிஷ்காரர்கள் நாட்டை பிரித்து ஆளுவதற்கும், ஆட்சியில் தங்களை நிலை நிறுத்திக் கொள்வதற்கும், தங்களுக்கு எதிரானவர்களை ஒழிப்ப தற்கும் ஏற்படுத்திய ஒரு தந்திரோபாயமான அந்த தேவையற்ற பிரித்தாளும் முறை முற்றிலுமாக இந்த நாட்டிலிருந்து ஒழிக்கப்படவேண்டும். இன்றைக்கு பல விசாரணை அறிக்கை களைப் பார்த்தோமானால் பல தகராறுகளை சிறைச் சாலைகளில் உருவாக்கியிருக்கிறவர்கள் அவர்கள் தான் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். அவர்களாலே பல தகராறுகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அல்லது அவர் களாகவே பல தகராறுகளுக்குக் காரணமாகவும். கருவிகளாகவும் இருந்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் மாற்ற வேண்டு மென்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 1-30]

மாவட்டத் தலைமை நீதிபதிகளையெல்லாம் நம்பி நிச்சய மாக எதுவும் நடக்கப்போவதில்லை. சிறைக் கண்காணிப்பு என்பது நீதிபதிகளை வைத்துத்தான் நிச்சயமாக நடக்காது. பல உதாரணங்களை என்னால் கொடுக்க முடியும். நீதிமன்றத் தைப்பற்றிக் குறை சொல்ல நான் விரும்பவில்லை. ஆனால் நீதிமன்றத் தீர்ப்பு என்பது ஒடுங்கியிருப்பவர்களுக்கு எதிராக, வசதி உள்ளவர்களுக்கு நீதிமன்றத் தீர்ப்பு சாயும் என்கின்ற நிலை பல தீர்ப்புகளிலே இருக்கின்றது. இந்த நிலையில் இருக்கின்ற பொழுது அப்படிப்பட்டவர்களிடம் இந்த பொறுப்பை ஒப்படைக்கக் கூடாது என்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கோவை சிறைச்சாலையிலே திரிபுராவிலேயிருந்து சில பேர் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சூரியோதயத்தையே பார்த்ததில்லை. அவர்களுக்கு மொழி தெரியாது என்பதனா லேயே, பிற வகைகளிலே அவர்கள் தொடர்பு கொள்ள முடியாது என்பதனாலேயே 24 மணிநேரம் இருட்டு சிறையிலே அடைக்கப் பட்டிருக்கின்ற கொடுமை நிலவுகிறது. மனிதாபிமானக் கண் ணோட்டத்தோடு அது மாற்றப்பட வேண்டுமென்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நாளொன்றுக்கு ஒரேயொரு மில்லி நல்லெண்ணெய்தான் அங்கே வழங்கப்படுகிறது. கோவை மத்திய சிறைச்சாலையிலே நூற்பாலைக் கைதிகளுக்குக் கூடுதல் எண்ணெய் வழங்கப்படு கிறது என்று அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. ஆனால் கோவை சிறையிலே அப்படி வழங்கப்படுவதில்லை. அவற்றையும் அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டும்.





ஆயுள் தண்டனை என்பதை அமைச்சரவர்கள் கொள்கை ரீதியாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அவருடைய நல்ல உணர்வுகளை, இந்த அமைச்சரின் உணர்வுகளை நான் பாராட்டு கிறேன். 14 ஆண்டுக் காலம் என்பது மனித இருதயம் ஒப்புக் கொள்ளப்படக் கூடாத ஒரு கொடுமை. 14 ஆண்டுக் கால ஆயுள் தண்டனை என்பது மாற்றப்பட வேண்டுமென்பதை இந்த மாநில அரசு கொள்கை பூர்வமாக ஒப்புக் கொண்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். இந்தக் கால அளவு மாற்றப்பட வேண்டும். அதற்குரிய திருத்தத்தைக் கொண்டு வர வேண்டும் என்று உரிய வழிமுறைகளில் மத்திய அரசை நிர்ப்பந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இங்கே பத்தாண்டுகள் கழிந்ததற்குப் பின்னர் முன்கூட்டியே விடுவிக்கப்படுவதற்கு மனுக்கள் உரியபடி கவனிக்கப்படுவதில்லை. அவை காலதாமதப்படுத்தப்படுகின்றன. சிறைச்சாலையில் அடைபட்டு இருப்பவனுக்கு உலகத்தில் ஒரேயொரு வேண்டுகோள். சிறைக்கூடங்களுக்கு உள்ளே இருக்கின்றவனுக்கு உள்ள ஒரேயொரு குறி, எப்பொழுது வெளியிலே போவோம் என்பதுதான். அவனுக்கு இமைக்கின்ற ஒவ்வொரு கணமும் துயரம்தான். அவனுடைய விடுதலையைத் தள்ளிப்போடுவது பொருத்தமா? நாகரீக உலகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட முடியுமா ? முடியாது. ஆகவே, உடனடியாக, உடனடிக் கடமையாக இத்தகைய பெட்டிஷன்கள் காலத்தில் டிஸ்போஸ் பண்ணப்பட வேண்டுமென்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே சிலயிடங்களிலே அதிகாரிகள் என்ன செய்கிறார்கள் என்றால், கைதிகளைத் தண்டிப்பதற்குக் கடலூர் சிறைக்கு அனுப்பிவிடுகிறார்கள். கடலூர் சிறை என்பது தண்டனை முகாம்போல இன்றைக்குக் கருதப்பட்டு வருகிறது. அந்த நடைமுறை முற்றாக மாற்றப்பட வேண்டும்.

சிறைச்சாலையில் சுகாதார வசதி கிடையாது. கொசுக்கள் மூட்டைப்பூச்சிகள் நிரந்தரமாக வாழ்கின்றன. அங்கே இருண்ட ஒரு பகுதியிலே அவர்கள் அடைக்கப்படுகிறார்கள். அதைக் காலத்திற்கு ஏற்றபடி மாற்ற வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இன்றைக்கு இருக்கக் கூடிய பிரச்சினையிலே நூறு பேர்கள் கொண்ட ஒரு பிளாக்கிலே ஆறு கழிவறை என்றால் யோசித்துப் பாருங்கள். நூறுபேர் கொண்ட ஒருபிளாக்கில் கைதிகள் காலையில் எழுந்தவுடன் அரை மணி நேரத்தில் நூறுபேர் ஆறு கழிவறைகளிலே கழிவைக் கழிக்க முடியுமா ? சாத்தியம்தானா ? என்ன செய்ய முடியும் ? இந்த இயற்கை இடரிலிருந்து அவர்களுக்கு எப்படிப் பாதுகாப்பு ? சிந்தித்துப் பாருங்கள்.

[திரு. கே. சுப்பராயன்] [1987 ஏப்ரல் 25

இதைப்போல, வேறுசில பிரச்சினைகளிலேயும் குறிப்பாக நான் சொல்ல விரும்புவது, இன்றைக்குச் சிறைச்சாலையிலே டி.ஐ.ஜி. யாக திரு. ஹண்டா அவர்கள் தொடர்ந்து பத்தாண்டுக் காலமாக நீடித்துக் கொண்டிருக்கிறார்கள். எந்த அடிப்படை ஏன் என்று எனக்குப் புலப்படவில்லை. தொடர்ந்து அவர்களுக்கு மட்டும் ஏதாவது விசேஷ சலுகைகள் அனுமதிக்கப்பட்டிருக்கிறதா என்பதும் எனக்குத் தெரியவில்லை. இவற்றையும் பார்க்க வேண்டும். அவர் சமீபத்திலே ஒரு உத்தரவைப் போட்டிருக் கிறார். விடுமுறை—பரோலில் விடுவதிலேகூட பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகின்ற முறையில் ஒரு உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. ஐந்து நாள், மூன்று நாள், ஐந்து நாள் என்று விடுமுறையை மாற்றுவதன் மூலம் அதிகாரிகள் தங்களுடைய அதிகார சாட்டையை எடுத்துக் கொண்டு கைதிகளை இஷ்டத் திற்கு மேய்க்கிறார்கள். மிரட்டுகிறார்கள்; பழி வாங்குகிறார்கள். அப்படிப் பழி வாங்குவதற்கு இது இடமாக இருக்கக் கூடாது. அந்த உத்தரவு உடனடியாக வாபஸ் பெறப்பட வேண்டு மென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மிக முக்கியமான விஷயம். சின்னச்சின்னக் குற்றம் செய் பவர்கள் கோவை சிறையிலேகூட இருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன செய்கிறார்கள் என்றால், 1-ஆம் சுகாதாரம், 2-ஆம் சுகாதாரம், 1-ஆம் தண்ணி, 2-ஆம் தண்ணி என்று பெயர் போட்டுக் கொண்டு முற்றாக, முழுக்க முழுக்க அதிகாரிகளின் வீடுகளில் சேலை துவைப்பது, வேட்டி துவைப்பது, சட்டைகளைத் துவைப்பது, வீடு கூட்டுவது, கழுவுவது, இன்ன பிற வேலை களுக்கு எடுபிடிகளாகப் பயன்படுத்தப்படுகிறார்கள். இந்த நிலை முற்றாகக் கைவிடப்பட வேண்டும். இதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு விஷயம். இங்கே உள்ள தொழிற்சாலைகளில் அடிபடுகின்றபொழுது அவர்களுக்கு எந்தவிதமான நிவாரணமும் கிடையாது. நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கோவை சிறைச்சாலையிலே 636102 எண் உள்ள ஆயுள் தண்டனைக் கைதி கருப்பன் என்பவர் விசைத்தறி நாடா அடிபட்டு மூக்குத்தண்டு அடிபட்டு 1983-லேயிருந்து தொடர்ந்து பாதிக்கப்பட்டு வெளி மருத்துவமனையிலே சிகிச்சை பெற்றார். அவர் பாதிக்கப்பட்டார். அவருக்கு நிவாரணம் இன்றைக்கு வரையில் இல்லை, நான்காண்டுக் காலமாக, இடையிலே வந்த வாய்க்கால் சாப்பிட்டு விட்டதா ? அரசு போட்ட உத்தரவை அதிகாரிகளே சாப்பிட்டு விட்டார்களா ? ஏன் அந்தப் பாதிக்கப் பட்டவர்களுக்குக் கிடைக்கவில்லை ? அதேபோல் மணி என்ப வருக்கு நிவாரணம் கிடைக்கவில்லை. நிறையப் பட்டியல் இருக்கிறது ; நேரமில்லை என்பதால் இதை மட்டும் குறிப்பாகச் சுட்டிக் காட்டினேன். இத்தகைய முறை முற்றாக மாற்றப்பட வேண்டுமென்பதோடு, பத்தாண்டுக் காலத்திற்கு மேல் யாரும் சிறையிலே அடைக்கப்படாத ஒரு நிலை வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 25] [திரு. கே. சுப்பராயன்]

அடுத்து, அண்ணா பேப்பரை மட்டும் நீங்கள் சிறைச்சாலை களில் போடுகிறீர்கள். இது நியாயம்தானா ? போனமுறையும் இதுபற்றி நான் சொன்னேன். அதை பரிசீலித்ததாகவே தெரியவில்லை. உங்களுடைய நிர்வாகம் முறையாக நடைபெற வில்லை என்பதற்கு இதை ஒரு உதாரணமாகச் சொல்கிறேன். நீங்கள் அதிகாரத்தில் இருப்பதால் உங்களுடைய கட்சிப் பேப்பரை மட்டும் சிறைச்சாலைகளுக்கு அனுப்புகிறீர்களே ! இது அப்பட்டமான அதிகாரத் துஷ்பிரயோகம் இல்லையா ? அண்ணா பேப்பரை மட்டும் ஏன் போடுகிறீர்கள் ? வேறு பேப்பர் இல்லையா ? நீங்கள் செய்வது நியாயம்தானா ? மக்கள் உங்களைத் தேர்ந்தெடுத்தது இதற்குத்தானா ? உங்களுடைய எண்ணங்களை மட்டுமே பிரதிபலிக்க வேண்டும், உங்களுடைய கருத்துக்களை மட்டுமே பரப்ப வேண்டும் என்ற காரணத்திற்காக அண்ணா பேப்பரை மட்டும் அனுப்புகிறீர்கள். இதற்குத்தானா மக்கள் உங்களுக்கு ஓட்டுப் போட்டார்கள் ? நீங்கள் செய்வது நியாயம்தானா ? எல்லாக் கட்சிகளுடைய கருத்துக்களையும், கொள்கைகளையும் அவர்கள் தெரிந்து கொள்ளட்டும். அதற்கு ஏற்றவகையில் அனைத்துக் கட்சி பேப்பர்களையும் அனுப்புங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக சிறைவார்டர்கள் பற்றி ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். சிறைச்சாலைகளில் எட்டு மணி நேரம் வேலை வார்டர்களுக்குக் கொடுக்க வேண்டும். 12 நாள் விடுமுறைக்குப் பதிலாக 20 நாட்கள் விடுமுறை அளிக்க வேண்டும்.

இன்னொரு முக்கியமான பிரச்சினை. பழைய டி.ஐ.ஜி. தாமஸ் வீட்டிற்கு இப்போதும் இரண்டு வார்டர்கள் வேலைக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர் வேலையில் இருக்கும் போதுதான் அனுப்பினார்கள் என்றால், ரிட்டயர் ஆன பிறகும் தொடர்ந்து அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சருக்குக் கூட இந்த வசதி கிடையாது. மந்திரி பதவி போய்விட்டால் யாரும் வரமாட்டார்கள். ஆனால் அந்த ரிட்டயர் ஆன டி.ஐ.ஜி. வீட்டுக்கு இன்னும் வார்டர்களை அனுப்பிக் கொண்டிருக் கிறார்கள். இந்த முறையை மாற்றியாக வேண்டும். அவர் களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டும். வார்டர்களுக்கு குடியிருப்பு வசதிகள் நல்ல முறையில் செய்துதரப்பட வேண்டும்.

மீண்டும் ஒரே ஒரு கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன். சிறை நிர்வாகத்தைக் கண்காணிக்க, ஆலோசனைகள் சொல்ல அனைத்துக் கட்சி எம்.எல்.ஏ-க்களைக் கொண்ட ஒரு குழுவை அமைக்க வேண்டும் ; அமைச்சர் அவர்கள் இதை ஒப்புக் கொள்ள வேண்டும் ; இந்த அவையிலேயே அதை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மீண்டும் சொல்கிறேன். சிறை நிர்வாகத்தைக் கவனிக்க அனைத்துக் கட்சி உறுப்பினர்களையும், குறிப்பாக, கம்யூனிஸ்ட் கட்சி

எம்.எல்.ஏ.க்களைக் கொண்ட குழுவை அமைத்து ஆய்வு செய்ய வேண்டுமென்று கேட்டு, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஆ. கா. அப்துல் சமத் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம், சிறைச் சாலைகள் நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்ததற்காக நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பர் சுப்பராயன் அவர்களுடைய வேண்டுகோள் பிரகாரம் முழுக்க, முழுக்க கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களைக்கொண்ட குழுவை அமைத்து சிறைச் சாலைக்கு அனுப்புவதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். நேரம் மிகக் குறைவாக இருப்பதால் சுருக்கமாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஏறத்தாழ எல்லா உறுப்பினர்களும் இந்த குறைபாட்டை இங்கே சொல்லிக் காட்டினார்கள். நம்முடைய உயர் நீதிமன்றத்திலே 25 நீதிபதிகள் அமர்ந்து நீதி வழங்குவதற்கு ஏற்பாடு இருந்தும் கூட இன்னும் 19 நீதிபதிகள் தான் இடம் பெற்றிருக்கிறார்கள் என்பது நீண்ட நாட்களாக இருந்து வரக் கூடிய குறை. இந்தக் குறை மத்திய சர்க்காரால் நீக்கப்படுவதா அல்லது மாநில சர்க்காரால் நீக்கப்படுவதா என்று ஆராய்வதை விட்டு, எப்படியும் இந்தக் குறையைத் தீர்ப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் நீதியைத் தாமதப்படுத்துவது நீதியை மறுப்பதற்கு சமம் என்று நாம் அறிந்துகொண்டிருக்கிறோம். பல ஆயிரக்கணக்கான வழக்குகள் ஏற்கெனவே தேங்கியிருக்கின்ற நிலையில் ஒவ்வோராண்டும் ஏராளமான புதிய வழக்குகளும் தாக்கல் செய்யப்படக் கூடிய நிலையில் இந்த காலியிடங்கள் எல்லாம் உடனடியாக நிரப்பப்பட்டால் தான் குவிந்துள்ள வழக்குகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டவர்கள் ஆவீர்கள்.

அடுத்து, எங்களுடைய சமுதாயத்தின் சார்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். சென்னை உயர் நீதிமன்றம் என்று சொல்லப்படுகின்ற தமிழ்நாடு உயர் நீதி மன்றத்தில் முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்த மூன்று பேர் நீதிபதிகளாக இருந்து நல்ல முறையில் செயலாற்றினார்கள். அவர்களிலே ஒரு நீதிபதி அவர்கள் புனித பயணம் மேற்கொண்டிருந்த போது அங்கே காலமாகி விட்டார்கள். மூன்று ஆண்டு காலமாகியும் கூட அவர்களுடைய இடத்திற்கு இன்னொரு முஸ்லிம் நியமிக்கப்படவில்லை. இடையிலே இன்னொரு முஸ்லிம் நீதிபதி ஓய்வு பெற்று பல மாதங்கள் ஆகிவிட்டன. இப்போது இருக்கிற





19 நீதிபதிகளிலே ஒரே ஒருவர்தான் முஸ்லீம் நீதிபதியாக இருக்கிறார். ஆகவே, காலியாக இருக்கின்ற 6 இடங்களை நிரப்புவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் போது முஸ்லீம்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்குவதிலே தக்க கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு சரியான நினைவு இருக்கிறது. மாவட்ட நீதிபதிகள், முன்சீப்கள் ஆகியோரை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அழைத்து உபசாரம் செய்த போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களுடைய பணி சிறப்பாக நடைபெறுவதற்கு உதவிகரமாக டேப் ரிக்கார்டர் அளிக்கப்படும், டெலிபோன் வசதி செய்து தரப்படும், தகுதி அறிந்து அவர்கள் போவதற்காக கார் வாங்க கடன் வசதி செய்து தரப்படும் என்று வாக்குறுதி அளித்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-40)

ஆனால் இதுவரையில் அது அமல்படுத்தப்படுகிறதா என்பது பற்றிய ஒரு தெளிவான குறிப்பு அமைச்சருடைய குறிப்பில் இல்லை என்பதால் அதுபற்றிய விளக்கம் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். சென்னை மாநகரத்தில் கூட இருக்கக் கூடிய முன்சீப்களும், மாஜிஸ்ட்ரேட்டுகளும் கோர்ட்டுக்கு வந்துவிட்டு வீட்டுக்குச் செல்வதற்கு என்று தனியாக ஒரு பஸ். ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. ஆனால் சென்னை மாநகரத்தின் வீதிகளில் அந்த பஸ் நிற்காத இடமே இல்லை என்று சொல்லக் கூடிய அளவுக்கு பழுதுபட்ட பேருந்து அவர்களுக்கு அளிக்கப்பட்டிருப்பதை நானும் நேரில் பார்த்திருக்கிறேன். அப்படி இல்லாமல் அவர்களுடைய பதவிக்கும், தகுதிக்கும் ஏற்ற முறையில் அவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, லோக் அதாலத் செயல்படக் கூடிய முறையைப் பொறுத்த வரையில் அது மிகச் சிறப்பாகச் செயல்படத் தொடங்கி இருக்கிறது என்பதை இந்தக் குறிப்பேட்டின் மூலம் நான் அறிகிறேன். அதை நான் வரவேற்கிறேன். இப்போது ஆரம்பக் கட்டமாக விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஈட்டுத் தொகை பெற்றுத் தருவதில் இந்த லோக் அதாலத் என்று சொல்லக் கூடிய விசேஷ நீதிமன்றம் தன்னுடைய கவனத்தைக் பெரும் பான்மையாகச் செலுத்தி செயல்படுகிறது. அது மட்டும் அல்லாமல், சாதாரண கோபதாபங்களின் தொடர்பாக ஏற்படக் கூடிய வழக்குகள், விளக்கங்கள் போன்றவற்றை எல்லாம் கூட, நீதி மன்றத்தில் குவித்திருக்கக் கூடிய அந்தத் தன்மையிலிருந்து மீட்டு, இவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து ஒரே நாளில் அவை தீர்க்கப்படக் கூடிய அளவுக்கு அவர்களுடைய அதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டும், அவர்களுடைய செயல்பாடுகள் இன்னும் முனைப்பாக நடத்தப்படக் கூடிய அளவில் அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்] [1987 ஏப்ரல் 25

இதையொட்டி நான் ஒரு கருத்தை அரசினுடைய கவனத்திற்கு வைக்க விரும்புகிறேன். இன்று குவிந்திருக்கக் கூடிய பல்லாயிரக்கணக்கான வழக்குகள் குடும்பத்திலே ஏற்பட்டுவிட்ட கோபதாபங்களின் அடிப்படையிலே வந்த வழக்குகளாக இருக்கின்றன. அப்படிப்பட்ட வழக்குகளைப் பொறுத்த வரையில் சம்பந்தப்பட்டவர்களை ஒரு கால கட்டத்திற்குப் பிறகு அழைத்துப் பேசினால் சுமுகமாகத் தீர்ப்பதற்குரிய வசதி வாய்ப்புகள் இருக்கின்றன. குறிப்பாக முஸ்லீம் சமுதாயத்தில் ஏற்படக் கூடிய இப்படிப்பட்ட வழக்குகளைத் தீர்ப்பதற்கு தமிழகத்தில் ஏறத்தாழ 6,000 ஜமாத்துகள் செயல்படுகின்றன. இந்த 6,000 ஜமாத்துகளும் தமிழ் நாடு வக்ப் வாரியத்தில் பதிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட ஜமாத்துக்களாகச் செயல்படுகின்றன. நான் அமைச்சரிடத்தில் ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஜமாத்துக்களின் சார்பாக ஷரியத் கோர்ட்டுகளை நடத்துவதற்கு ஒரு சட்ட ரீதியான அங்கீகாரத்தை இந்த அரசு வழங்கினால், பல்லாயிரக்கணக்கான வழக்குகள் இன்று குவிந்திருக்கக் கூடிய நிலைமையைப் போக்குகின்ற வகையில் இந்த ஷரியத் கோர்ட்டுகளில் அவற்றை முறையாகத் தீர்க்கவும் இனி இந்தச் சமுதாயத்தின் சார்பாக ஏற்படக் கூடிய வழக்குகள் நீதிமன்றங்களுக்கு வராமல் தடுக்கவும் அது ஏதுவாக இருக்கும். இப்படி ஒரு உத்தரவை, ஒரு அங்கீகாரத்தை தமிழக அரசு கொள்கை ரீதியாக ஒரு முடிவெடுத்து, வழங்கி இப்படிப்பட்ட கோர்ட்டுகளை அமைக்கலாம் என்று ஒப்புக்கொள்வார்களேயானால் இந்த 6,000 ஷரியத் கோர்ட்டுகளை தமிழ் நாட்டில் உடனடியாக அமைக்க முடியும். அப்படி அமைத்தால் இந்த ஜமாத்துகளின் நடுவர்களாக, நீதிபதிகளாக இருந்து செயல்படுவதற்கு போதுமான படித்தவர்கள், தகுதி பெற்றவர்கள் இருக்கிறார்களா என்று ஐயப்பட வேண்டிய தேவை இல்லை. அதற்குப் தகுதி படைத்தவர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் நிரம்பப் பேர் இருக்கிறார்கள். அவர்களில் ஒழுக்கம் உள்ளவர்களையும், அந்த ஊரிலே மதிக்கப்படுகிறவர்களையும், குற்றம் செய்யாதவர்களாக இருப்பவர்களையும்பார்த்து இப்படிப்பட்ட கோர்ட்டுகளில் நடுவர்களாக நியமித்நால் எவ்வளவோ நன்மை விளைய ஏதுவாக இருக்கும். எனவே இதனை அரசு நீவிரமாக ஆராய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த முறை மதச் சார்பற்ற பல நாடுகளில் இன்று பின்டற்றப்படுகிறது. அண்டை நாடுகளில் கூட இதை அமல் நடத்துகிறார்கள். அதைப் பின்பற்றி, அதன் வழிமுறைகளைப் பொறுத்த வரையில் அரசு தன்னுடைய அதிகார பூர்வமாகப் பெற்றுக் கூட, அதன் அடிப்படையிலே சில சீர்திருத்தங்களைச் செய்து இந்த முறையைத் தமிழகத்தில் அமல் நடத்தலாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதற்கு நீண்ட கால கட்டம் ஆகும் என்று அரசு கருதினால் மாவட்டத்திற்கு ஒரு காஜியையாவது நியமிக்க வெண்டும். இப்போது தமிழ் நாடு முழுவதற்கும் ஒரு காஜியை அங்கீகரித்து



1987 ஏப்ரல் 25] [திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

இருக்கிறது அரசு. அந்த காஜியினுடைய பணிகள் விரிவானப் பணிகளாக இல்லை. குறிப்பிட்ட சில நிகழ்ச்சிகளை அறிவிப்பு செய்யக் கூடிய ஒரு வரம்பிடப்பட்ட அதிகாரமாகத்தான் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கிறதே தவிர, இப்போது நான் குறிப்பிட்ட வழக்குகளை விசாரிக்கவோ, தீர்ப்பு அளிக்கவோ உள்ள அதிகாரம் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. அத்தகைய அதிகாரங்கள் வழங்கிய காஜிகள் மாவட்டத்திற்கு ஒரு காஜி அந்த ஷரியத் கோர்ட்டினுடைய காஜியாக நியமிக்கப்படுவார்களேயானால் சாதாரண குடும்பத்திலே ஏற்படக் கூடிய வழக்குகள், குடும்பத்திலே கோபதாபங்களினால் ஏற்படக் கூடிய வியாஜ்ஜியங்கள் சுலபமாக தீர்ப்பதற்கு வழி வகை ஏற்படும் என்பதை நான் அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

சிறைச்சாலையை புழலுக்கு விரைவிலே மாற்ற இருக்கக் கூடிய குறிப்பை நான் மனம் உவந்து பாராட்டுகிறேன். சென்னை நகரத்தினுடைய நடுவண் பகுதியிலே் இருக்கக் கூடிய சிறைச்சாலையை காலி செய்து அந்த இடம் சென்னையின் பொது மருத்துவ மனையினுடைய விரிவாக்கத்திற்கு அது துணை நிற்கும் என்று நான் கருதுகிறேன். இன்னொன்று சிறைச் சாலை சீர்திருத்த சாலையாக இருக்க வேண்டுமே தவிர சித்திரவதை சாலையாக இருக்கக் கூடாது என்பதை நாம் எல்லோரும் ஒத்துக் கொண்டிருக்கிறோம். எனக்கு முன்பு பேசிய உறுப்பினர்கள் அதைக் குறித்து கூறியிருப்பதால் நான் அதை விரித்து பேச விரும்பவில்லை. கடைசியாக ஒன்று, சிறைச் சாலையில் அடைக்கப்பட்டிருக்கிற முஸ்லீம் கைதிகளுக்கு அவர்கள் விரும்பினால் அவர்கள் தொழுகை நடத்த ஒரு சிறு இடத்தை பரிசுத்தப் படுத்திக் கொடுப்பதன் மூலமாக எவ்வளவோ நன்மைகள் விளையக் கூடிய செயலாக முடியும் என்பதைக் கூறிக் கொண்டு என் வார்த்தைகளை நிறைவு செய்கிறேன்.

திரு. ஆ. சந்திரசேகரன் : பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம் சிறைச் சாலை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களை இங்கே நான் கூற முற்படுகிறேன்—தமிழ் நாட்டிலே பல இடங்களிலே நீதிபதிகள் நியமிக்கப்படவில்லை என்பதுதான். குறிப்பாக அடிஷனல் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் ஃபார் வெல்லூர் 3 வருடங்களாக நிரப்பப்படாமல் இருக்கிறது. அதைப் போல அடிஷனல் ஜே. சி. எம். போஸ்ட் வெல்லூர் கடந்த 2 வருடங்களாக நிரப்பப்படாமல் இருக்கிறது. அதைப் போல திருச்சியிலே ஸ்பெஷல் பர்ஸ்ட் கிளாஸ் கோர்ட், மது விலக்குத் துறை 1985 ஆம் ஆண்டு மே திங்கள் 21ஆம் நாளிலேயிருந்து நிரப்பப்படாமல் இருக்கிறது. அதைப்போல பல்வேறு இடங்களிலே தமிழ் நாட்டிலே நீதிபதிகள் நிரப்பப்படாமல் இருக்கிறார்கள்.

திருச்சியிலே நீதிமன்றத்திலே ஒருவரை அடிஷனல் சார்ஜ்ஜாக போட்டிருக்கிறார்கள். அவர் மாலை 5 மணிக்குத் தான் வருகின்றார். அங்கே கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், உரிமை

கோரி வருகின்ற பெண்கள் மாலை 5 மணி வரையில் காத்திருக்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே இவைகளையெல்லாம் மனத்திலே கொண்டு அரசு தமிழகத்திலே உள்ள நீதிபதிகளின் போஸ்ட்டுகளை நிரப்புவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல தமிழகத்தில் மாவட்ட நீதிபதிகளுக்கு நேர்முகத் தேர்வு நடந்து விட்டது. அதை விரைவாக அமல் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல இன்றைய தினம் நீதிமன்றக் கட்டிடங்கள் மிகவும் பழுதடைந்த நிலையிலே இருக்கின்றன. சில தினங்களுக்கு முன்னால் கூட இந்து பத்திரிகையிலே ஒரு செய்தி போட்டிருந்தார்கள். தஞ்சாவூரிலே ஒரு நீதிமன்றக் கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையிலே இருக்கிறது என்று சொன்னார்கள். அதைப்போல பெரியார் மாவட்டத்திலே ஒரு நீதிமன்றக் கட்டிடம் கட்டப்பட்டு இருக்கிறது. ஆனால் இன்றுவரையில் திறக்கப்படவே இல்லை என்பதைஇந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போல நீதிபதிகள் சர்வீஸ் கண்டிஷன் நல்ல முறையில் இருந்தாலும் அவர்களுக்கு வேலை அதிகமாக இருந்தாலும் அவர்கள் செய்கிற வேலைக்கு ஏற்றவாறு ஊதியங்கள் வழங்கப்படவில்லை.

அவர்களுக்கு நம்முடைய வட்டாட்சியருக்கு வழங்கப்படுவது போல ஜீப்புகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மதுரையிலே ஒரு உயர் நீதிமன்ற பிரிவை அமைக்க வேண்டும் என்று பல ஆண்டுகளாக நாம் கேட்டுக்கொண்டு வருகிறோம். ஜஸ்வந்த் சிங் கமிஷனுடைய அறிக்கை பாராளுமன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிறது. ஜஸ்வந்த் சிங் கமிஷனுடைய அறிக்கையிலே உயர் நீதிமன்றத்தினுடைய நீதிபதிகளுடைய போஸ்டுகள் எல்லாம் பில் அப் செய்த பிறகு, மதுரையிலே உயர் நீதிமன்றத்தினுடைய கிளை அமைக்கப்படும் என்று சொல்லுகிறார்கள். அந்த அளவிற்கு நீங்கள் உயர் நீதிமன்றத்தில் நீதிபதிகளை நிரப்புவதற்கு விரைவாக நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1–50)

வழக்கறிஞர் நல மசோதா ஏழு மாநிலங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் இன்னும் ஏற்படுத்த முடியவில்லை. நம்முடைய அமைச்சர் அவர்கள் உயர் நீதிமன்ற கட்டடத் திறப்பு விழாவில் பேசுகிற போது அவசரச் சட்டத்தின் மூலம் வழக்கறிஞர் நல மசோதவைக் கொண்டு வருகிறேன் என்று சொன்னார்கள். ஆகவே காலந் தாழ்த்தாமல் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடருக்குள்ளாக கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் நீதி மன்றங்களின் தீர்ப்பு சரிவர மதிக்கப்படாத நிலை இருந்து வருகிறது. எங்களுடைய கட்சிக்காரர் உன்னிக்கிருஷ்ணன் என்பவர் உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பு வாங்கி





அவருடைய இடத்தில் இருந்தவர்களை காலி செய்த பின்னாலே திரும்பவும் அவர்கள் அந்த இடத்தில் குடிசை போட்டுக் கொண்டார்கள். அவர்களை காலி செய்ய முடியாமல் இருக்கிறது. ஆகவே நீதித் துறை தீர்ப்பை சரியான முறையில் அமல் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு மாவட்ட நீதி மன்றத்தில் ஜெராக்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது சரியான முறையில் பயன்படுத்தப்படுவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உரிய முறையில் பயன்படுத்த வேண்டும்.

சென்னை போன்ற நகரங்களில் சுருக்கெழுத்தாளர்கள் சிட்டி சிவில் கோர்ட் ஜட்ஜ்களின் இல்லங்களுக்கு வருவதில்லை. ஆகவே காலதாமதம் ஏற்படுகிறது. அவர்கள் ஜட்ஜ்களின் வீடுகளுக்கு வருவதற்கு அரசு ஆவன செய்ய வெண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உயர்நீதிமன்றத்தில் எழுத்தர்கள் வெகு நேரம் வேலை செய்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு ஓ.டி. போன்றவைகள் வழங்கப்படுவதில்லை. அதனை வழங்க வேண்டும். இன்றைய தினம் ஸ்டாப்களை நீதிமன்றங்களில் அதிகப்படுத்த வேண்டும். 10 கேஸ்களை பைல் பண்ணுவதற்கு முன்பு எவ்வளவு ஸ்டாப் இருந்தார்களோ அந்த அளவிற்குத்தான் இன்றைக்கும் இருக்கிறார்கள். இன்றைய தினம் அதிகமான கேஸ்கள் நீதிமன்றங்களில் பைல் செய்யப்படுகிறது. ஆகவே அந்த அளவிற்கு ஸ்டாப் இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, கோர்ட் பீசை அபாளிஷ் பண்ண வேண்டும். ஏழை மக்கள் நீதிமன்றங்களுக்கு நீதி கேட்டு வருகிறார்கள். அவர்கள் கோர்ட் பீஸ் கட்ட வேண்டியிருப்பதால் மிகுந்த கஷ்டத்திற்குள்ளாகிறார்கள். ஆகவே கோர்ட் பீசை அபாளிஷ் பண்ண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சம்பள விகிதங்களை மற்ற மாநிலங்களில் உயர்நீதிமன்றங்களுக்கு இருப்பதைக் போல நம்முடைய மாநிலத்திலும் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உயர் நீதிமன்றத்தில் உள்ள ' நியூ சேம்பரை ' விரைவில் கட்டி முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மக்கள் நீதிமன்றங்களை கொண்டு வந்திருக்கிறீர்கள். அதை விரிவுபடுத்தி இன்னும் அதிகமாக மக்களுக்கு நீதி கிடைக்கச் செய்ய வேண்டும். பொதுவாக மக்கள் நீதிமன்றங்கள் அதிகமாக இருந்தால் கோர்டிற்குப் போகாமல் விரைவாக நீதி கிடைக்க

[திரு. ஆ. சந்திரசேகரன்] [1987 ஏப்ரல் 25

வாய்ப்பு இருக்கிறது. அதைப் போல கோர்ட்டில் பைசல் செய்ய முடியாத கேஸ்களை மக்கள் நீதிமன்றம் மூலமாக தீர்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் வாடிப்பட்டியில் ஒரு நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை பல காலமாக வைத்திருக்கிறோம். அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கும்பகோணத்தில் வழக்கறிஞர் சங்கத்திற்கு ஒரு புதிய கட்டடம் கட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கட்டடத்தை கட்டிக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல ரூரல் கோர்ட்ஸ்களை நடைமுறையில் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவை தலைவர் தலைமை.)

தமிழகத்தில் இருக்கிற சிறைச் சாலைகளில் கைதிகள் பட்டப் படிப்பு படிக்க விரும்புவார்களானால் அவர்கள் படிப்பதற்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த நல்ல சந்தர்ப்பத்தை அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம் மற்றும் சிறைச்சாலைகள் பற்றிய மானியக் கோரிக்கைகளை வரவேற்று ஒருசில கருத்துக்களைச் சொல்வதற்கு விரும்புகிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் அப்துல் சமத் அவர்கள் மதத்தின் அடிப்படையில் உயர் நீதிமன்றத்திலே நீதிபதிகளை நியமிக்கிறபோது, பிரதிநிதித்துவம் கொடுக்கிற வகையில் முஸ்லிம்களுக்கு அதிகமான இடங்களை கொடுக்கவேண்டும் என்ற வேண்டுகோளை வைத்தார்கள். பொதுவாக உயர் நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில் மதத்தின் அடிப்படையில் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும் என்ற அந்தக் கொள்கையை மாற்றி, தகுதியின் அடிப்படையில் மட்டும்தான் அங்கே நீதிபதிகளை நியமனம் செய்யப்பட வேண்டும் என்ற உணர்வை நம்முடைய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னமும் சொல்லப் போனால், தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் தமிழ் நாட்டினுடைய மக்கள் தொகையில் 89.01 சதவீதம் இந்துக்கள் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். அப்படியே பார்த்தாலும் கூட 25 பேர்களைக் கொண்ட உயர் நீதிமன்றத்தில் 22 இடங்கள் இந்துக்களுக்குத் தரவேண்டும். அப்படியே பார்த்தாலும் கூட, அங்கே பிரதிநிதித்துவம்



1987 ஏப்ரல் 25] [திரு. வை. பாலச்சந்திரன்]

இன்றைக்கு மூஸ்லீம்களுக்கு குறைந்து போகவில்லை. ஏனெனில் இப்போது பத்தொன்பது நீதிபதிகளில் உயர் நீதிமன்றத்தில் ஒரு மூஸ்லிம் நீதிபதியாக இருந்து கொண்டிருக்கிறார். ஆகவே மதத்தின் அடிப்படையில் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும் என்று கொடுத்தால், மதத்தின் அடிப்படையில் நீதிபதிகளாக வந்தவர்கள் அந்த மதத்திற்கு அப்பாற்பட்டு செயல்படுவார்கள் என்று நாம் நம்ப முடியாது, ஆகவே மதத்தின் அடிப்படையில் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும் என்ற வேண்டுகோள் ஏற்கப்படாமல், தகுதியின் அடிப்படையில் மட்டும் கொடுக்க வேண்டும் அல்லது ஒவ்வொரு மதம் சார்ந்த மக்கள் தொகையின் அடிப்படையில் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு மதம் சார்ந்த மக்கள் தொகையின் அடிப்படையில் பிரதிநிதித்துவம், உரிமை, சலுகை என்ற முடிவை இவ்வரசு மேற்கொண்டால் அதை நான் பாராட்டி வரவேற்பேன். என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மூன்சீப் மற்றும் மாஜிஸ்ட்ரேட் ஒருங்கிணைப்பு என்று ஒரு திட்டம் நம்முடைய அரசினுடைய பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. இப்படி மூன்சீப் நீதிமன்றங்களும், மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்களும் இணைக்கப்பட்டு அவைகள் ஒன்று சேருகிற நிலை உருவாகுமானால், அது கீழ்மட்டத்தில் நீதியை தடுமாறவைக்கும் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மூன்சீப் நீதிமன்றம் என்பது தென்றல் வீசுகிற இடமாகவும், மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் என்பது புயல் வீசுகிற இடமாகவும் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே அங்கேயுள்ள யதார்த்த நிலைமையைப் பார்த்தால், காவல் துறையைச் சேர்ந்தவர்களும், நீதிமன்றத்திற்கு வந்து காலையிலிருந்து மாலை வரை வாய்தாவிற்காக காத்திருக்கும் ஒரு நிலமைதான் மாஜிஸ்ட்ரேட் நீதி மன்றங்களில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே அங்கே எப்போதும் டென்ஷன் நிறைந்த ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே இந்த டென்ஷன் நிறைந்த சூழ்நிலையை இந்த முன்சீப் நீதிமன்றத்திற்குக் கொண்டு வந்து இரண்டையும் ஒன்றாக்கி, இந்த இரண்டு இடங்களிலேயும், டென்ஷனை உருவாக்க வேண்டாம் என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, சிறைச் சாலைகளைப் பொறுத்த வரையில் இன்றைக்கு 10 ஆண்டுக் காலம் சிறைத் தண்டனை பெற்றவர்கள் அல்லது ஆயுள் தண்டனை பெற்றவர்கள், அப்படிப் பெற்றபின், மேல் முறையீடு செய்கிறபோது, அவர்களுக்கு ஜாமீனிலே வருகிற வசதி கிடையாது. அப்படி 10 ஆண்டுக் காலம், சிறைத் தண்டனை பெற்றவர்கள் அல்லது ஆயுள் தண்டனை பெற்றவர்கள் ஜாமீனில் வருவதற்கு சிறைச் சாலையிலிருந்து கொண்டு, மேல் முறையீடு செய்தால், அந்த மேல் முறையீட்டை எடுத்துக் கொள்வதற்கு குறைந்தது 3 ஆண்டுக்கு மேலாகிறது. அந்த 3 ஆண்டு காலத்திற்குப் பிறகு, இந்த மேல்

முறையீட்டை விசாரிக்கிற நீதிபதிகள் பெரும்பாலான வழக்குகளிலே விடுதலை கொடுக்கிறார்கள். ஆகவே, ஜாமீனில் வர முடியாத நிலைமையில், 3 ஆண்டுக் காலத்திற்கு மேற்பட்ட காலம் அவர்கள் சிறைச் சாலையில் இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. ஆகவே, அவர்கள் விடுதலை செய்யப்பட்ட பிறகு அவர்கள் சிறைச் சாலையில் இருந்த அந்த 3 ஆண்டுக் காலத்திற்கு அவர்களுக்கு நாம் என்ன பரிகாரம் செய்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மனித உரிமையை இன்றைக்கு நாம் மிகவும் மதிக்கிறோம். அந்த மனித உரிமை, 3 ஆண்டுக் காலத்திற்கு, சிறையிலிருந்து ஜாமீனில் வர முடியாத ஒரே காரணத்திற்காக மறுக்கப்படுகிறதே, அதற்கு ஒரு மாற்று ஏற்பாட்டை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிந்தித்துச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு குற்றவியல் நீதிமன்றங்களில் ஒருவரை காவல் நிலையத்திலிருந்து நீதிமன்றத்திற்கு கொண்டு வருகிற போது, அவர்கள் காவல் நிலையத்தில் இருக்கிறபோது, அவர்களை ill-tie..t செய்தால் the ccused c n repoit it to the Rem. nding Magistr. te என்று இருக்கிறது.

When the accused is p'oduced bef re the M gistr te, 'மாஜிஸ்ட்ரேட் உங்களை ill-tre t செய்தார்களா என்று கேட்க வேண்டும் என்று சட்டத்திலே இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் எந்த நீதிமன்றத்திலும் அப்படிக் கேட்பதில்லை. அப்படி நீதிபதிகள் கேட்காத நேரத்தில், அவர்கள் சொல்வதற்கு முற்பட்டாலும், ரிமாண்டிலிருந்து கொண்டு செல்கிற போலீஸ்காரர்கள், அவர்கள் ill-treatment report 'கொடுப்பதற்கு விடுவதில்லை. அப்படி அதையும் மீறி அவர்கள் ill-treatment என்று ரிபோர்ட் பண்ணினால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. The report of ill-'reatment by an accused is treated only as a ıeport and not as a c mplaint. ஆனால் சி. ஆர். பி. சி. 200-ன்படி, ரிமாண்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்னால் சொல்லப்படுகிற ill-treatment rep ıt-ஐ ஒரு தனி நபர் வழக்காகக் கருதி, நடவடிக்கை எடுக்க வேண்டும், அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இன்னொன்று, ஒருவனைக் கைது செய்து காவல் நிலையத்திற்குக் கொண்டு வந்த பிறகு, நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்கிற நேரம் உட்பட 24 மணி நேரத்திற்கு மேல் இருக்கக் கூடாது என்று சட்டம் சொல்கிறது. ஆனால் பல பேர்கள் இன்றைக்கு 2 நாட்கள், 3 நாட்கள் என்று காவல் நிலையத்திலேயே வைக்கப்படுகிறார்கள். சாதாரண மக்களுக்கு இப்படி 24 மணி நேரத்திற்கு தங்களை நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல வேண்டும், அப்படிக் கொண்டு செல்லாவிட்டால், அதற்கு பரிகாரம் உண்டு; அந்த பரிகாரம் கேட்க தங்களுக்கு ஒரு உரிமை இருக்கிறது என்பதை அறியாதவர்களாக இருக்கின்றார்கள்.





Ignorance of law is no excuse' என்ற சொல்கிறோம். ஆகவே சில உரிமைகள் நமக்கு இருந்தும், அந்த உரிமைகள் இந்தச் சாதாரண அக்யூஸ்டுகளுக்குத் தெரியாத காரணத்தால், அவர்களுக்கு பரிகாரம் காண முடியாமல் போய்விடுகிறது. எதை எதையோ நாம் இன்றைக்கு பள்ளிக்கூடங்களிலே சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். வரலாறு என்ற பெயரால், ஆனால் எது ஒரு மனிதனுக்கு அடிப்படையாகத் தெரிந்திருக்க வேண்டுமோ, அவைகளை 6-வது வகுப்பு 7-வது வகுப்பு மற்றும் 8-வது வகுப்புகளில் சொல்லிக்கொடுக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். கைது செய்த 24 மணி நேரத்திற்குள் நீதி மன்றத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்பது போன்றவற்றைச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

அதற்குப் பிறகு ஒரு குற்றம் Cogniz..ble Offence என்று எனக்குத் தெரிந்திருந்து, அது என் கண் முன்னால் செய்யப்பட்டு இருந்தால், அதைக் காவல் நிலையத்திலே சொல்லாமல் சென்று விட்டாலும் கூட எனக்குத் தண்டனை தர வேண்டும் என்று இருக்கிறது. இவைகள் எல்லாம் சாதாரண மக்களுக்குத் தெரிவ தில்லை. எனவே இவைகளை எல்லாம் பள்ளிக்கூடங்களில் சொல்லிக் கொடுப்பதற்கு, நமது கல்வித் திட்டத்தில் அவைகளை சேர்ப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பத்மநாபபுரம் தொகுதியில் இரண்டு டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டுகள் இருக்கின்றன. அதில், ஏ. டி. எம். கோர்ட்டில் பல ஆண்டு காலமாக உரிமையியல் நீதிபதி இல்லை. காலியாக அது இருந்து கொண்டு இருக்கிறது.

(பிற்பகல் 2–00)

பத்மநாபபுரம் முதல் வகுப்பு குற்றவியல் நீதிபதி மன்றத்தில் இரண்டு ஆண்டுகளாக நீதிபதி இல்லை. நீதிபதி நியமனம் செய்யப்பட வேண்டுமென்று பலமுறை நான் கோரிக்கை வைத்தும் அங்கே நீதிபதி இதுகாறும் நியமனம் செய்யப்பட வில்லை. ஆகவே அதற்காக நாங்கள் குழித்துறைக்கும் நாகர் கோவிலுக்கும் செல்லவேண்டியிருக்கிறது. குழித்துறைக்கே அல்லது நாகர்கோவிலுக்கோ ஒரு வக்கீலை அழைத்துக் கொண்டு செல்லவேண்டுமேயானால், வாடகைக்காருக்கு 70 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. சாதாரணமான ஒரு அக்யூஸ்டு இந்த அளவுக்கு அதிகமான செலவுகள் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. (An ccused sh uld be presumed t be inn cent till he is pr. ved guil y) என்று சொல்கிறோம். ஆகவே நிரபராதிகளாகக்கருதப்பட வேண்டியவர்களுக்கு அதிகமான செலவினங்களை ஏற்படுத்துவதைத் தான் நாம் செய்துகொண்டிருக்கிறோம். ஆகவே, நீதி மன்றங்களில் நீதிபதிகளை நியமனம் செய்வதற்கு அரசு உடனடியாக ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு, இரணியல் நீதி மன்றத்தில் அரசு வழக்கறிஞர்களுக்கும், பத்மநாபபுரம் முதல் வகுப்பு நீதி மன்றத்தில் அரசு வழக்கறிஞர்களுக்கும் ஒரு அறை

கட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து கருணை உள்ளத்தோடு அனுமதி வழங்கி, கட்டுமான வேலைகளும் முடிந்திருக்கின்றன. அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது கோரிக்கைகளை ஏற்க வேண்டும் என்ற கோரிக்கையோடு, இவ்விரு மானிய கோரிக்கைகளையும் ஆதரித்து வரவேற்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

திரு. வி, பி. சிந்தன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்தத் துறையின் மீதான விவாதத்தில் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்தைச் சொல்வதற்காக நான் இங்கே நிற்கிறேன். நேரத்தை மனதிலே எடுத்துக்கொண்டு நான் சுருக்கமாகவே பேசுகிறேன். இருப்பினும் ஒரு முக்கியமான பிரச்சினையை நான் உங்கள் முன்னால் கொண்டு நிறுத்த விரும்புகிறேன். ஒரு தவறான கருத்து இந்தச் சட்டமன்றத்திலேயும் வெளியிலேயும் நிலவிக்கொண்டிருக்கிறது. தீர்ப்புகள் பற்றி இங்கே விவாதிக்கக் கூடாது. நீதிபதிகள் வழங்குகின்ற தீர்ப்புகளை இங்கே விவாதிக்கக்கூடாது. நீதிபதிகளைப் பற்றியும் இங்கே விவாதிக்கக்கூடாது. உண்மையிலேயே நான் இந்தக் கருத்தை ஏற்கவில்லை. இந்தக் கருத்தை இந்த நாடு ஏற்றுக்கொண்டிருந்தால் இன்றைய ஜனநாயக முன்னேற்றம் நிச்சயமாக அமைந்து இருக்க முடியாது. நான் மனுநீதியைக் குறிப்பிடுகிறேன். ''சூத்ர ரட்சகன் சம்யுக்தன் துராத பரிவர்த்தையே'', இது சமஸ்கிருதம். அதாவது எழுத படித்தவன் சூத்திரனானால் அவனை கிராமத்திலேயிருந்து வெளியேற்ற வேண்டும். அந்த மனுநீதியை சுட்டெரித்து ஏராளமான இயக்கங்களை நடத்தி பலர் தூக்கு மேடைக்கு அனுப்பப்பட்ட பிறகுதான் அந்தச் சட்டங்களெல்லாம் திருத்தப்பட்டன. நான் ரோமாபுரியினுடைய, ஐரோப்பாவினுடைய பல்வேறு விளக்கங்களுக்கு போகவில்லை. அங்கே இன்றைக்கும் அத்தகைய சட்டங்கள் உண்டு. அங்கே அத்தகைய கருத்துக்கள் உள்ள நீதிபதிகள் உண்டு. அவர்களை எதிர்த்து இயக்கங்களை நடத்துவதும், அதை எதிர்த்து கருத்துக்களை வலியுறுத்துவதும் ஒரு சமுதாய நீதி பிறப்பதற்கு மிகமிக அவசியம் என்ற காரணத்தால்தான் நான் இங்கே இதைக் குறிப்பிடுகிறேன். நீதிபதிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டு, நீதிபதிகளும் வாக்காளர்களுக்கு பொறுப்பாளர்களாக இருக்கக்கூடிய ஒரு சமுதாயத்திலேதான் நியாயம் கிடைக்கும் என்று நம்புகிறவன் நான். ஆகவேதான் நீதித்துறையைப்பற்றி சொல்லும்போது நீதித்துறையிலே பந்தடாசம் மேலோங்கி இருக்கிறது. நான் இதற்கு பல உதாரணங்களைச் சொல்ல முடியும். நாங்கள் ஒரு பெரிய தொழிற்சாலையிலே வேலை நிறுத்தம் நடத்தியபோது, 400-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள்மேல் பொய் வழக்கு போடப்பட்டு உயர்நீதி மன்றத்திற்கு சென்றபோது அங்கே அமர்ந்திருந்த நீதிபதி, நான் அவருடைய பெயரைச் சொல்ல விரும்பவில்லை. அவர் எங்களுடைய வழக்கறிஞரைப் பார்த்து கேட்டார், இந்தத் தொழிற்சாலையிலே



வழங்குவதைவிட அதிகச் சம்பளம் எங்கேயாவது வழங்குவது உண்டா என்று. இவர்களெல்லாம் கலகக்காரர்கள் என்று உயர் நீதிமன்றத்திலே குறிப்பிட்டார்கள். ஆனால் ரெக்கார்டிலே இல்லை. சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியோடு ஒரு விழாவிலே கலந்து பேசும்போது, அவர் என்னிடம் சொன்னார். எனக்கு அதிகாரம் இருக்குமேயானால் கம்யூனிஸ்டுகளையெல்லாம் சுட்டுத்தள்ளியிருப்பேன் என்று. நான் இதை குறிப்பிடுவதற்குக் காரணம், நம்முடைய நீதி மன்றத்திலே அமர்ந்திருக்கக் கூடியவர்கள் எவ்வளவு பிற்போக்கான, ஜனநாயகத்துக்கு விரோதமான கருத்துக்களைக் கொண்டவர்கள், நல்லவர்கள் இல்லை என்று நான் கூறுவதாக நீங்கள் நினைக்கவேண்டாம். ஆகவேதான் நீதிபதிகளை நியமிக்கும்போது, நீதிபதிகளுடைய தீர்ப்புகளைப் பற்றியும், நீதிபதிகளுடைய நடத்தையைப் பற்றியும். . ....

மாண்புமிகு திரு. (வேட்டசந்தூர்) வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிக்க உறுப்பினர் திரு. சிந்தன் அவர்கள் சொல்கின்ற கருத்திலே பல உடன்பாடு இருக்கிறது. இன்றைக்குச் சொல்கிறார்கள். அதே நேரத்திலே 1983-ஆம் ஆண்டு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பொதுமக்களுக்காக நிலங்களை ஆர்ஜிதம் செய்கிறபோது நீதிமன்றங்கள் அரசாங்கத்தைக் கேட்காமல் ஸ்டே கொடுக்கக் கூடாது என்று ஒரு சமூக நீதியைச் சொன்னபோது, கோர்ட்டை முதலமைச்சர் அவமதித்தார் என்று இங்கே இருக்கிற மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, எல்லா கட்சிகளும் வெளிநடப்புச் செய்தனவே, ஏன் இந்தக் கொள்கை முரண்பாடு என்கிற விவரத்தை விளக்குவார்களேயானால் நன்றாக இருக்கும்.

திரு. வி. பி. சிந்தன் : அந்தத் தகவல் என்ன என்று எனக்குத் தெரியவில்லை. நான் அன்றையதினம் சட்டமன்றத்திலே இல்லை. அப்படி ஒரு உரிமை வேண்டும் என்று வலியுறுத்தி இந்த மன்றத்திலே ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் அதற்கு ஆதரவு கொடுக்கத் தயார். அது மட்டும் தான் இப்போது நான் சொல்வேன். மேலும் விவாதத்திற்கு செல்ல நான் விரும்பவில்லை. நான் வலியுறுத்துகிற பிரச்சினையை நீங்கள் புரிந்து கொண்டால் போதும்.

கீழ்வெண்மணியில் 42 அரிசன மக்கள் சுட்டு எரிக்கப்பட்டது கர்ப்பிணிகள் உட்பட. ஆனால் அந்த வழக்கில் தஞ்சை மாவட்ட நீதிபதி என்ன சொன்னார் தெரியுமா? அந்த முதல் எதிரி பெயர் சொல்லவில்லை. அவர் 2 கார்களுக்கு சொந்தக்காரர், நான் தீர்ப்பைக் கொண்டு வந்து படித்து காட்டுகிறேன். 2 சினிமா கொட்டகைகளுக்கு சொந்தக்காரர், ஏராளமான நிலத்தை வைத்து இருப்பவர் அவர் இரவு நேரத்தில் 10, 50, 60, பேரை திரட்டி அந்த நாற்றம் அடிக்கக்கூடிய சேரிக்கு செல்வார்

[திரு. வி. பி. சிந்தன்] [1987 ஏப்ரல் 25

என்று நான் நம்பவில்லை என்று சொல்லி அவரை விடுதலை செய்து விட்டார்கள். என்னுடைய அனுபவத்தில் நான் ஏராளமாக சொல்ல முடியும். ஆகவே தான் இந்த நாட்டிலே நீதி (It is only a class justice) மேல் தட்டு வர்க்கத்திற்கு நீதி கிடைக்கிறதே தவிர ஏழை எளிய மக்களுக்கு இந்தக் நாட்டில் நீதி கிடைக்கவில்லை என்பதை நான் மீண்டும் வலி யுறுத்திச் சொல்கிறேன். அந்த முறையில் என்ன என்ன திருத்தங்கள் தேவை நம்முடைய சட்டமன்றத்திற்கு அவ்வளவு அதிகாரம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் இந்தியா முழுவதும் அத்தகைய திருத்தங்கள் வேண்டும். அரசியல் சட்டத்திலே திருத்தங்கள் வேண்டும்; நீதித் துறையிலே திருத்தங்கள் வேண்டும் என்பதை நான் இங்கே வலியுறுத்திச் சொல்கிறேன்.

மீண்டும் சுருக்கமாக சொல்லவேண்டும் என்பதற்காக சொல் கிறேன் காலி இடங்களைப் பற்றி பலர் சொல்லியிருக்கிறார்கள். காலி இடங்களை பூர்த்தி செய்வதிலே அரசு எடுக்கக்கூடிய மந்த நிலையை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. எதை எதிர்த்து 20, 25 ஆயிரம் வழக்கறிஞர்கள் 18 நாட்களாக நீதி மன்றங்களை புறக்கணிக்கக் கூடிய ஒரு சூழ்நிலை தமிழகத்திலே ஏற்பட்டது. அதிலே என்ன சிக்கல் என்று உங்கள் பக்கத்திலே இருந்து விளக்கம் தெரிந்து கொள்ள நான் விரும்புகிறேன். விரும்பத்தகாதவர்களை நீங்கள் சிபாரிசு செய்து அவர்கள் அனு மதிக்கவில்லையா ? அவர்கள் என்று நான் சொல்வது மத்திய அரசை அல்லது மத்திய அரசு இந்த இடங்களை போடாதே என்று சொல்லுகிறதா ? தமிழக மக்கள் அதை தெரிந்து கொள்ள விரும்புகிறார்கள். நானும் அதை தெரிந்து கொள்ள முக்கியமாக விரும்புகிறேன்.

இப்போது நீதிபதிகளை நியமிப்பதிலே ஏற்படுகிற தாமதத் தினால் பல விதத்தில் பாதிக்கப்படக்கூடியவர்கள் இந்த நாட்டி னுடைய சாதாரண மக்கள் தான். அதிலே இப்போது மாஜிஸ்டிரேட் முனிசீப் நியமனம். சென்ற ஆண்டு நவம்பர் மாதம் என்று நினைக்கிறேன். நீங்கள் செய்த ஒரு அறிவிப் புக்குப் பிறகு கிட்டத்தட்ட 71 பேர் விண்ணப்பம் செய்து இருக்கிறார்கள். இன்று வரை அவர்களுக்கு இண்டர்வியு வழங்கப்படவில்லை. அதில் மத்திய அரசு குறுக்கே நிற்பதாக என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. நான் சட்டம் படித் தவன் அல்ல. அதற்கு வழக்கறிஞர் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சப்ஜட்ஜஸ் நியமிக்கிற பிரச்சினை. சென்னை உயர்நீதிமன்றத்தில், தமிழ்நாடு உயர்நீதிமன்றத்தில் 5 ஆண்டு காலமாக ஏராளமான இடங்கள் காலியாக இருந்து கொண் டிருக்கிறன. ஏன் நியமிக்க முடியவில்லை? அது மட்டும் அல்ல உங்களைக் கேட்டால் நீங்கள் மத்திய அரசை குற்றம்



1987 ஏப்ரல் 25] [திரு. வி. பி. சிந்தன்]

சாட்டுகிறீர்கள். இன்னும் ஒன்று, இந்த பக்கத்திலே இருந்து இந்த 10 ஆண்டு காலமாகத் தான் இந்த நிலைமை என்று சொல்கிறார்கள். அந்தப் பக்கத்திலே இருந்து அந்த 10 ஆண்டு களும் அப்படித் தான் இருந்தது என்று சொல்கிறீர்கள். இதில் என்னால் எதையும் புரிந்து கொள்ள முடியவில்லை. எந்த 10 ஆண்டுகள் என்பது அல்ல என்னுடைய பிரச்சினை. ஏன் இதை நிறைவேற்ற முடியவில்லை. மத்திய அரசு குற்றம் செய்தது என்றால் மத்திய அரசு குற்றம் செய்தது என்று நீங்கள் சொல்லவேண்டும். அவர்கள் பக்கத்திலே இருந்து பேசும் போது பல மத்திய அமைச்சர்கள் மாநில அரசுதான் அதற்கு பொறுப்பு என்று பேசிய பேச்சுகளும் பத்திரிகையில் வந்து இருக்கின்றன என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

சமீபத்திலே உயர்நீதிமன்றத்திற்கு ஒருவரை நீங்கள் சிபாரிசு செய்வதிலே ஏற்பட்ட சிக்கல் தான் இதற்கு காரணம். இத்த கைய சிக்கலால்தான் தாமதம் ஏற்படுகிறது என்று அவர்கள் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள்.

அது மட்டும் அல்ல, என்னைப் பொறுத்தவரையில் பெண் களுக்கும் ஆண்களுக்கும் சொத்து உரிமையில் சம உரிமை வழங்கக்கூடிய ஒரு சட்டத்தை தமிழக அரசு கொண்டு வர வேண்டும் என்று நான் பெரிதும் விரும்புகிறேன். வரதட்சணை கொடுமையை தடுப்பதற்கு மட்டும் அல்ல இது பயன்படும். இந்த நாட்டில் பெண் அடிமை அதுவும் பண்டைய காலத்திலே ஏற்பட்ட அந்த பெண் அடிமையை போக்குவதற்கு இது மிக மிக அவசியம் என்று நான் கருதுகிறேன்.

அது மட்டும் அல்ல வரதட்சணை கொடுமையை தடுப்பதற்கு ஒரு தனி கோர்ட் அமைப்பதாக சொன்னார்கள். ஆனால் இந்த அறிக்கையில் அதைப்பற்றி எதையும் சொல்லவில்லை. வரதட்சணை கொடுமைகளைப் பற்றி நான் விளக்கம் சொல்ல விரும்பவில்லை. ஆனால் வரதட்சணை கொடுமைகளில் நீதி பதிகளும், பிராசிகியூட்டர்களும், போலிசாரும் எடுக்கக் கூடிய அணுகு முறையே தப்பு. பற்களாலே நகங்களாலே ஏதேனும் உடலில்—வழக்கறிஞராகிய உங்களுக்குத் தெரியும்—காயம் இருந்தால் தான் அது கற்பழிப்பு என்று கணக்கிலே வைக்கப்படும் என்று சட்டமும் அதே மாதிரி வரதட்சணை சம்பந்தமான சட்டமும் ஒரு நல்ல முறையில் திருத்தப்பட்டு ஒரு நல்ல சட்டத்தை விரைவில் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 2–10]

அதிலே பெண் நீதிபதிகள் நிச்சயமாக இருக்க வேண்டும். பெண் பிராசிகியூட்டர்ஸ் இருக்கவேண்டுமென்பது என்னுடைய வலி யுறுத்தல். தொழிலாளர்கள் பிரச்சினை பற்றி சொல்வதில், நேரம் இல்லாத காரணத்தினால், சுருக்கமாகப் பேசுகிறேன்.

தொழிலாளர்கள் நீதிமன்றம் என்பது இன்றையதினம் பெயரளவில்தான் நடந்துகொண்டிருக்கிறது. அங்கே நீதி வழங்குகின்ற முறையைப் பற்றி நான் சொல்லவில்லை. ஒரு தொழிலாளி டிஸ்மிஸ் செய்யப்பட்டு 10 ஆண்டுகளுக்குப் பிறகு தீர்ப்பு கொடுத்திருப்பது, அந்தத் தொழிலாளியினுடைய வாழ்க்கை என்னவாகும்? அவசர உணர்வோடு செயல்படக் கூடிய நீதிபதிகள் மட்டுமல்லாமல், கிரிமினல் அல்லது சிவில் சைடில் பிராக்டீஸ் செய்த ஜட்ஜஸ் மட்டும் போதாது. கொஞ்சம் தொழிற்துறையில் Natural Justice என்பது அடிப்படையான ஒன்று. அது உங்களுக்குத் தெரியும். ஆகவே கொஞ்சம் சமுதாயப் பிரச்சினை பற்றியும், தொழிற்துறையிலுள்ள பிரச்சினை பற்றியும் தெரிந்த நீதிபதிகளாக நியமிக்க வேண்டும். தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு லேபர் கோர்ட் வேண்டும். தொழில் வளர்ச்சி ஏற்பட்டுக்கொண்டிருக்கிற நேரத்தில், ஆயிரக்கணக்கான வழக்குகள் தீர்க்கப்படாமல் இருந்துகொண்டிருக்கின்றன. எனவே தமிழக அரசு தொழில் நீதிமன்றங்களை, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்த பிரச்சினை. சபாநாயகர் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன். உயர் நீதி மன்றத்திலும், உச்சநீதி மன்றத்திலும் தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையே ஏற்படுகின்ற தகராறுகள் வரும் போது, தமிழக அரசினுடைய வழக்கறிஞர்கள், 'அட்டார்னி ஜெனரல்' போன்றவர்கள் மற்றும் நம்முடைய வழக்கறிஞர்கள் முதலாளிகளின் தரப்பில் வாதாடுகிறார்கள். பல உதாரணங்களைக் கொடுக்கத் தயாராகயிருக்கிறேன். அண்மையிலே தமிழகத்திலே ஒரு பெரிய தொழில் நிறுவனம். அவர்கள், 4, 5 பிரபல வழக்கறிஞர்களுக்கு சுப்ரீம் கோர்ட்டில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால் தொழிலாளர்கள் அந்த அளவிற்குப் போக முடியாது. ஆனால் தமிழக அரசினுடைய சார்பில் 'அட்டார்னி ஜெனரல்' தமிழக அரசுக்காக வாதாடுகின்ற ஒரு காட்சியை நான் பார்த்தேன். சமீபத்தில் பின்னியினுடைய வழக்கிலே கூட, உச்ச நீதி மன்றத்திலே இந்த நிலைமையைப் பார்க்க முடிந்தது. நிச்சயமாக இந்த நிலைமை ஏற்படுவது, தொழிலாளர்களுடைய உள்ளத்தில், இந்த அரசு நம்முடைய பக்கம் இல்லை என்ற உணர்வை ஊட்டுவதற்குத்தான் பயன்படும் என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

அடுத்து, 'Family Courts' 1984 ஆம் ஆண்டிலே 'Family Courts' அமைக்க வேண்டுமென்று பாராளுமன்றம் நிறைவேற்றிய சட்டத்திற்கு ஜனாதிபதியினுடைய அங்கீகாரம் பெற்றாகிவிட்டது. அதை அமல் நடத்துவதாக நீங்களும் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் மாநில அரசு அதனுடைய சட்ட விதிகளை நிர்ணயித்தால் தானே அது அமலாகும்? அதை உடனடியாக அமல் நடத்தவேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.





லஞ்ச ஊழல் பிரச்சினைகளைப் பற்றி நான் சொல்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென்று பணிவன்போடு வேண்டுகிறேன். 'Don't make sweeping remarks' என்று சொல்லி என்னுடைய வாயை அடைத்துவிடாதீர்கள். நான் 'sweeping remarks' சொல்லவேண்டுமென்ற விருப்பத்தோடு சொல்லவில்லை. சுவரொட்டிகளில் இந்த நீதிபதி இவ்வளவு லஞ்சம் கேட்டார் என்று தமிழகத்தில் சுவரொட்டிகள் வருகின்றன பொதுக் கூட்ட மேடைகளில் காது கொடுத்துக் கேட்க முடியாத அளவிற்கு நீதிபதிகளைப் பற்றி குற்றம் சாட்டுகிறார்கள். நோட்டீஸ் போடுகிறார்கள். நான் விளக்கத்திற்குள் போகவில்லை. பல அனுபவங்களைப் பற்றிநான் சொல்ல முடியும். ஒரு நாள் என்னுடன் வந்தால் You must come in cognito உங்களைத் தெரியக் கூடாது. உங்களைப் பார்த்தால் தெரிந்துவிடும். தெரியாமல் வந்தால் நான் உங்களுக்குக் காண்பித்துத் தருகிறேன். ** இது, 'sweeping remarks' அல்ல. உங்களிடம் காட்டத் தயார். இவ்வாறு பேரம் பேசப்படுகிறது. இப்படி தரகு பேசுகின்றவர்கள் நீதி மன்றங்களில் இருக்கிறார்கள். இதையெல்லாம் விசாரிக்க வேண்டும். இப்போது தமிழகம் பூராவும் இந்தக் கூச்சல் போடப்பட்டு வருகிறது. ஒரு வேளை சபாநாயகர் இங்கே பேசக்கூடாது என்று சொன்னாலும், தமிழகம் பூராவும் இந்தக் கூச்சல் வந்துகொண்டிருக்கிறது. இதை இந்தச் சட்ட மன்றத்தால் கட்டுப்படுத்த முடியாது. இந்த நியாயமான கூச்சல் எழுந்ததற்குப் பிறகு தான், இதைக் கவனிப்பதற்கு ஒரு தனிக் குழு, சென்னை உயர்நீதிமன்றத்தில் அமைப்பதாக ஒரு அறிவிப்பு வந்திருக்கிறது. நான் உங்களிடமிருந்து தெரிய விரும்புவது எல்லாம், அந்தக் குழு ஏதேனும் விசாரணை நடத்தினார்களா? அந்தக் குழுவினுடைய விசாரணை முடிவு ஏதேனும் உங்கள் பக்கத்திலிருந்து உண்டா என்று நான் அறிய விரும்புகிறேன்.

இன்னொரு சிறிய பிரச்சினை. நீங்கள் கவனிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். ** இந்த ஆண்டு ரூ. 1,20,000-க்குப் புதிய பர்னிச்சர். இப்படிப்பட்ட சலுகை ஏன்? இதே நீதிபதிக்கு என்ன அதிகாரம் இருக்கிறதோ அதே அதிகாரத்தைக் கொண்ட பல நீதிபதிகள் சென்னையிலே இருக்கிறார்கள். அவர்களுடைய அறை என்ன? அவர்களுடைய வசதிகள் என்ன? ஆகவே இப்படி உள்ள முறையில் அவர்களை திருப்திபடுத்துவதற்கு தமிழக அரசு இந்த நடவடிக்கை எடுக்கின்றதோ என்று அச்சப்படவேண்டிய ஒரு நிலைமை ஏற்படுகிறது. இன்னொரு பிரச்சினையை நான் சொல்ல விரும்புகிறேன். பப்ளிக் ப்ராஸிக்யூட்டர் It is very unfortunate that throughout the length and breadth of Tamil Nadu the Public Prosecutors are pliable instruments in the hands of the Police

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

டி. 2, எ 63—37

[திரு. வி. பி. சிந்தன்] [1987 ஏப்ரல் 25

யாருக்கு ஜாமீன் மறுக்கப்படவேண்டும் என்று, போலீஸ் விரும்பு
கின்றதோ அவர் அதற்கு வாதாடுகின்றார். எதை எதை
போலீஸ் விரும்புகின்றதோ அதை நிறைவேற்றுகின்ற ஒரு
கருவியாக நம்முடைய பப்ளிக் ப்ராசிக்யூட்டர் குறிப்பாக ஏ.பி.பி.
இருந்துகொண்டிருக்கிறார். நான் நீண்ட நேரம் அதைப்பற்றி
பேச விரும்பவில்லை. அதிலே ஏதேனும் ஒரு தீர்ப்பு கொண்டு
வரவேண்டும். ஏதேனும் ஒரு முறையிலே நியாயம் வழங்கு
கின்ற ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். அடுத்து டைரக்டர்
ஆப் ப்ராசிக்யூஷன் என்று ஒன்றை அமைப்பதாகச் சொன்னீர்கள்.
1985ஆவது அறிக்கையிலே 1986-87-ல் நிறைவேற்றிவிடுவோம்
என்று சொன்னீர்கள். இப்போது இந்த அறிக்கையில் 1987-88
என்று சொல்கிறீர்கள். ஏன் இந்த தாமதம் என்று எனக்கு
புரியவில்லை. நேரம் இல்லை. இருந்தாலும் நான் தாக்கப்
பட்ட ஒரு வழக்கில், என்னை கத்தியால் குத்திய ஒரு வழக்கில்,
ஒரு மாவட்ட போலீஸ் அதிகாரி நீதிமன்றத்துக்குள் வந்து,
''கைது செய்யப்பட்டவர்கள் பூராவும் அந்த குறிப்பிட்ட
நேரத்தில் என்னுடைய அறையிலே பேசிக்கொண்டு இருந்தார்
கள்'' என்று அலிபி என்றால் உங்களுக்கெல்லாம் புரியும்.
சுருக்கமாகச் சொல்வதானால் அலிபி கொடுக்கின்ற அளவிற்கு
ஒரு போலீஸ் அதிகாரி போனார் என்று மெத்த வருத்தத்தோடு
சொல்கிறேன். போலீஸ் அதிகாரத்தை நீதிமன்றத்தில்
இணைத்து பிணைத்து வைப்பது நீதிபதிகளுடைய தீர்ப்பை
தாங்கள் விரும்பக்கூடிய வகையிலே செயல்படுத்துவதும்,
போலீஸ் அதிகாரிகளை தமிழகத்தில் உள்ள செல்வம் படைத்த
வர்கள் தனவந்தர்கள் தங்களுடைய செல்வாக்கிற்கு உள்ளாக்கு
வதும் இவையெல்லாம் கடுமையாக தண்டிக்கப்படக்கூடியவைகள்.
தடுக்கப்படக் கூடியவைகள். இவை எப்படி தடுக்கப்படவேண்டும்
என்பதிலே அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்கிறேன். அதைப்போல ஸ்டேட் அட்மினிஸ்ட்ரேட்டிவ்
டிரிபியூனல். நான் சுருக்கமாகச் சொல்கிறேன். அரசு ஊழியர்கள்
நேரடியாக உயர் நீதி மன்றத்திற்கு செல்கின்ற அதிகாரம் உள்ளது.
தமிழக அரசின் கொள்கையை நான் இங்கே அறிய விரும்பு
கிறேன். ஸ்டேட் அட்மினிஸ்ட்ரேட்டிவ் டிரிபியூனல் அமைத்து,
''நீ அங்கே செல்'' என்று சொன்னால் அரசு ஊழியர்கள் நேரடி
யாக உயர் நீதி மன்றத்திற்கு செல்லுகின்ற உரிமையை நீங்கள்
பறிக்கின்றீர்கள். அதை பறிக்கக்கூடாது. இப்போது எனக்கு
கிடைக்கக்கூடிய தகவல் ஏதோ ஒரு கூடுதல் செயலாளரை
இதற்காக அமைத்து— நீங்கள் தெளிவுபடுத்த வேண்டும். இது
சந்தேகம் தான். கூடுதல் செயலாளரை அமைத்து—ஒரு தனி
இலாக்காவை அமைத்து இந்த வேலைகளைச் செய்வதற்கு
முயற்சிகள் செய்வதாக தெரியப்படுகிறது. உங்களை பணி
வோடு கேட்டுக்கொள்கிறேன். அரசு ஊழியர்களும் இந்த
நாட்டினுடைய குடிமக்கள் தான். அவர்களுக்கும் இந்த
உரிமைகள் வழங்கவேண்டும். கடைசியாக நான் சிறையைப்
பற்றி கொஞ்சம் சொல்லவேண்டும். நான் அதை மட்டும்
சொல்லி முடித்து விடுகின்றேன். இங்கிருக்கின்றவர்களிலே



1987 ஏப்ரல் 25] [திரு வி. பி. சிந்தன்]

அதிகப்படியான சிறைவாசம் அனுபவித்தவன் நான் என்று
நினைக்கிறேன். 10 ஆண்டுகளுக்கு மேலாக பல ஆட்சிக்
காலத்தில் வெள்ளைக்காரன் காலத்திலிருந்து— என்னுடைய
அனுபவத்தையெல்லாம் இங்கே பேசுவதற்கு சபாநாயகர்
அவர்கள் அனுமதிக்க மாட்டார். அது இங்கு தேவையும்
இல்லை. ஆனால் நம்முடைய சிறைச்சாலை உலகத்திலே
உள்ள சிறைச்சாலைகளில் கேடுகெட்ட சிறைச்சாலையாக
நடந்துகொண்டு இருக்கிறது என்பதை உங்களுடைய கவனத்திற்கு
கொண்டுவர விரும்புகிறேன். என்னுடைய நண்பர் சுப்ப
ராயன் அவர்கள் விளக்கமாக பேசிய காரணத்தினால் நான்
அதைப்பற்றி பேச விரும்பவில்லை. பரோல் வழங்குவதிலே
அவர்களுக்கு வழங்கப்படக்கூடிய உணவு—எனக்கு இன்றையதினம்
நேரம் அதிகமாகிவிட்டதால் வெளியிலே போனால் ஸ்னேக்ஸ்
சாப்பிடலாம். ஆனால் சிறையில் இருப்பவர்கள் எங்கே
செல்வது ? அவனுடைய உணவு திருடப்படுகிறது. அவனுக்
கென்று ஒதுக்கப்படுகின்ற மருந்துகள் வெளியிலே விற்பனை
செய்யப்படுகிறது. அவனுக்காக அவனுடைய சுகாதாரத்தை
பார்ப்பதற்காக அளித்திருக்கக்கூடிய டாக்டர்கள், மாவட்ட
டி.எம்.ஓ.க்கள் சிறையின் பக்கமே வருவதில்லை. சில நேரங்
களில் தலையை காட்டிவிட்டு போய்விடுகிறார்கள். கைதி
களை சிறை அதிகாரிகளுடைய வீட்டிலே பெண்களுடைய
பாவாடையை துவைக்கின்ற வேலையில் ஈடுபடுத்துகிறார்கள்.
அது ஒரு கேவலமான வேலை. அரசியல் சட்டத்திலே
போர்ஸ்டு லேபர் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது.
அது மாதிரி ரிமேண்ட் பிரிசினர்ஸ். அவர்களை நீங்கள்
எந்தச் சட்டத்தின்படி எந்த அடிப்படையில் வேலை வாங்கு
கிறீர்கள் ? They are remand prisoners and not convicted prisoners
அவர்கள் ரிகரஸ் இம்ப்பிரிசன்மெண்ட் பெற்ற பிரிசினர்ஸ் அல்ல.

[பிற்பகல் 2.20]

அவர்களுக்கு அந்த வேலை வழங்கப்படுகிறது. அது மட்டு
மல்ல. உண்ணாவிரதம் இருந்தால்— உண்ணாவிரதம் இருப்பது
இந்த நாட்டு மக்களுடைய உரிமை என்று கருதுகிறேன்.
காந்தியடிகள்தான் இந்த நாட்டிலே அந்த இயக்கத்தை ஆரம்
பித்தவர். நாங்கள் எல்லாம் சிறைச்சாலையிலே 21 நாட்கள்
உண்ணாவிரதம் இருந்தோம். அப்போது வெள்ளைக்காரன்
இருந்த ஆட்சியிலே தண்ணீர் எங்களுக்கு மறுக்கப்பட்டது
இல்லை. ஆனால், இப்போது வேலூர் சிறைச்சாலையில்
உண்ணாவிரதம் இருந்த கைதிகளுக்கு தண்ணீர் கொடுக்க
மறுக்கிறார்கள். ரூமுக்குள்ளே பூட்டி வைத்தார்கள்.
கையிலேயும், காலிலேயும் சங்கிலி போட்டு உண்ணாவிரதம்
இருக்கின்றவர்களை ரூமிலே அடைத்து வைப்பது— இது எல்லாம்
எந்த ஜெயில் மானுவலில் அல்லது சட்டத்தில் இருக்கிறது.
ஆகவே, அத்தகைய முறைகள் சிறையிலே மாற்றப்படவேண்டும்.
மணி அடிக்கப்பெற்றது).

என்னுடைய கருத்து, அமைச்சர் அவர்கள் நேரடியாக சிறைகளுக்குச் சென்றுபார்க்க வேண்டும்நாங்கள் பல புகார்கள் கொடுக்கிறோம். ஆனால் அதை அதிகாரிகளுக்கு முன்னாலிருந்து நீங்கள் விசாரணை நடத்தினால் அவர்கள் சொல்லமாட்டார்கள். பிறகு அவர்களை அடித்து காலை ஒடித்து விடுவார்கள். சிறையிலிருந்து தப்பித்து ஓட முயற்சி செய்தார்கள், நாங்கள் அடித்தோம் என்று உங்களுக்கு ரிப்போர்ட் அனுப்பி, நாங்கள் சட்டமன்றத்திலே கேட்டால் அதைதான் கொடுப்பீர்கள். ஆகவே தயவுசெய்து நீங்கள் செல்லவேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர்கள்— கம்யூனிஸ்டுகள் மட்டுமல்ல. காங்கிரஸ் உறுப்பினர்களும், அ.தி.மு.க. உறுப்பினர்களும் கூட— ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்கள் சிறைச்சாலையிலே பார்வையாளர்களாக இருந்த காலம் ஒன்றுண்டு. யார் அதை ரத்துச் செய்தது? (குறுக்கீடு) ஜனதாக் கட்சியையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். அனைவரையும் சேர்த்துச் சொல்கிறேன். ஒரு காலத்தில் அந்த உரிமை உண்டு. அந்த உரிமையை ஏதோ ஒரு பெரிய கிரீடம் என்ற முறையில் கேட்கவில்லை. நீதி வழங்க அது பயன்படும்.

நீங்கள் இப்போது அமைத்திருக்கிற 'விசிட்டர்ஸ் கமிட்டி'— அந்த உயர் அதிகாரிகள் அல்லது மற்றவர்கள்— நீங்கள் போட்டிருக்கக்கூடிய லிஸ்ட் உங்களுக்குத் தெரியும். அவர்கள் எல்லாம் சென்று அங்கே காபி அருந்திவிட்டு திரும்பி வருவார்கள். அவர்களைப் பார்த்து எந்தக் குற்றச்சாட்டும், புகாரும் சொல்ல மாட்டார்கள்.

அதுமட்டுமல்ல. நான் என்ன கேட்கிறேன் என்றால்— சிறைச்சாலையிலே இருந்தபோது லாக்கப் பண்ணாத காலும் இருந்தது. சிறையிலே ஒரு பெரிய மதில் சுவருக்குள்ளே எங்களை இஷ்டம்போல் விட்டதுண்டு. இப்போது மாலையிலே 4 மணி, 3½ மணிக்கு அதுவும் ஞாயிற்றுக் கிழமையானால்; 3 மணிக்கெல்லாம் அவர்களை உள்ளே அடைத்து விடுகிறார்கள்' 4, 5 பேர் ஒரு சின்ன அறையில். அடுத்த தினம் 6 மணிக்குத்தான் திறக்கப்படும். அவர்களை அடைத்து வைக்கவேண்டிய அவசியம் என்ன? அவர்கள் தப்பி ஓடி விடுவார்கள் என்று சொன்னால்— நம்முடைய போலீஸ் இலாகா, சிறந்த போலீஸ் இலாகா என்று சொல்லப்பட்டிருக்கிறது. (மணி யடிக்கப் பெற்றது). எனவே, அதை எல்லாம் கவனிக்கவேண்டும் என்று கூறி அமைகிறேன். வணக்கம் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது ** என்று சொன்னார்கள். அப்படி அவைக் குறிப்பில் இருப்பது சரியல்ல. * * எனவே, அது அவைக் குறிப்பில் இருக்கவேண்டியதில்லை. (குறுக்கீடு).

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





திரு. மு. மாரிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுவும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலாஜி.

திரு. கே. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசுகிற வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியான காஞ்சிபுரத்தில் மாவட்ட கூடுதல் நீதிபதி பதவி ஒன்றை ஏற்படுத்தி, அதற்கான இட வசதி, காஞ்சிபுரம் சார்பு நீதிமன்ற வளாகத்தில், இரண்டு ஹால்கள் காலியாக உள்ளன. அதில் அதனை ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட மையத்தில்தான் அனைத்து நீதிமன்றங்களும் இருக்கின்றன. அதுபோல் காஞ்சிபுரத்திற்குத் தேவை. முதல் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம், மாவட்டத் தலைநகரான காஞ்சிபுரத்தில் அமைக்கவேண்டும். அதற்கு 1979-இல் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களும், அன்றைய சட்டத் துறை அமைச்சராக இருந்த பெரியவர் நாராயணசாமி முதலியார் அவர்களும் காஞ்சிபுரம் வருகை தந்த நேரத்தில், அந்த வளாகத்திற்கு நேராகவே வந்து அன்றைக்கு ஒப்புதல் அளித்தார்கள். பாலில் கலப்படம், தொழிலாளர் சம்பந்தமான பதிவேடுகள்—வழக்குகளைக் கவனிக்க தனி கோர்ட்டு, பிறப்பு இறப்பு பதிவு உட்பட மாவட்டத் தலைநகரான காஞ்சியில் இல்லை. அதை அங்கே ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கூடுதல் மாவட்ட நீதிபதிகள் ஒன்றுக்கு மேலாக, பல மாவட்டங்களில் இருக்கிறார்கள் இங்கே கொள்கைக் குறிப்பிலேகூட கொடுக்கப்பட்டுள்ளது. அப்படி உதகை, சென்னை கோவை, மதுரை, திருச்சி போன்ற மாவட்டங்களில் கூடுதல் மாவட்ட நீதிபதிகள் இருக்கிறார்கள். அதைப்போல் காஞ்சிபுரத்திலேயும் ஒன்று தேவை. காரணம், சோளிங்கரிலே, பால் கலப்படத்திலே கைது செய்தாலும், அல்லது போக்குவரத்து விபத்திலே அங்கே கைது செய்தாலும் அவர்கள் செங்கற்பட்டுக்குச் சென்றாக வேண்டும். அங்கே அவர்களை ஜாமீனில் வெளியே எடுத்து அதன் பிறகுதான் அவர்கள் சம்பந்தப்பட்ட ஊர்களில் உள்ள வழக்கு மன்றங்களில் வழக்கை நடத்த வேண்டியிருக்கிறது. ஆகவே இரண்டு வழக்குரைஞர்களை வைக்க வேண்டிய ஒரு நிலைமை ஏழை எளிய மக்களுக்கு ஏற்படுகிறது. அதற்காக, காஞ்சிபுரத்திலேயே ஒரு மாவட்ட நீதிமன்றத்தை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே நீதிமன்றத்திற்கு அங்கே புதிய

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. கே. பாலாஜி] [1987 ஏப்ரல் 25

கட்டிடம் கட்டியிருக்கிறார்கள். அந்த நீதிமன்றத்திற்கு தேவையான மேசை நாற்காலிகள் தரப்படவில்லை. பெரிய அளவில் கட்டிடம் மட்டும் கட்டப்பட்டிருக்கிறது. கேட்டால் ஏற்கெனவே உள்ள நீதிமன்றத்திற்குரிய கட்டிடத்திலேயிருக்கிற மேசை நாற்காலிகளைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று சொல்லுகிறார்கள். அன்றைக்கு 10 அடிக்கு 25 அடி நீள அகலத்தில் கட்டப்பட்ட கட்டிடத்தில மேசை நாற்காலிகளை 60 அடிக்கு 20 அடி என்று கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் வைக்க முடியவில்லை. அதுவுமில்லாமல் 30 ஆண்டுகளுக்கு முன்னாலே வாங்கிக் கொடுக்கப்பட்ட மேசை நாற்காலிகள் உபயோகப்படுத்த முடியாமல் இருக்கிற காரணத்தால் அந்த வசதிகளை அங்கே புதிதாக ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணிஅடிக்கப் பெற்றது).

10 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த வழக்கறிஞர்களின் எண்ணிக்கையைவிட தற்போதுள்ள வழக்கறிஞர்களின எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்துள்ளதால் அதற்கு ஏற்றாற் போல் தேவையான வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ளவிரும்புகிறேன்.

அடுத்து, தமிழகத்தில் தற்போது காலியாக உள்ள முன்சிப்களின் பதவி எண்ணிக்கை 150 ஆகும். இதையெல்லாம் நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதோடுகூட காஞ்சிபுரத்தில் கூடுதலாக முன்சிப் பதவி நிரப்பப்படாத காரணத்தால் 1978 மற்றும் 1979ஆம் ஆண்டிலிருந்தே வழக்குகள் தாமதப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மேலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் காஞ்சிபுரத்திலும், மாவட்ட நீதிபதி செங்கற்பட்டிலும் இருக்கிற நிலைமை இருக்கிறது. இருவரும் ஒரே தலைமையிடத்தில்தான் இருக்க வேண்டும். அப்போதுதான் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மாவட்ட நீதிபதியின் ஆலோசனை தேவைப்படுகிறபோது கேட்பதற்கு வசதியாக இருக்கும். அப்படி இல்லாததால் இப்போது சங்கடம் ஏற்படுகிறது. ஆகவே மாவட்ட நீதிபதியை செங்கற்பட்டிலேயே இருக்கும்படி செய்தாலும், காஞ்சிபுரத்திற்குத் தனியாக கூடுதல் நீதிபதி ஒருவரை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு நிமிஷங்கள் கேட்டீர்கள். 3 நிமிஷங்கள் கொடுத்தாகிவிட்டது. முடித்துக் கொள்ளுங்கள். அடுத்து திரு. வேங்கடரமணன்.

திரு. கே. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நீதிமன்ற வளாகத்தில், 10 அல்லது 15 கட்டிடங்கள் இருக்கின்றன.... (மணி அடிக்கப்பெற்றது).



1987 ஏப்ரல் 25]

திரு. டி.ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம் என்கிற துரித-விரைவு ரயில் வேகமாகத் தன்னுடைய பயணத்தைச் செய்ய வேண்டுமானால் அதற்கு இரண்டு தண்டவாளங்கள்—அதாவது சட்டம் என்கிற தண்டவாளமும், வழிமுறைகள் என்கிற தண்டவாளமும் தேவை. ஆங்கிலத்தில் சொல்வதானால் லா அண்டு புரொசீஜர் என்கிற இரண்டு தண்டவாளங்கள் இல்லாவிட்டால் நீதி நிர்வாகம் என்கிற ரயில் கவிழ்ந்துவிடும் என்கிற சூழ்நிலை நாம் அறிந்ததுதான். ஆனால் தமிழகத்தில் குறிப்பாக இந்த மாமன்றத்தில்கூட சட்டமும், வழிமுறையும்—லா அண்டு புரொசீஜர்—இன்றைக்கு முறையாக வழிநடத்தப்படுவதில்லை என்கிற வேதனையான ஆதங்கத்தை வெளிப்படுத்த விரும்புகிறேன். justice should not only be done but should seem to be and manifestly done என்கிற ஆண்டுபலவானாலும் அழியாத கருத்தை இந்த மன்றத்தில் வைத்து, காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக நீதித்துறை பற்றிய சில கருத்துக்களை வெளியிட நான் விரும்புகிறேன்.

இன்றைக்கு முத்திரைக் காகித கட்டணம் குறைக்கவேண்டுமென பலவாறாகப் பல இடங்களிலும் இந்த மன்றத்திலும் சொல்லப்பட்டும், கடந்த 25-6-1985 அன்று நடைபெற்ற மானியக் கோரிக்கையிலும் சொல்லப்பட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைக் குறிப்பிட்டு அந்தக் கட்டணங்கள் குறைக்கப்படும் என்ற உறுதிமொழியை அளித்தார்கள். ஆண்டுகள் இரண்டாகியும்கூட அப்படிக் குறைக்கப்பட்ட விகிதங்கள் நடைமுறைக்கு வரவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதைப் போலவே அதைவிடக் கொடுமையான ஒன்றுபற்றி குறிப்பிட விரும்புகிறேன். கோர்ட் ஃபீஸ் ஆக்ட் செங்கோட்டைத் தாலுக்காவுக்கும், கன்னியாகுமரி மாவட்டத்திற்குமாகத் தனியாக பழைய கேரள அரசில் உள்ளதைப் போல் முத்திரைக் காகிதச் சட்டம் உள்ளதை மாற்றப்பட வேண்டும் என்ற எங்களின் நீண்ட நாள் கோரிக்கையை இந்த அரசு ஏற்றுக் கொண்டு அதற்காக சட்டத்தையே இயற்றி செக்ஷன் 7 (சி) உள்ளதை மாற்று என்று அந்தச் சட்டம் இயற்றப்பட்டு ஜனாதிபதியின் ஒப்புதலுக்கும் சென்று அது 1985ஆம் ஆண்டிலேயே சட்டமாக ஆகியும்கூட அதற்குப் பின்னர் கெஜட்டிலே வந்து ஆண்டுகள் இரண்டாகிவிட்டன. ஆனால் அவ்வாறு வெளிவந்த சட்டம் அமல்படுத்தத் தேவையான நோட்டிபிகேஷன் கடந்த 2 ஆண்டுகளாக வெளியிடப்படாததால் எங்கள் பகுதியில் உள்ள மக்கள் பெரும்பாலான கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். அந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று கொள்கை முறையில் ஏற்றுக் கொண்டு அந்தச் சட்டத்தையும் திருத்தி, ஜனாதிபதியின் ஒப்புதலையும் பெற்று, நோட்டிபிகேஷன் வராமல் இருக்கிற நிலைமை 2 ஆண்டுகளுக்கு மேல் எதற்காக இருக்கிறது என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

(பிற்பகல் 2—30)

அதைப் போலவே கோர்ட்ஃபீசை குறைக்க வேண்டும் என்று பல உறுப்பினர்கள் சொன்னார்கள். கோர்ட் ஃபீஸில் நீங்கள் சில மாற்றங்களைச் செய்வீர்களேயானால், தேவையான சில மாற்றங்களைச் செய்வீர்களேயானால் அதனால் அரசுக்கு அதிக வருமானம் வர வாய்ப்பிருக்கிறது என்பதைச் சொல்லி நான் சில ஆலோசனைகளைச் சொல்லுகிறேன். அதை மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் குறிப்பு எடுத்துக்கொண்டு அமல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஆர்டர் 13 ரூல் 1-ன் படி ஒருவர் ரிட்டர்ன் ஆஃப் டாக்குமெண்ட் என்று ஒரு காகிதத்திலே எழுதிப் போட் டால் டாக்குமெண்டைத் திருப்பித் தர வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் கோர்ட்டில் உள்ள வேலைப் பளுவின் காரணமாக ரிட்டர்ன் ஆஃப் டாக்குமெண்டுக்கான மனுவை வாபஸ் மனு என்று கிழித்துப் போட்டுவிடுகிறார்கள். ஏனென் றால் இதற்கு கோர்ட் பீஸ் ஒட்ட வேண்டாம். ஆகவே இதிலேயும் 75 பைசா ஸ்டாம்ப் ஒட்ட வேண்டும் என்று திருத்தம் கொண்டு வந்தால் வரவு-காகித 19 ஆம் எண் ரிஜிஸ்டரில் பதிவு செய்யப்படும். அது ஒரு முழுமையான மனுவுக்கு உள்ள அந்தஸ்தைப் பெறும். இப்போது நாங்கள் டாக்குமெண்ட் வரவில்லை என்று கேட்கும்போது அதற்காக அனுப்பப்பட்ட மனுவே கிடைக்காமல் போகும் நிலை இனிமேல் இருக்காது. நீங்கள் இப்படிச் செய்தால் இதனால் ஆண்டுக்கு இரண்டு இலட்சம் ரூபாய்க்கு மேல் அரசுக்கு வருமானம் வரும். வழக் கறிஞர்கள் என்ற முறையில் நாங்கள் முக்கால் ரூபாய் ஒட்டத் தயாராக இருக்கிறோம். ஆகவே இதை உடனடியாக அமல் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிவில் கோர்ட்டில் வக்காலத்துக்கு ஸ்டாம்ப் ஒட்டச் சொல்லு கிறார்கள். ஆனால் கிரிமினல் வழக்கில் 'மெமோ ஆப் அப்பியரன்ஸ்' போடும்போது ஸ்டாம்ப் ஒட்டத் தேவையில்லை என்று இருக்கிறது. இதையும் வக்காலத்தாக எடுத்துக்கொண்டு இதற்கும் ஸ்டாம்ப் ஒட்டுவதால் இதனால் அரசுக்கு வருமானம் வர வாய்ப்பு இருக்கிறது.

அடுத்து, ஏற்கனவே பல முறை நான் சொல்லிய ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன் ஏற்கெனவே அமைச்ச ரிடத்திலே இது பற்றி விவாதித்திருக்கிறேன். இப்போது முத்திரை காகிதம் கிடைப்பதிலே தட்டுப்பாடு இருக்கிறது. அதை நீக்க இரண்டு ஆலோசனைகளை நான் சொல்ல ஆசைப் படுகிறேன். முத்திரை காகித கட்டணத்தை நீதிமன்றத்திலே பணமாக பெற்றுக்கொள்ள உடனடியாக ஏற்பாடு செய்தால், இதற்காக கோர்ட் பீஸ் ஆக்டை மாற்றினால், தமிழகத்திலே இருக்கக்கூடிய முத்திரைத்தாள் தட்டுப்பாடு விரைவிலே தீரும்.





## இணைப்பு-II.

(இனம் எண் 2-ஐ காண்க.)

### சிறைத் துறையில் உள்ள பதவிகளின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை.

| தொடர் எண்ணும் பதவிகளின் பெயர்களும். | பதவிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1 சிறைத்துறைத் தலைமை இயக்குநர் .. | 1 |
| 2 சிறைத்துறைத் துணைத் தலைவர் .. | 1 |
| 3 கணக்கு அலுவலர் .. .. .. | 1 |
| 4 உதவிக் கணக்கு அலுவலர் .. .. | 1 |
| 5 சிறைத்துறைத், தலைமை இயக்குநரின் நேர்முக உதவியாளர். | 1 |
| 6 சிறைக் கண்காணிப்பாளர்கள் .. .. | 9 |
| 7 மாநில மகளிர் சிறை கண்காணிப்பாளர் | 1 |
| 8 கண்காணிப்பாளர், ஆண்கள் பிற்காப் பில்லம், புழல். | 1 |
| | (தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.) |
| 9 சிறை கூடுதல் கண்காணிப்பாளர்கள் .. | 7 |
| 10 புதுக்கோட்டை, இளங்குற்றவாளிகள் சீர் திருத்தப்பள்ளி மற்றும் வேலூர் மாநில மகளிர் சிறை துணைக் கண்காணிப் பாளர்கள். | 2 |
| 11 சிறை அலுவலர்கள் .. .. .. | 9 |
| 12 அரசு உதவி மருத்துவர்கள் .. .. | 12 |
| 13 தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் | 1 |
| 14 துணை தலைமை நன்னடத்தைக் கண் காணிப்பாளர். | 2 |
| | (இன்னும் நிரப்பப்பட வில்லை.) |
| 15 மண்டல நன்னடத்தை அலுவலர்கள் .. | 12 |

## பணியாளர் அமைப்பு.

### I. பொதுவான வகையினர்.

| தொடர் எண்ணும் பதவிகளின் பெயர்களும். (1) | பதவிகளின் எண்ணிக்கை (2) |
|---|---|
| 16 அலுவலக கண்காணிப்பாளர் .. .. | 9 |
| 17 உதவியாளர்கள் .. .. .. .. | 99 |
| 18 இளநிலை உதவியாளர்கள் .. .. | 84 |
| 19 சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் .. .. | 3 |
| 20 தட்டச்சர்கள் .. .. .. .. | 46 |
| 21 பதிவுரு எழுத்தர்கள் .. .. .. | 36 |
| 22 டபேதார் .. .. .. .. | 1 |
| 23 அலுவலக உதவியாளர்கள் .. .. | 94 |

### II. சிறப்பு வகையினர்.

| | |
|---|---|
| 24 மூதாய் .. .. .. .. .. | 4 |
| 25 துணைச் சிறை அலுவலர்கள .. .. | 16 |
| 26 உதவி கண்காணிப்பாளர் .. .. | 1 |
| 27 துணை உதவி கண்காணிப்பாளர் .. | 1 |
| 28 தனிக் கிளைச் சிறைகளின் கண்காணிப்பாளர்கள். | 3 |
| 29 உளவியல் வல்லுநர்கள் .. .. | 3 |
| 30 சமூக நலப்பணியாளர்கள் .. .. | 3 |
| 31 உதவிச் சிறை அலுவலர்கள் .. .. | 137 |
| 32 தொழிற்சாலை மேலாளர் .. .. | 1 |
| 33 செவிலியர் .. .. .. .. | 10 |
| 34 மருந்தாக்குநர்கள் .. .. .. | 19 |
| 35 ஆண்/பெண் செவிலியர் உதவியாளர்கள் | 31 |
| 36 முதன்மைத் தலைமைக் காவலர்/வாயிற் காப்பாளர்கள். | 39 |
| 37 சிறைக்காவலர்கள்/சிற்றலுவலர் (நிலை I). | 352 |
| 38 சிறைக்காவலர்/சிற்றலுவலர் (நிலை II). | 2,244 |
| 39 அலுவலக மேலாளர் (நிலை I) .. .. | 20 |



| தொடர் எண்ணும் பதவிகளின் பெயர்களும். (1) | பதவிகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 40 சிப்ப எழுத்தர்கள் .. .. .. | 10 |
| 41 இடைநிலை ஆசிரியர்கள் .. .. | 35 |
| 42 தொடக்க நிலை ஆசிரியர் .. .. | 1 |
| 43 உடற்பயிற்சி ஆசிரியர்கள் .. .. | 1 |
| 44 தச்சுப் பயிற்றுநர் கம்மியர் .. .. | 16 |
| 45 நெசவுப் பயிற்றுநர்கள் .. .. .. | 6 |
| 46 உற்பத்தி உதவியாளர் .. .. .. | 1 |
| 47 தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் .. | 5 |
| 48 புத்தகம் கட்டும் மேற்பார்வையாளர்கள் | 2 |
| 49 தையற் பயிற்றுநர்கள் .. .. .. | 12 |
| 50 கருமார் தொழில் பயிற்றுநர்கள் .. .. | 3 |
| 51 தச்சு முதலாள் .. .. .. .. | 3 |
| 52 மின் கம்பியாள் .. .. .. .. | 12 |
| 53 நன்னடத்தை அலுவலர்கள் .. .. | 96 |
| 54 நல அலுவலர்கள் .. .. .. | 10 |
| 55 லாரி ஓட்டுநர்கள் .. .. .. | 8 |
| 56 பிரம்புத் தொழில் பயிற்றுநர் .. .. | 1 |
| 57 லாரி ஆள் .. .. .. .. | 1 |
| 58 பூட் தயாரிப்புப்பணி மேற்பார்வையாளர். | 1 |
| 59 பூட் பணி கம்மியர் .. .. .. | 1 |
| 60 பூட் பணி மேஸ்திரிகள் .. .. .. | 2 |
| 61 அலுமினியப்பட்டரை முதலாள் .. .. | 1 |
| 62 வண்டிக்காரர் .. .. .. .. | 7 |
| 63 நெசவு ஆசிரியர் .. .. .. | 1 |
| 64 சாய வேலை ஆசிரியர் .. .. .. | 2 |
| 65 பாவு ஆசிரியர் .. .. .. .. | 1 |
| 66 இசைக்குழு ஆசிரியர் .. .. .. | 1 |
| 67 கொட்டகைப் பணி உதவி மேற்பார்வையாளர். | 1 |
| 68 பாவு அமைத்துக் கலிபேரடுத்துப்பணியாளர். | 1 |
| 69 கொதிகலன் பணியாள் .. — — | 1 |
| 70 பொருத்துத் தச்சர் .. — — | 2 |

| தொடர் எண்ணும் பதவிகளின் பெயர்களும். (1) | பதவிகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 71 தேசவுப் பணியாளர் .. .. .. | 5 |
| 72 விசையேற்று நிலையத்திற்குப் பொறுப்பு வகிக்கும் பொருத்துநர். | 1 |
| 73 கட்டுக் கட்டும் பணியாளர் .. .. | 1 |
| 74 குழாய் பொருத்துநர் .. .. .. | 1 |
| 75 கொதிகலன் எரியூட்டுபவர் .. .. | 1 |
| 76 மோட்டார் பணியாட்கள் .. .. | 1 |
| 77 மின் மேற்பார்வையாளர் .. .. | 1 |
| 78 தோட்டக்காரர் .. .. .. | 5 |
| 79 பிரைல் தயாரிப்பு உதவியாளர் .. | 1 |
| 80 நூற்பு ஆசிரியை .. .. .. | 1 |
| 81 செய்முறை விளக்குநர் .. .. .. | 1 |
| | (தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.) |
| 82 இயந்திரம் இயக்குபவர் (நிலை-1). .. | 1 |
| 83 தச்சர்கள் .. .. .. .. | 4 |
| 84 பால்காரர் .. .. .. .. | 1 |
| 85 கால்நடை உதவி ஆய்வாளர்கள் .. | 5 |
| 86 உலோகம் பற்றவைப்பவர்கள் .. .. | 2 |
| 87 தலைமை ஆயா .. .. .. .. | 1 |
| 88 ஆயாக்கள் .. .. .. .. | 8 |
| 89 மின்மோட்டார் பணியாட்கள் .. | 4 |
| 90 மேற்பார்வையாளர்கள்—ஆசிரியர்கள் (கைமுறை காகிதத் தொழில்.) | 5 |
| 91 சவுக்கார வேதியல் பணியாளர் .. | 1 |
| 92 என்ஜின் ஓட்டுநர் .. .. .. | 1 |
| 93 மெருகிடும் உதவியாளர் .. .. | 1 |
| 94 காகிதக் கூழ் செய்யும் உதவியாளர்கள் .. | 3 |
| 95 காவலாட்கள் .. .. .. .. | 11 |
| 96 இயல் மருத்துவத் தொழில் நுட்பப் பணியாளர். | 1 |





| தொடர் எண்ணும் பதவிகளின் பெயர்களும். (1) | பதவிகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 97 கால்நடை மேய்ப்பவர் .. .. | 1 |
| 98 டிராக்டர் ஓட்டுநர்கள் .. .. | 2 |
| 99 துப்புரவாளர்/பெருக்குபவர் .. .. | 14 |
| 100 சமையற்காரர்கள் .. .. .. | 20 |
| 101 டிராக்டர் சுத்தம் செய்பவர் .. .. | 1 |
| 102 துப்புரவுத் தொழிலாளர்கள் .. .. | 5 |
| 103 கைத்தொழில் பயிற்றுநர்கள் .. .. | 9 |
| 104 முடி திருத்துநர் .. .. .. | 9 |
| 105 உதவி வேளாண் அலுவலர் .. .. | 1 |

## இணைப்பு III.

(இனம் 2-ஐ காண்க.)

1976–77 முதல் 1985–86 ஆம் ஆண்டு வரை சிறைத்துறைத் தொடர்பான செலவு வருவாய் குறித்த விவரங்களையும், 1986–87 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டையும், 1987–88 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டையும் காட்டும் விவர அறிக்கை.

| I. செலவு : | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|
| 1976–77 .. .. .. .. | 4,56,44 |
| 1977–78 .. .. .. .. | 4,27,02 |
| 1978–79 .. .. .. .. | 4,53,23 |
| 1979–80 .. .. .. .. | 5,32,94 |
| 1980–81 .. .. .. .. | 5,61,44 |
| 1981–82 .. .. .. .. | 6,30,72 |
| 1982–83 .. .. .. .. | 6,38,62 |
| 1983–84 .. .. .. .. | 6,87,96 |
| 1984–85 .. .. .. .. | 8,34,66 |
| 1985–86 .. .. .. .. | 10,44,87 |
| 1986–87 திருத்திய மதிப்பீடு .. | 10,84,94 |
| 1987–88 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 10,01,76 |

[1987 ஏப்ரல் 25

II. வருவாய் வரவுகள்:

| | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| 1976–77 | .. .. .. .. | 1,18,61 |
| 1977–78 | .. .. .. .. | 1,24,99 |
| 1978–79 | .. .. .. .. | 1,14,02 |
| 1979–80 | .. .. .. .. | 80,43 |
| 1980–81 | .. .. .. .. | 1,41,20 |
| 1981–82 | .. .. .. .. | 1,60,13 |
| 1982–83 | .. .. .. .. | 1,53,57 |
| 1983–84 | .. .. .. .. | 1,34,06 |
| 1984–85 | .. .. .. .. | 1,25,89 |
| 1985–86 | .. .. .. .. | 1,48,14 |
| 1986–87 திருத்த மதிப்பீடு | .. .. | 1,60,16 |
| 1987–88 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | | 1,60,16 |

இணைப்பு IV.

(1-ம் இனத்தைக் காண்க.)

சிறைத்துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள நிறுவனங்கள்:

1. மத்தியச் சிறை, சென்னை.
2. மத்தியச் சிறை, வேலூர்.
3. மத்தியச் சிறை, கடலூர்.
4. மத்தியச் சிறை, திருச்சிராப்பள்ளி.
5. மத்தியச் சிறை, சேலம்.
6. மத்தியச் சிறை, கோயம்புத்தூர்.
7. மத்தியச் சிறை, மதுரை.
8. மத்தியச் சிறை, பாளையங்கோட்டை.
9. மாநில மகளிர் சிறை, வேலூர்.
10. சீர்திருத்தப்பள்ளி, புதுக்கோட்டை.
11. தனிக் கிளைச் சிறை, சேலம்.
12. தனிக் கிளைச் சிறை, கொக்கிரகுளம்.
13. தனிக் கிளைச் சிறை, திருச்சிராப்பள்ளி.
14. திறந்தவெளிச் சிறை, சிங்காநல்லூர்.
15. ஆண்கள் பிற்காப்பு இல்லம், புழல் (சென்னை).



1987 ஏப்ரல் 25]

I. செங்கல்பட்டு மாவட்டம்—

16. கிளைச் சிறை, சைதாப்பேட்டை.
17. கிளைச் சிறை, செங்கல்பட்டு.
18. கிளைச் சிறை, மதுராந்தகம்.
19. கிளைச் சிறை, பூவிருந்தவல்லி.
20. கிளைச் சிறை, திருவள்ளூர்.
21. கிளைச் சிறை, திருத்தணி.
22. கிளைச் சிறை, பொன்னேரி.
23. கிளைச் சிறை, காஞ்சிபுரம்.

II. கோயம்புத்தூர் மாவட்டம்—

24. கிளைச் சிறை, அவினாசி.
25. கிளைச் சிறை, மேட்டுப்பாளையம்.
26. கிளைச் சிறை, திருப்பூர்.
27. கிளைச் சிறை, உடுமலைப்பேட்டை.
28. கிளைச் சிறை, பொள்ளாச்சி.
29. கிளைச் சிறை, பல்லடம்.

III. பெரியார் மாவட்டம்.—

30. கிளைச் சிறை, தாராபுரம்.
31. கிளைச் சிறை, பவானி.
32. கிளைச் சிறை, ஈரோடு.
33. கிளைச் சிறை, கோபிசெட்டிப்பாளையம்.
34. கிளைச் சிறை, காங்கேயம்.
35. கிளைச் சிறை, சத்தியமங்கலம்.
36. கிளைச் சிறை, பெருந்துறை.

IV. நீலகிரி மாவட்டம்—

37. கிளைச் சிறை, உதகமண்டலம்.
38. கிளைச் சிறை, குன்னூர்.
39. கிளைச் சிறை, கூடலூர்.

V. வடாற்காடு மாவட்டம்—

40. கிளைச் சிறை, அரக்கோணம்.
41. கிளைச் சிறை, ஆம்பூர்.
42. கிளைச் சிறை, செய்யாறு.
43. கிளைச் சிறை, ஆரணி.
44. கிளைச் சிறை, செங்கம்.
45. கிளைச் சிறை, குடியாத்தம்.
46. கிளைச் சிறை, போளூர்.
47. கிளைச் சிறை. திருப்பத்தூர்.
48. கிளைச் சிறை, திருவண்ணாமலை.
49. கிளைச் சிறை, வாணியம்பாடி.
50. கிளைச் சிறை, வாலாஜாப்பேட்டை.
51. கிளைச் சிறை, வந்தவாசி.

VI. தென்னாற்காடு மாவட்டம்—

52. கிளைச் சிறை, கள்ளக்குறிச்சி.
53. கிளைச் சிறை, சிதம்பரம்.
54. கிளைச் சிறை, கடலூர்.
55. கிளைச் சிறை, செஞ்சி.
56. கிளைச் சிறை, காட்டுமன்னார்கோவில் (செயல்படவில்லை.)
57. கிளைச் சிறை, பரங்கிப்பேட்டை.
58. கிளைச் சிறை, திண்டிவனம்.
59. கிளைச் சிறை, திருக்கோயிலூர்.
60. கிளைச் சிறை, உளுந்தூர்பேட்டை.
61. கிளைச் சிறை, விழுப்புரம்.
62. கிளைச் சிறை, விருத்தாசலம்.
63. கிளைச் சிறை, பண்ருட்டி.

VII. சேலம் மாவட்டம்—

64. கிளைச் சிறை, ஆத்தூர்.
65. கிளைச் சிறை, நாமக்கல்.
66. கிளைச் சிறை, ஓமலூர்.



VII. சேலம் மாவட்டம்—தொடர்ச்சி.

67. கிளைச் சிறை, பரமத்தி.
68. கிளைச் சிறை, இராசிபுரம்.
69. கிளைச் சிறை, சங்ககிரி.
70. கிளைச் சிறை, திருச்செங்கோடு.

VIII. அண்ணா மாவட்டம்—

71. கிளைச் சிறை, திண்டுக்கல்.
72. கிளைச் சிறை, நிலக்கோட்டை.
73. கிளைச் சிறை, பழனி.
74. கிளைச் சிறை, வேடசந்தூர்.
75. கிளைச் சிறை, கொடைக்கானல்.

IX. மதுரை மாவட்டம்—

76. கிளைச் சிறை, மேலூர்.
77. கிளைச் சிறை, உசிலம்பட்டி.
78. கிளைச் சிறை, திருமங்கலம்.
79. கிளைச் சிறை, பெரியகுளம்.
80. கிளைச் சிறை, உத்தமபாளையம்.

X. கன்னியாகுமரி மாவட்டம்—

81. கிளைச் சிறை, தக்கலை.
82. கிளைச் சிறை, குழித்துறை.
83. கிளைச் சிறை, நாகர்கோவில்.

XI. இராமநாதபுரம் மாவட்டம்—

84. கிளைச் சிறை, திருவாடானை.
85. கிளைச் சிறை, பரமக்குடி.
86. கிளைச் சிறை, முதுகுளத்தூர்.
87. கிளைச் சிறை, இராமநாதபுரம்.

XII. காமராசர் மாவட்டம்—

88. கிளைச் சிறை, ஸ்ரீவில்லிபுத்தூர்.
89. கிளைச் சிறை, சாத்தூர்.
90. கிளைச் சிறை, அருப்புக்கோட்டை.
91. கிளைச் சிறை, விருதுநகர்.

XIII பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்—

92. கிளைச் சிறை, சிவகங்கை.
93. கிளைச் சிறை, திருப்பத்தூர்.

XIV திருச்சிராப்பள்ளி மாவட்டம்—

94. கிளைச் சிறை, அரியலூர்.
95. கிளைச் சிறை, செயங்கொண்டான்.
96. கிளைச் சிறை, குளித்தலை.
97. கிளைச் சிறை, லால்குடி.
98. கிளைச் சிறை, மணப்பாறை.
99. கிளைச் சிறை, முசிறி.
100. கிளைச் சிறை, பெரம்பலூர்.
101. கிளைச் சிறை, துறையூர்.
102. கிளைச் சிறை, கரூர்.

XV புதுக்கோட்டை மாவட்டம்—

103. கிளைச் சிறை, புதுக்கோட்டை.
104. கிளைச் சிறை, அறந்தாங்கி.
105. கிளைச் சிறை, கீரனூர்.
106. கிளைச் சிறை, திருமயம்.

XVI திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்—

107. கிளைச் சிறை, அம்பாசமுத்திரம்.
108. கிளைச் சிறை, சங்கரன்கோவில்.
109. கிளைச் சிறை, தென்காசி.
110. கிளைச் சிறை, நாங்குனேரி.

XVII சிதம்பரனார் மாவட்டம்—

111. கிளைச் சிறை, கோவில்பட்டி.
112. கிளைச் சிறை, தூத்துக்குடி.
113. கிளைச் சிறை, ஸ்ரீவைகுண்டம்.
114. கிளைச் சிறை, திருச்செந்தூர்.



XVIII தஞ்சாவூர் மாவட்டம்—

115. கிளைச் சிறை, கும்பகோணம்.
116. கிளைச் சிறை, மயிலாடுதுறை.
117. கிளைச் சிறை, மன்னார்குடி.
118. கிளைச் சிறை, நாகப்பட்டினம்.
119. கிளைச் சிறை, நன்னிலம்.
120. கிளைச் சிறை, பட்டுக்கோட்டை.
121. கிளைச் சிறை, பாபநாசம்.
122. கிளைச் சிறை, சீர்காழி.
123. கிளைச் சிறை, திருத்துறைப்பூண்டி.
124. கிளைச் சிறை, திருவையாறு.
125. கிளைச் சிறை, திருவாரூர்.
126. கிளைச் சிறை, தரங்கம்பாடி.
127. கிளைச் சிறை, திருவிடைமருதூர் (செயல்படவில்லை).
128. கிளைச் சிறை, தஞ்சாவூர்.

XIX தருமபுரி மாவட்டம்—

129. கிளைச் சிறை, ஓசூர்.
130. கிளைச் சிறை, அரூர்.
131. கிளைச் சிறை, தருமபுரி.
132. கிளைச் சிறை, கிருஷ்ணகிரி.
133. கிளைச் சிறை, ஊத்தங்கரை.

அரசினர் புதுவாழ்வு இல்லங்கள், பிற்காப்பு முகாம் ஆகியவற்றின் பெயர்கள் II, III ஆம் பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

## இணைப்பு V.

(6ஆம் இனத்தைக் காண்க.)

மத்திய சிறைகள், மகளிருக்கான மாநில சிறை, வேலூர் புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி/புழலிலுள்ள ஆடவர் பிற்காப்பு இல்லம் ஆகியவை ஒவ்வொன்றிலுமுள்ள தொழிற்சாலைகள்/ வாழ்க்கைத் தொழில்/கைவினைப் பொருட்கள் தயாரிப்பு நிலையங்கள் குறித்த பட்டியல்.

| தொடர் எண் மற்றும் நிறுவனத்தின் பெயர். | தொழில்கள். |
|---|---|
| (1) | (2) |
| 1 மத்திய சிறை, சென்னை.. | தச்சு வேலை, தையல், பினாயில் தயாரிப்பு, கூர்நாடா உற்பத்தி, புத்தகம் கட்டுதல், முத்திரை அரக்கு, காகித உற்பத்தி. |
| 2 மத்திய சிறை, வேலூர் ... | நெசவு, தையல், புத்தகம் கட்டுதல், தச்சு வேலை, காலணி தயாரித்தல், பலவகை. |
| 3 மத்திய சிறை, சேலம் .. | அலுமினியம், கருமார் பட்டறை, தச்சு வேலை, நெசவு, காகித உற்பத்தி, புத்தகம் கட்டுதல், தையல். |
| 4 மத்திய சிறை, கோயம்.. புத்தூர். | நெசவு, சாயம் தோய்த்தல், தையல், கூடாரம் தயாரித்தல், கைமுறை காகிதம் உற்பத்தி, புத்தகம் கட்டுதல், சோப்புத் தயாரித்தல், தச்சு வேலை. |
| 5 மத்திய சிறை, திருச்சிராப் பள்ளி. | தச்சு வேலை, நெசவு, பாய் முடைதல், தையல், புத்தகம் கட்டுதல், சோப்புத் தயாரித்தல். |
| 6 மத்திய சிறை, மதுரை .. | நெசவு, தையல், காகித உற்பத்தி, புத்தகம் கட்டுதல், தச்சு வேலை. |





| | |
|---|---|
| 7 மத்திய சிறை, பாளையங் கோட்டை. | தச்சு வேலை, நெசவு, தையல், கைமுறை காகித உற்பத்தி, புத்தகம் கட்டுதல். |
| 8 மத்திய சிறை, கடலூர் .. | நெசவு, தையல், தச்சு வேலை. |
| 9 ஆடவர் பிற்காப்பு இல்லம், புழல், சென்னை. | தச்சு வேலை, தையல், உலோக வேலை. |
| 10 பார்ஸ்டல் பள்ளி, புதுக் கோட்டை. | தச்சு வேலை, தையல், புத்தகம் கட்டுதல், கருமார் பட்டறை |
| 11 மாநில மகளிர் சிறை, வேலூர். | நாடா உற்பத்தி, முறுக்கு நூல் உற்பத்தி, தையல், நெசவு. |

## இணைப்பு VI.

(எளிய சிறு தொழில்கள்.)

(7ஆம் எண் இனத்தைக் காண்க.)

சிறைகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள எளிய சிறு தொழில்கள் குறித்த பட்டியல்.

| சிறையின் பெயர். | தொழிலின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 1 மத்திய சிறை, மதுரை .. | குழாய் பொருத்து வேலை. |
| 2 மத்திய சிறை, சென்னை.. | சாதாரண மின்கம்பி இணைப்பு பணி. |
| 3 மத்திய சிறை, பாளையங் கோட்டை. | குழாய் பொருத்து வேலை. |
| 4 மத்திய சிறை, வேலூர் .. | செங்கல் வேலை. |
| 5 மத்திய சிறை, திருச்சிராப் பள்ளி. | குழாய் பொருத்து வேலை. |
| 6 மத்திய சிறை, சேலம் .. | குழாய் பொருத்து வேலை. |
| 7 மத்திய சிறை, கடலூர் .. | சாதாரண மின்கம்பி இணைப்புப் பணி. |
| 8 மத்திய சிறை, கோயம்.. புத்தூர். | பெயர்ப் பலகை எழுதுதல் உட்பட வண்ணம் பூசும் பணி. |
| 9 பார்ஸ்டல் பள்ளி, புதுக் கோட்டை. | சாதாரண மின்கம்பி இணைப்புப் பணி. |

[1987 ஏப்ரல் 25

## அத்தியாயம் II.

### தமிழ்நாட்டில் அரசினர் புதுவாழ்வு இல்லங்கள்.

தொழு நோயால் அவதியுறும் பிச்சைக்காரர்கள் நோயைக் குணப்படுத்தவும், அவர்கட்கு புதுவாழ்வு அளிக்கவும் தமிழ்நாடு அரசு கீழ்க்காணும் 10 இடங்களில் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கென புதுவாழ்வு இல்லங்களை அமைத்துள்ளது :—

1. பரனூர், செங்கற்பட்டு மாவட்டம்.
2. உளுந்தூர்பேட்டை, தென்னாற்காடு மாவட்டம்.
3. பர்கூர், தருமபுரி மாவட்டம்.
4. புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம்.
5. விண்ணப்பள்ளி, பெரியார் மாவட்டம்.
6. மனையேரிப்பட்டி, தஞ்சாவூர் மாவட்டம்.
7. யா. புதுப்பட்டி, மதுரை மாவட்டம்.
8. மல்லவாடி, வட ஆற்காடு மாவட்டம்.
9. செல்லியம்பட்டி, தருமபுரி மாவட்டம்.
10. தேவியாக்குறிச்சி, சேலம் மாவட்டம்.

மருத்துவப் பணி மற்றும் குடும்ப நல இயக்குநரின் கீழ் இயங்கி வந்த அரசு புதுவாழ்வு இல்லங்கள், 1984ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 1 ஆம் நாள் முதல் சிறைத் துறைத் தலைமை இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டு இயங்கி வருகின்றன.

அனுமதி மற்றும் நீக்கம் :

ஒவ்வொரு இல்லத்திலும் 400 பெரியவர்களும் (ஆண் பெண் உட்பட), 25 சிறுவர்களும் தங்குவதற்கு வசதியுள்ளது. தொழுநோயால் பாதிக்கப்பட்டுள்ள பிச்சைக்காரர்களும், பிச்சை எடுத்ததற்காகத் தண்டனை வழங்கப்பட்டவர்களும் இவ்வில்லங்களில் அனுமதிக்கப்படுகிறார்கள். மணமானவர்களில் கணவனோ அல்லது மனைவியோ தொழுநோயால் பாதிக்கப்பட்டு பிச்சை எடுப்பவராக இருந்தால், மற்றவரையும், இவ்வில்லத்தில் சேர்க்க அனுமதி உள்ளது. அவர்களுக்குக் குழந்தைகள் இருப்பின் அவர்களும் இவ்வில்லங்களில் சேர்க்கப்படுகின்றனர்.

உள்ளிருப்போர்கள், தொழுநோய் இல்லாதவர்கள் என்று மருத்துவ அதிகாரிகளால் சான்று அளிக்கப்பட்டால், அவர்கள் சொந்த முயற்சியில் வாழ்க்கை நடத்த இயலுமாயின், அவர்கள் வெளியில் அனுப்பப்படுகிறார்கள். மேலும் திரும்பத் திரும்ப ஒழுங்கற்ற முறையில் நடந்து கொள்வோர் மற்றும் இல்லம் சீரிய வகையில் நடைபெற தடையாய் இருப்போர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வெளியே அனுப்பப்படுகிறார்கள்.



1987 ஏப்ரல் 25]

உள்ளிருப்போருக்கு அளிக்கப்படும் வசதிகள் :

இவ்வில்லத்திலுள்ள உள்ளிருப்போருக்கு இலவசமாகத் தங்க வசதியும், உணவு, உடை, மருத்துவ வசதி மற்றும் பல தொழில் களில் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. அவர்கள் விளையாடுவதற்கான வசதியும், திரைப்படம் காண்பிக்க வசதியும், நூலகம் போன்ற வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

உணவு :

இல்லத்திலிருப்பவர்களுக்குக் காலைச் சிற்றுண்டியும், தேநீரும், மதிய உணவும், மாலை தேநீரும் மற்றும் இரவு உணவும் அளிக்கப்படுகின்றது. நாள்தோறும் மோர் வழங்கப்படுகிறது. வாரம் ஒரு முறை இறைச்சியும் வழங்கப்படுகிறது. இதற்காக வயது வந்த நோயாளி ஒவ்வொருவருக்கும் தினமும் ரூ. 4.00-ம் அவர்களைச் சார்ந்த உறவினர் மற்றும் சிறுவருக்கு தினமும் ரூ. 2.50-ம் செலவிடப்படுகிறது. சுதந்திர தினம், காந்தியடிகள் பிறந்த நாள் மற்றும் முக்கியமான நாட்களிலும், ஒவ்வொரு உள்ளிருப்போருக்கும், கூடுதல் ரூபாய் ஒன்றுக்கு சிறப்பு உணவு வழங்கப்படுகிறது.

இருப்பிடம் :

உளுந்தூர்ப்பேட்டை, பர்கூர் இல்லங்களைத் தவிர மற்ற எல்லா இல்லங்களும் குடும்பத்தினர்கள் தங்கக்கூடிய அறைகள் கொண்ட 4 தொகுதிகளாக (பிளாக்) கீழ் தளத்தில் கட்டப்பட்டுள்ளன. மேலும், முதல் மாடியில் தனியாள் தங்குவதற்குத் துயில் கூடங்கள் (Dormitries) கட்டப்பட்டு உள்ளன. உளுந்தூர்ப்பேட்டை, பர்கூர் இல்லங்கள் ஒற்றைக் கட்டிடமாகவும் நிரந்தர கொட்டகையாகவும் கட்டப்பட்டுள்ளன.

உடை :

பொங்கல் நாள், சுதந்திர நாள் அன்று உள்ளிருப்போருக்கு இருமுறை உடைகள் வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு ஆண்டு தோறும் இரப்பர் காலணிகளும் வழங்கப்படுகின்றன.

இதர வசதிகள் :

பாய், தட்டு, கரண்டி, எண்ணெய், சோப்பு, பற்பொடி, பல்துலக்கும் பிரஷ் (விரல்கள் செம்மையாக இல்லாதவர்களுக்கு மட்டும்) ஆகிய பொருட்கள் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்படுகின்றன. கண் நோயால் அவதியுறுபவர்களுக்கு, பரிசோதனைக்குப் பின் மூக்குக் கண்ணாடிகளும் மற்றும் கறுப்பு மூக்குக் கண்ணாடிகளும் இலவசமாக அளிக்கப்படுகின்றன. மாவட்ட காச நோய் மருத்துவ நிபுணர்களும், மற்றும் கண் மருத்துவ நிபுணர்களும் இவ்வில்லவாசிகளின் மற்ற நோய்களையும் [illegible]

இவ்வில்லங்களைப் பார்வையிடுகின்றனர். இல்லவாசிகளுக்காக இரு தினசரி செய்தித் தாள்கள் வாங்கப்படுகின்றன. அவர்களின் இலக்கியம் மற்றும் பொதுக் கல்வி மேம்பாட்டிற்காக இலக்கிய நூல்கள் வழங்கப்படுகின்றன.

இல்லவாசிகளின் குழந்தைகளுக்கு வழங்கப்படும் வசதிகள் :

தொழுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் ஏத்தாப்பூர் என்னும் இடத்தில் நடத்தப்படும் சிறப்புப் பள்ளியில் அனுமதிக்கப்படுகின்றனர். மேற்படி நோயினால் பாதிக்கப்படாத குழந்தைகள் கூடுமான வரையில் தனியாகப் பிரிக்கப்பட்டு, இவ்வில்லங்களில் அருகிலுள்ள பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர்.

முதன்மை செலவினங்களுக்காகவும், சீருடை, புத்தகங்கள், பெட்டி முதலியவைகளுக்காகவும் ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ. 75 அரசு வழங்குகிறது.

மறுவாழ்வு இல்லங்களிலிருந்து பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் மேற்கொண்டும் படிப்பதற்காக, வகுப்பு வாரியாக ஆண்டு தோறும் கீழ்க்கண்டவாறு செலவு செய்ய அரசு அனுமதி வழங்கியுள்ளது :—

இரண்டாம் வகுப்பு முதல் ஏழாம் வகுப்பு வரை—ரூ. 20 (ரூபாய் இருபது மட்டும்), ரூ. 120 (ஆறு ஆண்டுக்கு).

எட்டாம் வகுப்பு மற்றும் ஒன்பதாம் வகுப்புகளுக்கு.—ரூ. 30 (ரூபாய் முப்பது மட்டும்), ரூ. 60 (ரூபாய் அறுபது மட்டும்) இரண்டு ஆண்டுக்கு).

பத்தாம் வகுப்பிற்கு.—ரூ. 50 (ரூபாய் ஐம்பது மட்டும்).

பதினொன்று மற்றும் பன்னிரண்டாம் வகுப்புகளுக்கு.—ரூ. 75 (ரூபாய் எழுபத்தைந்து மட்டும்), ரூ. 150 (இரண்டு ஆண்டுக்கு).

விளையாட்டும் பொழுதுபோக்கும் :

ஒவ்வொரு இல்லத்திலும் விளையாட்டுப் பொருட்கள் வாங்குவதற்கு ஒவ்வொரு ஆண்டுக்கும் ரூ. 200 அரசு அனுமதித்துள்ளது. ஒவ்வொரு இல்லத்திலும் இல்லவாசிகள் இன்புற்று இருக்க இசைக் கருவிகளும் அளிக்கப்பட்டிருக்கின்றன.

மருத்துவ வசதிகள் :

இல்லவாசிகளுக்கு மருத்துவ சிகிச்சை இலவசமாக அளிக்கப்படுகிறது. இரு மருத்துவ அதிகாரிகள், இரு செவிலியர்கள், ஒரு ஆய்வுக்கூட தொழில் நுட்பப் பணியாளர், ஒரு மருந்தாளுநர் ஓர் உடற் கூறு பயிற்சியாளர், ஒரு தாய்மை மருத்துவத் துணைச் செவிலியர், ஓர் உதவி ஆண் செவிலியர், ஓர் உதவி பெண் செவிலியர் முதலானவர்கள் ஒவ்வொரு இல்லத்திலும்





இல்லவாசிகளின் மருத்துவத் தேவைகளைக் கவனிக்கின்றனர். தொழுநோயுள்ளவர்களுக்குத் தொழுநோய் சிகிச்சை அளிப்பதோடு மட்டுமின்றி, மற்ற நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. தீவிர சிகிச்சை பெற வேண்டிய நோயாளிகள், 10 பேர் தங்கக்கூடிய தனி வார்டுகளில் அனுமதிக்கப்பட்டு அவர்களுக்குச் சிறப்பு உணவு மற்றும் மருந்துகள் அளிக்கப்படுகின்றன. எல்லா வசதிகளும் கொண்ட அறுவை சிகிச்சைக் கூடங்கள், பர்கூர், உளுந்தூர்ப்பேட்டை இல்லங்களைத் தவிர மற்ற இல்லங்களில் உள்ளன. கைவிரல் முடமானவர்கள், கால் விளங்காதவர்கள் மற்றும் உடற்கூறு சரியில்லாத நிலையில் உள்ளவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. இல்லவாசிகளாலேயே செய்யப்படும் தனிச் சிறப்பு வாய்ந்த காலணிகள் மற்றும் செயற்கை உறுப்புகள் (கை, கால்) முதலியவைகள் வழங்க இல்லம் ஒன்றுக்கு, ஆண்டு ஒன்றுக்கு, ரூ. 300 செலவிட அரசு அனுமதி வழங்கியுள்ளது.

உடற்பயிற்சியும் தொழிற் பயிற்சியும் :

ஒவ்வொரு இல்லத்திலும் ஓர் உடற்கூறு பயிற்சியாளர் உள்ளார். இவர் மின் கருவி (Electrical Stimulatory) மெழுகு தொட்டி (Wax B th) ஆகியவற்றின் உதவியைக் கொண்டு ஊனமுற்ற உறுப்புகளுக்கும், உடற்கூறு பயிற்சி தேவையுள்ள உள்ளிருப்போர் அனைவருக்கும் பயிற்சி அளிக்கிறார். குடற்புண் மற்றும் உருச்சிதைந்த நோயாளிகளை உடற்கூறு பயிற்சியாளர்களும் மற்றும் மருத்துவ அதிகாரிகளும் அறுவை சிகிச்சைக்காக தெரிந்தெடுக்கின்றனர்.

இல்லவாசிகளுக்கு நுண்ணிய துளையுடன் கூடிய ரப்பர் காலணிகள் அளிக்கப்படுகின்றன.

தலைமை தொழில் ஈடுபாட்டு பயிற்சியாளர் கடமைகளும் பணிகளும் :

தலைமை அலுவலகத்தில் உள்ள தலைமைத் தொழில் ஈடுபாட்டு பயிற்சியாளர் அனைத்து இல்லங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் பட்டியலை ஆய்வு செய்வதிலும், உடற்கூறு பயிற்சியாளர்கள், மற்றும் ஆய்வுக் கூட தொழில் நுட்பப் பணியாளர்களின் குறிப்புகளைக் கவனிப்பதிலும் ஈடுபட்டுள்ளார். இவர் மறுவாழ்வு இல்லங்களைப் பார்வையிடும்போது அங்குள்ள உற்பத்திப் பிரிவுகள் சரியாக இயங்குகின்றனவா என்பதையும் உடற்கூறு பயிற்சியாளர்கள் நடவடிக்கைகள் மற்றும் ஆபத்தான தொழில் நுட்ப விஷயங்களை நோயாளிகளுக்கு விளக்குவதுடன், நோயாளிகளின் சக்திக்கேற்ப வெவ்வேறு தொழில் பயிற்சிக்கு இல்லவாசிகளைத் தெரிந்தெடுக்கின்றனர். உணர்வு இல்லாதவர்களுக்கு ஒரு பொதியமைப்பு மற்றும் முறிந்த எலும்பு கட்ட

[1987 ஏப்ரல் 25

உதவும் வரிச்சில்கள், நுண்ணிய துளையுடன் கூடிய ரப்பர் பாதுகாப்புள்ள கருவிகளையும், பாதுகாப்பு மற்றும் தற்காப்பு சாதனங்களையும் கொடுக்கும்படியும், மறு வாழ்வு திட்டங்களுக்கு நோயாளிகளைத் தயார் செய்யும்படியும் உடற்கிச்சைத் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு அவர் ஆலோசனை வழங்குகிறார்.

இல்லவாசிகளின் மறுவாழ்வுக்கான நடவடிக்கைகள் :

இவ்வில்லங்களில் அனுமதிக்கப்பட்டுள்ள தொழுநோயாளிகளில் உடல் நலத்துடன் இருப்போருக்கு கீழ்க்கண்ட துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றது :—

1. துணி நெய்தல் (கைத்தறி விசைத்தறி).
2. பாய் பின்னுதல்.
3. செருப்பு செய்தல் மற்றும் பழுது பார்த்தல்.
4. தையல்.
5. தச்சு வேலை.
6. விவசாயம்.
7. கிராமப்புற நூற்பு கேந்திரம் (எகராட்டை).
8. பட்டுப் புழு வளர்ப்பு.
9. காகித உறை செய்தல் (புதுக்கோட்டை இல்லத்தில்).

நவீன தொழிற்சாலையுடன் அமைந்த தொழிற்கூடம் :

பரனூர் மறுவாழ்வு இல்லத்தில், காட்பாடியிலுள்ள ஸ்விடன் நாட்டு செஞ்சிலுவைச் சங்க மறுவாழ்வு தொழிற்சாலையினரால் அமைக்கப்பட்டுள்ள நவீன தொழிற்சாலையுடன் அமைந்த தொழிற் கூடத்தில், பயிற்சி அளிக்கப்பட்டவர்கள், திருச்சி, காட்பாடி ஆகிய இடங்களில் உள்ள மேற்படி சங்கத் தொழிற்சாலைகளிலும், தனியார் நிறுவனங்களிலும் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், உள்ளிருப்போருக்கு பட்டறைகளில் (லேத்) தேவையான பயிற்சி அளிக்கப்படுகிறது. முக்கியமாக, இத்தொழிற்சாலைகளில் கட்டுப்பாடான ஒழுங்கு முறையில், இல்லவாசிகளுக்கு அளிக்கப்படும் பயிற்சிகள் அவர்களின் சுதந்திரம் மற்றும் தன்னம்பிக்கையை வளர்க்க உதவுகின்றன.

கைத்தறிகள் மற்றும் விசைத்தறிகள் :

தற்பொழுது 135 கைத்தறிகளும், 77 பாய் தறிகளும் எல்லா இல்லங்களிலும் உள்ளன. இல்லவாசிகளால் தயாரிக்கப்படும் பொருட்கள் அவர்களின் தேவைகள் போக, மீதமுள்ளவை அருகிலுள்ள மாவட்ட மருத்துவமனைகளுக்கு விற்கப்படுகின்றன.



1987 ஏப்ரல் 25]

கிராமப்புற நூற்பு கேந்திரம், யா. புதுப்பட்டி மற்றும் உளுந்தூர்ப்பேட்டை இல்லங்களில் நிறுவப்பட்டுள்ளது. இவைகளில் பிரதி மாதம் 10,000 சிட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. 34 தையல் மிஷின்கள் இவ்வில்லங்களில் உள்ளன. இல்லவாசிகளுக்கு வழங்கப்படும் உடைகள், தையல் கலையில் தேர்ச்சி பெற்ற இல்லவாசிகளாலேயே தைக்கப்பட்டு அளிக்கப்படுகின்றன.

காகித உறை தயாரிப்புப் பிரிவு :

புதுக்கோட்டை அரசு மறுவாழ்வு இல்லத்தில் காகித உறை தயாரிப்புப் பிரிவு 1–2–1978 முதல் இயங்கி வருகிறது.

தமிழ்நாட்டிலுள்ள தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்களிலுள்ள இல்லவாசிகளின் எண்ணிக்கை, இல்லங்களின் உற்பத்தித் திறன், உற்பத்திப் பொருட்கள் விற்பனை விவரம், இல்லவாசிகள் வேலைக்கு அமர்த்தப்பட்ட எண்ணிக்கை, அலுவலர்களைப் பற்றிய விவரங்கள் மற்றும் இல்லங்களில் தயாரித்த பொருட்களின் விற்பனை மூலம் கிடைத்த ஆதாய/நட்ட விவரங்கள் முறையே அட்டவணைகள் 1, 2 (அ), 2(இ), 3, 4, 5 மற்றும் 6-ல் உள்ளன.

அட்டவணை 1.

அரசு மறுவாழ்வு இல்லங்களில் நவம்பர் 1986 நிலவரப்படி தங்கியுள்ள உள்ளிருப்போர் விவரம்.

| வரிசை எண்ணும் புது வாழ்வு இல்லத்தின் பெயரும். | பெரியோர்கள். | | சிறியோர்கள். | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | ஆண்கள். | பெண்கள். | ஆண்கள். | பெண்கள். | சிறார். | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. பரூர் .. | 214 | 154 | 19 | 20 | 16 | 423 |
| 2. உளுந்தூர்ப்பேட்டை | 38 | 24 | 6 | 4 | 3 | 75 |
| 3. பர்கூர் .. | 183 | 132 | 2 | 2 | 21 | 340 |
| 4. புதுக்கோட்டை | 244 | 117 | 5 | 3 | 10 | 379 |
| 5. மனைவேரிப்பட்டி | 280 | 101 | 7 | 8 | 7 | 403 |
| 6. யா. புதுப்பட்டி | 248 | 103 | 9 | 6 | 10 | 376 |
| 7. மல்லவாடி .. | 215 | 105 | 6 | 6 | 10 | 342 |
| 8. தேவியாக்குறிச்சி | 223 | 130 | 12 | 11 | .. | 376 |
| 9. விண்ணப்பள்ளி | 130 | 63 | 4 | 2 | 1 | 200 |
| 10. செல்லியம்பட்டி | 152 | 81 | 3 | .. | 1 | 237 |
| மொத்தம் .. | 1,927 | 1,010 | 73 | 62 | 79 | 3,151 |



அட்டவணை 2 (அ).

புதுவாழ்வு இல்லங்களில் உற்பத்தி பொருட்களின் விவரம் (அக்டோபர் 1985 முதல் செப்டம்பர் 1986 வரை).

| வரிசை எண்ணும் புதுவாழ்வு இல்லத்தின் பெயரும். | காய்கறி. | தானியம். | இலவம்பஞ்சு காய்கள். | எலுமிச்சை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | கிலோ கிராம். | கிலோ கிராம். | எண்ணிக்கை. | எண்ணிக்கை. |
| 1. பரூர் .. .. .. | .. | .. | .. | .. |
| 2. உளுந்தூர்ப்பேட்டை .. | 7 | 84 | .. | .. |
| 3. பர்கூர் .. .. .. | 184 | 322 | .. | .. |
| 4. புதுக்கோட்டை .. .. | 1,076.60 | .. | .. | .. |
| 5. மனைவேரிப்பட்டி .. .. | 2,677.50 | .. | .. | .. |
| 6. யா. புதுப்பட்டி .. .. | 239.00 | .. | .. | .. |
| 7. மல்லவாடி .. .. | 795.23 | .. | .. | .. |
| 8. தேவியாக்குறிச்சி .. .. | 3,028.00 | .. | 4,000 | 200 |
| 9. விண்ணப்பள்ளி .. .. | .. | .. | .. | .. |
| 10. செல்லியம்பட்டி .. .. | 749.00 | 217 | .. | .. |
| மொத்தம் .. | 8,756.33 | 623 | 4,000 | 200 |

அட்டவணை—2 (அ)—தொடர்ச்சி.

புதுவாழ்வு இல்லங்களில் உற்பத்தி பொருட்களின் விவரம் (அக்டோபர் 1985 முதல் செப்டம்பர் 1986 வரை)—தொடர்ச்சி.

| வரிசை எண்ணும் புதுவாழ்வு இல்லத்தின் பெயரும். (1) | தேங்காய். (6) | விறகு. (7) | துடைப்பம். (8) | பாய் (9) | காலணி. (Shes) (10) |
|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | கிலோ கிராம். | எண்ணிக்கை. | எண்ணிக்கை. | எண்ணிக்கை. |
| 1. பரூர் | .. | .. | .. | 559 | 340 |
| 2. உளுந்தூர்ப்பேட்டை | .. | 740 | .. | 663 | 220 |
| 3. பர்கூர் | 270 | .. | .. | 44 | .. |
| 4. புதுக்கோட்டை | 230 | .. | .. | 695 | 396 |
| 5. மணியேரிப்பட்டி | 674 | 596 | .. | 954 | 61 |
| 6. யா. புதுப்பட்டி | 82 | 850 | .. | 964 | 180 |
| 7. மல்லவாடி | 188 | 2,000 | .. | 1,339 | 230 |
| 8. தேவியாக்குறிச்சி | 591 | .. | .. | 901 | 290 |
| 9. விண்ணப்பள்ளி | .. | .. | .. | 96 | .. |
| 10. செல்லியம்பட்டி | .. | 575 | 169 | 340 | 80 |
| மொத்தம் | 2,015 | 4,761 | 169 | 6,575 | 1,797 |



அட்டவணை 2(இ).

புதுவாழ்வு இல்லங்களில் உற்பத்திப் பொருட்கள் விவரம் (1985 அக்டோபர் முதல் செப்டம்பர் 1986 வரை).

| புதுவாழ்வு இல்லத்தின் பெயர். (1) | தையல் மையம். சட்டை. (2) | ரவிக்கை. (3) | பாவாடை. (4) | சிறு பிள்ளைகள் ஆடை. (5) | கட்டு கட்டும் துணி. (6) | சல்லாத் துணி. (7) | காடா துணி. (8) |
|---|---|---|---|---|---|---|---|
| | (எண்ணிக்கையில்.) | | | | (மீட்டரில்.) | | |
| 1. பரூர் | 490 | 215 | 145 | 226 | 37,582 | .. | 1,119 |
| 2. உளுந்தூர்ப்பேட்டை | 212 | 170 | 141 | 166 | 2,224 | .. | 160 |
| 3. பர்கூர் | 180 | 170 | 170 | .. | 396 | 388 | 352 |
| 4. புதுக்கோட்டை | 227 | 118 | 110 | 60 | 1,990 | .. | 100 |
| 5. மணியேரிப்பட்டி | 475 | 180 | 192 | 71 | 450 | .. | 120 |
| 6. யா. புதுப்பட்டி | 240 | 98 | 214 | 53 | 4,184 | .. | 410 |
| 7. மல்லவாடி | 368 | 160 | 117 | 76 | 9,443 | .. | 490 |
| 8. தேவியாக்குறிச்சி | 467 | 197 | 337 | 101 | 3,960 | .. | 1,140 |
| 9. விண்ணப்பள்ளி | .. | .. | .. | .. | 4,634.50 | .. | .. |
| 10. செல்லியம்பட்டி | 154 | 157 | 90 | 44 | 4,840 | .. | 22 |
| மொத்தம் | 2,813 | 1,465 | 1,516 | 797 | 69,703.50 | 388 | 3,913 |

அட்டவணை 2(இ)—தொடர்ச்சி.

புதுவாழ்வு இல்லங்களில் உற்பத்திப் பொருட்கள் விவரம் (1985 அக்டோபர் முதல் செப்டம்பர் 1986 வரை)—தொடர்ச்சி.

| புதுவாழ்வு இல்லத்தின் பெயர். (1) | சேலை. (9) | வேட்டி. (10) | துண்டுகள். (11) | சட்டைத் துணி மற்றும் ரவிக்கை. (12) | அம்பர் சர்க்கா மையம். (13) |
|---|---|---|---|---|---|
| | (எண்ணிக்கையில்) | | | (மீட்டரில்:) | (சிட்டங்கள்) |
| 1. பரனூர் .. .. .. | 325 | .. | 800 | .. | .. |
| 2. உளுந்தூர்ப்பேட்டை .. | 120 | .. | .. | 368 | 45,175 |
| 3. பர்கூர் .. .. .. | 176 | 482 | 756 | .. | .. |
| 4. புதுக்கோட்டை .. .. | .. | 200 | 420 | .. | .. |
| 5. மனையேரிப்பட்டி .. | 138 | 185 | 248 | 360 | .. |
| 6. பா. புதுப்பட்டி .. .. | 137 | 184 | 860 | 656 | 96,020 |
| 7. மல்லவாடி .. .. | 165 | 286 | 594 | 244 | .. |
| 8. தேவியாக்குறிச்சி .. | 291 | 396 | 492 | .. | .. |
| 9. விண்ணப்பள்ளி .. .. | .. | .. | .. | .. | .. |
| 10. செல்லியம்பட்டி .. .. | 44 | 143 | .. | 484 | .. |
| மொத்தம் .. | 1,396 | 1,820 | 4,170 | 2,112 | 1,41,195 |



1987 ஏப்ரல் 25]

அட்டவணை 3.

அரசு புதுவாழ்வு இல்ல உற்பத்திப் பொருட்களின் விற்பனை விபரம்

(ஜனவரி 1986 முதல் டிசம்பர் 1986 முடிய)

| புது வாழ்வு இல்லத்தின் பெயர். (1) | பாய்கள். (2) | கட்டு கட்டும் துணி. (3) |
|---|---|---|
| | (எண்ணிக்கை) | (மீட்டர்) |
| 1. பரனூர் .. .. .. | 23 | 23,611 |
| 2. உளுந்தூர்பேட்டை .. .. | 1,278 | 1,050 |
| 3. பர்கூர் .. .. .. | 105 | .. |
| 4. புதுக்கோட்டை .. .. | 360 | .. |
| 5. மனையேரிப்பட்டி .. .. | 744 | .. |
| 6. பா. புதுப்பட்டி .. .. | 500 | 2,230 |
| 7. மல்லவாடி .. .. .. | 814 | 8,400 |
| 8. தேவியாக்குறிச்சி .. .. | .. | .. |
| 9. விண்ணப்பள்ளி .. .. | .. | .. |
| 10. செல்லியம்பட்டி .. .. | .. | 1,608 |
| மொத்தம் .. | 3,814 | 36,899 |

அட்டவணை 4.

ப[illegible]யில் அமர்த்தப்பட்ட இல்லவாசிகளின் எண்ணிக்கை (1985 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் 1986 ஆம் ஆண்டு செப்டம்பர் வரை).

| மாதங்கள். | அரசு புதுவாழ்வு இல்லங்கள். | | | | |
|---|---|---|---|---|---|
| | பரனூர். | உளுந்தூர் பேட்டை. | பர்கூர். | புதுக்கோட்டைமனை (யேரிப்பட்டி) | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1985 :— | | | | | |
| அக்டோபர் .. .... | 100 | 150 | 84 | 125 | 69 |
| நவம்பர் .. .. | 99 | 146 | 86 | 127 | 69 |
| டிசம்பர் .. .. | 99 | 150 | 85 | 122 | 176 |
| 1986 :— | | | | | |
| ஜனவரி .. .. | 100 | 152 | 85 | 123 | 71 |
| பிப்ரவரி .. .. | 91 | 154 | 93 | 122 | 73 |
| மார்ச் .. .. | 97 | 119 | 85 | 119 | 79 |
| ஏப்ரல் .. .. | 102 | 107 | 78 | 126 | 75 |
| மே .. .. .. | 100 | 96 | 81 | 116 | 65 |
| ஜூன் .. .. | 92 | 36 | 79 | 115 | 63 |
| ஜூலை .. .. | 94 | 39 | 81 | 118 | 65 |
| ஆகஸ்டு .. .. | 89 | 33 | 81 | .. | 72 |
| செப்டம்பர் .. .. | 90 | 33 | 85 | .. | 71 |
| மொத்தம் .. | 1.153 | 1,215 | 1,003 | 1,213 | 948 |



| மாதங்கள் | அரசு புதுவாழ்வு இல்லங்கள். | | | | |
|---|---|---|---|---|---|
| | பா.புதுப் பட்டி | மல்லவாடி. | தேவியாக் குறிச்சி. | சின்னப் பள்ளி. | செல்லியம் பட்டி. |
| (1) | (7) | (8) | (9) | (10) | (11) |
| 1985 :— | | | | | |
| அக்டோபர் .. .. | 145 | 93 | 117 | .. | 68 |
| நவம்பர் .. .. | 135 | 92 | 114 | .. | 75 |
| டிசம்பர் .. .. | 146 | 132 | 123 | .. | 75 |
| 1986 :— | | | | | |
| ஜனவரி .. .. | 143 | 127 | 130 | .. | 73 |
| பிப்ரவரி .. .. | 140 | 120 | 121 | .. | 76 |
| மார்ச் .. .. | 139 | 128 | 120 | 75 | 76 |
| ஏப்ரல் .. .. | 135 | 124 | 115 | 58 | 76 |
| மே .. .. .. | 137 | 136 | 106 | 62 | 70 |
| ஜூன் .. .. | 133 | 130 | 107 | 62 | 72 |
| ஜூலை .. .. | 122 | 135 | 137 | 62 | 82 |
| ஆகஸ்டு .. .. | 95 | 141 | 141 | .. | 81 |
| செப்டம்பர் .. .. | 124 | 128 | 135 | .. | 74 |
| மொத்தம் .. | 1,594 | 1,486 | 1,466 | 319 | 891 |

அட்டவணை 5.

அரசு புதுவாழ்வு இல்லங்களுக்காக நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் பற்றிய விவரப் பட்டியல்.

சென்னை, சிறைத் துறைத் தலைமை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் (புதுவாழ்வு இல்லங்கள் மற்றும் இரவலர் இல்லங்கள்) நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள்.

| வரிசை எண்ணும், பதவியின் பெயரும். | பதவிகள் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1 தலைமை கண்காணிப்பாளர் (புதுவாழ்வு இல்லங்கள் மற்றும் இரவலர் இல்லங்கள்). | 1 |
| 2 உதவி சிறப்பு அலுவலர் (மருத்துவம்) .. | 1 |
| 3. உதவிக் கணக்கு அலுவலர் .. .. | 1 |
| 4. தலைமை, தொழில் பயிற்சி பணியாளர் .. | 1 |
| 5. அலுவலகக் கண்காணிப்பாளர்கள் .. | 2 |
| 6. உதவியாளர்கள் .. .. .. | 5 |
| 7. இளநிலை உதவியாளர் .. .. | 1 |
| 8. தட்டச்சர் .. .. .. | 1 |
| 9. சுருக்கெழுத்தர் (தலைமை கண்காணிப்பாளருக்காக). | 1 |
| 10. அலுவலக உதவியாள் (தலைமை கண்காணிப்பாளருக்காக). | 1 |
| 11. அலுவலக உதவியாள் (இல்லம்) .. | 1 |
| 12. ஓட்டுநர் மற்றும் சுத்தம் செய்பவர் .. | 1 |
| 13. உதவி சிறப்பு அலுவலர்களுக்காக (மருத்துவம்) நியமிக்கப்பட்டுள்ள அலுவலக உதவியாள். | 1 |
| 14. அலுவலக உதவியாள் (அலுவலகம்) .. | 1 |



பத்து (10) புதுவாழ்வு இல்லங்களில் நியமிக்கப் பட்டுள்ள அலுவலர்கள்:

| வரிசை எண்ணும் பதவியின் பெயரும். | பதவிகள் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1. நிருவாக அலுவலர்கள் .. .. | 10 |
| 2. உதவி மருத்துவர்கள் .. .. .. | 20 |
| 3. செவிலியர்கள் .. .. .. | 20 |
| 4. தாய்மை மருத்துவ துணைச் செவிலியர்கள் | 10 |
| 5. தொழுநோய் உடற்கூறு பயிற்சியாளர்கள் | 10 |
| 6. ஆய்வுக் கூட தொழில் நுட்பப் பணியாளர், நிலை-1. | 10 |
| 7. மருந்தாளுனர்கள் .. .. .. | 10 |
| 8. ஆண் செவிலி உதவியாளர்கள், நிலை-2 .. | 10 |
| 9. பெண் செவிலி உதவியாளர்கள், நிலை-2 | 10 |
| 10. துப்புரவுப் பணியாளர்கள் .. .. | 20 |
| 11. சமையலாளரின் உதவியாளர்கள் .. | 20 |
| 12. அலுவலக உதவியாளர்கள் .. .. | 10 |
| 13. சமையலாளர்கள் .. .. .. | 10 |
| 14. அலுவலகக் கண்காணிப்பாளர்கள் .. | 10 |
| 15. பண்டகக் காப்பாளர் மற்றும் கணக்கர்கள் | 10 |
| 16 இளநிலை உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர்கள். | 10 |
| 17. ஓட்டுநர்கள் மற்றும் சுத்தம் செய்பவர்கள் | 10 |
| 18. தொழில் பயிற்சிப் பணியாளர்கள் .. | 3 |
| 19. தலைமைக் காப்பாளர்கள் .. .. | 20 |
| 20. காப்பாளர்கள் .. .. .. | 80* |
| 21. மின்னாள், நிலை-2 .. .. .. | 10 |
| 22. மின்விசைத்தறி விரிவுரையாளர் .. | 1 |
| 23. இளநிலை முதலாள் .. .. | 1 |
| 24. இளநிலை புத்தகம் கட்டுபவர்கள் .. | 2 |

*வார்டர்கள் : ஆண் 60

பெண் 20

அட்டவணை—6.

புது வாழ்வு இல்லங்களில் தயாரிக்கப்பட்ட பொருட்களின் விற்பனை மூலம் கிடைத்த ஆதாய—நட்ட விவரம்.

(ரூபாய் இலட்சத்தில்.)

| (1) | 1981—82 (2) | 1982—83 (3) | 1983—84 (4) | 1984—85 (5) | 1985—86 (6) |
|---|---|---|---|---|---|
| மூலப்பொருட்கள் மற்றும் கூலிக்கான செலவு. | 2.98 | 2.53 | 3.69 | 4.00 | 4.04 |
| தயாரிக்கப்பட்ட பொருட்களின் மதிப்பு. | 2.98 | 3.53 | 3.56 | 3.95 | 3.98 |
| ஆதாயம் இழப்பு | இல்லை. | (+) 1.00 | (—) 0.13 | (—) 0.05 | (—) 0.06 |



## அத்தியாயம் III.

### அரசினர் காப்பு முகாம், மேல்பாக்கம்.

காவல்துறையின் மேற்பார்வையில் 1—3—1954 முதல்நடத்தப்பட்டு வந்த மேல்பாக்கம் அரசினர் காப்பு முகாம் இத்தகைய முகாம்களில் முதன்மையானதாகும். சென்னை நகரில் பிச்சைக்காரர்கள் பிச்சை எடுப்பதைத் தடுத்து அவர்களுக்கு மறுவாழ்வு மற்றும் தொழிற் பயிற்சி கொடுத்து சிறந்த ஓர் குடிமகனாக ஆக்குவதே இவ்விடுதியின் நோக்கமாகும்.

2. இவ்வில்ல நிர்வாகம் 1–10–1973 முதல் சென்னை, காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் பொறுப்பிலிருந்து, சமூக நலஇயக்குநர் தலைமைப் பொறுப்பிற்கு மாற்றப்பட்டு, மீண்டும் 1–12–1984 முதல் சிறைத் துறைத் தலைமை இயக்குநர்தலைமையின் கீழ் மாற்றப்பட்டுள்ளது.

**அனுமதி மற்றும் நீக்கம் :**

இவ்வில்லத்தில் அனுமதிக்கப்பட்ட இல்லவாசிகளின் எண்ணிக்கை 950 பிச்சைக்காரர்கள் (770 ஆண்கள், 180பெண்கள்) ஆகும். அரசாணை நிலை எண். 891. சமூக நலத்துறை நாள் 30–9–1972-ல் வெளியிடப்பட்ட விதிமுறைகளுக்கிணங்க இவ்வில்லம் நடத்தப்பட்டு வருகிறது. 1945 ஆம் ஆண்டு தமிழ் நாடு பிச்சை எடுப்பு தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் இவ்வில்லத்தில் அனுமதிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். தண்டனைக்காலம் ஒரு வருடத்திலிருந்து மூன்று வருடங்களாகும். இங்கு சேர்க்கப்படும் இல்லவாசிகள் அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைக் காலம் முடிவடைகிற தேதியில் விடுதியிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள். எந்தஒருஇல்லவாசியும் குற்றத் தீர்ப்பு ஆணையில் குறிப்பிடப்பட்டதண்டனை காலம் முடிந்த பின் விடுதியில் இருக்க அனுமதிக்கப்படுவதில்லை.

**உள்ளிருப்போருக்கு அளிக்கப்படும் வசதிகள் :**

இம்முகாமில் இருப்போருக்கு இலவசமாக சாப்பாடு, தங்கும் வசதி, ஆடைகள், மருத்துவ வசதிகள் வழங்கப்படுவதுடன் பல்வேறு துறைகளில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

**உணவு :**

இல்லவாசிகளுக்கு உணவுக்காக நாளொன்றுக்கு உரிய வயதடைந்த ஒரு நபருக்கு ரூ. 4 வீதமும், குழந்தைகளுக்கு ரூ. 2.50 வீதமும் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகைகளுக்குள் இவர்களுக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டு வருகிறது. காலை கேழ்வரகு கஞ்சி மற்றும் வெங்காயம், பகல் உணவு, இரவு உணவு வழங்கப்பட்டு வருகிறது. நாள்தோறும் மோர் வழங்கப்

[1987 ஏப்ரல் 25

படுகிறது. முக்கியமான நாட்களான புதுவருடப் பிறப்பு, சுதந்திர தினம் போன்ற குறிப்பிட்ட நாட்களிலும், தீபாவளி, கிறிஸ்துமஸ், ரம்சான் போன்ற சில பண்டிகை நாட்களிலும் ஒரு இல்லவாசிக்கு கூடுதலாக ரூ. 1 விதம் சிறப்புணவு வழங்கப்பட்டு வருகிறது.

இருப்பிடம் :

இவ்வில்லம் ஏறக்குறைய 9 ஏக்கர் மொத்தம் பரப்பளவில் அமைந்துள்ளது. ஒரே தளமுள்ள படுக்கைக் கூடங்களில் இல்லவாசிகள் தங்க வைக்கப்படுகின்றனர். ஒரு கூடத்தில் 100 பேர் விதம் தங்குவதற்குரிய நான்கு படுக்கைக் கூடங்கள் உள்ளன. இந்த நான்கில் ஒன்று பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

உடை :

இரண்டு துண்டுகள், இரண்டு சட்டை மற்றும் இரண்டு கால் சட்டைகள் ஆண்களுக்கும், பெண்களுக்கு இரண்டு சேலை மற்றும் இரண்டு ஜாக்கெட்டுகள் ஆண்டுக்கு ஒருமுறை இலவசமாக வழங் கப்படுகிறது. விடுதியில் சேர்க்கப்படும் நாள், முதல் இதை கொடுக்கப்புடுகிறது.

இதர வசதிகள் :

1. ஒவ்வொரு இல்லவாசிக்கும், பாய், படுக்கை விரிப்பு, தட்டு மற்றும் நல்லெண்ணெய் வழங்கப்படுகிறது.

2. இல்லத்தில் அனுமதிக்கப்படும்போது ஒவ்வொரு இல்லவாசிக்கும் ஒரு அஞ்சல் அட்டையும், மேலும், அவர்களின் தேவைக்கேற்ப கூடுதல் அஞ்சல் அட்டையும் வழங்கப்படுகிறது.

3. தண்டனைக் காலம் முடிந்து வெளியேறும் இல்லவாசிகளுக்கு அவர்களின் சொந்த ஊர் செல்ல வசதியாக ரெயில்வே வாரண்ட் அல்லது பேருந்து கட்டணம் அளிக்கப்படுகிறது.

4. இல்லவாசிகளுக்காக இரண்டு தினசரி செய்தித் தாள்கள் வாங்கப்படுகிறது.

5. இல்லவாசிகள் விளையாடுவதற்கான வசதியும், தொலைக் காட்சி பார்க்க வசதியும், வானொலி போன்ற வசதிகளும்செய்யப் பட்டுள்ளன.

மருத்துவ வசதிகள் :

இவ்விடுதிக்கென ஒரு மருத்துவமனை ஏற்படுத்தப்பட்டுள்ளது இம்மருத்துவமனையில் ஒரு மருத்துவ அலுவலரும், ஒரு செவிலியரும், இரண்டு ஆண் உதவி செவிலியரும், இரு பெண் உதவி



1987 ஏப்ரல் 25]

செவிலியரும் மற்றும் இரு மருந்தாளுநரும் பணியாற்றுகின்றனர். [illegible] தாரண பிணிகளை நீக்கும் மருந்துகளும் மற்றும் மாத்திரைகளும் போதிய அளவில் உள்ளன. சிறப்புத் தன்மை உடைய வைத்திய வசதிக்காக. நோய்களுக்கேற்ப சென்னையில் உள்ள பல்வேறு மருத்துவ மனைகளுக்கு பிணியாளர்கள் பரிசோதனைக்கு அனுப்பப்படுகிறார்கள். உடல் ஊனமுற்றவர்கள் காலமுறைப்படி தயாசதனுக்கு மாற்றம் செய்யப்படுகிறார்கள். மற்றும் தொழுநோயால் பாதிக்சப்பட்டவர்கள், இம்மாநிலத்தில் அருகாமையிலுள்ள தொழு நோய் மறுவாழ்வு இல்லங்களுக்கு மாற்றம் செய்யப்படுகின்றனர். சென்னை மனநல மருத்துவமனையிலிருந்து மனநல மருத்துவர் வாரமதிற்கு ஒருமுறை விடுதிக்கு வந்து மனநலம் குன்றியவர்களுக்கு சிகிச்சை அளித்து வருகிறார்.

இல்லவாசிகளுக்கான மறுவாழ்வுக்கான நடவடிக்கைகள் :

இவ்வில்லத்தில் உடல் வலிமையுள்ள பிச்சைக்காரர்கள் ஏதாவதொரு சிறு தொழிலில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இவ்வில்லவாசிகளுக்கு கைத்தறி, தச்சு, மண்பாண்டம் செய்தல், தையல் மேலும் புத்தகம் கட்டுதல், போன்ற சிறு தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவ்வாறு பலதரப்பட்ட தொழில்களில் ஈடுபடும் இல்லவாசிகளுக்கு ஒரு ஆளுக்கு நாளொன்றுக்கு 10 காசு ஊக்கத் தொகையாக அளிக்கப்படுகிறது.

நெசவு :—

கைத்தறிப் பிரிவில் 10 பெடல் தறிகளும், 9 மேசைத் தறிகளும் உள்ளன. சுமார் 15 இல்லவாசிகள் இதில் பயிற்சி பெறுகிறார்கள். இத்தறிகளில் தயாரிக்கப்படும் துணிகள் இவ்வில்லவாசிகளின் ஆடைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

தையற் பிரிவு :

தையல் இயந்திரங்கள் ஆறு இப்பிரிவில் உள்ளன. பெண் இல்லவாசிகள் இப் பிரிவில் பயிற்சி பெறுகிறார்கள்.

புத்தகக் கட்டுமானம் :

பல்வேறு அரசுத் துறைகளிலிருந்து பெறப்படும் பத்திரிகைகள், அரசுப் பதிப்புகள். பதிவேடுகள் மற்ற பிற புத்தகங்கள், இங்கு கட்டுமானம் செய்யப்படுகிறது. எழுது பலகைகள் மற்றும் கோப்பு அட்டைகள், இங்கு தயாரிக்கப்படுகின்றன. சுமார் பத்து இல்லவாசிகள் இப்பிரிவில் வேலை செய்கிறார்கள்.

மண்பாண்டப் பிரிவு :

பூ ஜாடிகள், தண்ணீர் ஜாடிகள் மற்றும் கூஜாக்கள் ாரிக்கப்பட்டு பல்வேறு அரசுத் துறைகளுக்கு அளிக்கப்படுகின்றன. சுமார் பத்து இல்லவாசிகள் இப்பிரிவில் செயல்படுகின்றனர்.

தச்சு வேலை ;

இப்பிரிவில் சுமார் பத்து இல்லவாசிகள் வேலை செய்கிறார்கள், அரசுத் துறைகளிலிருந்து பெறப்படும் எல்லாவிதமான மரச்சமான்களும் இங்கு பழுது பார்க்கப்பட்டு அத்துறைகளுக்கு அனுப்பப்படுகின்றன. மேல்பாக்கம் அரசு காப்பு முகாமிலுள்ள இல்லவாசிகளின் எண்ணிக்கை, வேலைக்கு அமர்த்தப்பட்ட இல்லவாசிகளின் எண்ணிக்கை, உற்பத்தித் திறன், உற்பத்திப் பொருட்களின் விற்பனை விவரம், அலுவலர்கள் பற்றிய விவரங்கள் மற்றும் காப்பு முகாமில் தயாராகும் பொருட்களின் விற்பனை மூலம் கிடைத்த ஆதாய/இழப்பு விவரங்கள் முறையே அட்டவணைகள் அ, இ, உ, எ, ஐ, மற்றும் ஓவில் உள்ளன.



அட்டவணை அ.

மேல்பாக்கம் அரசினர் பிச்சைக்காரர் பராமரிப்பு விடுதியில் 1986 ஆம் ஆண்டு நவம்பர் 30 தேதி நிலவரப்படி தங்கியுள்ள உள்ளுறுப்பினர்களின் விவரம்.

| பெரியோர். | | சிறியோர். | | சிறார். | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| ஆண்கள். | பெண்கள். | ஆண்கள். | பெண்கள். | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 71 | 5 | [illegible] | — | ... | 76 |

அட்டவணை இ.

அரசினர் பிச்சைக்காரர் பராமரிப்பு விடுதி, மேல்பாக்கம்—1986 ஆம் ஆண்டில் வேலையில் அமர்த்தப்பட்ட உள் உறுப்பினர்களின் எண்ணிக்கை.

(ஜனவரி 1986 முதல் டிசம்பர் 1986 வரை.)

| மாதமும் வருடமும். | தச்சுப் பிரிவு. | தையற் பிரிவு. | புத்தகப் பிரிவு. | நெசவுப் பிரிவு. | மண்பாண்டப் பிரிவு. | இதரப் பணியில் உள்ளவர்கள். | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1986— | | | | | | | |
| ஜனவரி .. | 10 | .. | 11 | 35 | 10 | 113 | 179 |
| பிப்ரவரி .. | 10 | .. | 2 | 22 | 10 | 111 | 155 |
| மார்ச் .. | 10 | 6 | 12 | 15 | 10 | 83 | 136 |
| ஏப்ரல் .. | 13 | 5 | 11 | 12 | 10 | 82 | 133 |
| மே .. | 12 | 5 | 11 | 16 | 11 | 61 | 116 |
| ஜூன் .. | 11 | 5 | 12 | 16 | 7 | 58 | 109 |
| ஜூலை .. | 9 | 4 | 13 | 17 | 10 | 40 | 93 |
| ஆகஸ்டு .. | 9 | 4 | 9 | 16 | 7 | 36 | 81 |
| செப்டம்பர் .. | 9 | 4 | 12 | 16 | 7 | 43 | 91 |
| அக்டோபர் .. | 5 | 4 | 9 | 15 | 7 | 37 | 77 |
| நவம்பர் .. | 7 | 4 | 8 | 13 | 9 | 35 | 76 |
| டிசம்பர் .. | 7 | 3 | 7 | 12 | 4 | 37 | 70 |



அட்டவணை ஈ.

அரசினர் பிச்சைக்காரர் பராமரிப்பு விடுதி, மேல்பாக்கத்தில் உள்ள தொழிற்கூடங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் விபரம்.

(ஜனவரி 1986 முதல் டிசம்பர் 1986 வரை.)

தையற் பிரிவு—

| கால்சட்டை (எண்ணிக்கை). | மேல்சட்டை (எண்ணிக்கை). | இரவிக்கைகள் (எண்ணிக்கை). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 120 | 94 | 40 |

நெசவுப் பிரிவு—

| வெள்ளை காடா. | டவல் | கட்டுகட்டும் துணிகள். |
|---|---|---|
| 748 மீட்டர்கள். | 500 எண்கள். | 132 மீட்டர்கள். |

தச்சுப் பிரிவு—

நாற்காலிகள் .. 53 எண்ணிக்கை.

புத்தகம் கட்டுமானப் பிரிவு—

2,279 புத்தகங்கள்.

மண்பாண்டப் பிரிவு—

| | | |
|---|---|---|
| சாம்பிராணி கலசம் | .. | 35 |
| கரி அடுப்பு .. | .. | 21 |
| முருகன் பொம்மை | .. | 10 |
| கிருஷ்ணன் பொம்மை | .. | 40 |
| பெரிய பொம்மை | .. | 15 |
| உப்பு ஜாடி .. | .. | 23 |
| மண் கூஜா .. | .. | 30 |
| பூந்தொட்டிகள் .. | .. | 222 |

அட்டவணை ஏ

அரசினர் பிச்சைக்காரர் பராமரிப்பு விடுதி, மேல்பாக்கம்—விற்பனைப் பொருட்களின் விபரம்.

(அக்டோபர் 1985 முதல் செப்டம்பர் 1986 வரை)

| பொருட்களின் பெயர். | எண்ணிக்கை. | மதிப்பு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூ.பை. |
| கோப்பு அட்டைகள் .. .. | 1,579 | 8,479.25 |
| புத்தகக் கட்டுமானம் .. | 279 | 3,069.00 |
| மண் கூஜாக்கள் .. .. | 30 | 75.00 |
| மொத்தம் .. | | 11,623.25 |



அட்டவணை ஐ.

அரசினர் பிச்சைக்காரர் பராமரிப்பு விடுதி மேல்பாக்கம்—அலுவலர்கள் பற்றிய விவரப் பட்டியல்.

| வரிசை எண். | பதவியின் பெயர். | பதவியின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | நிருவாகி .. .. .. .. | 1 |
| 2 | துணை நிருவாகி .. .. .. | 1 |
| 3 | மருத்துவ அலுவலர் .. .. .. | 1 |
| 4 | அலுவலகக் கண்காணிப்பாளர் .. .. | 1 |
| 5 | உதவியாளர்கள் .. .. .. | 2 |
| 6 | இளநிலை உதவியாளர்கள் .. .. | 2 |
| 7 | தட்டச்சர் .. .. .. .. | 1 |
| 8 | சமூக நல ஊழியர் .. .. .. | 1 |
| 9 | போதகர்கள் .. .. .. .. | 5 |
| 10 | அலுவலக உதவியாளர்கள் .. .. | 2 |
| 11 | தலைமைக் காவலர் .. .. .. | 1 |
| 12 | காவலர்கள் .. .. .. .. | 12 |
| 13 | வாயிற் காவலர்கள் .. .. .. | 2 |
| 14 | தலைமைக் காப்பாளர் .. .. | 1 |
| 15 | காப்பாளர்கள் .. .. .. .. | 2 |
| 16 | சமையற்காரர் .. .. .. .. | 3 |
| 17 | துப்புரவுப் பணியாளர்கள் .. .. | 2 |
| 18 | சலவையாளர்கள் .. .. .. | 3 |
| 19 | சவரப் பணியாளர்கள் .. .. | 2 |
| 20 | மருந்தாளுனர்கள் .. .. .. | 2 |
| 21 | செவிலியர்கள் .. .. .. .. | 2 |
| 22 | பெண் செவிலியர் உதவியாளர்கள் .. | 2 |
| 23 | ஆண் செவிலியர் உதவியாளர்கள் .. | 2 |
| 24 | ஓட்டுனர் .. .. .. .. | 1 |
| | மொத்தம் .. | 61 |

அட்டவணை ஓ.

அரசினர் பிச்சைக்காரர் பராமரிப்பு விடுதி, மேல்பாக்கத்தில் தயாரிக்கப்பட்ட பொருட்களின் விற்பனைமூலம் இடைத்த ஆதாய/இழப்பு விபரம்.

| | 1981–82 | 1982–83 | 1983–84 | 1984–85 | 1985–86 |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்). | | |
| மூலப்பொருட்கள் மற்றும் கூலிக்கான செலவு. | 0.19 | 0.12 | 0.35 | 0.27 | 0.12 |
| தயாரிக்கப்பட்ட பொருட்களின் மதிப்பு. | 0.23 | 0.13 | 0.42 | 0.32 | 0.24 |
| இலாப/நட்டம் .. | (+) 0.04 | (+) 0.01 | (+) 0.07 | (+) 0.05 | (+) 0.12 |



## இணைப்பு IV.

(761–ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

கொள்கை விளக்கக் குறிப்பு.

மானியக் கோரிக்கை எண் 13

நீதி நிருவாகம்—1987–88.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கோட்பாடுகளுக்கிணங்க, அனைத்துக் குடிமக்களுக்கும் நீதி வழங்குவது இவ்வரசின் கொள்கையாகும். நீதியை நிருவகிப்பது நீதிமன்றங்களின் பொறுப்பாகும். அரசின் செயற் பிரிவு மற்றும் நிருவாகப் பிரிவினின்றும் இது தனித்துச் செயல்படுகின்றது. வழக்கு நிலுவைகளை அகற்றப் புதிதாகவும், கூடுதலாகவும் நீதிமன்றங்கள் அமைப்பது பற்றி உயர் நீதிமன்றம் பரிந்துரைப் பதின் பேரில் காலந்தாழ்த்தாது அரசு ஒப்புதல் வழங்குவதோடு நீதி மன்றங்களுக்குத் தேவையான இடவசதி, பணியாளர், மேசை, நாற்காலி போன்றவை உட்பட அனைத்து வசதிகளுக்கும் அரசு வகை செய்வதன் வாயிலாக தனது பணிகளை ஆற்று கிறது.

2. நீதி நிருவாகம் பற்றிய சிறப்புக் கூறுகள் வருமாறு.— 13 ஆம் எண் கோரிக்கையும் 'நீதி நிருவாகம்' தொடர்பான மானியங்களும் இதன் கீழ் குறிப்பிடப்பட்ட நீதி மன்றங்கள், அதிகாரிகள், பணியாளர் அமைப்பு ஆகியவை குறித்த செலவைக் குறிப்பதாகும்.—

(1) உயர் நீதி மன்றம், சென்னை.

(2) நொடித்தவர், சொத்தாட்சியர், உயர்நீதி மன்றம், சென்னை.

(3) சிவில் செசன்ஸ் நீதி மன்றங்கள் (சென்னை மாநகர சிவில் நீதிமன்றம் உட்பட).

(4) சிறு வழக்கு நீதி மன்றங்கள், சென்னை.

(5) பெருநகர் மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றங்கள்.

(6) சார்நிலை குற்றவியல் நீதி மன்றங்கள் (நீதித் துறை தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள், முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றங்கள், சப்-டிவிஷனல் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டுகள்).

(7) அரசு பொறுப்புச் சொத்தாட்சியர், சென்னை.

(8) அரசு சட்ட ஆலோசகர்கள், வழக்குரைஞர்கள்.

(9) சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தொழிலாளர் நீதி மன்றங்கள், சென்னையிலுள்ள தொழில் நடுவர் மன்றம்.

விற்பனை வரி மேல் முறையீட்டு நடுவர் மன்றம், அரசுப் போக்குவரத்து மேல் முறையீட்டு நடுவர் மன்றம், கூட்டுறவு சங்கங்களின் வழக்குகளுக்கான நடுவர் மன்றங்கள், 1976 ஆம் ஆண்டு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்தல்) சட்டத்தின்படி செய்து கொள்ளப்படும் மேல் முறையீட்டுகளைக் கவனிக்கும் மேல் முறையீட்டு அதிகார மன்றம் போன்ற நடுவர் மன்றங்கள் அந்தந்தத் துறையின் நிதிக் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. அத்தகைய நடுவர் மன்றங்களின் செலவு அந்தந்தத் துறைக் கணக்குகளில் பற்று எழுதப்படுகிறது.

3. நீதிமன்றங்கள், அலுவலர்களிடையே பின் வருவனவற் றைப் பற்றிய செலவு, ''சாட்டிய செலவினம்'' என்றும் ''அனு மதிக்கப்பட்ட செலவினம்'' என்றும் வகைப்படுத்தப் பட்டுள் ளது.—

| சாட்டியவை. | அனுமதிக்கப்பட்டவை. |
|---|---|
| 1. உயர் நீதிமன்றம் (நீதிபதிகள், பதிவாளர், மூல வழக்குகள் மேல் முறையீடுகளைக் கவனிக்கும் பணியாளர் அமைப்பு, மொழி பெயர்ப்பு மற்றும் அச்சுத் துறை, சட்டத் துறை அறிவிப்பாளர்கள் மற்றும் பணியாளரமைப்பு உதவிப் பதிவாளர், புதுச்சேரி, புதுச்சேரிக்கு அதிகார வரம்பை நீட்டித்தல் தொடர்பான பணியாளரமைப்பு, ஷெரிப் சென்னை மற்றும் அவரது பணியாளர்கள்). | 1. சென்னை மாநகர சிவில் நீதிமன்றம் உட்பட சிவில் செஷன்ஸ் நீதிமன்றங்கள். |
| | 2. சிறு வழக்குகள் நீதிமன்றம், சென்னை. |
| | 3. மாநகர மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள், சென்னை. |
| | 4. குற்றவியல் சார்நிலை நீதி மன்றங்கள். |
| | 5. அரசுப் பொறுப்புச் சொத்தாட்சியர், சென்னை. |
| | 6. அரசு சட்ட ஆலோசகர்கள், வழக்குரைஞர்கள். |
| | 7. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிலாளர் நீதி மன்றங்கள், சென்னையிலுள்ள தொழில் நடுவர் மன்றம். |
| 2. நொடித்தவர், சொத்தாட்சியரும் அவரது பணியாளரமைப்பும். | 8. பதிப்பு ஆசிரியர், பணியாளர்கள் தமிழ் சட்ட இதழ்வெளியீடு, சென்னை. |





4. சென்னை உயர்நீதி மன்றம்—மாநிலத்தில் நீதி வழங்கும் தலைமை வாய்ந்த நீதி மன்றம் உயர் நீதி மன்றமாகும். உயர் நீதி மன்றத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை தலைமை நீதிபதியையும் சேர்த்து 25 ஆகும்.

5. உரிமை வழக்குகளில் அசல் தரப்பு வழக்குகளையும் 'ரிட்' வழக்குகளையும் உயர் நீதி மன்றம் விசாரணை செய்யும் அதிகாரம் பெற்றதாகும். உரிமை வழக்குகளிலும், குற்றவியல் வழக்குகளிலும் மேல் முறையீடுகளை விசாரிக்கும் அதிகாரம் இதற்கு உண்டு. சென்னை மாநகருக்குள் சொத்தின் மதிப்பு ரூ. 1,00,000-க்கு மேற்பட்டுள்ள அசல் தரப்பு வழக்குகளை சென்னை உயர் நீதிமன்றம் விசாரணை செய்கிறது. தலைமை நீதிபதி ஏனைய நீதிபதிகளுக்குப் பணிகளைப் பிரித்து வழங்குகிறார். தலைமை நீதிபதி உட்பட 19 நீதிபதிகள் தற்போது உள்ளனர். திங்கள் ஒன்றுக்கு தலைமை நீதிபதி ரூ. 4,000 மும் ஏனைய நீதிபதிகள் ஒவ்வொருவரும் ரூ. 3,500-ம் ஊதியமாகப் பெறுகின்றனர். தலைமை நீதிபதி, நீதிபதிகள் ஆகியோரின் திருத்தச் சம்பள வீதம் இன்னும் செயலுக்கு வரவில்லை. நீதிபதிகளின் ஊதியம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி வரையறுக்கப்படுகிறது. அவர்களுடைய பணி நிலைமைகள் உயர்நீதிமன்ற நீதிபதிகளின் (பணி நிலைமைகள்) சட்டத்திற்குட்பட்டவையாகும்.

6. பதிவாளர், உயர்நீதி மன்ற அலுவலகத்தின் நிருவாகத் தலைவர் ஆவார். இவருக்கு உதவியாகப் பல அதிகாரிகள் அதாவது கூடுதல் பதிவாளர், மாஸ்டர், துணைப் பதிவாளர், நீதிமன்றம் நியமித்த கணக்கு ஆய்வாளர், வழக்குகளை வகைப் படுத்தும் தனி அதிகாரி, உதவிப் பதிவாளர்கள், துணை உதவிப் பதிவாளர்கள், முதுநிலை கணக்கு அதிகாரி ஆகியோர் உள்ளனர்.

உயர்நீதிமன்ற அலுவலகம் பல பிரிவுகளைக் கொண்டது. அவை நிருவாகத் துறை, நூலகம், அசல் தரப்பு வழக்குப் பிரிவு, மேல் முறையீட்டுத் தரப்பு வழக்குப் பிரிவு, நொடிப்பு நிலை வழக்குப் பிரிவு, தலைமை நீதிமன்றப் பிரிவு, குற்றவியல் வழக்குப் பிரிவு, புதுச்சேரி பிரிவு, நீதிமன்ற அதிகாரிகள் பிரிவு, மேல் முறையீடுகள் பரிசீலனையாளர் பிரிவு, நேர்முக உதவியாளர் பிரிவு, மொழி பெயர்ப்பு மற்றும் அச்சுத் துறைப் பிரிவு, நகல் எடுப்போர் பிரிவு, வரவு-செலவுத் திட்டப் பிரிவு மற்றும் ஆவணப் பிரிவு ஆகியவையாகும்.

புதுச்சேரி (மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியின்) தொடர்பான வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரமும் உயர்நீதி மன்றத்திற்குரியதாகும். புதுச்சேரி தொடர்பான வழக்குகளை உயர்நீதி மன்றத்தில் கவனிக்கும் அதிகாரி, பணியாளர் ஆகியோர் குறித்த செலவை தமிழ்நாடு அரசு முதலில் ஏற்றுக் கொண்டு பின்னர் புதுச்சேரி அரசிடமிருந்து அத்தொகையைத் திரும்பப் பெறுகிறது.

நீதி வழங்குவதோடு, மாநில நீதித் துறையின் நிருவாகத்திற்கும் உயர் நீதிமன்றம் பொறுப்பு வகிக்கிறது.

7. சட்ட அதிகாரிகள்—மாநகரிலும், வெளியூர்களிலும் உள்ள சட்ட அதிகாரிகள், அரசு சார்பில் உச்ச நீதி மன்றத்தில் வழக்காட நியமிக்கப்பட்டுள்ள வழக்குரைஞர் குறித்த செலவுகளையும் வழக்கு தாக்கல் செலவுகள் உட்பட அரசு வழக்குரைஞரால் செய்யப்படுகிற செலவுகளையும் மாவட்டங்களிலுள்ள அரசு குற்றவியல் வழக்கு நடத்துனர், நிலை-I, நிலை-II ஆகியோரின் சம்பளம், படிகள் குறித்த செலவையும் செய்வதற்கு இத்தலைப் பின்கீழ் நிதி ஒதுக்கப்படுகிறது. அரசு உரிமையியல் வழக்குரைஞர் தவிர, 6 கூடுதல் அரசு உரிமையியல் வழக்குரைஞர்களும், அரசு உரிமையியல் சிறப்பு வழக்குரைஞர் ஒருவரும், உரிமை இயல் வழக்குகளைக் கவனித்து வருகின்றனர். உரிமை இயல் வழக்குகளைப் பொறுத்த மட்டில் வழக்குரைக்கும் பிரிவில் மொத்தம் 9 அரசு உரிமையியல் வழக்குரைஞர்கள் உள்ளனர். இந்த 9 அரசு உரிமையியல் வழக்குரைஞர் பதவிகளில் தற்போது மூன்று பதவி இடங்கள் காலியாக உள்ளன. வழக்கு வரைவு தயாரிக்கும் பிரிவில் 8 அரசு வழக்கறிஞர்கள் உள்ளனர். இந்த 8 அரசு வழக்கறிஞர்களில் ஒருவர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஆகியவற்றுடன் தொடர்புடைய அரசு வழக்கிற்கு உட்படுத்தப்பட்டுள்ள ரிட் வழக்குகளைக் கவனிப்பதற்கென நியமிக்கப்பட்டுள்ளார். வரி வழக்குகளைக் கவனிப்பதற்கென மேலும் ஒரு வழக்கறிஞர் (உரிமையியல் வழக்குப் பிரிவில்) பதவிக்கு அனுமதி வழங்குவதென அரசு சமீபத்தில் முடிவு செய்துள்ளது. இந்து சமய அறக்கட்டளைகள் துறையில், ஒரு கூடுதல் அரசு உரிமையியல் வழக்குரைஞர் பதவிக்கும், ஓர் அரசு வழக்குரைஞர் பதவிக்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப்பதவிகளுக்கான செலவு இந்து சமய அறக்கட்டளைகள் துறையின் வரவு-செலவுத் திட்டத்தில் அடங்கும். வனத் துறையின் சில்லறைச் செலவினச் சம்பளப் பணியாளர்களுடன் செயல்படும் வனத் துறையின் வழக்குகளைக் கவனிக்கும் அரசு வழக்குரைஞருக்காகும் செலவினை வனத்துறை ஏற்றுக் கொள்ளும். இப் பதவிக்கான செலவு வனத் துறைத் தலைவரின் வரவு-செலவுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும். அரசின் சார்பில் ஆதி திராவிடர், பின் தங்கிய வகுப்பினர் தொடர்பான நிலம் கையகப்படுத்துதல் வழக்குகளைக் கவனிப்பதற்கென சென்னை, உயர் நீதிமன்றத்தில் அரசு உரிமையியல் வழக்குரைஞர் பதவி ஒன்றுக்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப்பதவிக்கு இதுவரை யாரும் நியமிக்கப்படவில்லை.

குற்றவியல் வழக்குகளைப் பொறுத்தமட்டில், சென்னை உயர் நீதிமன்றத்தில் உள்ள ஒரு குற்றவியல் அரசு வழக்குரைஞர் பதவி காலியாகவே உள்ளது. அக்குற்றவியல் அரசு வழக்குரைஞர் பதவிப் பொறுப்பினை தற்போது கூடுதல் அரசு



குற்றவியல் வழக்குரைஞரே கவனித்து வருகின்றார். உயர்நீதி மன்றத்தில் 3 அரசு வழக்குரைஞர்கள் (குற்றவியல் வழக்குகள்) உள்ளனர்.

வெளியூர்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு உரிமையியல் வழக்கு நடத்துநர்கள், அரசு குற்றவியல் வழக்கு நடத்துநர்கள் மற்றும் அரசு கூடுதல் குற்றவியல் வழக்கு நடத்துநர்கள் ஆகியோர் மாவட்ட ஆட்சியரின் கட்டுப்பாட்டின் கீழ் பணியாற்றி வருகின்றனர். மாவட்ட முன்சிப் நீதிமன்றங்களிலும் சார்நிலை நீதிமன்றங்களிலும் அரசுப் பணியாற்றுவதற்காக வழக்குரைஞர்கள் நியமிக்கப்படுகின்றனர். அவர்கள் ஆற்றும் பணியைப் பொறுத்து அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட கட்டணம் வழங்கப்படுகிறது. அவர்கள் வழக்குரைஞர் அமர்த்துக் கட்டணம் பெற இயலாது. சட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்படும் அனுமதிக்கப்பட்ட கட்டணங்கள், சம்பந்தப்பட்ட துறையின் வரவு-செலவுத் திட்டத் தலைப்பில் பற்று வைக்கப்படுகின்றன. அவர்கள் ஆற்றும் பணியைப் பொறுத்து, அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட கட்டணத்திற்கு அரசு அல்லது சம்பந்தப்பட்ட துறைத் தலைவரால் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

8. குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்கள்—மாநகரிலும், பிற இடங்களிலும், உள்ள குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்கள் (நிலை-I, II) மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்களிலுள்ள வழக்குகளைக் கவனிக்கின்றனர். இவர்கள் குற்றவியல் நடைமுறை கோவை 25 ஆம் பிரிவின் கீழ் மாநில அரசால் நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் முறையான சம்பள விகிதம் பெறும் முழு நேர அரசுப் பணியாளர்களாவர்.

அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்களின் சம்பள விதம் வருமாறு—

1. அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர், நிலை-I, ரூ. 1,575—90—1,845—100—2,245—110—2,685.

2. அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர், நிலை-II, ரூ. 1,340—75—1,715—90—2,435.

குற்றவியல் நீதி மன்றங்களில் வழக்குகளின் விசாரணையை விரைவுபடுத்த வேண்டுமென்ற நோக்குடன், ஒவ்வொரு குற்றவியல் நீதி மன்றத்திற்கும், குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர் (நிலை-II) ஒருவரை அரசு நியமித்துள்ளது.

அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்களை மேற்பார்வை செய்வதற்கும், கண்காணிப்பதற்கும் தற்போது துறைத் தலைவர் யாருமில்லை. நிருவாக வசதிக்காக, வெளியூர்களிலுள்ள குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்கள் மாவட்ட ஆட்சியர்களின்

[1987 ஏப்ரல் 25

கட்டுப்பாட்டின் கீழும், சென்னை மாநகரிலுள்ள குற்றவியல்
உதவி வழக்கு நடத்துநர்கள், சென்னை காவல் துறை கமிஷ
னரின் தட்டுப்பாட்டின் கீழும் உள்ளனர். குற்றவியல் உதவி
வழக்கு நடத்துநர்களுக்கான இயக்ககத்தை ஏற்படுத்துவது பற்றி
அரசு அண்மையில் ஆணைகள் பிறப்பித்துள்ளது. அந்த ஆணை
களின்படி அரசு குற்றவியல் வழக்கு நடத்துநர் இயக்ககம்
சென்னையில் அமைக்கப்படும். சரக அளவில் அரசு குற்றவியல்
உதவி வழக்கு நடத்துநர்களுக்கான 8 அலுவலகங்கள் சென்னை,
செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி,
கோயம்புத்தூர், வேலூர், இராமநாதபுரம் ஆகிய இடங்களில்
அமைக்கப்படும். புதிய துறை அமைப்பது தொடர்பாக மாநகரில்
அலுவலகங்களை அமைப்பதற்குத் தகுந்த கட்டிடங்களைத்
தெரிந்தெடுத்தல், மேசை, நாற்காலிகள், வெவ்வேறு அலு
வலகங்களில் பயன்படுத்துவதற்கான ஏனைய பொருள்கள் ஆகிய
வற்றை வாங்குதல், புதிதாக ஏற்படுத்தப்பட்ட பதவிகளுக்குப்
பணி விதிகளை வகுத்தல், பணியாளர் நியமனம் போன்ற பல்
வேறு பணியினங்களை, அரசு குற்றவியல் வழக்கு நடத்துநர்
இயக்ககம் அமைப்பதற்கான தனி அதிகாரி கவனித்து வருகிறார்.

9. அரசுத் துறைகள் சார்பில் உரிமையியல் வழக்குகளைத்
தாக்கல் செய்வதற்காக நீதிமன்ற முத்திரைத்தாள் வாங்கும்
வகையில் கணிசமான தொகையை அரசு உரிமையியல் வழக்கு
நடத்துநர் செலவிடுகிறார். மேற்சொன்ன செலவினம், தற்
போது ''2014. நீதி நிருவாகம்-114, சட்ட ஆலோசகர்கள்,
வழக்குரைஞர்கள்-ஏசி. அரசு உரிமையியல் வழக்கு நடத்துநர்-04.
அலுவலக செலவுகள்'' என்பதன் கீழ் தற்போது பற்று வைக்கப்
பட்டு வருகிறது.

1987–88 ஆம் ஆண்டில் ''சட்ட அதிகாரிகள்'' என்ற தலைப்
பின் கீழ் மொத்த செலவுத் தொகை ரூ. 1,41,94,000 என்று
மதிப்பிடப்படுகிறது. மேற்சொன்ன செலவில் வெளியூரிலுள்ள
I, II ஆம் நிலை பதவித் தரத்திலுள்ள அரசு குற்றவியல் உதவி
வழக்கு நடத்துநர்களின் சம்பளமும், படியும், பணியாளர்
களின் சம்பளமும் படியும் அடங்கும். மாவட்ட ஆட்சித்
தலைவர்களின் கட்டுப்பாட்டின் கீழுள்ள சட்ட அதிகாரிகள்
(வெளியூர்), அதாவது I, II ஆம் நிலை பதவித் தரத்திலுள்ள
அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்களின் செலவு,
1981–82 ஆம் ஆண்டு முதல் ''114 சட்ட ஆலோசகர்கள்,
வழக்குரைஞர்கள்'' என்ற தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

10. அரசுப் பொறுப்பு சொத்தாட்சியர் (பொறுப்பு சொத்
தாட்சியர்), சென்னை.—சென்னை, அரசு பொறுப்பு சொத்
தாட்சியர் (பொறுப்பு சொத்தாட்சியர்) மாவட்ட நீதிபதி பதவித்
தரத்தில் உள்ள ஓர் அதிகாரியாவார். அவருக்கு உதவியாகத்
துணை அரசுப் பொறுப்பு சொத்தாட்சியர் (பொறுப்பு சொத்
தாட்சியர்) ஒருவர் உள்ளார். அவருடைய சம்பள விகிதம்



1987 ஏப்ரல் 25]

ரூ. 1,575—90—1,845—100—2,245—110—2,685 ஆகும். இவ்விரு அதிகாரிகளும் உரிய வயதடையாப் பிள்ளைகளின் சொத்துக்கள், மரணமடைந்தவர்களின் எஸ்டேட்டுகள் ஆகியவற்றை கவனித்து வருகின்றனர். அவர்கள் அரசுப் பொறுப்பு சொத்தாட்சியர் சட்டத்திலும், பொறுப்பு சொத்தாட்சியர் சட்டத்திலும் உள்ள விதிமுறைகளுக்கு இணங்க அவர்களிடம் ஒப்படைக்கப்படும் கடமைகளை நிறைவேற்றி வருகின்றனர். இவ்வதிகாரிகளுக்கு தொழில் நுட்ப முறையில் உதவி செய்வதற்காக ரூ. 1,160—50—1,460—70—1,950 என்ற சம்பள விகிதத்தில் உதவிப் பொறியாளர் ஒருவர் உள்ளார். பட்டயக் கணக்கு கல்வித் தகுதியுடைய சிறப்பு கணக்கர் பதவி ஒன்றும் இவ்வலுவலகத்தில் உள்ளது.

1987–88 ஆம் ஆண்டிற்கு இத்தலைப்பின் கீழ் ரூ. 5,731.00 செலவாகுமென மதிப்பிடப்படுகிறது.

11. பெருநகர் மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றங்கள்.—இம் மாநகரில், பெருநகர் தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றம், பெருநகர தலைமை கூடுதல் மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம் உட்பட, 25 பெருநகர் மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இரு மாநகர மாஜிஸ்டிரேட்டுகள் இரண்டு நடமாடும் நீதிமன்றங்களின் மாஜிஸ்டிரேட்டுகளாகப் பணியாற்றுகின்றனர். பெருநகர் தலைமை மாஜிஸ்டிரேட்டு, இரண்டாம். நிலை மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் இருப்பவராவார். பெருநகர் தலைமைக் கூடுதல் மாஜிஸ்டிரேட்டு, சார்நிலை நீதிபதி பதவித் தரத்தில் இருப்பவராவார். பொருளாதாரக் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்த, மாவட்ட நீதிபதிகள் பதவித் தரத்தில் இரண்டு கூடுதல் தலைமை பெருநகர மாஜிஸ்டிரேட்டு பதவிகள் உள்ளன. இரண்டாம், மூன்றாம், நான்காம், பத்தாம், பதினொன்றாம் பெருநகர் மாஜிஸ்டிரேட்டுகளும், சார்நிலை நீதிபதிகள் பதவித் தரத்தைச் சேர்ந்தவர் ஆவார்.

ஏனைய அனைத்து பெருநகர் மாஜிஸ்டிரேட்டுகளும் மாவட்ட முன்சிப் பதவித் தரத்தைச் சேர்ந்தோராவார். பெருநகர் மாஜிஸ்டிரேட்டுகள், சென்னை மாநகரிலுள்ள காவல் நிலையங்களையொட்டி அதிகார வரம்பைச் செலுத்துகின்றனர்.

1987–88 ஆம் ஆண்டில் மாநகரிலுள்ள குற்றவியல் நீதி மன்றங்களின் செலவினம் ரூ. 52,37,000 என மதிப்பிடப்படுகிறது.

பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்வது போன்ற குற்றங்கள் குறித்து இந்திய இரயில்வே சட்டத்தின் கீழ் விசாரணை செய்து தீர்ப்பளிப்பதற்காக எழும்பூர் இரயில்வே நிலையத்தில் ஒன்றும். சென்ட்ரல் இரயில்வே நிலையத்தில் ஒன்றுமாக இரு இரயில்வே மாஜிஸ்ட்டிரேட்டு நீதிமன்றங்கள் உள்ளன.

[1987 ஏப்ரல் 25

12. மாநகர் சிவில் நீதிமன்றம், சென்னை.—சென்னை மாநகர சிவில் நீதிமன்றத்தில் 29 நீதித்துறை அதிகாரிகள் (10 மாவட்ட நீதிபதிகள், 19 சார்நிலை நீதிபதிகள்), மாநகர் சிவில் நீதிமன்றத்தில் மாவட்ட முன்சீப் பதவித் தரத்தில் பதிவாள ருக்கென தனிப் பதவி ஒன்று உள்ளது. இவர் நிருவாகத்திற்குப் பொறுப்பு வகிக்கிறார். மாநகர் சிவில் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு சென்னை மாநகர் முழுவதுமாகும். சென்னை மாநகரில் சிவில் நீதிமன்றம் ரூபாய் 1,00,000 வரை பணஞ்சார்ந்த அதிகார வரம்யையபம், ரூ. 30,000 வரை மேல்முறையீட்டு அதிகார வரம்பையும் கொண்டுள்ளது. சென்னை செஷன்ஸ் அதிகார தின் (Division) செஷன்ஸ் நீதிமன்றமாகவும் இந்த மாநகர் சிவில் நீதிமன்றம் செயல்படுகின்றது. குற்றவியல் சட்டத்திருத்த சட்டத்தின் கீழ் வழக்குகளை (Calender cases) விசாரிக்கும் தனி நீதிபதிகளுக்கான அதிகாரம் சென்னை மாநகர் சிவில் நீதி மன்றத்தில் மாவட்ட நீதிபதி பதவித் தரத்தைச் சேர்ந்த சில நீதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மாநகர் சிவில் நீதிமன்றத்தைப் பொறுத்தமட்டில் 1987–88 ஆம் ஆண்டிற்கு மொத்தம் ரூ. 59,61,000 செலவு ஆகுமென்று மதிப்பிடப்படுகிறது.

13. மாவட்டங்களில் உள்ள சிவில் நீதிமன்றங்கள்.— இம் மாநிலத்தில் மொத்தம் 17 மாவட்ட நீதிமன்றங்கள் உள்ளன. கோயம்புத்தூர், தென்னாற்காடு, இராமநாதபுரம், வடாற் காடு, மதுரை (தெற்கு), பெரியார் ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் கூடுதல் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றங்கள் அமைந்துள்ளன. சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் கூடுதல் மாவட்ட நீதிபதி நீதிமன்றங்கள் இரண்டு உள்ளன. அந்தந்த கோட்டங் களைச் சேர்ந்த மாவட்ட நீதிபதிகளே செஷன்ஸ் நீதிபதிகளாகச் செயல்படுகின்றனர். தொழிலாளர் காப்புறுதிச் சட்டம், எஸ் டேட் ஒழிப்புச் சட்டம், மோட்டார் வண்டிகள் சட்டம் போன்ற தனிச் சட்டங்களின் கீழ் சிறப்பு நடுவர் மன்றங்களாகவும் இந்த நீதிபதிகள் பணியாற்றுகின்றனர். சம்பந்தப்பட்ட கோட்டங்க ளில் சார்நிலை சிவில் நீதிமன்றங்களையும், நீதித்துறை மேஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்களையும் மாவட்ட நீதிபதிகள் ஆய்வு செய்கின்றனர். மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்ட நீதிபதிகள் பக்கத்திலுள்ள மூன்று அல்லது அதற்கும் மேற்பட்ட மாவட்டங்களில் குற்றவியல் சட்டத் திருத் தச் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை விசாரணை செய்யும் அதிகார வரம்பு கொண்ட சிறப்பு நீதிபதிகளாகச் செயல்படு கின்றனர். இந்நீதிபதிகள் ரூபாய் 30,000 வரையிலும் மேல் முறையீட்டு சிவில் அதிகார வரம்பு கொண்டவர்களாயுள்ளனர்.

மேலும், இன்றியமையாப் பொருட்களின் சட்டத்தின் கீழ் வழக்குகளை விசாரணை செய்வதற்காக, மாவட்டச் செஷன்ஸ் நீதிபதி பதவித் தரத்தில் ஆறு கூடுதல் நீதிமன்றங்களை



1987 ஏப்ரல் 25]

சென்னை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, கோயம் புத்தூர், சேலம் ஆகிய இடங்களில் அமைக்க அரசு 1982 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் அனுமதி வழங்கியுள்ளது. இது தொடர்பான செலவினம் '' 2014. நீதி நிருவாகம் '' என்ற தலைப்பின் கீழ் '' ஏஇ. குற்றவியல் நீதிமன்றங்கள் '' என்பதன் கீழ் பற்றுவைக்கப்படுகிறது.

14. சார்நிலை நீதிமன்றங்கள்.—இம்மாநிலத்தில் 66 சார் நிலை நீதிமன்றங்கள் (Sub-Court) உள்ளன. இவற்றில், கோயம்புத்தூர், மதுரை ஆகிய இரு இடங்களிலுள்ள விற்பனை வரி மேல்முறையீட்டு நடுவர் மன்றக் கூடுதல் ஆயங்களைச் சேர்ந்த நீதிபதி பதவிகள் இரண்டும் அடங்கும். சார்நிலை நீதி பதிகள் அசல் தரப்பு வழக்குகளில் வரம்பேதுமின்றி பணம் சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளையும் விசாரிக்கும் அதிகார முடையவராவர். இவர்களுடைய அதிகார வரம்பு பற்றி சிவில் நீதிமன்றங்கள் சட்டத்தில் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. இவர் கள் 15,000 ரூபாய் மதிப்புடைய பணவழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் உள்ள மாவட்ட முன்சீப்புகள் வழங்கும் தீர்ப்புக் களுக்கெதிராக செய்யப்படும் மேல்முறையீடுகளையும் விசாரித்து தீர்ப்பு வழங்கும் அதிகாரமுடையவராவர். சார்நிலை நீதிபதி களே செஷன்ஸ் உதவி நீதிபதிகளுமாவர். மேலும், தற்போது சார்நிலை நீதிமன்றங்கள் அனைத்தும் மோட்டார் வண்டி விபத்து கோரிக்கை நடுவர் மன்றங்களாக அமைக்கப்பட்டுள்ளன. 10 ஆண்டுகள் நீதித்துறையில் பணியாற்றிய அனுபவமுள்ள சார் நிலை நீதிபதிகளே, மோட்டார் வண்டி விபத்து உரிமைக் கோரிக்கை நடுவர் மன்றங்களாகச் செயல்படுவதுடன் இந்நடுவர் மன்றங்களின் நீதிபதிகளாகவும் பணியாற்றுகின்றனர்.

15. மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள்.—இம்மாநிலத்தில் மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் 123 உள்ளன. அத்துடன் மாவட்ட முன்சீப் துணைக்கோட்ட நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் 6–ம் மாவட்ட முன்சீப்-நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் 2–ம் உள்ளன. 1901ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 7 ஆம் நாளிலிருந்து ரூ. 15,000 வரை யிலும் பணஞ்சார்ந்த வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தை மாவட்ட முன்சீப்கள் பெற்றுள்ளனர். மாவட்ட முன்சீப் நீதிமன்றம் ஒவ்வொன்றும் வரையறுக்கப்பட்ட அதிகார வரம்பைக் கொண்டுள்ளன. இவர்கள் ரூ. 500 வரையிலுள்ள சிறு வழக்கு அதிகார வரம்பையும் செலுத்துகின்றனர். மேலும், இந்நீதிபதிகள் அவர்களுடைய அதிகார வரம்பிற்குட் பட்ட பகுதிகளில் வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் செயல்படுகின்றனர்.

நகலெடுப்போர், நீதிமன்றக் கட்டளைகளைச் சார்வு செய் வோர் ஆகிய பணியாளர்கள் அமைப்பு உட்பட, வெளியூர்களி லுள்ள மாவட்ட நீதிமன்றங்கள், சார்நிலை நீதிமன்றங்கள்

மாவட்ட முன்சிப் நீதிமன்றங்கள் ஆகியவை தொடர்பாக 1987–88 ஆம் ஆண்டில் 8,56,38,000 ரூபாய் செலவு ஏற்படுமென்று மதிப் பிடப்படுகிறது. இச்செலவில், அதிகாரிகளின் சம்பளம், படிகள், அரசுப்பணி அஞ்சல்வில்லைகள், வீதங்கள், வரிகள், வாடகை கள், அலுவலகச் செலவுகள், புத்தகங்கள், குறிப்பிட்ட கால முறை வெளியீடுகள், மின் கட்டணம், தொலைபேசிக் கட்டணம், அறைக்கலங்கள் போன்றவை, உணவுக் கட்டணம், செஷன்ஸ் நீதி மன்றங்கள் முதலியவற்றிற்கும் சாட்சியம் அளிக்க வரும் சாட்சிகளுக்கு வழங்கத்தக்க போக்குவரத்துக் கட்டணம் முத லியன போன்ற சில்லறைச் செலவுகளும் அடங்கும்.

16. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களி லுள்ள தொழிலாளர் நல நீதிமன்றங்கள்.—தொழிலாளர் நல நீதிமன்றங்கள் சென்னையில் நான்கும் மதுரையில் இரண்டும் கோயம்புத்தூரில் ஒன்றும் உள்ளன. மாநிலம் முழுவதிலும் அதி கார வரம்பைச் செலுத்தும் தொழிற்சாலைகள்-நடுவர் மன்றம் ஒன்றும் சென்னையில் உள்ளது. தொழிலாளர் நல நீதிமன்றங் கள், தொழில் நடுவர் மன்றங்கள் ஆகியவற்றின் நீதிபதிகள், மாவட்ட நீதிபதி பதவித் தரத்தைச் சேர்ந்தவர்களாவர். அரசு அனுப்புகின்ற தொழில் தகராறுகள் குறித்தும், தரப்பினர் தாக் கல் செய்யும் கோரிக்கை மனுக்கள் குறித்தும் தொழிலாளர் நல நீதிமன்றங்கள் விசாரணை செய்து தீர்ப்பு வழங்குகின்றன.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள், தொழில் நடுவர் மன்றம் ஆகியவற்றின் நீதிபதிகள் அனைவரும் முகாம் நீதிமன்றங்களை அமைத்து அவரவரது அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் எழும் தொழிலாளர் தகராறுகளையும், கோரிக்கை மனுக் களையும் தீர்த்து வைக்கின்றனர்.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள் தொடர்பாக ஏற்படும் செலவு 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் "2230. தொழிலாளர் வேலைவாய்ப்பு—01. தொழிலாளர்—101. தொழில் உறவு—I. திட்டத்தில் சேராதது—ஏசி. சென்னை, மதுரை, மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர் நீதிமன்றங்கள்" என்ற தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படுகிறது.

சென்னை தொழிலாளர் நல நீதிமன்றங்கள், தொழில் நடுவர் மன்றம் தொடர்பாக 1987–88 ஆம் ஆண்டில் மொத்தம் 18,32,000 ரூபாய் செலவு ஏற்படுமென்று மதிப்பிடப்படுகிறது.

17. சிறு வழக்கு நீதிமன்றம், சென்னை.—மாவட்ட நீதிபதி பதவித் தரத்தைச் சேர்ந்த நீதிபதியே இந்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாவார், சார்நிலை நீதிபதி





(Sub-Judge) பதவித் தரத்தைச் சேர்ந்த 7 நீதிபதிகளும் மாவட்ட
முன்சிப் பதவித் தரத்தைச் சேர்ந்த 8 நீதிபதிகளும் உள்ளனர்.
[illegible] நீதிமன்றத்தில் மாவட்ட முன்சிப் பதவித் தரத்தைச்
சேர்ந்த பதிவாளர் பதவி ஒன்று தனியாக உள்ளது. இப்
பதிவாளரே நிருவாகத்திற்குப் பொறுப்பு வகிக்கிறார். குறிப்
பிட்ட சில நிறைவேற்று மனுக்களை முடிவு செய்தல் போன்ற
சில நீதித்துறை அலுவல்களையும் இவர் கவனித்து வருகின்
றார். மாநகர சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின்கீழ் சிறு
வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தைத் தலைமை நீதிபதியும்,
பிற இளநிலை நீதிபதிகளும் செலுத்துகின்றனர். மோட்டார்
வண்டிகள் சட்டத்தின் கீழ் வழக்குகளை விசாரிப்பதற்கென்றே
நடுவர் மன்றமாக V-ஆம் நீதிபதி பணியாற்றி வருகிறார்.
தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை-வாடகை கட்டுப்பாடு)
சட்டத்தின் கீழ் மேல்முறையீட்டு அதிகாரிகளாக VI-VII ஆம்
நீதிபதிகள் பணியாற்றுகின்றனர். VIII-லிருந்து XIV-வரையி
லான நீதிபதிகள் சென்னை மாநகரத்தின் வாடகைக் கட்டுப்பாடு
அதிகாரிகளாகப் பணியாற்றுகின்றனர். தலைமை நீதிபதியும்,
II, III, IV, நீதிபதிகள் மற்றும் VI, VII ஆம் நீதிபதிகளும்
வாடகைக் கட்டுப்பாட்டு மேல்முறையீடுகளை விசாரணை
செய்வதற்குரிய அதிகாரம் உடையவராவர். சிறு வழக்குகள்
நீதி மன்றம் தொடர்பாக 1987-88 ஆம் ஆண்டில் 33,65,000
ரூபாய் செலவு ஏற்படும் என்று மதிப்பிடப்படுகிறது.

முன்னாள் ஜமீன் எஸ்டேட்டுகள்-இனாம் எஸ்டேட்டுகள்
ஒழிப்பு குறித்து இழப்பீட்டுத் தொகையைப் பங்கீட்டுப்
பிரித்தளிக்கும் பணிக்காக திருச்சிராப்பள்ளியிலும், இராமநாத
புரத்திலும் உள்ள நடுவர் மன்றம் தொடர்பாக இந்த உட்சிறு
தலைப்பின் கீழாக 42,000 ரூபாய் செலவுத் தொகையும் மேற்
சொன்ன தொகையில் அடங்கும்.

18. மாவட்டங்களிலுள்ள குற்றவியல் நீதிமன்றங்கள் :

(i) நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள்.
இம்மாநிலத்தில் நீதித் துறை தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்
றங்கள் 14 உள்ளன. இவற்றுடன், பொருளாதாரக் குற்றங்களை
விசாரணை செய்ய கும்பகோணத்தில் ஒன்றும், மதுரையில் ஒன்று
மாக நீதித் துறை கூடுதல் தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்
களும், வனம் தொடர்பான குற்றங்களை விசாரணை செய்ய
சார்நிலை நீதிபதி பதவித்தரத்தில் தருமபுரி மாவட்டத்தில்
கூடுதல் தனி நீதிபதி நீதிமன்றம் ஒன்றும் செயல்பட்டு வருகின்
றன. இந்நீதிமன்றங்களிலுள்ள நீதிபதிகள் சார்நிலை நீதிபதி
பதவித் தரத்தில் உள்ளனர். நீதித் துறை தலைமை மாஜிஸ்டி
ரேட்டுகள் தங்கள் மாவட்டங்களிலுள்ள குற்றவியல் சார்நிலை
நீதிமன்றங்களை ஆய்வு செய்கின்றனர். நீதித் துறை தலைமை
மாஜிஸ்டிரேட்டுகள் தங்களுடைய நிருவாகப் பணியோடு, 1973
ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையின் [illegible]

துறைகளின்கீழ் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடுகள் அந்நீதிமன்றங்களால் மேற்கூறிய நீதித் துறை தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்களுக்கு அனுப்பிவைக்கப்படும்போது அவற்றை இவர்கள் விசாரணை செய்ய மேற்கூறிய சட்டக் கோவையின்கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளனர்.

(ii) நீதித்துறை உட்கோட்ட மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள்.—நீதித் துறை உட்கோட்ட மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் 20 உள்ளன. இந்நீதிமன்றங்களில் நீதிபதிகள் மாவட்ட முன்சீப் பதவித்தரத்தில் உள்ளவர்கள் ஆவர். அவர்கள் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுக்குரிய அதிகாரங்களைச் செலுத்துகின்றனர். ஆனால், நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் வழங்கும் தீர்ப்புகளுக்கெதிராக செய்யப்படும் மேல்முறையீடுகளை விசாரணை செய்யும் அதிகாரம் இவர்களுக்கு இல்லை.

(iii) நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள்.—மதுவிலக்கு வழக்குகளை விசாரணை செய்வதற்காக கூடுதல் நீதிமன்றங்கள் 22, குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்காக கூடுதல் நீதிமன்றங்கள் 4, வணிகக் குற்றங்களை விசாரணை செய்வதற்காக கூடுதல் நீதிமன்றங்கள் 3 ஆகியவை உட்பட மொத்தம் 58 நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் உள்ளன. இந்த நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு விசாரிப்பதற்குரிய வழக்குகளை முடிவு செய்வதில் நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டுகளுக்கு உதவி செய்வர்.

(iv) நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள்.—நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றங்கள் 144 உள்ளன. இந்த நீதிமன்றங்களிலுள்ள மாஜிஸ்டிரேட்டுகள் 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் முதலாம் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு அவர்களுக்குரிய அதிகார எல்லைக்குள் தாக்கல் செய்யப்படும் புகார்கள், வழக்குகள் ஆகியவற்றை விசாரணை செய்து முடிவு செய்கின்றனர்.

19. வெளியூர்களிலுள்ள குற்றவியல் நீதிமன்றங்கள் அனைத்திற்கும் 1987-88 ஆம் ஆண்டில் 4,44,96,000 ரூபாய் செலவு ஏற்படும் என்று மதிப்பிடப்படுகிறது.

இவை தவிர, பயணச் சீட்டு இன்றிப் பயணம் செய்வது போன்ற குற்றங்களை இந்திய இரயில்வே சட்டத்தின் கீழ் விசாரணை செய்ய இரயில்வே மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் எழும்பூர் இரயில் நிலையத்தில் ஒன்றும், சென்ட்ரல் இரயில் நிலையத்தில் ஒன்றும் இருப்பதுடன், வட ஆர்க்காடு, தென்





ஆர்க்காடு, கோயம்புத்தூர், மதுரை, சேலம், தஞ்சாவூர், திருச்சி
ராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இரயில்வே
மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் உள்ளன. இரயில்வே மாஜிஸ்
டிரேட்டு நீதிமன்றங்களுக்குரிய செலவை நீதித்துறையே மேற்
கொள்கிறது. மேற்குறிப்பிட்ட நீதிமன்றங்கள் வசூலிக்கும் அப
ராதத் தொகை, நீதித்துறை மேற்கொண்ட செலவிற்குப் பதி
லாக, அத்துறைக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

1980-81ஆம் ஆண்டில், ஏழாம் நிதிக் கமிஷன் பரிந்துரைகளின்
படி, மத்திய அரசின் நிதி உதவியுடன் இவ்வரசு குற்ற வழக்கு
நீதிமன்றங்களை அதாவது நெய்வேலி, நீதித்துறை இரண்டாம்
வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் நான்கிற்கும் ; (2) திரு
வண்ணாமலை, கோபிசெட்டிபாளையம், வள்ளியூர் ஆகிய இடங்
கள் ஒவ்வொன்றிலும் உட்கோட்ட நீதித்துறை மாஜிஸ்டி
ரேட்டு நீதிமன்றங்கள் ஒவ்வொன்றும் தொடங்க அனுமதி
அளித்தது. மேற்குறிப்பிட்ட நீதிமன்றங்களைப் பொறுத்த
மட்டில் ஏழாம் நிதிக் கமிஷன் 1979-84 வரையிலான கால அள
விற்கு வருவாய் செலவினமாக 10.04 இலட்சம் ரூபாய் நிதி
யொதுக்கீடு செய்தது. நீதித்துறை, மேற்குறிப்பிட்ட நிதியொ
துக்கத்தை முழுவதுமாகப் பயன்படுத்தியுள்ளது. அத்துறை
மேற்குறிப்பிட்ட கால அளவில் 12,47,439 ரூபாய் செலவிட்
டுள்ளது. மேற்குறிப்பிட்ட நான்கு நீதிமன்றங்களும் இப்போதும்
செயல்படுகின்றன. அந்நீதிமன்றங்களுக்கான செலவை தற்
போது தமிழ்நாடு அரசு 1984-85 ஆம் ஆண்டிலிருந்து மேற்
கொண்டு வருகிறது.

1955 ஆம் ஆண்டு மக்களுரிமை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்குகளை விசாரணை செய்வதற்காக, மதுரை, திருச்சிராப்பள்ளி, கும்பகோணம், திருநெல்வேலி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்று என்ற வகையில் நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் நான்கிற்கும், அரசு, உள்துறையின் 13–11–1981 ஆம் நாளிட்ட 2688 ஆம் எண் அரசாணையில் அனுமதி அளித்துள்ளது. மேற்குறிப்பிட்ட நீதிமன்றங்களுக்கான செலவில் 50 சதவீதத் தொகை மத்திய அரசிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படத்தக்கதாகும்.

நீதித்துறை முதல்வகுப்பு மாஜிஸ்டிரேட் தனி நீதிமன்றங்கள் (மக்கள் உரிமைப் பாதுகாப்பு) நான்கினை பின்வரும் இடங்களில் அமைக்க சென்னை உயர்நீதிமன்றப் பதிவாளர் செயற்குறிப்பு ஒன்றை அனுப்பியுள்ளார். அச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

1. பண்ருட்டி .. தென் ஆற்காடு மாவட்டம்.

2. நாகப்பட்டினம் .. தஞ்சாவூர் மாவட்டம்.

3. கோயம்புத்தூர் .. கோயம்புத்தூர் (நகரப் பகுதி) கோயம்புத்தூர் (கிராமப் பகுதி) பெரியார் மாவட்டம்.

4. செங்கற்பட்டு .. செங்கற்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டம்.

20. தமிழில் சட்ட இதழ்கள்.—'தீர்ப்புத் திரட்டு' என்னும் சட்டத் தமிழ் (திங்கள்) இதழ் ஒன்றை உயர்நீதிமன்றம் வெளியிட்டு வருகிறது. மாவட்ட நீதிபதி நிலை II பதவித் தரத்தில், தலைமைப் பதிப்பாசிரியர் ஒருவரும் சார்நிலை நீதிபதி பதவித் தரத்தில், இணைப் பதிப்பாசிரியர் ஒருவரும், உதவிப் பதிப்பாசிரியர், சுருக்கெழுத்துத் தட்டச்சர், தட்டச்சர், படி திருத்துபவர், அலுவலக உதவியாளர்கள் ஆகிய பணியாளர்களை நியமிக்க அரசு அனுமதி அளித்துள்ளது. சட்டத் தமிழ் இதழ் தலைமைப் பதிப்பாசிரியர், அலுவலகப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளம், படிகள், குறித்த செலவு ''2014. நீதி நிருவாகம்—00 800. ஏனைய செலவு—ஏசி. சட்ட இதழ் வெளியீடுதல்'' என்னும் தலைப்பில் பற்றெழுதப்படுகிறது. 1987-88 ஆம் ஆண்டுக்கான செலவு ரூ. 4,30,000 என்று மதிப்பிடப் பட்டுள்ளது. சட்டத் தமிழ் (திங்கள்) இதழ் (தீர்ப்புத் திரட்டு) வழக்குரைஞர்களுக்கும், பொது மக்களுக்கும் ஓர் இதழ் ரூ. 5 என்ற பெயரளவிலான விலையில் விற்பனைக்குக் கிடைக்கிறது.

21. நீதிமன்றக் கட்டிடங்கள்.—நீதித் துறையில் உயர்நீதி மன்றக் கட்டிடங்களையும், உயர் நீதிமன்றக் கட்டிடங்கள் நீங்கிய ஏனைய கட்டிடங்களையும் பராமரிப்பதற்குரிய செலவு 18 ஆம் எண் மானியக் கோரிக்கையில் ''2059. பொதுப் பணிகள்'' என்கிற கணக்குத் தலைப்பின்கீழ் காட்டப்படுகிறது. 1987—88 ஆம் ஆண்டில் செய்யக் கருதியுள்ள செலவு ரூ. 11,00,000 ஆகும்.

22. 1986—87 ஆம் ஆண்டில் பின்வரும் இனங்களுக்கான செலவிற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது :—

(1) சென்னை உயர்நீதி மன்றத்திற்கு ரூ. 555 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் கூடுதல் கட்டிடத் தொகுதி கட்டுவதற்கு கொள்கையளவில் ஒப்புக் கொள்ளப்பட்டு, தற்போது ரூ. 10 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

(2) ரூ. 0.08 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் உயர் நீதிமன்றக் கட்டிடத்தின் திருவாகத் துறையின் மேற்கும் பக்கத்திலுள்ள இரும்புச் செய்து அமைத்த பகுதிகளில் மின்சாதனங்களைப் பொருத்துதல்.



(3) ரூ. 0.25 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் உயர்நீதி மன்றக் கட்டிடங்களின் வராந்தாவை அடைத்து, உயர்நீதிமன்றத்திலுள்ள திருவாகத் துறைக்கும், சுருக்கெழுத்தர்களுக்கும் கூடுதலாக இடவசதி செய்து கொடுத்தல்.

(4) ரூ. 0.48 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் உயர்நீதி மன்ற வளாகத்தில் சைக்கிள்களை நிறுத்துவதற்கான கொட்டகை கட்டுதல்.

(5) ரூ. 0.02 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் சென்னை உயர்நீதிமன்றத்தில் ஜெராக்ஸ் எந்திரம் உள்ள அறையில் இரு சுழலும் மின் விசிறிகளைப் பொருத்துதல்.

(6) ரூ. 0.70 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் சென்னை, உயர்நீதிமன்றத்தில் நீரைக் குளிரவைக்கும் சாதனம் (Water cooler) வழங்குதல்.

(7) ரூ. 0.18 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் உயர்நீதி மன்றக் கட்டிடத்தில் மேற்குப் பக்கத்திலுள்ள ஆங்கில ஆவண அறையின் வராந்தாவை அடைத்து கூடுதல் இடவசதி செய்து கொடுத்தல்.

(8) ரூ. 0.26 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில், சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகளின் அறையில் உள்ள சாதாரண மின் விளக்குகளை அகற்றிவிட்டு அவற்றின் இடத்தில் பாதரச ஆவி மின் விளக்குகளைப் பொருத்துதல்.

(9) ரூ. 0.16 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில், உயர்நீதி மன்றக் கட்டிடத்தில் ரிட் பிரிவின் தெற்குப் பகுதியில் தடுப்புப் பகுதிகள் அமைத்தல்.

(10) ரூ. 0.13 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் சென்னை சிறுவழக்கு நீதிமன்றத்தில் கதவு இல்லாமல், கட்டிடத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள வராந்தாவின் தடுப்புப் பகுதிகள் அமைத்தல்.

(11) ரூ. 0.59 இலட்சம் மதிப்பீட்டுச்செலவில், எழும்பூர் தலைமைப் பெருநகர் மாஜிஸ்டிரேட் , நீதிமன்ற ஆண், பெண் பணியாளர்களுக்கு நீரடிக் கழிப்பிடம் (F.O.L.) கட்டுதல்.

(12) ரூ. 0.03 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் உதகமண்டலம், பொது நீதிமன்ற நீதிபதி அறையிலும், மாவட்ட நீதிமன்றத்தின் அலுவலக அறையிலும் வெப்பமூட்டும் மின்சாதனம் நிறுவ வகை செய்தல்.

[1987 ஏப்ரல் 25

(13) ரூ. 0.60 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில், மதுரையிலுள்ள கூட்டு நீதிமன்றக் கட்டிடங்களிலுள்ள மாஜிஸ்டிரேட்டின் நீதிமன்றச் சொத்து அறையில் சிமிட்டிப் பலகைத் தடுப்பு அலமாரி அமைத்தல்.

(14) ரூ. 0.30 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் நாகர்கோயில் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் சைக்கிள் கொட்டகை கட்டுதல்.

(15) ரூ. 0.09 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் பொன்னேரி நீதித் துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்திற்கு நீரடிக் கழிப்பிடம் கட்டுதல்.

(16) ரூ. 0.18 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த திருச்செங்கோடு, நீதித் துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுக்கும் இந்நீதிமன்றப் பணியாளர்களுக்கும் நீரடிக் கழிப்பிடம் கட்டுதல்.

(17) ரூ. 0.30 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில், தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில் தலைமை நீதித் துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்திலும், நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்திலும் நீரடிக் கழிப்பிடம் கட்டுதல்.

(18) ரூ. 0.80 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில், நாகர்கோயில் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் மேல்நிலைத் தொட்டி கட்டுதல்.

(19) ரூ. 0.07 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் பூவிருந்தவல்லி, மாவட்ட முன்சீப் நீதிமன்ற வளாகத்தில் இரும்பு வாயிற் கதவுகள் பொருத்துதல்.

(20) ரூ. 54 இலட்சத்திற்கு அதிகமான ரூ. 32 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் பாளையங்கோட்டையில் கூட்டு நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டுவதற்காக கூடுதல் செலவுக்கு ஒப்புதலளித்தல்.

(21) ரூ. 0.13 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் ஈரோட்டில் நீதிமன்றக் கட்டிடங்களிலும், சட்ட அறைகளிலும் சுவர்களில் சிமிட்டி பூசுவதற்கு ஒப்புதலளித்தல்.

(22) ரூ. 0.37 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் கோயம்புத்தூரில் தொழிலாளர் நீதிமன்ற வளாகத்தில் பெண் பணியாளர்களுக்குக் கழிப்பிடம் கட்டுதல்.



1987 ஏப்ரல் 25]

(23) மதுரையில் உயர்நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றினை நிறுவுதல் :—மதுரையில் உயர்நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றினை நிறுவுவது குறித்து 1972-ம் ஆண்டிலேயே பரிசீலிக்கப்பட்டது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 246-ம் பிரிவின்படி உயர் நீதிமன்றத்தினை அமைக்கும் அதிகாரம் மத்திய நாடாளுமன்றத்தின் அதிகாரத்திற்குட்பட்டதாகும். எனவே, இம்மாநிலத்தின் தென் மாவட்டங்களிலுள்ள வழக்குத் தொடுக்கும் பொது மக்களின் தேவையினை நிறைவு செய்யும் வகையில், உயர் நீதிமன்றத்தின் ஆயம் அல்லது முகாம் நீதிமன்றத்தையாவது நிறுவுவதற்கான நடவடிக்கை எடுக்குமாறு 1973-ம் ஆண்டிலேயே மைய அரசுக்கு இம்மாநில அரசு கடிதம் எழுதியது. ஏற்கனவே மைய அரசுக்கு மாநகரத் தலைநகரங்கள் தவிர ஏனைய இடங்களில் உயர்நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றினை நிறுவுவது குறித்த அனைத்துக் கூறுகளையும் கண்டறிவதற்காக உச்ச நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியாக திரு. ஜஸ்வந்த்சிங் என்பவர் தலைமையில் குழு ஒன்றினை நியமித்தது. தமிழக அரசின் மேற்படி கோரிக்கையை மைய அரசு இக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்பியுள்ளது. திரு. ஜஸ்வந்த்சிங் தலைமையிலான குழு 1984-ல் தமிழ்நாட்டிற்கு மூன்றுமுறை வருகை தந்து இம்மாநில அரசின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியது. கோயம்புத்தூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, கொடைக்கானல், திருநெல்வேலி ஆகிய இடங்களில் வசிக்கும் வழக்காடு மக்கள், இதில் ஆர்வமுள்ள மக்கள், நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரின் கருத்துக்களைக் கேட்டறிந்தது. சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியுடனும் தமிழக அரசின் ஏனைய அதிகாரிகளுடனும் விவாதித்தது. ஜஸ்வந்த்சிங் குழு தம்முடைய அறிக்கையை மத்திய அரசிடம் அளித்தது. மத்திய அரசு, நீதிபதி ஜஸ்வந்த்சிங் கமிஷன் அறிக்கையையும் பரிந்துரையையும் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், முதலமைச்சர் சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகியோருக்கு அனுப்பி, சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியை கலந்தாலோசித்து கருத்து அளிக்குமாறு கேட்டுக் கொண்டது. அரசு இது குறித்து சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியைத் தமது கருத்துக்களை அளிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது இவ்வரசு, தலைமை நீதிபதியிடமிருந்து கருத்துக்களைப் பெற்றவுடன், மத்திய அரசுக்கு மீண்டும் கடிதம் எழுதும்.

24. சென்னையில் உச்ச நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றினை நிறுவுதல் (Setting up of a Bench of the Supreme Court at Madras) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 246 ஆம் பிரிவின்படி உச்ச நீதிமன்றத்தினை நிறுவுதல், அமைத்தல், அதிகார வரம்பினை வரையறுத்தல், அதிகாரங்களை நிர்ணயித்தல் ஆகியவை மத்திய அரசின் நாடாளுமன்றத்துக்கு மட்டுமே உரிய அதிகாரமாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 130 ஆம் பிரிவின்படி இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன் இந்தியத் தலைமை நீதிபதி அவ்வப்போது குறிப்பிடக்கூடியவாறு

டில்லியில் அல்லது வேறு இடம் அல்லது இடங்களில் உச்ச நீதி
மன்றம் கூடும். சென்னையில் உச்ச நீதிமன்றத்தின் ஆயம்
ஒன்றினை நிறுவுவதற்கு மைய அரசின் இசைவினைப் பெற
வேண்டியது அவசியமாகும். இது தொடர்பாக விரைவில்
முடிவு எடுக்குமாறு மாநில அரசு மைய அரசைக் கேட்டுக்
கொண்டது. அமைக்கக் கருதியுள்ள உச்ச நீதிமன்றத்தின்
ஆயம் நீதிபதிகளின் குடியிருப்பு ஆகியவற்றுக்கான கட்டிடங்கள்
போன்ற தேவையான வசதிகளைச் செய்து தருவதாகவும்
இம்மாநில அரசு மைய அரசுக்கு தெரிவித்துள்ளது. இது
தொடர்பாகச் செயற்குறிப்பு இந்திய தலைமை நீதிபதிக்கு அனுப்
பப்பட்டுள்ளதாக மைய அரசு 1983 ஆம் ஆண்டு ஜூன் திங்களில்
இம்மாநில அரசுக்குத் தெரிவித்தது. இதற்குரிய பதில் அவரிட
மிருந்து மத்திய அரசுக்கு இன்னும் வரவில்லை. இந்திய
தலைமை நீதிபதியின் பரிந்துரை கிடைத்தவுடன் இச் செயற்
குறிப்பின் மீது மைய அரசு முடிவு எடுக்கும்.

25. பொது :—குறிப்பிட்ட ஒரு பகுதியில் நீதிமன்றங்கள்
அதிக அளவில் இருப்பதைத் தவிர்ப்பதற்காகவும், தங்களுடைய
வழக்குகளுக்காகத் தலைமை இடங்களுக்குச் செல்வது கடினமாக
இருக்கிற என்பதால் வழக்குத் தொடுக்கும் பொது மக்களுக்குத்
தகுந்த உதவி அளிப்பதற்காகவும் தலைமை இடங்களில் உள்ள
நீதிமன்றங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்று கொள்கை
யளவில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

சிவில், குற்றவியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பை
மாநிலம் முழுவதும் ஆய்வு செய்வதற்காக அரசால் நியமனம்
செய்யப்பட்ட அதிகாரிகள் குழு தனது அறிக்கையை அரசுக்கு
அனுப்பியது. உயர்நீதிமன்றம் பரிந்துரைத்தவாறு நீதிமன்றங்
களின் அதிகார வரம்பு குறித்து ஆய்வு செய்த இக்குழுவின்
பரிந்துரையை அரசு ஏற்றுக் கொண்டு ஐந்தாண்டுக்கால அளவில்
படிப்படியாக அப்பரிந்துரைகளை நிறைவேற்ற முடிவு செய்
துள்ளது.

தற்போது உள்ளவாறு, வெளியூரிலுள்ள சிவில் நீதிமன்றங்
களின் அதிகார வரம்பு தமிழ்நாடு சிவில் நீதிமன்றங்கள் சட்டத்
தின் கீழ் நிர்ணயிக்கப்படுகிறது. இது போன்றே மாநகர சிவில்
நீதிமன்றத்தின் அதிகார வரம்பு தமிழ்நாடு சிவில் நீதிமன்றங்கள்
சட்டத்தின்கீழும், சிறு வழக்குகள் நீதிமன்றங்களின் அதிகார
வரம்பு மாநில சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின்கீழும்
நிர்ணயிக்கப்படுகிறது.

மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு, ஒன்று
அல்லது அதற்கு மேற்பட்ட வட்டங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்
ளது. சார்நிலை நீதிமன்றத்தின் அதிகார வரம்பு ஒன்று அல்லது
அதற்கு மேற்பட்ட முன்சீப் நீதிமன்றத்திற்கு நீட்டிக்கப்பட்டுள்
ளது. மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றத்தைப் பொறுத்தமட்டில்





அதன் அதிகார வரம்பு தஞ்சாவூர், இராமநாதபுரம் மாவட்டங்
கள் நீங்கலாக ஏனைய வருவாய் மாவட்டங்கள் முழுவதற்கும்
நீட்டிக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் வருவாய் மாவட்டம் இரு நீதித் துறை பிரிவு
களாக அதாவது மேற்கு தஞ்சாவூர், கிழக்கு தஞ்சாவூர் எனப்
பிரிக்கப்பட்டுள்ளது. இவை தனி மாவட்ட செஷன்ஸ் நீதிபதி
களைக் கொண்டு, முறையே தஞ்சாவூரிலும் நாகப்பட்டினத்திலும்
செயல்படுகின்றன.

இராமநாதபுரம் முன்னாள் வருவாய் மாவட்டம் மூன்று வரு
வாய் மாவட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அதாவது,
இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கம்
மாவட்டம், காமராஜர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்ட
நீதிபதி மேற்சொன்ன 3 வருவாய் மாவட்டங்களிலும்
அதிகார வரம்பைச் செலுத்துகிறார்.

குற்றவியல் நீதிமன்றங்களைப் பொறுத்தமட்டில், 1973-ம்
ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின்
(மத்திய சட்டம் 2/1974) கீழ் அதிகார வரம்பு நிர்ணயிக்கப்
படுகிறது. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்
நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, மூன்று அல்லது அதற்கு
மேற்பட்ட காவல் நிலையங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.
நீதித் துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள்.
நீதித்துறை உட்கோட்ட மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் ஆகிய
வற்றின் அதிகார வரம்பு பல நீதித்துறை இரண்டாம் வகுப்பு
மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளன.

புதிய நீதிமன்றங்கள் அமைக்குமாறு வழக்கறிஞர் சங்கத்
திடமிருந்து அல்லது வழக்காடும் பொதுமக்களிடமிருந்து முறை
யீடுகள் வரப் பெறும்போது உயர்நீதிமன்றம் அத்தகைய முறை
யீடுகளைப் பரிசீலித்த பின்னர், புதிய நீதிமன்றங்களை அமைப்
பதற்குச் செயற்குறிப்புகளை அனுப்புகிறது. அந்தந்த மாவட்ட
நீதிபதிகளுடன், அல்லது, தலைமை நீதித்துறை மாஜிஸ்டிரேட்
டுகளுடன் கலந்தாலோசித்து முறையீடுகளைக் கவனமாகப்
பரிசீலித்து, புதிய நீதிமன்றம் ஏற்படுத்துவது அவசியமென்று
உயர் நீதிமன்றம் மன நிறைவடைந்தால் அதுபற்றி அரசுக்கு
எழுதுகிறது.

தனிக்குழு அறிக்கையின் 209 ஆம் பாராவின்படி, குறிப்பிட்ட
ஒரு நீதிமன்றத்தில் முடிவடையாமலுள்ள வழக்குகள் இரு மாதங்
களுக்கான அல்லது ஒரு மாஜிஸ்டிரேட்டுக்கு அதிகமாக
உள்ள பணியைக் குறிப்பிடும்போது கூடுதலாக மாஜிஸ்டிரேட்டு
நியமிப்பதன் மூலம், உடனடி நிவாரணம் அளிக்கப்பட வேண்
டும். கூடுதல் மாஜிஸ்டிரேட்டுகளை நியமிப்பதில் காலந்தாழ்த்து
வதால் செலவு குறையும் என்று எண்ணுவது தவறான
கருத்தாகும். ஏனெனில், மேலும் மேலும் பணி கூடுதலாகச்

சேர்ந்து கொண்டு வரும் நிலையில் கூடுதல் அதிகாரி எக்கால அளவுக்கு தேவைப்படுகிறாரோ அக்கால அளவும் அதற்கு நிக ராக அதிகரிக்கும்.

புதிய இடங்களில் புதிய நீதிமன்றங்களை ஏற்படுத்துவதைத் தவிர உரிமையியல் வழக்குகளின் நிலுவை சமாளிக்க இயலாத அளவுக்குப் பெருகிவிடும் நிலை ஏற்பட்டால், வழக்குகளை விரைவில் முடிப்பதன்மூலம், வழக்காடும் பொது மக்களின் நலனைக் காப்பதைக் கருத்தில் கொண்டு நிலுவைகளை தீர்ப் பதற்காகக் கூடுதலாக உரிமையியல் வழக்கு நீதிமன்றங்களை ஏற்படுத்துமாறு உயர்நீதிமன்றம் அவ்வப்போது அரசுக்கு பரிந் துரைக்கிறது.

சாதாரணமாக, மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களில் விசா ரணையிலுள்ள 200 பழைய வழக்குகள் அல்லது துணை நீதிமன் றங்களில் விசாரணையிலுள்ள 75 வழக்குகள் நிலுவையிருப்பின், அவை கூடுதலாக நீதிமன்றங்களை ஏற்படுத்த வேண்டும் என் னும் கோரிக்கையைத் தெரிவிக்கப் போதுமானது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

1975 ஆம் ஆண்டில் கடன் நிவாரண அவசரச் சட்டத்தை செயல்படுத்தியதன் விளைவாக, முடிவடையாமலுள்ள சில வழக்கு களில் மேற்கொண்டும் நடைமுறைகள் நிறுத்தி வைக்கப் பட்டன. சில புதிய வழக்குகள் தாக்கல் செய்வதும் தடை செய்யப்பட்டது.

தடையாணை பிறப்பிக்கப்பட்டிருந்ததால் விசாரணைக்கு எடுத் துக் கொள்ளப்படாமலிருந்த வழக்குகளும், நடைமுறைகளும், 1978 ஆம் ஆண்டில் கடன் நிவாரண அவசரச் சட்டம் நீக்கப் பட்ட பின்னர் விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டன. மேலும் அதிக அளவில் புதிய வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டன. இதன் விளைவாக, உரிமையியல் நீதிமன்றங்களில் அதிக வழக்கு கள் முடிவு செய்யப்படாமல் இருந்தன.

26. 1986–87 ஆம் ஆண்டில் பின்வரும் உரிமையியல் குற்ற வியல் நீதிமன்றங்களை ஏற்படுத்த அனுமதியளிக்கப்பட்டுள்ளது—

(1) சென்னை மாநகரில் சிறிய வழக்குகளுக்கான நீதி மன்றத்தில் கூடுதலாக நீதிமன்றம் ஒன்று ஏற்படுத்துதல்.

(2) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில், வள்ளி யூரில் ஒரு முன்சிப் நீதி மன்றம் ஏற்படுத்துதல்.

(3) தஞ்சாவூர் (கிழக்கு) மாவட்டத்திலுள்ள நாகப்பட்டி னத்தில் நீதித்துறைத் தனி முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றம் ஏற்படுத்துதல்.

(4) இராமநாதபுரத்தில் நீதித்துறைக் கூடுதல் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம் ஏற்படுத்துதல்.

(5) தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள திட்டக் குடியில் நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம் ஏற்படுத்துதல்.



27. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு பதவிகள் நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு பதவிகளாக நிலை உயர்த்தப்படலாமென்றும் மாவட்ட முன்சிப் பதவித் தரத்துடன் அவற்றை இணைக்கலாமென்றும், அரசு முடிவு செய்துள்ளது குற்றவியல் மாஜிஸ்டிரேட்டுகள், சிவில் நீதிபதிகள் ஆகிய இரு வகையினரும், மாவட்ட செஷன்ஸ் நீதிபதிகளாகப் பதவி உயர்வு பெறுகின்ற காலத்தில், அவர்கள் நீதித்துறையின் பல்வேறு பிரிவுகளையும் சேர்ந்த பணிகளை அறிந்திருக்க வேண்டி மாஜிஸ்டிரேட்டுகள் சிவில் வழக்குகள் விசாரணை பற்றி அனுபவம் பெறவும், சிவில் நீதிபதிகள் குற்றவியல் வழக்குகள் விசாரணை பற்றி அனுபவம் பெறவும் வகை செய்வதே இதன் நோக்கமாகும். இதனைச் செயல் படுத்த சட்டம் கொண்டுவரப் பட்டது விரைவில் இத்திட்டத்தை செயல் படுத்தக் கருதப்படு கிறது.

28. உயர் நீதிமன்றம்,அசல் தரப்பு, மேல் முறையீட்டு தரப்பு ஆகியவற்றின்கீழ் வரும் வழக்குகளின் மூலமும், சார்நிலை குற்றவியல் நீதிமன்றங்களும் '' நீதி நிருவாகம் '' என்ற தலைப் பின் கீழ் வருவாய் பெறுவது முக்கியமானதொரு தொடர்பான கூறு ஆகும்.

0070 01 102, நீதி நிருவாகம் மற்றும் ''0030 01 101 நீதித் துறை முத்திரைத் தாள்கள் (முத்திரைத்தாள் வகையில் வசூலிக்கப்பட்ட நீதிமன்றக் கட்டணங்கள்)'' என்ற தலைப்பின் கீழ் கிடைத்த வருவாய் வரவு, ''2014 நீதி நிருவாகம்'' என்பதன் கீழ் 1982–83, 1983–84, 1984–85 1985–86, 1986–87, மற்றும் 1987–88 ஆகிய ஆண்டுகளுக்கான செலவு ஆகியவை பின்வரும் விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன :—

| | 1982–83 ஆம் ஆண்டு கணக்குகள் | 1983–84 ஆம் ஆண்டு கணக்குகள். | 1984–85 ஆம் ஆண்டு கணக்குகள் | 1985–86 ஆம் ஆண்டு கணக்குகள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| வரவுகள்— | | | | |
| 0070 01 102 நீதி நிருவாகம். | 253.15 | 276.95 | 311.42 | 318.65 |
| 0030 01 101 நீதித்துறை— முத்திரைத்தாள்கள். | 701.39 | 781.06 | 843.64 | 913.13 |
| மொத்த வரவு | 954.54 | 1,058.01 | 1,155.06 | 1,231.78 |
| செலவு— | | | | |
| 2014. நீதி நிருவாகம் | 1,103.91 | 1267.00 | 1,458.00 | 1,720.00 |

| (1) | 1986–87 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் (6) | 1986–87 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகள் (7) | 1987–88 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் (8) |
|---|---|---|---|
| | (ரூபாய் | இலட்சத்தில்) | |
| வரவுகள்— | | | |
| 0070 01 102 நீதி நிருவாகம் | 345.37 | 378.57 | 371.78 |
| 0030 01 101. நீதித்துறை— முத்திரைத்தாள்கள் | 1,000.00 | 1,028.00 | 1.110.24 |
| மொத்த வரவு | 1,345.37 | 1,406.57 | 1,182.02 |
| செலவு— | | | |
| 2014. நீதி நிருவாகம் | 1,590.86 | 1,869.25 | 1,869.92 |

**29. ஏழை எளியவர்களுக்குச் சட்ட ஆலோசனை உதவி :—** இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 39–ஏ பிரிவின்படி ஏழை எளியவர்களுக்கு சட்ட ஆலோசனை அளிக்க வேண்டியது சட்டப்படி அரசின் கடமையாகும். ஏழை எளியவர்களுக்குச் சட்ட ஆலோசனை நல்கும் பொருட்டு 1977-ம் ஆண்டில் அரசு அமைத்த தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக் குழு உயர்நீதி மன்ற ஓய்வு பெற்ற நீதிபதிகள் இருவரின் கீழ் செயல்பட்டு வருகிறது. மாவட்டங்களிலும் வட்டங்களிலும், சட்ட உதவிக் குழுக்கள் இருப்பதுடன் மாநகரிலும், மாவட்டங்களிலும் சட்ட ஆலோசனைப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்திலுள்ள 34 சட்ட உதவி மையங்களுடன் 18 மாவட்டக் குழுக்களும், 85 வட்டக் குழுக்களும் இணக்க ஏற்பாட்டைச் செய்யும் நிலையங்கள் 20-ம் உள்ளன. இக்குழுக்களின் செலவிற்கு அரசு மானியம் அளிக்கிறது.

**30.** இக்குழு ஏழை எளியவர்களுக்கும், சட்ட ஆலோசனை பெறத் தகுதிஉடையோருக்கும், சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கும் சட்ட ஆலோசனை வழங்கி வருகிறது. மோட்டார் விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வாங்கித்தர



இக்குழு சட்ட உதவி செய்கிறது. மாவட்ட நீதிமன்றங்கள், நடுவர் மன்றங்கள் ஆகியவற்றிலுள்ள அதிகாரிகள் மூலமாக நிவாரணம் வாங்கித்தர உதவி செய்வதும் மகளிருக்கும் குழந்தைகளுக்கும் வாழ்க்கை செலவுப் படியைப் பெற்றுத் தர உதவி செய்வதும் இக்குழுவின் பணித் திட்டங்களில் அடங்கும்.

**31.** அரசு அதிகாரிகளும், ஏனையோரும் உள்ள ஒரு நிருவாகக் குழு, சட்ட ஆலோசனை உதவிக் குழுவின் பணிகளை நிருவகிக்கின்றது. மேற்கூறிய குழுவின் செலவிற்காக 1986–87 ஆம்ஆண்டில் மானியமாக ரூ. 40 லட்சத்திற்கு அரசு அனுமதித்துள்ளது. 1987–88 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 40 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆலோசனைக் குழு, கூடுதல் உதவித் தொகைக்காக அரசை அணுகும் பொழுதெல்லாம் அத்தொகை அரசு வழங்கும்.

**32.** மக்கள் நீதிமன்றம் (Lok Adalat)— தமிழ்நாடு சட்ட உதவி ஆலோசனைக் குழு, 15–2–1985 அன்று இம்மாநிலத்தில் மக்கள் நீதி மன்றத்தைத் தொடங்கி வைத்தது இம்மக்கள் நீதிமன்றம் இரு நோக்கங்கள் உடையதாகும். (1) தகராறுகளைத் தீர்த்து வைப்பதன் மூலம் நீதிமன்றங்களில் வழக்காடுவதைத் தடுப்பது : (2) நீதிமன்றங்களிலும் நடுவர் மன்றங்களிலும் முடிவடையாமலுள்ள தகராறுகளை உயர்நீதி மன்றம் ஏற்பளித்த நடைமுறையின் மூலமும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் இசைவைப் பெற்றும் தீர்த்து வைத்தல். இது நீதிமன்ற முறையிலுள்ள சுமையைக் குறைக்கும் என்று நம்பப்படுகிறது.

முதல் மக்கள் நீதிமன்றத்தில், மோட்டார் விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் (இவர்களின் நேர்வில் ஈட்டுறுதி நிறுவனர்கள் இழப்பீடு வழங்க வேண்டும்) உரிமைக் கோரிக்கைகளைத் தீர்த்து வைக்கும் பிரச்சினை எடுத்துக் கொள்ளப்பட்டது நடுவர் மன்றத்தில் முடிவடையாமலுள்ள வழக்குகளுக்கு மக்கள் நீதிமன்றத்தில் தீர்ப்புக்கூறுவதற்கு நடுவர் மன்றம் அனுமதிக்க இயலும் வகையில் உயர் நீதி மன்றம் அனுமதி வழங்கியது. சட்ட உதவிக் குழு உயர் நீதி மன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதிகள், சென்னை அரசு குற்றவியல் வழக்கு நடத்துனர், அரசு உரிமையியல் வழக்கு நடத்துனர். ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதிகள் முதுநிலை வழக்குரைஞர்கள் ஆகியோர் அடங்கிய மக்கள் நீதிமன்றங்களை அமைத்தது. அந்நாள் நிலவரப்படி 8 மக்கள் நீதி மன்றங்கள் இருந்தன. தமிழ்நாடு சட்ட உதவிக் குழு உதவி செய்த மொத்தம் 137 வழக்குகள், கட்சிக்காரர்கள் தங்கள் வழக்குரைஞர்கள் மூலம் செய்து கொண்ட சுமார் 100 உரிமைக் கோரிக்கைகள் ஆகியவற்றை மக்கள் நீதிமன்றம் எடுத்துக் கொள்வதற்காக அவை பட்டியலிடப்பட்டன. அன்று மக்கள் நீதி மன்றம் 115 உரிமைக் கோரிக்கைகளுக்கும், குழு உதவி செய்த 83 வழக்கு

களுக்கும் தனி வழக்குரைஞர்கள் தொடுத்த 32 வழக்குகளுக்கும்
தீர்ப்பளித்தது. தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகளில் சம்பந்தப்
பட்ட தொகை சுமார் ரூ. 18 இலட்சமாகும்.

நடுவர் மன்றங்கள், அந்த இடத்தில் அந்த நாள் விடுமுறை
யாக இருந்தபோதிலும் கூடி, மக்கள் நீதி மன்றத்தில் ஒப்புக்
கொண்ட தீர்ப்பையொட்டி உடனடியாக ஆணைகளைப் பிறப்
பிக்க உயர்நீதிமன்றம் அனுமதியளித்தது.

தீர்ப்பளிக்கப்பட்ட தொகைக்கு உடனடியாகக் காசோலை
களை அளிக்க ஈட்டுறுதி நிறுவனங்கள் ஒப்புக்கொண்டன.

இது சட்ட உதவிக்குழு நடத்திய முதல் மக்கள் நீதிமன்ற
மாகும். மாவட்டங்களிலும் இது போன்று மக்கள் நீதிமன்றங்களை
நடத்துவதன் மூலம் இத்திட்டத்தை விரிவுபடுத்த இயலும் என்று
நம்பப்படுகிறது.

33. இயல் நீதி மன்றங்கள்—இயல் நீதிமன்றம் ஒன்று
1976 ஆம் ஆண்டிலிருந்து மதுரையில் இயங்கி வருகிறது பொதுக்
குற்றங்களையும் போக்குவரத்து விதிகளை மீறி இழைக்கப்படும்
குற்றங்களையும் விசாரிக்க நீதித்துறை 2 ஆம் வகுப்பு மாஜிஸ்
டிரேட்டு தலைமையில் இந்த நீதி மன்றம் செயல்பட்டு வருகிறது:
பெருகிவரும் குற்றங்களைத் தடுக்கவும், குற்றங்கள் புரிபவர்கள்
மீது கடும் நடவடிக்கை எடுக்கவும், அரசு மீண்டும் இயல் நீதி
மன்றங்களை சென்னை மாநகரில் (இந் நீதிமன்றங்கள் 1977 ஆம்
ஆண்டில் செயல்படுவது நிறுத்தி வைக்கப்பட்டது) செயலுக்கு
கொண்டு வந்துள்ளது. சென்னை மாநகரில் பொதுக் குற்றங்
களையும், போக்குவரத்து விதிகளை மீறி இழைக்கப்படும்
குற்றங்களையும் விசாரித்து முடிவு செய்வதற்கு மாவட்ட முன்சீப்
பதவித் தரத்தில் வட சென்னையில் ஒன்றும், தென் சென்னையில்
ஒன்றுமாக இரண்டு இயல் நீதி மன்றங்களைத் தேவையான
பணியாளர்களுடன் அமைப்பதற்கு 1982 ஆம் ஆண்டு ஆகஸ்டு
திங்களில் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இயல் நீதி மன்றங்கள்
31–3–1983 ஆம் நாளிலிருந்து செயல்படத் தொடங்கியுள்ளன.
கோயம்புத்தூரில் உள்ள நீதித் துறை இரண்டாம் வகுப்பு
மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம் (எண் 4) இயல் போக்கு வரத்து நீதி
மன்றமாக மாற்ற 1984 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அரசு
அனுமதி வழங்கியுள்ளது. சென்னை மாநகரில் பொதுக் குற்றங்
களையும் போக்குவரத்து விதிகளை மீறி இழைக்கப்படும் குற்றங்
களையும் விசாரித்து முடிவு செய்வதற்கு மேலும் கூடுதலாக
இயல் நீதி மன்றம் ஒன்று அமைப்பதற்கு 1986 ஆம் ஆண்டு அக்
டோபர் திங்களில் அரசு அனுமதி வழங்கியுள்ளது. எனவே,
சென்னை மாநகரில் மட்டும் மூன்று இயல் நீதி மன்றங்கள்
செயல் பட்டு வருகின்றன.



ஐந்து ரூபாய், ஒரு ரூபாய், அரை ரூபாய், முக்கால் ரூபாய் ஸ்டாம்ப் பேப்பர் கிடைக்காமல் இருக்கிறது. அதற்கு ஒரு சிறிய யோசனையைச் சொல்ல விரும்புகிறேன். போஸ்ட் ஆபீசில் உள்ளதைப் போல ஃபிராங்கிங் மிஷினை ஒவ்வொரு நீதிமன்றத்திற்கும் கொடுத்தால் விலை குறைந்த, சில்லரை ஸ்டாம்புக்காக அந்த கோர்ட்டில் இருக்கக்கூடிய ஹெட்கிளார்க்கிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு ஃபிராங்கிங் மிஷின் மூலம் இம்ப்ரஷன் போட்டுக்கொள்ளலாம். இதனால் சில்லறை ஸ்டாம்ப் பேப்பர் தட்டுப்பாடு தீரும். ஃபிராங்கிங் மிஷினை தருவதில் அரசுக்கு எந்தவிதமான இடைஞ்சலும் கிடையாது. கமிஷன் கொடுக்க வேண்டிய அவசியமுமில்லை. பத்திர பேப்பர்கள் அச்சடிக்க வேண்டிய செலவும் இல்லை. நாங்களே சென்று பணத்தைக் கொடுத்து இம்ப்ரஷனை செலுத்திக் கொள்ளத்தயாராக இருக்கிறோம். உங்களுக்கு வேண்டியது பணம்தானே. அதை நாங்கள் தர தயாராக இருக்கிறோம். ஒரு ரூபாய் கோர்ட் பீஸ் அல்லது காப்பி அப்ளிகேஷனுக்காக முக்கால் ரூபாய் ஸ்டாம்ப் பேப்பர் வேண்டும் என்பதற்காக மூன்று ரூபாய், நான்கு ரூபாய், ஐந்து ரூபாய் என்று கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இரண்டு ரூபாய் ஸ்டாம்ப் பேப்பரை 20 ரூபாய் கொடுத்து நானே வாங்கியிருக்கிறேன். இருக்கின்ற நிலைமைகளைச் சமாளிக்க இது போன்ற ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை அரசு ஏற்றால் இந்த நிலைமைகள் மாற முடியும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சர்வீஸ் ஸ்டாம்ப் இருக்கிறது. புராசெஸ் பீஸ் 3 ரூபாய் என்று வாங்குகிறோம். ஆனால் ரிஜிஸ்டர் போஸ்டுக்காக ஐந்தரை ரூபாய் ஒட்ட வேண்டியிருக்கிறது. இதனால் ஒவ்வொரு புராசெசுக்கும் இரண்டு ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. ஆகவே எப்பொழுதெல்லாம் போஸ்ட் ஆபீசில் ஸ்டாம்ப் விலை உயர்கிறதோ அப்போதெல்லாம் புராசெஸ் பீசை உயர்த்திக்கொள்ளலாம் என்று சட்டத்தை திருத்தினால் வழக்கறிஞர்களான நாங்கள் அப்போதைக்கப்போது அதை உயர்த்த தயாராக இருக்கிறோம்.

ஏற்கெனவே நான் 1985ஆம் ஆண்டு இந்த மன்றத்திலேயே சொல்லியிருக்கிறேன். மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களில் புராசெஸ் பீஸ் வாங்குவதற்காக புராசெஸ் சர்வர்கள் என்பவர்களை நியமித்து புராசெஸ் பீசை பணமாக வாங்க ஏற்பாடு செய்தால் அதைக்கொண்டு அவர்களுக்கு சம்பளம் நேரிடையாகக் கொடுக்க ஏற்பாடு செய்தால் தமிழ்நாட்டில் பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பும், கிடைக்கும் அரசுக்கும் வருமானம் வரும். அந்தப் பணத்தை நல்ல முறையிலே அரசு செலவழிக்கலாம். அதை அரசு செய்ய வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்சீப் கோர்ட்டினுடைய அதிகார வரம்பு 15 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. செக்ஷன் 37-ன்படி பாக வியாஜியத்திற்கு முன்சீப் கோர்ட்டாக இருந்தால் முத்திரை கட்டணம் 30 ரூபாய் கட்ட வேண்டும் என்று இருக்கிறது. சப்-கோர்ட்டாக இருந்தால் 100 ரூபாய் கட்ட வேண்டும் என்று இருக்கிறது. முன்சீப் கோர்ட்டாக இருந்தால் 30 ரூபாய் கட்ட வேண்டும் என்று தெளிவாக இருந்தாலும் அதன் அதிகார வரம்பு உ ர்த்தப்பட்டிருப்பதால் கூடுதலாக, அதாவது பத்தாயிரம் ரூபாய் மதிப்பு என்றால் 100 ரூபாய் கட்ட வேண்டும் என்று கேட்கிறார்கள். இது என்ன கொடுமை? சட்டத்திலே தெளிவாக பாக வியாஜியத்திற்கு முன்சீப் கோர்ட்டாக இருந்தால் 30 ரூபாய் என்று இருக்கிறது, சப்-கோர்ட்டாக இருந்தால் 100 ரூபாய் என்று இருக்கிறது. அப்படி இருக்கும்போது முனுசீப் கோர்ட்டினுடைய வரம்பை உயர்த்தியதால் ஏன் அதிகமாகப் பணம் கேட்க வேண்டும்? நீங்கள் பேரலல் அமென்ட்மென்ட் என்று சொல்லி அதிகார வரம்பை உயர்த்தியபோது, இந்தச் சிக்கலைக் கவனிக்காதிருந்த காரணத்தாலே தான் இது நடந்துகொண்டிருக்கிறது. மிக விரைவிலே செக்ஷன் 37-லே உள்ள இந்த பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். இந்த நிலை ஏன் ஏற்பட்டதென்றால், நீலகிரி மாவட்டத்தில் சப்-கோர்ட் இல்லாததால், முனுசீப் கோர்ட் என்று சொல்லியும், டிஸ்டரிக்ட் கோர்ட் என்று சொல்லியும் இரண்டு பிரிவாக இருந்தது. இப்போது நீலகிரி மாவட்டத்திலேகூட சப்-கோர்ட் வந்துவிட்டதென்று கருதுகிறேன். ஆகவே அந்த நடைமுறைச் சிக்கலை நீக்க உடனடியாக முனுசீப் கோர்ட்டிலே இருக்கும் அத்தனை பாக வியாஜ்யங்களுக்கும் 30 ரூபாய்தான் அடிப்படைக் கட்டணம் என்று ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு நீதிமன்றங்களுக்கு வருகின்ற வழக்கறிஞர்கள் காரிலே வருகிறார்கள். வசதியாக வருகிறார்கள். ஆனால் நீதிமன்றங்களுக்கு வரும் நீதிபதிகள் பஸ்ஸிலே வருகிறார்கள். நீதிபதிகள் பற்றி கடுமையான புகார்கள் எல்லாம் சொல்லப்பட்டன. நீதிபதிகள் பற்றி தென்காசி வழக்கறிஞர்கள் மன்றம் கடுமையான புகார்கள் சொல்லியிருக்கிறது. ஆனால் இந்தச் சமயத்தில் நாம் சில உண்மைகளை உணர்ந்துகொள்ள வேண்டும், ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்போதுகூட சென்னையிலே ஒரு நீதிபதி நீதிமன்றத்திற்கு வந்தபோது வழியிலே தாக்கப்பட்ட விஷயமெல்லாம் தெரியும். நீதிமன்றத்திற்கு வரும் போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் மோட்டார் சைக்கிளிலே வருகிறார்கள். வழக்கறிஞர்கள் மோட்டார் சைக்கிள் அல்லது கார்களிலே வருகிறார்கள். ஆனால் நீதிபதிகள் பஸ்ஸிலே நின்றுகொண்டு வருகிறார்கள். அவர்களிடத்தில் நின்றுகொண்டு சாட்சி சொல்லவேண்டிய கட்சிக்காரர் பஸ்ஸிலே உட்கார்ந்துக்கொண்டு ! வருகிறார். அவன் நீதிமன்றத்திற்கு வரும்வரை நின்றுகொண்டு வந்தவர் நீதிபதி என்று தெரியாத



சூழ்நிலைகூட இன்றைக்கு நிலவிக்கொண்டிருக்கிறது. உடனடியாக சப்-சட்ஜ் அளவிலாவது ஸ்கூட்டர் அல்லது மோட்டார் சைக்கிள் அலவன்ஸ் தர வேண்டும் என்று இந்த அரசை கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தென்காசியில் சப்-கோர்ட், முனுசீப் கோர்ட், மேஜிஸ்டிரேட் கோர்ட் எல்லாம் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகமாக வைக்க வேண்டுமென்று சொல்லி, வழக்கறிஞர் மன்றம் ஒரு குறிப்பிட்ட இடத்தைத் தேர்ந்தெடுத்து, அதை உயர்நீதி மன்றத்திலிருந்து வந்து பார்த்திருக்கிறார்கள். சில அமைச்சர்கள்கூட பார்த்திருக்கிறார்கள். மிகச் சிறந்த இடம் அது. அதிலே ஒருங்கிணைந்த நீதி மன்ற வளாகம் கட்டித் தர வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு கோர்ட்டிலே இருக்கக்கூடிய நாற்காலிகள் எல்லாம்பற்றி ஓர் உறுப்பினர் குறிப்பிட்டார்கள். தென்காசி கோர்ட் ஆரம்பித்து 10 ஆண்டுகள்கூட ஆகவில்லை. ஜெயிலிலிருந்துதான் நாற்காலிகள் வாங்கவேண்டுமென்று விதி இருக்கிறது. ஏற்கெனவே அவர்களை ஜெயிலுக்கு அனுப்பியதே நீதிமன்றம்தான். அந்த நீதிமன்றத்திற்கு நாற்காலிகள் செய்ய வேண்டுமென்று அவர்களிடம் சொன்னால், அவர்கள் எப்படி கருத்தாகச் செய்வார்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். வாங்கிய நாற்காலிகள் எல்லாம் உடைந்து கிடக்கின்றன. பணமும் வீணாகியிருக்கிறது. அந்த நாற்காலிகள் எல்லாம் தவிடுபொடியாகி இருக்கின்றன. அரசு அலுவலகங்களுக்குச் சென்றால் நாற்காலிகள் எல்லாம் சிறப்பாக இருக்கின்றன. நீதிமன்றங்களில் தங்களுக்கு தண்டனை கொடுக்கிறார்கள் என்பதால், நீதிமன்றங்களுக்கும், நீதிபதிகளுக்கும் தண்டனை வழங்குவதுபோல இந்த நாற்காலிகள் இருக்கின்றன. எனவே ஜெயில் டிப்பார்ட்மென்டிலிருந்து வாங்க வேண்டுமென்ற விதியைத் தளர்த்தி, நீதி மன்றங்களுக்கு சிறந்த நாற்காலிகளையும், மேஜைகளையும் வாங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு 20 மாவட்டங்களிலே 17 மாவட்டங்களில் மாவட்ட நீதி மன்றங்கள் செயல்படுகின்றன என்று சொல்லப்படுகிறது. உடனடியாக புதிதாகத் துவங்கப்பட்ட மாவட்டங்களில், குறிப்பாக விருதுநகரில் மாவட்ட நீதி மன்றம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருநெல்வேலியில் புதிய நீதிமன்ற வளாகத்திற்குள் நீதிமன்றங்கள் மாற்றப்பட்டாலும்கூட, அந்த வளாகத்திற்குள் வழக்கறிஞர்களுக்கு அடிப்படை வசதிகள், பார் (Bar) லைப்ரரி, கேன்டின் வசதியில்லை. அமைச்சரவர்கள் உடனடியாக திருநெல்வேலி வழக்கறிஞர்களுக்கு அவற்றைப் பெற்றுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். Justice delayed is justice denied என்பது பழமொழி. அனைவருக்கும் தெரிந்ததுதான்.

Mr. SPEAKER : Justice hurried is also justice buried.

[1987 ஏப்ரல் 25

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: இன்றைக்கு நீதிமன்றங்களிலே வழக்கு தொடர்ந்து ஆண்டுகள் பல காத்திருந்து, நீதியை ஒருவன் பெற்றுவிட்டாலும், அந்த நீதிபதி என்ன நீதி வழங்கினார் என்று தெரியவில்லை. அந்தக் காப்பி கிடைக்க ஆண்டுகள், மாதங்கள் பல காத்திருக்க வேண்டியிருக்கிறது. இப்போதுதான் முதன்முறையாக ஜெராக்ஸ் மிஷின் எல்லாம் வந்திருக்கிறது. வந்த மிஷின் வேலை செய்யவில்லை என்பது வேறு ஒரு பிரச்சினை. நீதிபதிகள் வழங்குகின்ற தீர்ப்புகளின் நகல் உடனடியாக கட்சிக்காரர்களுக்கு கிடைக்க வேண்டுமென்று சி.பி.சி, சி.ஆர்.பி.சி. இரண்டும் சொன்னாலும், அது நடைமுறையில் இல்லை. அதற்கு நாம் பணத்தைப் பெற்றுக்கொண்டவுடன் காப்பி வழங்கலாம். அப்படி ஹைக்கோர்ட்டில் இருக்கிறது. கார்பன் காப்பி, ஆட்டோ காப்பி என்று இருக்கிறது. யாருக்கு நீதி கிடைத்ததோ, அவர் தனக்கு என்ன நீதி வழங்கப்பட்டது என்று தெரிந்துகொள்ள முடியாத கடுமையான நிலை நீடித்துக் கொண்டிருக்கிறது. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்ற நிலை நீதி நிர்வாகத்தில் இருக்கிறது. எனவே நீதிபதியினுடைய தீர்ப்பு கட்சிக்காரர்களுக்கு உடனடியாகக் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்த

[பிற்பகல் 2-40]

படியாக லீகல் எய்ட். இன்றைக்கு அந்த இலவச சட்ட உதவி என்று சொன்னாலே, அமைச்சர் அவர்கள் உடனே சொல்வார். இன்றைக்கு இந்தியாவே பாராட்டுகிறது. தமிழகம் முன்னணியிலே நின்றுக்கொண்டிக்கின்றது என்று சொல்வார்கள். நான் ஏற்றுக் கொள்கிறேன். ரூபாய் 40 லட்சம் செலவு செய்து இருக்கின்றார்கள். ஆனால் அந்த லீகல் எய்ட் எவ்வாறு நடக்கிறது ? அதைப் பற்றி சொல்வதற்கு எனக்கு உரிமையிருக்கிறது.

தமிழகத்திலே சட்டக்கல்லூரி மாணவனாக இருந்தபோது 'பர்ஸ்ட் சிடிசன் லீகல் கமிட்டி' என்று நிறுவி, சட்டக்கல்லூரி மாணவர்களை வைத்து, அந்த லீகல் எய்ட் கமிட்டியை 3 ஆண்டுகள் நடத்தியவன் என்ற அளவிலே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதிலே நான் ஒன்றை இந்த அவையிலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த லீகல் எய்ட் கமிட்டி பல இடங்களிலே இல்லீகல் எய்ட் கமிட்டியாகத்தான் நடந்துகொண்டிருக்கிறது. தென்காசியிலே நான் நடத்திய வழக்கிலே ஒரு மோட்டார் ஆக்சிடெண்ட் கேஸ். அதிலே தென்காசியிலே நடக்கின்ற அந்த கேஸுக்கு திருநெல்வேலியிலே இருந்து ஒரு லீகல் எய்ட் வக்கீல் வருகின்றார்கள். எல்லா வழக்குகளுக்கும் அவர் தான் குத்தகைதாரரா என்று தெரியவில்லை. அவருக்கு யார் அந்த குத்தகையை கொடுத்தார்கள் என்று தெரியவில்லை. தேவையில்லாமல் திருநெல்வேலியில் இருந்து லீகல் எய்ட் கமிட்டியின் பணத்தை செலவழித்துக்கொண்டு தென்காசிக்கு வருகின்றார்கள். அந்த



1987 ஏப்ரல் 25] [திரு. டி. ஆர். வேங்கடரமணன்]

வழக்கு என்ன ? என் சொந்த வழக்கையே சொல்கிறேன். எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். இதிலே வழக்கிலே யாரும் மாற்றுகருத்து சொல்லமுடியாது என்ற காரணத்தினாலே தான் ஆணித்தரமாக நான் இங்கே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஒருவர் விபத்திலே இறந்துவிட்டார். இறந்துவிட்டவருடைய மனைவிக்காக நானே வழக்குத் தொடர்ந்து அவர்களுக்கு பணம் வேண்டும் என்று போட்டிருக்கிறேன். அந்த வழக்கிலே லீகல் எய்ட்-க்குப் போகவில்லை என்பதற்காக அந்த லீகல் எய்ட் கமிட்டியிலே அந்த வழக்கறிஞர் மாற்றாந்தாயினுடைய பிள்ளைகளை அழைத்துக்கொண்டு வந்து அவர்கள் எல்லாம் டிப்பெண்டண்ட் என்று சொல்லி லீகல் எய்ட் மூலமாக வழக்குப் போடுகிறார்கள். வழக்கு ஒரு ஆண்டுக்காலம் நடந்தது. நான் அதற்குள்ளாக இன்ஷுரன்ஸ் கம்பெனியிலே காம்ப்ரமைஸ் பண்ணி பணத்தை எல்லாம் வாங்குவதற்கு ஏற்பாடாகியிருந்தபோது, இவர் ஒரு வழக்கைப் போடுகிறார்கள். இறந்தவர்களுடைய மாற்றாந்தாய் பிள்ளைகள் என்று சொல்லி போடுகிறார்கள். இந்து லா பிரகாரம் அவர்கள் வாரிசு அல்ல. டிப்பெண்டண்ட் என்று சொல்லி வழக்குப் போடுகிறார்கள். வழக்கு நடந்தது. ஒன்றரை ஆண்டுக்காலம் வழக்கு நடந்தது. தென் காசி சப் கோர்ட்டிலே அவர்கள் வாரிசு அல்ல என்று சொல்லி, மனைவிதான் இறந்தவருடைய வாரிசு என்று சொல்லிவிட்டார்கள். என்னுடைய கட்சிக்காரர் இன்றைக்கு ஜெயித்து பணத்தை வாங்கப் போகிறார்கள். நான் லீகல் எய்ட் கமிட்டி மூலமாக ஹைக் கோர்ட்டுக்குப் போகிறேன் என்று மனு போட்டு இருக்கின்றார்கள். இது லீகல் எய்ட் தானா அல்லது இல்லீகல் எய்ட் தானா என்பதை இங்கேயுள்ள கற்றுணர்ந்த சான்றோர்க்கும் அமைச்சர் அவர்களும் யோசித்துப்பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது ஒரு வழக்குதான் இருக்கிறது என்று எண்ணவேண்டாம். இன்னும் பல வழக்குகளை நான் சொல்லமுடியும். இன்றைக்கு லீகல் எய்ட் கமிட்டியை மொத்த குத்தகையாக எடுத்துக்கொண்டு கோர்ட்டுக்கு சென்று வழக்கு நடத்தமுடியாதவர்கள் எல்லாம்கூட லீகல் எய்ட் என்ற போர்வையிலே, பசுத்தோல் போர்த்திய புலிகளாக, இன்றைக்கு மக்களுக்கு பல இன்னல்களை இழைத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு நீங்கள் கண்களை திறந்து அந்த உண்மை நிலையைப் பார்க்காவிட்டால், உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளாவிட்டால், இது நாளைக்கே உங்களுடைய நெஞ்சிலேயே பாயக்கூடிய கத்தியாக மாறும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லீகல் எய்ட் பொறுத்தவரைக்கும் இந்தியத் துணைக் கண்டத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துக்கொண்டதைப் போல அதிகமான இடங்களுக்கு நீட்டிக்கப்பட்டு பரவலாக, செம்மையான முறையில் நடைபெறுவதாக மத்திய அரசே ஒத்துக்கொள்ளக்கூடிய அளவிற்கு நடைபெற்று

வருகிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல 'ஆங்காங்கு 'ஏ' குருப், 'பி' குருப் என்று வழக்கறிஞர்கள் செயல்படுகின்றார்கள். அந்த வழக்கறிஞர்களை நியமிப்பதே கூட மாநில அரசு அல்ல. அதற்கு எந்தவிதமான தொடர்பும் இல்லை என்பது உங்களுக்கு எல்லாம் தெரியும். உயர்நீதி மன்றங்கள் நடைமுறைக்கு ஏற்ப அந்தந்த மாவட்ட நீதிபதிகள் ஃபிரி லீகல் போர்டிலே இருக்கின்ற நீதிபதிகள், வழக்கறிஞர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அந்தந்த மாவட்டத்திலே எடுத்து செய்கின்றார்கள். இதுபோன்ற குறைகள் எங்கு இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசுக்குத் தகவல் கொடுத்தால் ஃபிரி லீகல் எய்ட் போர்ட்-க்கும் சம்பந்தப்பட்ட நீதிபதிகளுக்கும் அனுப்பி தக்க நடவடிக்கையை அரசு உடனடியாக எடுக்கும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே நான் எடுத்துச் சொன்ன புகாரையே முதல் புகாராக எடுத்துக் கொண்டு விரைவிலே நீதியைத் தேடித் தருவார்கள் என்ற நம்பிக் கையோடு என்னுடைய பேச்சைத் தொடர்கிறேன். இன்றைக்கு நீதிமன்றங்கள் கூடுதல் மன்றங்கள் அமைக்கத் தயாராக இருப்ப தாகவும், எத்தனை வழக்குகள் தேங்கியிருந்தால் புதிய நீதி மன்றங்கள் அமைக்கப்படும் என்ற விவரங்களை எல்லாம் அந்த குறிப்பிலே தரப்பட்டிருப்பதாகவும் சொன்னார்கள். அந்த குறிப்பை எடுத்துக்கொள்வார்களானால், தென்காசியிலே இருக்கின்ற சப் கோர்ட்டுகளிலும், முன்சீப் கோர்ட்டுகளிலும் ஏகப்பட்ட வழக்குகள் தேங்கியிருக்கின்றன. நீங்கள் சொல்லி யிருக்கின்ற நார்ம்ஸ் விட இரண்டு மடங்கு அங்கே தேங்கி யிருக்கின்றது. உடனடியாக தென்காசியிலே அடிஷனல் சப் கோர்ட்டும், அடிஷனல் முன்சீப் கோர்ட்டும் அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால் எனக்குத் தெரிந்து இன்னொரு வழக்கிலே ஏழாண்டுகளாக ஒரு சாதாரண மெமோ, மனு பெண்டிங்கில் இருக்கின்றது. அதாவது ஓ.பி. ஒரிஜனல் பெட்டிஷன், அது ஏழாண்டு காலமாக விசாரணைக்கே வராமல் இருக்கின்றது. இன்றைக்கு அது 7 ஆண்டுகாலமாக தென் காசி சப்—கோர்ட்டிலே இருக்கின்றது என்பதை சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுபோலவே. ஏற்கனவே முன்சீப் கோர்ட்டினுடைய ஜூரிஸ் டிக்ஷன் ரூ. 15 ஆயிரமாக இருப்பது அதிகம் என்று நான் இந்த அவையிலே சொன்னபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது உயர்நீதி மன்றத்திலே இருந்து வந்த கருத்து என்றார்கள். அது உயர்நீதி மன்றத்திலே இருந்து வந்தாலும், அந்த ரூ. 15 ஆயிரம் என்பதை ரூ. 10 ஆயிரமாகக் குறைக்க வேண்டும். ஏனென்றால் முன்சீப் கோர்ட்டிலே வேலை அதிகமாகி இருக்கிறது. சப் கோர்ட்டிலே வேலை சிறிது குறைந்திருக்கிறது. இன்றைக்கு 500 ரூபாய் வரை ஸ்மால்





ஜூரிஸ்டிக்சன் இருக்கிறது. இந்த 500 நாசல்களுக்கான 100 ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட் ரூபாய் என்பது ஆயிரம் ரூபாய் என்று அதிகப்படுத்தினால் அதை 2 ஒன்று. வழக்குகள் எல்லாம் வேகமாக நடக்க வாய்ப்பாக இருக்கும்.

அடுத்து, எம்.சி. ஓ.பி. வழக்குகள் எல்லாம் மாவட்ட நீதி மன்றங்களில் தாக்கலாகின்றன. அவை சப் கோர்ட்டு களுக்கு மாற்றப்பட வேண்டும். எதற்கு இந்த dual system இந்த முறை ஏன்? சப் கோர்ட்டுகளிலே இந்த எம்.சி. ஓ. பி. வழக்குகளைப்போட்டால்தான் சட்டஉதவி ஏழைஎளியவர்களுக்கு கிடைக்கும். இன்றைக்கு திருநெல்வேலி கோர்ட்டிலிருந்து தென்காசி கோர்ட்டுக்கும், தென்காசி கோர்ட்டிலிருந்து திருநெல்வேலி கோர்ட்டுக்கும் ஏழை எளியவர்களின் வழக்குகள் போகின்ற காரணத்தால் அவர்கள் ரொம்பவும் கஷ்டப்படு கிறார்கள். அரசின் முடிவு நல்லதுதான். ஆனால் முடிவை செயல் படுத்துவதில் இன்றைய தினம் சிக்கல்கள் இருக்கின்றன. ஆகவே அத்தகைய வழக்குகளை எல்லாம் சப் கோர்ட்டிலேயே தாக்கல் செய்து நடத்தலாம் என்கிற வகையில் அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வழக்கறிஞர்களின் மற்றும் குமாஸ்தாக்களின் நல நிதியைப் பொறுதத வரையில் ஏற்கனவே இந்த அவையில் அது குறித்து எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இந்தக் கூட்டத் தொடரிலேயே, உடனடியாக, அந்த நல நிதியை அவர்களுக்கு பெற்றுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது போல இன்டிபிரேசன் ஆப் ஜுடீசியரியைப் பொறுத்த வரையில் இந்த மன்றத்திலே ஏற்கனவே விவாதித்திருக்கிறோம். இதைப் பற்றி அரசு என்ன நினைக்கிறது என்பது பற்றி இங்கே சொல்ல வேண்டும். (மணி அடிக்கப்பெற்றது) இதுபற்றி இந்த சபையில் ஒரு ஒயிட் பேப்பர் வைக்க வேண்டும். அப்படி வைத்தால் அது மக்களுக்கு நன்மை பயக்கும்.

அடுத்து. இந்தியன் டைவர்ஸ் ஆக்டைப் பொறுத்த வரையில் இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் டைவர்ஸ் பெறுவது எளிதாக இருக்கிறது. ஆனால் கிறிஸ்தவர்கள் டைவர்ஸ் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். உத்தரப்பிரதேசத்தில் இந்தியன் டைவர்ஸ் ஆக்டில் சீர்திருத்தம் செய்யப்பட்டிருக் கிறது. அது பற்றி ஹைக்கோர்ட்டில் இருக்கிற ரெபரன்ஸ் எல்லாம் எடுக்கப்பட்டிருக்கிறது. உ.பி. பாணியில் இங்கேயும் அதனை மாற்றியமைத்தால் கிறிஸ்தவர்கள் சமுதாயம் இந்த அரசுக்கு கடமைப்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

*மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு ஆக்க பூர்வமான கருத்துக்களை இங்கே வழங்கியிருக்கிறார்கள். போதிய தகவல் கிடைத்திருக்கிற காரணத்தால், ஒருவேளை

[திரு. சி. பொன்னையன்] [1987 ஏப்ரல் 25

அவர்கள் எடுத்துக்கூறிய கருத்துக்களுக்கு நான் இங்கே விளக்கம் தருகிறபோது, தெளிவு உண்டாகும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

நீதிமன்றங்களில் வழக்குகள் தேக்கம் என்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். எந்தெந்த நீதிமன்றங்களில் வழக்குகள் தேக்கத்தில் இருக்கின்றன என்பதைப் பற்றி அரசு இங்கே வைத்திருக்கிற குறிப்பிலே தெளிவு பட வைத்திருக்கிறோம். பொதுவாக நீதிமன்றங்களில் வழக்குகள் தேக்கத்திற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன என்பதைஉறுப்பினர்கள் புரிந்துகொள்வார்கள்என்று நம்புகிறேன். இதை நான் எடுத்துச்சொல்வதற்குக் காரணம் நீதிமன்றங் களின் பற்றாக்குறை ஒரு முக்கியமான காரணம். இரண்டாவது, போதிய அளவில் வழக்கறிஞர்கள், அரசு வழக்கறிஞர்கள் பற்றாக்குறை என்பது மற்றொரு காரணம். இதைப் பொறுத்தவரையில் கடந்த காலத்தைப் பற்றி நான் சொல்லுகிறேன். இதுபோன்ற குறைகள் இருக்கக்கூடாது என்பதற்காக இந்த அரசு தகுந்த நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான காரணம் வாய்தா, அதாவது அட்ஜர்ன்மென்ட் வாங்குகிற மனப்பான்மை அதிகமாகிவிட்டது. அப்படிப்பட்ட ஒரு மனப்பான்மை வழக்கறிஞர்கள் மத்தியில் இருக்கிற காரணத்தால் வழக்குகள் தாமதம் ஆகின்றன. இதனால் காலத்தே கிடைக்க வேண்டிய நீதி கிட்டாமல் போகிறது. இதன் காரணமாக மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் சிந்தன் அவர்களும் சுப்பராயன் அவர்களும் இங்கே குறிப்பிட்டதைப்போல சிலபல நேரங்களில் வசதி படைத்தவர்கள் நீதியினை விரைவிலே பெறக்கூடிய சூழ்நிலையும் உண்டாகிறது. வழக்கறிஞர்களே இதற்கு ஒரு காரணமாகவும் இருந்து விடுகிறார்கள். இந்த நிலையைத் தவிர்க்க வழக்கறிஞர்கள் மத்தியிலே ஒரு மன மாற்றம் ஏற்பட்டாலொழிய மாற்றத்தை ஏற்படுத்த முடியாது.

இந்தியப் துணைக் கண்டத்தைப் பொறுத்தவரையிலும் எல்லா மாநிலங்களிலும் இப்படிப்பட்ட நிலை இருக்கிறது என்பதை மத்திய அரசே ஒப்புக்கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல; மற்ற மாநிலங்களோடு நமது மாநிலத்தை ஒப்பிட்டுப் பார்த்து மத்திய அரசு நம்மைப் பாராட்டியிருக்கிறது. கடந்த சில காலங்களில் மத்திய அரசின் குழுக்கள் எடுத்துச் சொல்லிய ஆலோசனைகளை ஏற்று, நடவடிக்கை எடுத்து, அவைகளை நமது அரசு நடைமுறைப்படுத்தியிருக்கிறது.

நீதிமன்றங்களை எடுத்துக்கொண்டால் இந்த அரசு ஆட்சிக்கு வருவதற்கு முன்பு இருந்த District and other Special Courts-களின் எண்ணிக்கை 31 தான்.



1987 ஏப்ரல் 25] [திரு. சி. பொன்னையன்]

நீதிமன்றங்களிலே வழக்குகளின் தேக்கம் அதிகமாக இருக்கிற காரணத்தால் நீதிமன்றங்களை அதிகமாக்க வேண்டுமென்று ஆணையிட்டதன் அடிப்படையில் மேலும் புதிதாக—சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து 77ஆம் ஆண்டு வரையில் 31 ஆக இருந்தது. ஆனால் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவரவர்கள் ஆணையையொட்டி, இது விரிவாக அமைச்சரவையிலே பேசப்பட்டு தக்க ஆணையிடப்பட்டது. முதல்வரவர்கள் இட்ட ஆணையின் அடிப்படையில் District and other Special Courts 31 ஆக இந்த ஆட்சி வருவதற்கு முன்னால் இருந்தது. மேற்கொண்டு புதிதாக 28 நீதிமன்றங்களை இந்த அரசு துவக்கியது.

(பிற்பகல் 2-50)

அதைப்போலவே, Sub-Courts and other Courts in the cadre of sub-Judges 67 இந்த ஆட்சி வருவதற்கு முன்னால் இருந்தது; 21 புதிய நீதிமன்றங்களை நாம் துவக்கினோம்.

அதைப்போலவே, District Munsif's Courts 93 ஆக இருந்தது; மேற்கொண்டு 55 புதிய நீதிமன்றங்களை இந்த அரசு துவக்கியது.

அதைப்போலவே, Sub-Divisional Judicial Magistrate's Courts 15 ஆக இருந்தது. மேற்கொண்டு 14 நீதிமன்றங்களை இந்த அரசு துவக்கியிருக்கிறது. சுதந்திரம் அடைந்த பிறகு 77 வரையிலேயும் இருந்தது 15; இந்த ஆட்சி வந்த பிறகு 14-ஐத் துவக்கியிருக்கிறது.

அதைப்போலவே Judicial First Class Magistrate's Courts இந்த ஆட்சி பொறுப்புக்கு வருவதற்கு முன்னால் ஒட்டுமொத்தமாக, சுதந்திரம் அடைந்த காலத்திலேயிருந்து தமிழகத்திலே 21 நீதி மன்றங்கள். ஆனால் இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்த பிறகு புதிதாக 31 Judicial First Class Magistrate நீதிமன்றங்களை துவக்கியிருக்கிறது.

அதுபோல, 396 நீதி மன்றங்கள் ஒட்டுமொத்தமாகத் தமிழகத்தில் இந்த ஆட்சி பொறுப்புக்கு வருவதற்கு முன்னால் இருந்தன. நீதிமன்றங்களில் வழக்குகளினுடைய தேக்கம் ஏழைகளைப் பெரிதும் பாதிக்கின்ற காரணத்தால் நீதிமன்றங்களை அதிகமாக உருவாக்க வேண்டுமென்ற நல்ல நோக்கோடு தமிழகத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைக்கேற்ப புதிதாக ஒட்டுமொத்தமாக 185 புதிய நீதி மன்றங்களைக் கடந்த காலத்தில் நாம் உருவாக்கியிருக்கிறோம். அரசு சும்மா இருக்கவில்லை; நடவடிக்கை எடுக்காமல் இருக்கவில்லை என்பதை எடுத்துக் காட்டுவதற்கு இதை நான் கூறுகிறேன்.

[திரு. சி. பொன்னையன்] [1987 ஏப்ரல் 25

அதைப்போலவே, ஆதிதிராவிட பழங்குடியினர் போன்ற தாழ்த்தப்பட்ட நிலையிலே, சமுதாயத்திலே மிகவும் பாதிக்கப்பட்ட நிலையிலே இருக்கின்ற மக்களுக்காக அதிகப்படியாக நீதிமன்றங்களை உருவாக்க வேண்டுமென்ற நோக்கோடு மதுரை, திருச்சி, திருநெல்வேலி, கும்பகோணம் ஆகிய நான்கு இடங்களில் Special First Class Magistrate Courts சிறப்பு குற்றவியல் நீதிமன்றங்களை அமைத்து, வழக்குகளிலே தாமதம் ஏற்படுவதைப், போக்க வேண்டுமென்ற நோக்கிலே அந்த நடவடிக்கையை மாண்புமிகு முதல்வரவர்கள் ஆணைக்கேற்ப இந்த அரசு எடுத்திருக்கிறது.

அதைப்போலவே, பன்ருட்டி, நாகப்பட்டினம், கோவை, செங்கை ஆகிய இடங்களில் தற்போது புதிதாகத் தாழ்த்தப்பட்ட, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு வழக்குகள் தாமதத்தின் காரணமாக அவர்களுக்குப் பாதிப்பு உருவாகாமல் இருக்கும் முகத்தான் அவர்களுக்காக பிரத்தியேகமாக நீதிமன்றங்களை அமைக்க அரசு நடவடிக்கை தற்போது எடுக்க இருக்கிறது.

அதைப்போலவேதான், செங்கை மாவட்டத்திலும், தஞ்சை மாவட்டத்திலும்— சென்னையில் ஒன்றும், மதுரையில் ஒன்றுமாக இருக்கின்ற பொருளாதார குற்ற நீதிமன்றங்களை இன்னும் நீட்டித்து, செங்கையிலே ஒரு நீதிமன்றத்தையும், தஞ்சையிலே ஒரு நீதிமன்றத்தையும் நிறுவி பொதுமக்களின் நலன் கருதி இந்த (Economic Offences) எக்கனாமிக் அபென்சஸ் என்று சொல்லப்படுகின்ற பொருளாதாரக் குற்றங்களைச் செய்கின்றவர்களின்மீது நடவடிக்கை எடுக்க இரண்டு புதிய நீதிமன்றங்களை அரசு கொண்டுவரவிருக்கிறது.

அதைப்போலவே, கோவை, மதுரை, புதுக்கோட்டை, சேலம், தஞ்சை, சென்னை ஆகிய இந்த் ஆறு இடங்களில் எசன்ஷியல் கமாடிட்டீஸ் என்று சொல்லப்படக்கூடிய அத்தியாவசிய பொருள்கள் சட்டத்தின்கீழ் நீதிமன்றங்களை அமைத்து, வழக்குகளினுடைய தேக்கங்களைப் போக்க அரசு நடவடிக்கையெடுத்து வருகிறது.

இன்னும் இதிலே ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன் குறிப்பாக அரசு வழக்கு நடத்துனர்கள் இந்த ஆட்சி பொறுப்புக்கு வருவதற்கு முன்னாலிருந்த நிலை என்ன, தற்போது இருக்கின்ற நிலைமை என்ன என்பதையும் நான் கூற வேண்டும். அரசு வழக்குநடத்துனர்கள் ஆங்காங்கு சிலஇடங்களில் இல்லாமல் இருக்கலாம்; ஆனால், எந்த இடத்திலும் எந்த இடமும் காலியாகவில்லை என்பதையும், டெம்பரரியாக அரசு வழக்கு நடத்துனர்கள் எங்கெங்கு இல்லையோ அங்கே நிரப்பப்பட்டிருக்கிறார்கள். ஒட்டு மொத்தமாக இந்த ஆட்சி பொறுப்புக்கு வருவதற்கு முன்னால் அரசு வழக்கு நடத்துனர்கள் 185 பேர்தான் இருந்தார்கள். அரசு வழக்கு



1987 ஏப்ரல் 25] [திரு. சி. பொன்னையன்]

நடத்துனர்கள் குறைந்த அளவிலே இருக்கின்ற காரணத்தினால் நீதிமன்றத்திலே வழக்குகள் தாமதத்திற்கு உள்ளாக்கப்படுவதை உணர்ந்த காரணத்தால் புதிதாக 352 அரசு வழக்கு நடத்துனர்கள்—ஏற்கனவே இருந்தது 185, சுதந்திரம் அடைந்த காலத்திலேயிருந்து 77 ஆம் ஆண்டு வரையில். இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்தபிறகு வழக்குகள் நீதிமன்றங்களில் தேக்கத்திற்குள்ளாக்கப்படுவது ஏழைகளைப் பாதிக்கின்றது என்ற காரணத்தினால் புதிதாக மேற்கொண்டு 352 அரசு வழக்கு நடத்துனர் பதவிகளை உருவாக்கி நீதிமன்றங்களில் வழக்குகளினுடைய தேக்க நிலையைப் போக்க வேண்டுமென்ற அடிப்படையிலே இந்த அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதனை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே மாண்புமிகு உறுப்பினர் அப்துல் சமத் போன்றவர்கள் எல்லாம் பேசுகின்றபொழுதும், சந்திரசேகரன் அவர்கள் பேசுகின்ற பொழுதும் மக்கள் நீதிமன்றத்திற்கு முக்கியத்துவம் தர வேண்டுமென்ற ஆலோசனையை நல்கியிருக்கிறார்கள். அது நல்ல ஆலோசனை. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நாம் அந்த ''லோக் அதாலத்', என்ற மக்கள் நீதிமன்றத்தை தொடங்கி பரிட்சார்த்தமாகப் பார்க்கலாம் என்று ஆணையிட்டார்கள். நலிந்த நிலையில் இருக்கும் ஏழை எளிய மக்களுக்கு, சாதாரண மக்களுக்கு ''அவுட் ஆப் கோர்ட் செட்டில்மெண்ட்'' முறையில் நீதிமன்றத்திலிருந்து வரக்கூடிய தீர்ப்பைவிட மிகக் குறைந்த காலத்தில் தீர்ப்பு கிடைத்துவிடுவதால் இது நல்ல பலன் அளித்திருக்கிறது; முதற்கட்டமாக பரிட்சார்த்தமாக பார்த்ததில் வெற்றி கிடைத்திருக்கிறது. வெளியிலேயே தகராறுகளைத் தீர்த்து, நீதிமன்றத்திற்கு வருகின்ற வழக்குகளின் எண்ணிக்கையையும் குறைக்கிறது. அதன் காரணமாக நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிற வழக்குகளைக் குறைப்பதற்கு பேருதவியாக இருக்கிறது. நீதிமன்றத்திற்குச் செல்லாமல் மக்கள் நீதிமன்றம் தகராறு சம்பந்தப்பட்டவர்களை அழைத்து நேரடியாகப் பேசி, எல்லோரையும் வைத்து ''நெகோஷியேட்டட் செட்டில்மென்ட்'' என்ற முறையில் நடவடிக்கை எடுத்து மிகக் குறுகிய காலத்தில் தீர்ப்பு வழங்கிவருவதால் முதல் கட்டத்திலேயே நல்ல வெற்றி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, ''லோக் அதாலத்' என்று சொல்லப்படுகின்ற இந்த மக்கள் நீதிமன்றத்தை அனைத்து மாவட்டங்களுக்கும் நீட்டிப்பதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே குடும்ப நீதிமன்றங்களைப் பற்றி சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு.வி.பி.சி. அவர்கள் பேசும்போது வலியுறுத்திச் சொன்ன குடும்ப நீதிமன்றங்களை விரைவிலே கொண்டுவர அரசு நடவடிக்கை

[திரு. சி. பொன்னையன்] [1987 ஏப்ரல் 25

எடுக்கும். குடும்ப நீதிமன்றங்கள் பெண்களுக்கு ஏற்படுகிற, தாய்க்குலத்திற்கு ஏற்படுகிற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் பேருதவியாக இருக்கும். கற்பழிப்பாக இருக்கலாம், வரதட்சணை கொடுமையாக இருக்கலாம், அல்லது சமுதாயச் சூழல் காரணமாக ஏற்படுகிற இன்னல்களாக இருக்கலாம். இப்படிப்பட்ட பிரச்சினைகளிலிருந்து தாய்க்குலம் விடுதலைபெற, அவர்கள் நல்ல பரிகாரம்பெற குடும்ப நீதிமன்றங்களை அனைத்து மாவட்ட அளவிலேயும் கொண்டுவர மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே மாண்பு மிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்களும் மற்றவர்களும் பேசும்போது இராமநாதபுரம் மாவட்டம், மதுரை மாவட்டம், நெல்லை மாவட்டம் ஆகிய மாவட்டங்கள் பிரிக்கப்பட்டும் நீதிமன்றங்கள் புதிய மாவட்டங்களுக்கு இன்னும் அமைக்கப்படவில்லை என்று சொன்னார்கள். இராமநாதபுரம் மாவட்டத்திற்கு இராமநாதபுரத்திலும், காமராசர் மாவட்டத்திற்கு விருது நகரிலும், அதைப்போலவே பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திற்கு சிவகங்கையிலும் உடனடியாக நீதிமன்றங்களை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது; நீதிமன்றம் அமைப்பதற்கான தகுந்த இடத்தைத் தேடிக் கொண்டிருக்கிறது. விருதுநகரில் ஒரு இடத்தைச் சொல்லியிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் சம்பந்தப்பட்டவர்களுடன் அதற்கான ''டெர்ம்ஸ் அன்ட் கண்டிஷன்ஸ்'' பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள். நல்ல முறையில் நடவடிக்கை எடுத்து விரைவிலேயே அரசு நீதிமன்றங்களை ஏற்படுத்தும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதைப்போலவே வழக்குகளுடைய தேக்கத்தைக் குறைப்பதற்காக, பல ஆண்டு காலமாக நிலுவையில் இருக்கிற வழக்குகளை ''வித்ட்ரா'' செய்து, ''வித்ட்ராயல் அன்ட் டிராப்பிங் ஆஃப் கேஸஸ்' என்ற முறையில் பன்னெடுங்காலமாக நிலுவையிலிருக்கிற சாதாரண சிறிய வழக்குகளை திரும்பப் பெற அரசு ஆணையிட்டிருக்கிறது. அந்த வகையில் மதுவிலக்கு போன்ற சாதாரண குற்றங்களில் ஈடுபட்டிருக்கிற ஏழை எளிய மக்கள் பல தொல்லைகளுக்கு உட்பட்டிருக்கிற காரணத்தால் அவை சம்பந்தப்பட்ட கிட்டத்தட்ட 2,70,858 வழக்குகள் திரும்பப்பெறப்பட்டுள்ளன.

அதைப்போலவே ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில், சென்னையை பொறுத்த வரையில் மாநகர காவல் துறை ஆணையர் தலைமையில் ஆய்வுக் குழு ஒன்றை அமைத்து விசாரணை கைதிகளாக இருக்கிறவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குமேல் இருந்தால், நீதிமன்றத்தின் மூலமாக அவர்களை விடுதலை செய்யக் கூடிய நடவடிக்கையை இந்த அரசு ஏற்கனவே எடுத்து அதனை நடைமுறைப்படுத்தி வருகிறது.



1987 ஏப்ரல் 25] [திரு. சி. பொன்னையன்]

நீதிமன்றங்களுக்கு கட்டிடங்கள் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது பல கருத்துரைகளைக் குறிப்பிட்டார்கள். 1977-க்குப் பிறகு—இதை நான் எடுத்துச் சொல்வதற்குக் காரணம் கட்டிடப் பிரச்சினை என்பது ஏதோ திடீரென்று ஏற்பட்டுள்ளது போல கூறினார்கள். சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து நீதிமன்றங்களுக்கு கட்டிடம் கட்டுவதற்கான நிதியை தாராளமாக ஒதுக்கவில்லை. கடந்த காலத்திலும், அதாவது 1977 ஆம் ஆண்டு வரையில், இது கவனிக்கப்படவில்லை. மத்திய அரசும் தாராள மனதுடன் ''கோர் செக்டார்'' என்ற முறையில் நீதிமன்றத்திற்குக் கட்டிடம் கட்ட போதுமான நிதி ஒதுக்கவில்லை. மாநில அரசும் நிதியை ஒதுக்கும் போது அதிகமான நிதியை ஒதுக்க முடியாத நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. நீதி மன்றங்களுக்கு கட்டிடம் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட நிதியை பொறுத்தவரையில் 1972 முதல் 1975 வரையில் 77 இலட்சம் ரூபாய் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 1980 முதல் 1986 வரையில் 5,66,00,000 ரூபாய் நிதியினை இதற்கு ஒதுக்கியிருக்கிறோம் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 3—00]

தற்போது அந்த அளவுக்கு உயர் நீதிமன்றத்திற்கும், மற்ற நீதிமன்றங்களுக்கும் நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்பதைக் கூட எடுத்துச் சொல்லி இருக்கிறேன்.

சிலபல கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. வால்பாறையில் நீதித்துறையில் முதல் வகுப்பு நீதிமன்றம் கட்டுவதற்கும், விருத்தாச்சலத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. தியாகராசன் அவர்கள் கேட்டுக்கொண்டபடி அந்தப் பகுதியில் நீதிமன்றங்களுக்கான கட்டிடங்கள் கட்டுவதற்கும், பாளையங்கோட்டையில் வழக்குரைஞர் தங்கும் அறை கட்டுவதற்கும், நீதிமன்றத்தில் நாற்காலிகள் வழங்குவதற்கும், பெரியார் மாவட்டத்தில் நீதிமன்றக் கட்டிடங்களில் வசதி செய்து தருவதற்கும், மதுரை வடக்கு மாவட்ட நீதிமன்றத்தில் கழிப்பறை மற்றும் வழக்காடுபவர்களுக்கு வசதி செய்து தருவதற்கும் கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்ட நீதிபதிக்கு குடியிருப்பு கட்டுவதற்கும், நீலகிரி மாவட்டத்தில் துணை நீதிமன்றத்திற்குக் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கும், செங்கற்பட்டு மாவட்ட நீதிபதிக்குக் குடியிருப்பு கட்டுவதற்கும், சாத்தூர் மாவட்ட முன்சிப் நீதிமன்றத்தில் இதுபோன்ற கட்டிடங்களைக் கட்டுவதற்கும், காஞ்சிபுரத்தில் முதல் வகுப்பு நீதிமன்றத்தில் கூடுதல் வசதி செய்து தருவதற்கும், சைதையில் பெருநகர் மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில் வழக்குரைஞர் அறைகள் கட்டுவதற்கும், திருவண்ணாமலை நீதிமன்றத்திற்குக் கூடுதல் கட்டிட வசதி செய்வதற்கும் சுருக்கும் இதுபோல் நீட்டிப்பதற்கும் தற்போது அரசு ஆணையிட்டு இருக்கிறது.

[திரு. சி. பொன்னையன்] [1987 ஏப்ரல் 25

விருதுநகரில் மாவட்டத் தலைமை நீதிமன்றம் வருகிறபோது சிவில் நீதிமன்றம் இல்லாத நிலைமை அங்கு இருக்காது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, வழக்குரைஞர்களுக்கு அறைகள் என்ற பிரச்சினை ஒரு பெரும் பிரச்சினையாக இருக்கிறது. அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். மைய அரசு கொடுக்கிற குறைந்த நிதியை வைத்துக்கொண்டு நாம் செய்ய வேண்டி இருக்கிறது. மைய அரசு நீதித்துறைக்கு நிதியினை ஒதுக்குவதே இல்லை என்ற நிலையில் அதாவது தமிழகம் முன்னேறிய மாநிலம் என்பதால் நீதித்துறைக்காக பிரத்தியேகமாக நிதியை ஒதுக்காத நிலையில் மாநில அரசினுடைய வருவாயிலிருந்து ஓரளவுக்குத்தான் செய்ய முடிகிறது.

வழக்குரைஞர்கள் முன்வருகிறபோது அரசினுடைய இடத்தில் அவர்களுக்குக் கட்டிக்கொடுத்து. அதாவது எல்.ஐ.சி. அல்லது ஹட்கோ போன்ற அமைப்புக்களோடு பேசி வழக்குரைஞர்களுக்கு பல பகுதிகளிலும் தங்கும் அறைகளைக் கட்டுவதற்குரிய ஒரு திட்டத்தை இந்த அரசு விரைவில் தீட்ட இருக்கிறது என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழகத்தில் இருக்கிற அனைத்து நீதிமன்றங்களுக்கும் கட்டிட வசதி செய்து தரவேண்டுமென்றால் குறைந்த பட்சம் 500 கோடி ரூபாயாவது தேவை. மத்திய அரசின் உதவியோடு இதைச் செய்ய வேண்டுமென்றால் எத்தனை ஆண்டுக்காலம் ஆகும் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நான் ஏற்கெனவே சொன்னேன்: குஜராத், ஹரியானா மகாராஷ்ட்டிரம், பஞ்சாப், தமிழ்நாடு போன்ற மாநிலங்களைப் பொறுத்தவரையில் நிதிப்பற்றாக்குறை அற்ற மாநிலங்கள் என்று மைய அரசு கருதி நீதி நிர்வாகத்திற்காக ஒதுக்கவேண்டிய பணத்தைக்கூட அவர்கள் தற்போது ஒதுக்கத் தவறிவிட்ட காரணத்தால் நீதித் துறை கிட்டத்தட்ட 35 முதல் 40 ஆண்டுக்காலமாக கவனிக்கப்படாமல் கட்டிட வசதிகளைக்கூட செய்து கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. இருந்தபோதிலும் இயன்ற அளவுக்கு இந்த வசதிகளைச் செய்து தரவேண்டும் என்ற நோக்கத்தோடு நடவடிக்கைகளை நாம் தற்போது மேற்கொண்டு இருக்கிறோம்.

நீதிபதிகள் நியமனத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி.சி. அவர்கள் பேசுகிறபோது என்ன காரணத்தால் தாமதம் என்பதைத் தெளிவாக்க வேண்டுமென்று சொன்னார்கள்.



1987 ஏப்ரல் 25] [திரு. சி. பொன்னையன்]

சென்னை உயர்நீதி மன்றத்தில் 25 நிரந்தர நீதிபதிகள் பதவிகள் உள்ளன. 5 பதவிகள் காலியாக உள்ளன. இவற்றில் இரு பதவிகளை நிரப்ப மைய அரசுக்குப் பரிந்துரை ஏற்கனவே சென்று இருக்கிறது. மற்ற மூன்று இடங்களைப் பொறுத்தவரையில் மாநில அரசுக்கும், உயர்நீதி மன்றத்திற்கும் யாரை நியமிப்பது என்பதைப் பொறுத்தவரையில் பிரச்சினை இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்பதைச் சொல்கிறேன். 1967-ம் ஆண்டில் பெருந்தகை பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த காலத்திலிருந்து taking into account the peculiar soil psychology of Tamilnadu என்ற அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் அதிகப்படியாக வருகிறபோது, தமிழகத்தினுடைய பிரத்யேக சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு பார்க்கிறபோது அது பிரச்சினையை உருவாக்கும் என்பதால் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அதிக முக்கியத்துவத்தைக் கொடுக்க வேண்டும் என்பதை ஒரு கொள்கை முடிவாக அரசு எடுத்து இதுபற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள் மைய அரசுக்கும், மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்களுக்கும் எழுதி இருக்கிறார்கள். இந்த இனம், அந்த இனம் என்ற பாகுபாடே அரசுக்கு இல்லை. ஆனால் தமிழகத்தினுடைய ஒட்டு மொத்த நலனைக் கருத்தில் கொண்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் முக்கியத்துவம் கொடுப்பது இன்றியமையாத தேவை என்பதை இந்த அரசு மத்திய அரசினிடத்தில் வற்புறுத்தி வருகிறது. அதிலேதான் பிரச்சினை இருக்கிறது. தாமதத்திற்கு இதுதான் காரணம். எனவே இதைவிடத் தெளிவாகச் சொல்லவேண்டியதில்லை என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி.சி அவர்கள், மாநில அரசு ஒருவரைப் பரிந்துரை செய்ததை மைய அரசு ஏற்கவில்லையே அதுதான் காரணமா என்று கேட்டார்கள். அது ஏற்கனவே பரிந்துரைக்கப்பட்ட ஒன்று. எனவே அதற்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை. சட்டரீதியாக அதாவது அரசியல் சட்டத்தினுடைய திருத்தத்திற்கேற்ப அவரைப் பரிந்துரை செய்ய அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. சட்ட முறையில் அதற்கு வழிவகை இருக்கிற காரணத்தால்தான் பரிந்துரை செய்யப்பட்டது. மைய சட்ட அமைச்சரும் பரிந்துரை செய்தார் ; உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியும் பரிந்துரை செய்தார். ஆனால் அவர் பதவிக்கு வந்தாலும் உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாக இருக்கக்கூடியது ஆண்டுகள் அல்ல சில மாதங்களே என்ற காரணத்தால்—மூன்றாண்டுக் காலம் கிட்டத்தட்ட கால தாமதம் ஆகிவிட்ட காரணத்தால்—மைய அரசு வேண்டாம் என்று முடிவு செய்திருக்கிறது. நீதிமன்றத்தினுடைய நீதிபதிகளை நியமனம் செய்வதிலே தாமதத்திற்கு அதுவே காரணம் அல்ல. நான் ஏற்கனவே சொன்னதைப் போல தமிழகத்தினுடைய பிரத்யேக சூழலில், அமரர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள்

[திரு. சி. பொன்னையன்] [1987 ஏப்ரல் 25

1967லே எடுத்த கொள்கை முடிவுக்கு ஏற்பவும், தமிழகத்தினுடைய பிரத்யேகமான சூழ்நிலைக்கு ஏற்பவும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உயர்நீதி மன்றத்தில் முக்கியத்துவம் தர வேண்டும் என்ற கோரிக்கையை மைய அரசுக்கு நாம் வலியுறுத்தி வந்தோம். அதன் காரணமாகவும் தாமதம் ஏற்பட்டு வருகிறது. மைய அரசு அதிலே ஒரு சுமுகமான முடிவை தமிழகத்தினுடைய மக்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப எடுக்கும் என்று அரசு நம்புகிறது.

மாவட்ட நீதிபதிகளைப் பொறுத்த வரைக்கும் ஒட்டுமொத்தமாக 69 பதவியிடங்கள் தமிழகத்தில் இருக்கின்றன. அதிலே தற்போது 9 இடங்கள் காலியாக இருக்கின்றன. உயர்நீதி மன்றம் அதற்கு தேர்வு நடத்தியது. தேர்வு நடத்தி 18 பேர் அடங்கிய பட்டியலை தற்போது அண்மையிலே அனுப்பியிருக்கிறது. அதிலும் அந்த 9 இடங்களில் 6 இடங்களுக்கு அவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். மீதம் உள்ள 3 இடங்களுக்கு பை புரொமோஷன் மெத்தட் மூலமாக நிரப்ப அந்த முறையிலே உயர் நீதிமன்றம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதுவும் உயர் நீதிமன்றம் தான் அரசுக்கு பரிந்துரை செய்ய வேண்டும். மாவட்ட நீதிபதிகளுடைய காலி இடங்களுக்கு மாநில அரசு காரணம் அல்ல. தாமதம் ஏற்பட்டிருக்குமானால் அதற்கு உயர் நீதிமன்றம் தான் காரணம். உயர் நீதிமன்றத்தை நான் குற்றம் சொல்லவில்லை. உயர் நீதிமன்றத்தை வற்புறுத்தி விரைவாக காலி இடத்தை நிரப்ப வேண்டும் என்று சொல்லி அவர்கள் தற்போது தேர்வு நடாத்தி, தேர்ந்து எடுக்கப்பட்ட பட்டியலையும் அண்மையிலேதான் மாநில அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

அதைப் போலவே சப் ஜட்ஜஸ். தமிழகத்தில் மொத்தம் உள்ள சார்நிலை நீதிபதிகள் 117. அதிலே 10 இடங்கள் மட்டுமே காலியாக இருக்கின்றன. அதற்கும் மாநில அரசுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. காரணம் சப் ஜட்ஜஸைப் பொறுத்த வரைக்கும் தமிழகத்தில் this has :o be filled up by way of promo ion. கீழே இருக்கின்றவர்களிலிருந்து பதவி உயர்வுகொடுத்து போட வேண்டிய முழு பொறுப்பும் உயர் நீதிமன்றத்தின் அதிகாரத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது. உயர் நீதிமன்றம் கடந்த காலத்தில் எந்த தாமதமும் செய்யவில்லை. ஆனால் சில காலமாக இப்படி காலதாமதம் செய்வதற்கு விளக்கம் கேட்டிருக்கிறோம். விளக்கம் எங்களுக்கும் கிடைக்கவில்லை. ஆனால் ஒரு கருத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். சப் ஜட்ஜஸைப் பொறுத்தவரைக்கும் by way of direct recruitment என்ற முறையை கொண்டுவரவேண்டும் என்ற கருத்தை மாநில அரசுக்கு தந்திருக்கிறார்கள். அதை இந்த அரசு ஆய்ந்தது. டைரக்ட் ரெக்ரூட்மெண்ட் மூலமாக சப் ஜட்ஜஸ் என்று கொண்டு வருகிற போது கடந்த 20 ஆண்டுகளாக 25 ஆண்டுகளாக பணியில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டு அதனால் பிரச்சினை



1987 ஏப்ரல் 25] [திரு. சி. பொன்னையன்]

உருவாகும் என்று சபாஆர்டினேட் ஜுடிஷியரி தீர்மானம்போட்டு உயர் நீதி மன்றத்திற்கும் மாநில அரசுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். இந்த நிலையிலே புதியதாக ஒரு ரெக்ரூட்மென்ட் திட்டத்தைக் கொண்டு வந்து நீதிபதிகள் மத்தியிலே ஒரு அதிருப்தியை உருவாக்க மாநில அரசு தயாராக இல்லை. இதன் காரணமாக சப்ஜட்ஜஸ் காலி இடங்கள் நிரப்பப்படாமல் உயர் நீதிமன்றம் நிலுவையில் வைத்திருக்கிறது. அதற்கு மாநில அரசு பொறுப்பு அல்ல. சப் ஜட்ஜஸை, பை வே ஆப் பிரமோஷன் நியமிக்க வேண்டிய பொறுப்பு உயர் நீதிமன்றத்தினுடையது. அதை நியமிக்க வேண்டும் என்று மாநில அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது.

அதைப்போலவே மாவட்ட முன்சீப் பதவிகளைப் பொறுத்த வரையில் தமிழ் நாட்டில் ஒட்டுமொத்தமாக 176 பதவிகள் இருக்கின்றன. அதிலே 36 இடங்கள் காலியாக இருக்கின்றன. Judicial செகண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டை எடுத்துக் கொண்டால் சப் மாஜிஸ்ட்ரேட் என்று சொல்லக்கூடியவர்களைப் பொறுத்த வரைக்கும் 141 இடங்களில் 13 இடங்கள் மட்டுமே காலியாக இருக்கின்றன. அவற்றை நிரப்புவதற்கு 1964–65 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் பின்பற்றப்பட்டு வந்த முறை — அவைக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன். அப்போது அவர்கள் எடுத்த முடிவு நீதிபதிகளை தற்காலிகமாக நியமிக்கக்கூடிய அதிகாரத்தைத் உயர்நீதிமன்றத்திற்கு தந்து அதிலே மாநில அரசு காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் தலையிடவில்லை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் தலையிடவில்லை, இந்த ஆட்சிக் காலத்திலும் தலையிடவில்லை.

உயர் நீதிமன்றத்தைச் சேர்ந்த 2 நீதிபதிகளைக் கொண்ட குழு அவர்களை ஆய்ந்து, அவர்களுக்கு தேர்வை நடத்தி, தேர்ந்தெடுத்து அவர்களை சப்-மாஜிஸ்ட்ரேட் ஆகவும், டிஸ்ட்ரிக்ட் முன்சீபுகளாகவும் நியமனம் செய்து வந்திருக்கிறது. வழக்கறிஞர்கள் மத்தியிலிருந்து 6 : 4 என்ற ரேஷியோவில் தேர்ந்தெடுக்கிற முறையை விட்டு விட்டு, வழக்கறிஞர்கள் மத்தியிலேயிருந்து தேர்ந்தெடுக்காமல் போஸ்டல் மூலமாகவும், வேறு முறையிலும் படிப்பை முடித்து விட்டு பல்வேறு துறைகளில் பணியாற்றுகிறவர்களை அவர்கள் அரசுப் பணியிலும் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம், அவர்களை எல்லாம் தற்காலிக அடிப்படையில் டிஸ்ட்ரிக்ட் முன்சீபுகளாக, ஜுடீஷியல் செகண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டாகவும் நியமித்து வந்திருக்கிறார்கள். 1981ஆம் ஆண்டு, புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில், நீதித்துறையிலே வழக்கறிஞர்களாக அனுபவம் பெற்றவர்களை நீதிபதிகளாக நியமித்தால் நிர்வாகம் சற்று செம்மையாக நடைபெறும் என்றுஎண்ணி, அமைச்சரவையிலே கோப்பைக் கொண்டு வந்து, அமைச்சரவையிலே முடிவு எடுத்து, இறுதியில் உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பினார்கள். பிறகு உயர்நீதிமன்றத் திற்

[திரு. சி. [illegible]] [illegible] 1 2 5

அனுப்பிய பிறகு [illegible]
மொத்தம் 6 பேர் [illegible]
குரைஞர்கள் மத்தியிலிருந்து [illegible]
தான் சட்டம் தெரிந்த, [illegible]
நீதித் துறையிலிருந்து [illegible]
வேண்டும். மற்ற துறைகளி[illegible]
என்பது அமைச்சரவை எடுத்த [illegible]
எடுத்த முடிவல்ல. இதை [illegible]
தெரிவித்த பிறகு கிட்டத்தட்ட 196[illegible]
திலிருந்து பதவியில் தற்கா[illegible]
இரண்டு நீதிபதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த [illegible]
கணக்கானவர்கள் பதவியில் இருக்கிறார்கள். நீதிமன்றத்
திற்குச் சென்றார்கள். [illegible] போது.
இதுகாறும் பதவியில் இரு[illegible]
எதிர்காலத்தில் இப்படி வ[illegible]
வேண்டுமென்ற முடிவு வந்[illegible]
நீதிமன்றத்திற்குச் சென்[illegible]
([illegible] 141 [illegible])

அந்த வழக்கு உயர்நீதி[illegible]
நீதிமன்றத்திற்குச் சென்று, [illegible]
ஒரு தீர்ப்பு வழங்கப்பட்ட[illegible]
கிட்டத்தட்ட 20 ஆண்டுகளு[illegible]
மாக அவர்கள் பதவியில் [illegible]
தேர்ந்தெடுத்தது மாநில அர[illegible]
காலத்தில் தேர்ந்தெடுத்திரு[illegible]
தெடுத்தால் சர்வீஸ் கமிஷன் [illegible] வேண்டும்.
சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்ந்தெடுப்பதற்கு உயர்நீதிமன்றத்
தினுடைய இரண்டு நீதிபதிகள் [illegible] நடத்து
கிறார்கள். உச்ச நீதிமன்ற[illegible]
மன்றத்தினுடைய நீதிபதிகள் [illegible]
விற்கு மார்க் போடுகிறார்கள். [illegible]
கிறார்களோ அதை மாற்றக் [illegible]
உறுப்பினர்களுக்கு இல்லை. [illegible]
வாக்கி இருக்கிறது. அந்[illegible]
நடத்துகிறார்கள். இந்த [illegible]
தீர்ப்பையொட்டி ஏற்கெனவே [illegible]
தவர்கள், அவர்களில் மிக [illegible]
யற்றவர்கள் என்று யாராவ[illegible]
ஒரு ஸ்க்ரீனிங் கமிட்டி மூல[illegible]
மட்டும் தாய்த் துறைக்கு அ[illegible]
பூராவும் நிரந்தரமாக்க வேண்டும். [illegible] ary
பதவிகள் ஏற்படுத்தலாமென்[illegible]
தற்போது தமிழ் நாடு [illegible]
தேர்வாணைக் குழு கிட்டத்தட்ட[illegible]
பொறுத்தவரையிலும் 128 இடங்களுக்கு[illegible]
ஜுடிஷியல் செகண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்[illegible] பொறுத்த



1987 [illegible] [திரு [illegible] பொன்னையன்]

[illegible] முன்னெச்சரிக்கையாக எதிர்
[illegible] காலியிடங்களையும் கணக்கில்
[illegible] க்க வேண்டுமென்று உச்ச
நீதிமன்றத்தினுடைய ஆணைக்கேற்ப தற்போது தேர்வாணைக்
குழு பணிக்கப்பட்டு[illegible] உயர்நீதிமன்றமும் அந்த
[illegible] என்பதை ஆய்ந்து தேர்
[illegible] தேர்வாணைக் குழுவின்
[illegible] தேர்வாணைக் குழுவில் உயர்நீதி
[illegible] நடத்துகிற நீதிபதிகளுடைய
[illegible] டுகிற மார்க் தான்
final, as per the judgement of the Supreme Court. எனவே
இதற்கும் மாநில அர[illegible] டர்பில்லை. 1963—65ஆம்
ஆண்டிலிருந்து உயர் நீதிமன்றத்திற்கு தங்களிடம் இருக்கிற அதி
கார[illegible] தற்காலிகமாக நீதிபதிகளை ஆங்காங்கு நிய
மித்து [illegible] யென்ற நிலை இருந்து வந்தது.
ஆனால் 1981 ஆம் [illegible] வழக்குரைஞர்கள் மத்தியிலிருந்து
[illegible] மென்ற முடிவு வந்த பிறகு
[illegible] நிர்வாகம் மேற்கொள்ளாமல்
[illegible] மத்தியிலிருந்து ஒருமுறை
[illegible] 70 [illegible] தற்காலிகமாக இதே உயர்
[illegible] ஆண்டுகளுக்கு முன்னால் நிய
[illegible] யில் இப்போதும் உயர்நீதி
[illegible] நீதிபதிகளைத் தேர்ந்தெடுத்து
[illegible] மாநில அரசு எந்தவிதத் தடை
[illegible]
[illegible] 1963, 1965ஆம் ஆண்டிலிருந்து நடை
[illegible] அவர்கள் தொடர்ந்து கடைபிடிக்க
[illegible] சொல்ல வேண்டிய கடமை
[illegible] இல்லையென்ற காரணத்தால், சட்டப்
[illegible] மைப் பொறுப்பும் பிரச்சினை
[illegible] இந்த உண்மைநிலையை அரசு தெளி
[illegible] காரணம் பலமுறை அரசு உயர்நீதி
[illegible] றங்களில் நீதிபதிகள் இல்லாத
[illegible] னால் கீழேயுள்ள நீதிபதிநிலை
[illegible] நிரப்ப வேண்டுமென்று நாங்கள்
[illegible] செய்ய வில்லை. ஜுடிஷியல்
[illegible] அல்லது டிஸ்ட்ரிக்ட் முன்சீப்
[illegible] இரண்டு ஆண்டுகளுக்கு முன் 79
[illegible] உயர்நீதிமன்றமே நேரடி
[illegible] பது போல, தற்போது உள்ள
[illegible] யையும் நிரப்புங்கள் என்று
[illegible] றத்திடமிருந்து பதில் இல்லை,
[illegible] வில் பொது நோக்கில் உயர்நீதி
[illegible] காட்டுவது அவசியம், இது
[illegible] தை வற்புறுத்தி வருகிறோம்.
[illegible] உச்ச நீதிமன்றத்தினுடைய
[illegible]
ஆணையை உயர்நீதிமன்றம் கட்டாயம் கேட்டாக வேண்டும்.
அந்த அடிப்படையில் தேர்வாணைக் குழு இந்தத் தேர்வை

நடத்துகிறது. தேர்விற்கு அவர்கள் இரண்டு நீதிபதிகளை தேர்வு செய்ய அனுப்பியாக வேண்டும். அது முடிந்தவுடன் அந்த இடங்கள் எல்லாம் கட்டாயம் நிரப்பப்படும் என்பதை நான் அவைக்கு கூற விரும்புகிறேன்.

அதே போல் ஜூடிஷியல் பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ரேட் பதவியைப் பொறுத்த வரைக்கும் 58 இடங்களில் 19 இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆனால் இந்த 19 இடங்களை பதவி உயர்வு மூலமாக நிரப்ப வேண்டும். அப்படி நிரப்ப வேண்டிய கடமை உயர்நீதிமன்றத்திற்கு இருக்கிறது. உயர்நீதிமன்றம் அதையும் செய்யவில்லை. நிரப்ப வேண்டும் என்று மாநில அரசு உயர்நீதிமன்றத்தை வற்புறுத்தி வருகிறது.

அதைப் போலவே இலவச சட்ட உதவியைப் பொறுத்த வரைக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது குறிப்பாக திரு வேங்கடரமணன் பேசுகிறபோது அதுவும் கள். இந்தியத் துணைக் கண்டத்திலேயே இது சிறந்த முறையில் விளங்குவதாக கூறப்பட்டிருக்கிறது. இதை நான் கூறவில்லை. மத்திய அரசினுடைய அமைச்சரும், உச்சநீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதியும் கூறினார்கள். பாராளுமன்றத்திலே அவர் கள் சொன்னார்கள். அவர்கள் சொன்னதை நாங்கள் எடுத்துக் கொண்டோம். இந்த இலவச சட்ட உதவியைப் பொறுத்த வரைக்கும், இதை நிர்வகிப்பதே வழக்கறிஞர்கள் தான். எந்த வழக்கறிஞர்கள் 25 ஆயிரம் பேர்கள போராட்டம் நடத்தினார் கள் என்று சொல்கிறீர்களோ, அந்த வழக்கறிஞர்கள் இருந்து தான் இந்த இலவச சட்ட உதவியை நடத்துகிறார்கள். அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வழக்கறிஞர்கள் இந்த இலவச சட்ட உதவியை நடைமுறைப்படுத்தவில்லை. உயர்நீதிமன்றத்தோடு கலந்து மாவட்டநீதிபதிகளோடு தொடர்பு கொண்டு, ஏ, பி, என்ற இரண்டு பிரிவுகள், வழக்கறிஞர் அமைப் புகள் இதை நடத்தி வருகின்றன. அரசினுடைய ஒரே பணி 40 லட்சம் ரூபாயை ஒதுக்குவதோடு நின்று விடுகிறது. எவ் வளவு பணம் வேண்டுமானாலும் கேளுங்கள், ஏழைகளுக்காக நடத்தப்படுகிற இந்த இலவச சட்ட உதவிக்கு கட்டாயம் நிதி தருவேன் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியிருக்கிறார் கள். இப்படி தாராளமான தன்மையிலே நிதியைத் தருகிற காரணத்தால் இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாதஅளவிற்கு 40 இலட்சம் ரூபாயை ஆண்டுக்கு தருகிறோம். இந்த அளவிற்கு மற்ற மாநிலங்கள் தரவில்லை. ஆனாலும் கூட அங்கே குறைபாடு இருக்கிறது என்றால், இந்த இலவச சட்ட உதவியை நடைமுறைப்படுத்துகிற துறையை, அதாவது வழக்கறிஞர்கள் பிரிவைச் சேர்ந்தவர்களும் நீதிபதிகளும் இதை மாற்றியமைக்கவேண்டும் என்ற முறையில் கட்டாயம் அரசு அவர்களுக்குத் தக்க ஆலோசனைகளை இது குறித்து கூறும் என்பதை இந்த நேரத்தில நான் எடுத்துக் கூற கடமைப்பட்டு இருக்கிறேன்.





அதைப்போலவே மாண்புமிகு உறுப்பினர் ஆனந்ததிரு. கிருஷ்ணா அவர்கள் பேசுகிறபோது time limit for the comp.e ion of the cases என்பது பற்றி சொன்னார்கள். சட்டமே திருத்தப்படவேண்டும். இந்த ஆலோசனையை நாங்கள் உயர்நீதிமன்றத்தோடு கலந்திருக்கிறோம். பல சட்டங்களைத் திருத்த மத்திய அரசு தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறது. மாநில அரசுக்கு உரிய சட்டங்களையும் திருத்தி, டைம் லிமிட், ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திலே பிரச்சினைகளை முடிக்கவேண்டும் என்று பல சிக்கல்கள் இருந்தபோதிலும், எந்த அளவிற்கு இதை நடைமுறைக்குக் கொண்டு வருவது என்பது குறித்தும், அதேபோல் Vexatious cases என்று சொல்லக் கூடிய அளவிற்கு அதை ஆய்ந்து, நீதிபதிகளுடைய தன்மையைப் பொறுத்து if it is a vaxatious one, he can immediately deal with it and dispose it of ஆனால் நீதிபதிகளிடையே மனமாற்றம் உருவாகிறபோதுதான் இந்த அட்ஜர்ன்மென்டையும் தடுக்க முடியும். அதே நேரத்திலே Vexatious cases என்ற பலனற்ற வழக்குகள் போடுவதை எல்லாம் தடுக்கமுடியும் என்பதை நான் கூற விரும்புகிறேன்.

அதேபோல் ஜட்ஜ்மென்ட் காப்பியைப் பெறுவதிலே பல பிரச்சினைகள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். உயர்நீதிமன்றத்திற்கு என்று மட்டுமல்ல, மற்ற பகுதிகளுக்கும் ஜெராக்ஸ் மெசின் கொடுத்து இருக்கிறோம். அது வேலை செய்யாமல் இருக்கிறது என்பதைக் கூட வேங்கடரமணன் அவர்கள சொன்னார்கள். உயர்நீதி மன்றத்தைப் பொறுத்தவரையிலும், நீதித்துறையைப் பொறுத்த வரையிலும், நிதி கேட்கிறபோது, நிதியை ஒதுக்குவதோடு மாநில அரசுக்கு வேலை முடிந்து விடுகிறது. Because you know very well the Executive connot interfere in the administration of judiciary. The Executive cannot step into the shoes of the judiciary Sometimes the judiciary may stepinto the shoes of the Executive. ஆனால் மாநில அரசினைப் பொறுத்தவரையிலும், நீதித்துறை யினுடைய நடவடிக்கைகள் எதிலுமே அணுவளவும் நாங்கள் தலையிடாமல் இருக்கிற காரணத்தால், என்ன காரணத்தால் உயர்நீதிமன்றத்திலே உள்ள ஜெராக்ஸ் காப்பி மெசின் வேலை செயயவில்லை என்பதைக் கேட்டுத் தெரிந்து நான் மாண்புமிகு உறுப்பினர் வேங்கடரமணன் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன்.

அதைப்போலவே மதுரைக்கு உயர்நீதிமன்றத்தினுடைய கிளை வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள்சொன்னார்கள் 'ஜஸ்வந்சிங் கமிட்டி'யும் இதை பரிந்துரை செய்திருக்கிறது. மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு தற்போது தாக்கீது வந்திருக்கிறது. இது குறித்து விளக்கம் கோரப்பட்டு இருக் கிறது. விளக்கத்தை நாங்கள் ஆய்ந்து கொண்டிருக்கிறோம்,

காரணம் ஏற்கெனவே நான் சொன்னதைப் போல, here is a condition precedent. To bring a Circuit Bench to Madurai, the existing vacancies in the High Court have to be mandatorily filled up. ஆனால் இந்த வேகன்சியைப் பில்-அப் பண்ணுவதைப்பொறுத்த வரைக்கும் எங்களுடைய கொள்கை, தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் நான் முன்னுரிமை தரவேண்டும் என்பது அதை நாங்கள் நடைமுறையில் வைத்துக்கொண்டிருக்கிற காரணத்தால், இதை மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம். அரசினுடைய கொள்கையை மத்திய அரசு ஏற்கிறபோது,—விரைவில் ஏற்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது— அதைப்பொறுத்து மதுரைக்கு இந்த சர்கியூட் பெஞ்ச் வரும் என்பதை நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 3–20)

அதைப்போலவே Rationalisation of Court fees பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் இது குறித்து விவாதிக்கப்பட்டது. கோர்ட் பீஸைப் பொறுத்தவரைக்கும் உயர்நீதி மன்றத்திலே தற்போது இருக்கிற, ad valorem court fee முறையிலே இருக்கின்ற காரணத்தால் 7½ பர்செண்ட் பிளாட் ரேட்டாக வாங்குகிறார்கள். ஆனால் அதைமாற்றி அதை ஒரு ad valorem rate court fees என்ற முறையிலே சட்டத்தை திருத்தி அதைக் கொண்டுவருவதற்கும் கிட்டத்தட்ட 10 ஆயிரம் ரூபாய்க்குக் குறைந்த தொகையாக இருக்கின்றபோது 7½ சதவீதம் என்றும் அதைப்போலவே படிப்படியாக சாதாரணமாக 1 லட்சத்துக்கு மேற்பட்டு அந்தப் பணம் போகிறபோது 1 சதவீதம் என்ற முறையிலே அதை மாற்றியமைக்கவும், அதைப்போலவே வழக்கு நடாத்துகிறவர்களுடைய ஆண்டு வருமானம் 5 ஆயிரம் ரூபாய் இருக்குமேயானால் அல்லது அதற்குக் குறைவாக இருக்குமேயானால் அவருக்கும் இலவசச் சட்ட உதவி மூலமாக சென்று அதிலே பதிவு செய்திருக்கின்ற ஏழைகளுக்கும் கோர்ட் பீ அறவே இல்லாத முறையில் அவர்களுக்குச் சலுகை அளிக்கவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அதைப்போலவே விவசாயிகளைப் பொறுத்தவரைக்கும், சிறுநில விவசாயிகளுக்கும், குறுநில விவசாயிகளுக்கும் இலவசமாக கோர்ட் பீ இல்லாத முறையிலே அவர்களுக்குச் சலுகை அளிக்கவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே, பெண்கள் சம்பந்தமான வழக்குகள் எதுவாக இருந்தாலும் அது Matrimonial or maintenance case or custody of children என்று எந்த வழக்குகளாக இருந்தாலும் அவர்களுக்கு கோர்ட் பீ இல்லாத முறையிலே சலுகை அளிக்கவேண்டுமென்று அரசு முடிவு செய்து இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்,

இரியவ அப்துல் சமத் அவர்கள் பேசுகிறபோது பலவற்றைச் சொன்னார்கள். நீதிபதிகளுக்கு, கார், டேப்ரிக்கார்டர் போன்றவை கொடுக்கப்பட்டதா என்று கேட்டார்கள்; கொடுக்கப்பட்டுவிட்டது. அதைப்போலவே, சென்னையிலே பணியாற்றுகிற நீதிபதிகளுக்கு வாகனங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வாகனங்கள், சரியில்லை என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினர் வேங்கடரமணன் அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். அதுகுறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும். அதைப்போலவே மாண்புமிகு உறுப்பினர் அப்துல் சமது அவர்கள் பேசுகிறபோது Sha iats Cour fo Family disputes-ஐ அமைக்கவேண்டும். இதற்காக 6 ஆயிரம் ஜமாத்துக்கள் இயங்குபடுத்துகிறபோது அதனால்தான் அந்தக் குறிப்பிட்ட மக்களுடைய குடும்பப் பிரச்சினையைத் தீர்க்கமுடியும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அது குடும்பப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மட்டுமே பலன் உள்ளதாக இருக்குமேயானால் அந்த அளவிற்கு Lok A da'at-இன் பணியை, ஒப்பிட்ட பணியை, ஒத்த பணியை மட்டுமே அது மேற்கொள்ள மட்டுமே என்றால் அதை அரசு ஆயும்.

மாண்புமிகு உறுப்பினர் சந்திரசேகரன் அவர்கள் பேசுகிறபோது, வழக்குரைஞர் நலச் சட்டத்தைப் பற்றி சொன்னார்கள். வழக்குரைஞர் நலச் சட்டத்தைப் பொறுத்தவரைக்கும் நான் ஏற்கெனவே இந்த அவையிலே தெளிவுபடுத்தியிருக்கிறேன். வழக்குரைஞர் நலச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருகிறபோது, வழக்குரைஞர்களைவிட வறுமைப் பிணியிலே வாடுகின்ற எண்ணற்றோர் இருக்கிறார்கள். சில பிரிவினரிடமிருந்து கோரிக்கையும் வந்திருக்கின்றன. எனவே எல்லாவற்றையும் கருத்தில்கொண்டு இதை ஆராய வேண்டியிருக்கிறது. வழக்குரைஞர்களுக்கு அரசு பணம் தரவேண்டுமென்கிற நிலை வருகிறபோது, தான் வறுமைக்கோட்டினுடைய எல்லைக்குக் கீழே வாழ்கின்ற மக்களுக்கு உதவுகின்ற பல்வேறு நிலையில் திட்டங்கள் இருக்கின்ற காரணத்தால், அனைத்தையும் ஆராய்ந்து அரசு ஒரு முடிவினை விரைவில் எடுக்கும் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். அதைப்போலவே நீதி மன்றங்களில் வழக்குகளினுடைய தேக்கத்திற்கு ஒருவேளை நீதி மன்றங்களில் பணியாற்றுகின்ற பணியாளர்களுடைய எண்ணிக்கை குறைவு ஒரு காரணமாக இருக்கும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் சந்திரசேகரன் அவர்கள் சொன்னார்கள். அதுகுறித்து அரசு ஆராயும் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். அதைப்போலவே மாண்புமிகு உறுப்பினர் பாலச்சந்திரன் அவர்கள் பேசுகிறபோது within 24 hours நீதி மன்றத்திற்கு குற்றவாளியை கொண்டுசெல்லவேண்டுமென்பது நடைமுறையில் இருக்கிறதா என்பதைப் பற்றியும், [illegible] ill-treatment [illegible] இது குறித்து

காவல் துறையோடும், நீதித் துறையோடும் கலந்து, அரசு இதி எப்படி தக்க நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து ஆய்ந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பி. சிந்தன் அவர்கள் பேசுகின்றபோது தென்னகத்தைப் பொறுத்தவரையில் தொழி லாளர்களுடைய வழக்குகளில் எந்தெந்த மாவட்டங்கள் தொழில் துறையிலே முன்னேறி இருப்பதாகக் கருதப்படுகிறதோ, அந்தந்த மாவட்டப் பகுதிகளுக்கு தொழிலாளருக்கு வேண்டிய நீதிமன்றங் களை நீட்டிப்பது குறித்து அரசு ஏற்கெனவே ஆய்ந்து வருகிறது.

பெண்களுக்கு, குறிப்பாக, கற்பழிப்பு, வரதட்சணை இன்னல்களுக்கு உள்ளாக்கப்படுகின்ற பெண்களுக்கு தனி நீதி மன்றம் அமைக்கின்ற முடிவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பரவலாக அதை அமைக்கவேண்டுமென்று ஆணை யிட்டிருக்கிறார்கள். அதிலே பேமிலி கோர்ட்ஸும் உள் ளடக்கப்படுகிறது. அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் நான் சொல்ல விரும்புகிறேன். Director of Prosecu-tion-ஐப் பொறுத்தவரைக்கும், நான் சென்ற ஆண்டே சொன்னது உண்மைதான். ஆனால் அப்படி வருகின்றபோது எந்த அளவிற்கு என்றால் ஒவ்வொரு மாவட்ட அளவிலே பணியாற்றுகின்ற அரசு வழக்குரைஞர்கள்—they are all under the administrative control of the District Collectors. அவர்களைப் பொறுத்தவரையில் Director of Prosecution-க்கு கொண்டுவருகிறபோது எந்த அளவுக்கு அந்தப் பணிவரையறுக்க வேண்டும் என்பதை தற்போது அரசு தீவிரமாக ஆய்ந்து வருகிறது. விரைவிலே அது குறித்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Administrative Service Tribunal-ஐப் பொறுத்தவரைக்கும் அரசு பணியாளர்களுக்கு நீதிமன்றத்திலே, உயர்நீதி மன்றத்திலே பரிகாரம் தேட வேண்டும் என்ற நிலை ஏற்படுகிறபோது பன்னெடுங்காலம், பல ஆண்டுகள் ஆனாலும் கூட தீர்வு காணாத நிலையாக வழக்குகள் தேங்கிக் கிடக்கக் கூடிய நிலை அதிகமாக இருப்பதால் Administrative Service Tribunal என்று வருகின்றபோது இதில் அரசு அதிகாரிகளை முழுமையாக போடவில்லை, நீதிமன்ற நீதிபதி தான் வருவார். பிரத்யேக மாக இந்த வழக்குகளை நடத்துகிற காரணத்தால் இந்தப் பணியாளர்களுக்கு பாதகம் ஏற்படாது, பரிகாரம் தான் ஏற்படும் என்று அரசு கருதுகிறது. அதில் ஏதேனும் பிரச்சினை இருக்குமானால் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னால் அது குறித்து தனியாக அரசு ஆய்ந்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வேங்கடரமணன் அவர்கள் பேசும்போது Return of document, Stamp duty போடுவது பற்றியும், அதேபோல் Memo of Appearance, Stamp fee





வேண்டும் என்பது பற்றியும் Process fee அதிகமாக்க வேண்டும் என்று பல்வேறு வகையில் அரசுக்கு வருமானம் வரக்கூடிய ஆலோசனைகளை தந்து இருக்கிறார். ஆனால் ஒட்டுமொத்தமாக Rationalisation of Court fees என்பதைப் பொறுத்தவரைக்கும் மத்திய அரசு அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தக்கூடிய அளவுக்கு ஒரு திட்டத்தை வகுத்து இருக்கிறது. கிட்டத்தட்ட 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கூட்டத்தை நடத்தி அதை எல்லா மாநிலங்களுக்கும் தெரிவித்து இருக்கிறது. ஆனால் மத்திய அரசு abolition of Court fees என்று வருகிறபோது அல்லது Rationalisation of court fees என்று வருகிறபோது ஏற்படுகிற பண இழப்பை ஈடுகட்டித் தர வேண்டும் என்று பல மாநிலங்கள் வடபுலத்தில் இருக்கின்ற காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற மாநிலங் கள் கூட மத்திய அரசை கேட்டு இருக்கின்றன. அதனுடைய பதிலை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறோம். பதில் வந்த பிறகு ஒருவேளை பாதகமாக வந்தாலும், சாதகமாக வந்தாலும் Court fees rationalisation-ஐப் பொறுத்த வரைக்கும் நலிந்த மக்களுக்கு சலுகைகள் அளிக்கவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர் களுக்கு இருக்கிற விருப்பத்திற்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப் படும் என்பதைம் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறைத் துறையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சுப்பராயன் அவர்கள் பேசும்போது அதிகாரிகளுடைய தவறுகளை சுட்டிக்காட்டினார்கள். சில இடங்களில் என்ன என்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பது குறித்து எடுத்துச் சொன்னார்கள். அதேபோல் என்ன என்ன மாற்றங்களை உருவாக்கவேண்டும் என்பது குறித்தும் எடுத்துச் சொன்னார்கள். கழிவறையைப் பொறுத்தவரைக்கும் 10 நபர்களுக்கு ஒரு கழிவறை என்ற வகையில் கழிவறைகள் கடந்த 3 ஆண்டுகளாக எல்லா சிறைகளுக்கும் தரப்பட்டிருக் கிறது. Problems may be there confronting the remand prisoners. அதில் பிரச்சினைகள் இருக்கத்தான் செய்யும்.

அடுத்த கருப்பன் என்ற கன்விக்ட் பிரிசனருக்கு நிவாரணம் தரப்படவில்லை என்று சொன்னார்கள். அதை அரசு விசா ரித்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். சிறையில் குறை பாடுகள் இல்லை என்று நான் சொல்லவில்லை. குறைபாடுகள் இருக்கிறது என்று அவ்வப்போது அரசுக்கு தகவல் வந்திருக்கிற காரணத்தால் தான் சிறையிலே இருக்கின்ற கைதிகளுக்கு ஏற் படுகின்ற இன்னல்களை, இடர்பாடுகளை அல்லது அங்கு நடக்கின்ற தவறுகளை அவர்கள் சுட்டிக்காட்டி அந்த புகார் பெட்டி மூலமாக அனுப்புகிறபோது சில இடங்களில் அந்தப் பெட்டியின் அடி பாகத்தைக் கழற்றி எடுத்து விடுகிறார் கள் என்று சில குறைபாடுகள் அரசுக்கு வந்ததன் காரணமாக

[திரு. சி. பொன்னையன்] [1987 ஏப்ரல் 25

அனைத்து சிறைச்சாலைகளுக்கும் அந்தப் பெட்டி இரும்பினால் ஆக்கப்பட்டதாக இருக்கவேண்டும் என்ற ஆணையை அரசு எடுத்திருக்கிறது. இதிலிருந்து நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் அரசு இதில் ஏனோ தானோ என்று இருக்கவில்லை. கட்டாயம் கடுமையான நடவடிக்கை எடுத்து சிறையினுடைய நடைமுறை நிர்வாகம் கைதிகள் அங்கு இருக்கின்றவர்கள் திருந்துகிற முறையில் அவர்கள் இறுதியில் திருந்தி நல்லவர்களாக சமுதாயத்தில் வரக்கூடிய வகையில் இருக்கும் முகத்தான் நிர்வாகத் தூய்மை நிலவவேண்டும் என்ற முறையில் நாம் நடவடிக்கை எடுத்து இருக்கிறோம். பல அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்து இருக்கிறோம். அதிகாரிகளை தற்காலிக பணி நீக்கத்திற்கு உட்படுத்தியிருக்கிறோம். முன்பு உறுப்பினராக இருந்த திரு. உமாநாத் அவர்கள் சில குற்றச்சாட்டுகளை சொன்னபோது நான் நம்பவில்லை. நேரில் வாருங்கள், நான் நிரூபிக்கிறேன் என்று அவர் சொன்னார். திருச்சி சிறைக்கு நேரில் நான் சென்றேன். அங்கு சர்பிரைஸ் விசிட் செய்தேன். அங்கு நடக்கும் சில தவறுகளைக் கண்டோம். உடனடியாக நடவடிக்கை எடுத்தோம். அரசுக்கு தவறுகளை சுட்டிக்காட்டுகிறபோது கட்டாயம் நடவடிக்கை எடுப்பதில் எந்தவிதத் தயக்கத்தையும் காட்டாது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சுப்பராயன் அவர்களும் திரு. வி. பி. சிந்தன் அவர்களும் சிறை நிருவாகத்தில் கொண்டு வரவேண்டிய சில திருத்தங்களைப் பற்றி சொன்னார்கள். நடைமுறையில் ஏற்படுத்த வேண்டிய, செம்மைப்படுத்த வேண்டியதைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். அது குறித்து அரசு தக்க நடவடிக்கையை விரைவில் ஆய்ந்து எடுக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 3–30)

பார்வையாளர் குழுவைப் பற்றிச் சொன்னார்கள். அதில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களுக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பி. சிந்தன் அவர்களுக்குமே மாறுபட்ட கருத்து. நீங்கள் பார்வையாளர் குழு வேண்டும் என்று சொன்னீர்கள். பார்வையாளர்கள் குழு போடுவதிலே 'டிஃபனை' போட்டு அவர்களை அனுப்பி விடுவார்கள். அப்படியெல்லாம் விசாரணை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பி. சிந்தன் அவர்கள் சொன்னார்கள். இருந்தாலும்கூட, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை அடக்கிய 'கன்சல்டேடிவ் கமிட்டி' போடுவது சிறந்தது என்பதால் இது குறித்து ஆய்ந்து, அரசு விரைவில் தக்க நடவடிக்கை எடுக்கும் என்று சொல்லி இந்த மானியக் கோரிக்கைகளை அவை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 13 நீதி நிர்வாகம்.

திருவாளர்கள் எஸ். ரெத்தினராஜ், பொ. உத்திராபதி ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

திரு. எஸ். பி. மணவாளன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் . பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண் 13 நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 19,30,85,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 14 சிறைச்சாலைகள்.

திருவாளர்கள் சோ. மா. இராமச்சந்திரன், திரு. பொ. உத்திராபதி ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப் பெற்றன.

திருவாளர்கள் எ. எஸ். ஏ. ஆறுமுகம், எஸ். என். இராமசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 11,77,98,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 27–4–1987 திங்கட்கிழமை காலை 10–00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 3–31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

### 5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

எதுவுமில்லை

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

185. கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்க குறிப்பு, 1987–88 (தமிழ், ஆங்கிலம்)

186. கோரிக்கை எண் 14—தமிழ்நாடு சிறைகளின் நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1987–88 (தமிழ், ஆங்கிலம்)



## இணைப்பு I.

(708–ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 502-க்கான விடையைக் காண்க.)

விடை :

(அ) ஆம்.

(ஆ) தத்து எடுக்கப்பட்ட கிராமங்கள்—26.

| மாவட்டம். | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர்கள். | கிராமங்களின் பெயர்கள். |
|---|---|---|
| செங்கற்பட்டு .. | ஸ்ரீபெரும்புதூர் | 1 திருமங்கலம். |
| வடார்க்காடு | நெமிலி | 2 நாகவேடு. |
| | போளூர் | 3 தேவிகாபுரம். |
| | ஜமுனாமருதூர் | 4 சிந்திலூர். |
| தர்மபுரி .. | பாப்பாரப்பட்டி | 5 பாப்பாரப்பட்டி |
| சேலம் .. .. | வீரபாண்டி | 6 எஸ். பாலம். |
| பெரியார் .. | நம்பியூர் | 7 ராயர்பாளையம் |
| கோவை .. .. | அன்னூர் | 8 வடுகலூர் |
| நீலகிரி .. .. | ஊட்டி | 9 கூனூர்க்கல். |
| தென்னாற்காடு .. | காணை | 10 காணை. |
| | வானூர் | 11 திருச்சிற்றம்பலம். |
| சேலம் .. .. | பெத்தநாயக்கன் பாளையம். | 12 பகடுப்பட்டு. |
| தஞ்சாவூர் .. | பட்டுக்கோட்டை | 13 களுகப்புளிக்காடு. |
| | ஒரத்தநாடு | 14 வெள்ளூர். |
| புதுக்கோட்டை .. | ஆலங்குடி | 15 கீரமங்கலம். |
| | திருவரங்குளம் | 16 வல்லதாராக்கோட்டை. |

| | | | |
|---|---|---|---|
| திருச்சி .. | மருங்காபுரி | 17 | வளநாடு. |
| முத்துராமலிங்கம் .. | கல்லல் | 18 | நாச்சியார்புரம் கம்பனூர். |
| இராமநாதபுரம் .. | கமுதி | 19 | கமுதி. |
| காமராஜ் .. .. | வத்திராயிருப்பு | 20 | ரெங்கப்ப நாயக்கன் பட்டி |
| அண்ணா .. | வேடசந்தூர் | 21 | பொருளூர் |
| மதுரை .. .. | ஆண்டிப்பட்டி | 22 | ஆண்டிப்பட்டி. |
| திருநெல்வேலி .. | ராதாபுரம் | 23 | டி. கள்ளிகுளம். |
| | பெரியகுளம் | 24 | வடுகப்பட்டி |
| | கோவில்பட்டி | 25 | எட்டயபுரம். |
| கன்னியாகுமரி .. | விளவங்கோடு | 26 | கடயால் |

## இணைப்பு II.

(709–ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 503-க்கான விடையைக் காண்க.)

விடை—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் கதர் வாரியத்தின் மூலம் கதர் உற்பத்தி செயவதற்கென 26 கிராமிய நிலையங்களும், 3 நேபாளி தறி அலகுகள் மூலம் கதர் நூற்பு செய்யப்பட்டும், ஒரு பட்டு உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி உற்பத்தி செய்யப்பட்டும், 3 கதர் விற்பனை நிலையங்கள் பட்டு மூலமாக கதர் கிராமத் தொழில் பொருட்கள் விற்பனை செய்யப் பட்டும் வருகிறது. இதனைத் தவிர, கிராமத் தொழில்களை மேம்படுத்தும் பொருட்டு, ஒரு சோப்பு அலகும், இரண்டு தோல் பொருள் உற்பத்தி அலகுகளும், ஒரு தோல் பொருள் விற்பனை அலகும் வாரியத்தின் மூலம் செயல்பட்டு வருகின்றன. மேலும் 24 கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. இவை களின் வாயிலாக பனைத் தொழில், தச்சு கருமாரத் தொழில், மண்பாண்டத் தொழில், கிராமிய எண்ணைத் தொழில், நார் மற்றும் பாய்த் தொழில், பிரம்புத் தொழில், சுண்ணாம்பத் தொழில், அரிசி மற்றும் நவதானியம் பதப்படுத்தும் தொழில் ஆகியவை மேற்கொள்ளப்பட்டு செயல்படுகின்றன.

(ஆ) 5,852 குடும்பங்கள்.



## இணைப்பு III.

(761–ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### அத்தியாயம் 1.

### தமிழ்நாடு சிறைகள் நிருவாகம்.

" மானியக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் "

குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

1987–88.

இம்மாநிலத்திலுள்ள எட்டு மத்திய சிறைகள், புதுக்கோட்டையில் உள்ள இளைஞர் சீர்திருத்தப் பள்ளி, சென்னை அருகே புழலில் உள்ள ஆடவர் பிற்காப்பு இல்லம், வேலூரிலுள்ள மகளிர் சிறை, சேலம், திருச்சிராப்பள்ளி, கொக்கிரகுளம் ஆகிய மூன்று இடங்களில் உள்ள தனிக் கிளைச் சிறைகள், சிங்காநல்லூரில் உள்ள திறந்தவெளிச் சிறை, சேலம் மத்திய சிறையோடு இணைக்கப் பட்டுள்ள பண்ணைச் சிறை, இம்மாநிலத்திலுள்ள 118 கிளைச் சிறைகள் ஆகியவற்றின் அமைப்பு, கட்டுப்பாடு, நிருவாகம் முதலியவற்றை சிறைத் துறை கவனிக்கிறது. குற்றவாளிகள் நன்னடத்தை கண்காணிப்பு பிரிவும் இத்துறையின் பொறுப்பில் இயங்குகிறது. குற்றவாளிகள் மீண்டும் குற்றம் செய்யும் நிலைக்குத் திரும்புவதைத் தடுத்து நிறுத்தவும், அவர்கள் விடுதலையான பின்னர், சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நன் மக்களாக வாழவும், மீண்டும் சமூகத்துடன் இணைந்து செயற்படவும் உரிய பயிற்சிகளை நல்கி, சீர்திருத்தி, அவர்களுக்குப் புதுவாழ்வு அளிப்பதே அரசின் தலையாய நோக்கமாகும். முன்னதாக மருத்துவப் பணிகள் குடும்பநலத்துறை இயக்குநரின் கட்டுப்பாட்டிலிருந்த 10 அரசு புதுவாழ்வு இல்லங்களும், சமூகநலத்துறையின் கட்டுப்பாட்டில் இருந்த மேல்பாக்கத்திலுள்ள அரசு காப்பு முகாமும் சிறைத் துறைத் தலைமை இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

1. சிறைகளின் வகைப்பாடு :

இம்மாநிலத்திலுள்ள சிறைகள் பின்வருமாறு ஐந்து வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன :—

(1) மத்திய சிறைகள் ;

(2) தனி வகைச் சிறை (மாநில மகளிர் சிறை, வேலூர்) ;

(3) திறந்தவெளிச் சிறைகள் ;

(4) தனிக்கிளைச் சிறைகள் ;

(5) கிளைச் சிறைகள் ;

[1987 ஏப்ரல் 25

பொதுவாக, ஒரு திங்களுக்கு மேலாகத் தண்டனை அடைந்த வர்கள் மத்திய சிறைகளில் வைக்கப்படுகின்றனர். விசாரணைக் கைதிகளும், ஒரு திங்களுக்கும் குறைவாகத் தண்டனை பெற்ற வர்களும், கிளைச் சிறைகளில் வைக்கப்படுகின்றனர். வயது வந்த கைதிகள் இளங் குற்றவாளிகளிடமிருந்து பிரித்து வைக்கப் படுகின்றனர். ஆண் கைதிகளும், பெண் கைதிகளும், தனித்தனி சிறைகளில் வைக்கப்படுகின்றனர். குற்றம் செய்வதையே தொழிலாகக் கொண்டவர்கள் சேலம் மத்திய சிறையில் வைக்கப் படுகின்றனர். வழக்கமாகச் சிறைக் குற்றம் செய்யும் சிறைக் கைதிகள் இதர சிறைக் கைதிகளை கெடுத்துவிடக்கூடாது என்ப தற்காக, மற்றவர்களிடமிருந்து பிரித்து வைக்கப்படுகின்றனர். இத்தகைய சிறைக் கைதிகள் கடலூர் மத்திய சிறையில் வைக்கப் படுகின்றனர். ஒரு திங்களுக்கும் மேலாகச் சிறைத்தண்டனை பெற்ற பெண் கைதிகள் வேலூரிலுள்ள மாநில மகளிர் சிறையில் வைக்கப்படுகின்றனர். இச்சிறை பெண்களுக்கே உரிய சிறை யாகும். பெண்களே இங்கு அதிகாரிகளாக இருந்து இச்சிறையை நிருவகிக்கின்றனர். இளஞ்சிறைக் கைதிகளைக் காவலில் வைத் திருப்பதற்காகப் புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப்பள்ளி இயங்குகிறது. மனநோய்வாய்ப்பட்ட கைதிகள், சென்னை அரசினர் மனநலக் காப்பகத்தில் சேர்க்கப்படுகின்றனர். தொழு நோய்க் கைதிகளுக்கு தனிப்பட்ட முறையில் சிகிச்சையளிக்க தனிச்சிறைக்கூடங்கள் வேலூர் மத்திய சிறையில் உள்ளன.

இம்மாநிலத்தின் தென் மாவட்டங்களிலுள்ள நீதிமன்றங்க ளால் தண்டிக்கப்படும் பெண் குற்றவாளிகளைச் சிறை வைப்பதற் காக மதுரையில் பெண்களுக்கான ஒரு தனிச்சிறை நிறுவப்பட் டுள்ளது. இத்தனிச் சிறைக்கான கட்டிடங்கள் அனைத்தும் கட்டி முடிக்கப்பட்டு, இதை நிருவகிப்பதற்குத் தேவையான பணியாளர் களை நியமிக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விரைவில் மகளிருக்கான இத்தனிச் சிறை செயல்படத் தொடங்கும்.

சிறைத் துறையின் பொறுப்பிலுள்ள பல்வேறு வகைகளைச் சேர்ந்த நிறுவனங்கள் வருமாறு :—

| | |
|---|---|
| (1) மத்திய சிறைகள் .. .. .. | 8 |
| (2) மாநில மகளிர் சிறை.. .. .. | 1 |
| (3) பெண்களுக்கான தனிச் சிறை (இன்னமும் செயல்படத் தொடங்கவில்லை) .. | 1 |
| (4) இளைஞர் சீர்திருத்தப்பள்ளி .. | 1 |
| (5) தனிக் கிளைச் சிறைகள் .. .. | 3 |
| (6) கிளைச் சிறைகள் .. .. .. | 118 |
| (7) திறந்தவெளிச் சிறை .. .. | 1 |
| (8) பண்ணைச் சிறை .. .. .. | 1 |
| (9) ஆடவர் பிற்காப்பு இல்லம் .. .. | 1 |
| (10) அரசு புதுவாழ்வு இல்லங்கள் .. | 10 |
| (11) அரசு காப்பு முகாம் .. .. | 1 |



1987 ஏப்ரல் 25]

கிளைச் சிறைகள் மற்றும் மத்திய சிறைகளில் மொத்தம் 15,741 பேருக்கு இடவசதியளிக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அரசு புதுவாழ்வு இல்லங்களில் 4,250 பேருக்கு (பெரியவர்கள் 4,000 ; சிறுவர்கள் 250) இடவசதியளிக்க அனுமதியளிக்கப்பட்டு இருக்கிறது. மேல்பாக்கத்திலுள்ள அரசு காப்பு முகாமில் 950 பேருக்கு (ஆண்கள் 770 : பெண்கள் 180) இடவசதி அளிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சிறைத் துறையின் கட்டுப்பாட் டில் உள்ள நிறுவனங்கள் குறித்த பட்டியலொன்று இணைப்பு IV-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

2. நிருவாகம் :

சிறைத் துறையின் நிருவாக அமைப்பைக் காட்டும் விளக்கப் படம் இணைப்பு-I-ல் கொடுக்கப்பட்டுள்ளது. இத்துறையில் உள்ள பதவிகளின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை ஒன்று இணைப்பு-II-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

1976—77 முதல் 1985—86 வரையிலான ஆண்டுகளில் சிறைத் துறையின் செலவினங்கள், 1986—87 ஆம் ஆண்டுக்குரிய திருத்த மதிப்பீடு, 1987—88 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு, 1976—77 முதல் 1985—86 ஆம் ஆண்டு வரை சிறைத்துறையின் " வரவினங்கள் ", 1986—87 ஆம் ஆண்டுக் குரிய திருத்த மதிப்பீடு, 1987—88 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்ட மதிப்பீடு ஆகியவை குறித்த விவரங்கள் இணைப்பு-III-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

(அ) வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கிளைச்சிறை களை படிப்படியாக சிறைத் துறையின் நிருவாகத்தில் எடுத்துக் கொள்ளுதல் :

முன்னதாக வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் இருந்த இம்மாநிலத்திலுள்ள 119 கிளைச் சிறைகளும் தற்போது சிறைத் துறையின் நிருவாகத்தின் கீழ் படிப்படியாக நிறைவேற்றப்பட்ட திட்டத்தின் மூலம் கொண்டு வரப்பட்டுள்ளன.

(ஆ) சிறைக் காவலர்கள் பயிற்சிப் பள்ளி :

சிறைக் காவலர்கள் பயிற்சிப் பள்ளி ஒன்று வேலூரில் உள்ளது. இதில் பல்வேறு சிறைகளிலுள்ள 100 இரண்டாம் நிலைச் சிறைக் காவலர்களுக்கு உடற்பயிற்சி, ஒழுங்கு, சிறை நிருவாகக் கோட் பாடுகள் மற்றும் சீர்திருத்தமுறைகளைக் கடைப்பிடித்தல் போன்ற பல்வேறு துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் கால அளவு 6 திங்களாகும். மேலும் 6 முதல்நிலை சிறைக்காவலர் களுக்கும், 6 முதன்மைத் தலைமைக் காவலர்களுக்கும் முறையே 30, 15 நாட்களுக்கு நினைவூட்டுப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மேலும், பயிற்சிக் காலத்தில் சீர்திருத்த முறைப்படி கைதிகளை அணுகும் முறை குறித்துப் பயிற்சியளிக்க முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

(இ) (குற்றவாளிகள்) சீர்திருத்த அலுவலர்களுக்கான வட்டாரப் பயிற்சிப் பள்ளி :

தென் மாநிலங்களைச் சேர்ந்த (ஆந்திரப் பிரதேசம், கருநாடகம், கேரளம், தமிழ்நாடு) குற்றவாளிகள் சீர்திருத்த அலுவலர்களுக்கான வட்டாரப் பயிற்சிப் பள்ளி ஒன்று வேலூரில் 1—10—1979 முதல் செயல்பட்டு வருகிறது. சிறைகள், நன்னடத்தை, கண்காணிப்புப் பிரிவு, சான்றளிக்கப்பட்ட பள்ளிகள், சீர்திருத்தப்பள்ளிகள், மற்றும் சீர்திருத்தப்பணியிலும் அது தொடர்பான பணிகளிலும் ஈடுபட்டிருக்கிற இது போன்ற பிற நிறுவனங்கள் ஆகியவற்றிலுள்ள அலுவலர்களுக்கு குற்றங்களைத் தடுக்கவும், குற்றவாளிகளை சீர்திருத்தவும், குற்றவாளிகளுக்கு மறு பணி நோக்குப் பயிற்சி அளிக்கும்பொருட்டு, தொழில் வகையில் தொழில் நுட்ப அறிவு, பயிற்சித் திறன் ஆகியவற்றில் பயிற்சி அளித்து சமூக தொழில் மறு வாழ்வுக்கு அவர்களைத் தயார் செய்வதும் பயிற்சிப் பள்ளியின் நோக்கமாகும். மத்திய சிறைகளில் உதவிச்சிறை அலுவலர் முதற்கொண்டு கூடுதல் சிறைக் கண்காணிப்பாளர் வரையுள்ளவர்களுக்கு, ஏனைய சீர்திருத்த நிறுவனங்களில் உள்ள அதற்கு நிகரான பதவித் தர அலுவலர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. குற்றவியல், உளவியல், சமூக வாழ்வியல், சிறை நிருவாகம், இளம் குற்றவாளிகள் நன்னடத்தை, சமூக நலப்பணி, சட்டம், நிறுவன மேலாண்மை ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒரே சமயத்தில் இம்மாநிலத்தைச் சேர்ந்த 9 அலுவலர்களுக்கு இந்நிறுவனத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை, இம்மாநிலத்தைச் சார்ந்த 104 அலுவலர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள். இந்நிறுவனத்தின் தொடர் மற்றும் தொடரா இனச் செலவுகள் நான்கு தென் மாநிலங்களாலும் சமமாகப் பகிர்ந்துகொள்ளப்படுகிறது.

(ஈ) நற்பணிக்கான முதலமைச்சரின் சிறைப் பதக்கம் வழங்குதல் :

சிறைக் காவலர்கள் நேர்மையுடனும், விசுவாசத்துடனும், கடமையுணர்வுடனும், திறமையுடனும், உயர்தர ஒழுங்குடனும் மற்றும் தியாக மனப்பான்மையுடனும் பணியாற்ற அவர்களை ஊக்குவிப்பதற்காக, நவம்பர் திங்கள் 1985 ஆம் ஆண்டில் ''தமிழ்நாடு முதலமைச்சர் சிறைத்துறை நற்பணிப் பதக்கம்'' என்றதொரு பதக்கம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வரால் ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் தினத்தன்று 20 சிறைக் காவலர்களுக்கு இப்பதக்கம் வழங்கப்படுகிறது. இப்பதக்கங்களைப் பெறும் சிறைக் காவலர்கள் நிலை I மாதமொன்றுக்கு ரூ. 25 என்ற வீதத்திலும், சிறைக் காவலர்கள் நிலை II மாதமொன்றுக்கு ரூ. 20 என்ற வீதத்திலும் மாதாந்திரப்படி பெறுவதற்குத் தகுதியானவர்களாவர்.



3. திறந்தவெளிச் சிறைகள் :

(i) இம்மாநிலத்திலுள்ள ஒரே ஒரு திறந்தவெளிச் சிறை, தற்போது கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சிங்காநல்லூரில் உள்ளது. இதில் 100 கைதிகள் தங்குவதற்கான இடவசதி உள்ளது. இதைத் தவிர, சேலம் மத்திய சிறையுடன் பண்ணைச் சிறை ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது.

(ii) திறந்தவெளிச் சிறைகளின் நோக்கங்கள் பின்வருமாறு :

(அ) சிறைகளில் நெருக்கடியைத் தவிர்த்தல் ;

(ஆ) சிறைக் கைதிகளின் எதிர்காலப் புது வாழ்விற்காக, அவர்களுக்குச் சரியான முறையில் உழவுத் தொழிலில் பயிற்சியளித்தல் ;

(இ) நன்முறையில் நடந்துகொள்ளும் கைதிகளுக்கு நம்பிக்கையின் பேரில் அவர்களுக்கு ஓரளவு உரிமை அளித்தல் ;

(ஈ) கைதிகள் குறைந்த அளவு காவலிலுள்ள சிறைகளில் அடைத்து வைக்கப்படவேண்டும் ; சிறைகளில் அவர்களை நன்முறையில் நடத்த வேண்டும் ; அவர்கள் மீதான கட்டுப்பாடுகள் தவிர்க்கப்பட வேண்டும் என்பன போன்ற கோட்பாடுகளைச் செயலுக்குக் கொண்டுவருதல்.

சிங்காநல்லூரிலுள்ள திறந்தவெளிச் சிறையில் சிறைக் கைதிகளுக்கு நவீன வேளாண் முறைகளில் பயிற்சியளிப்பதற்காக, உதவி வேளாண்மை அலுவலர் ஒருவர் உள்ளார்.

4. கைதிகளின் வகைப்பாடும், சிறப்புரிமைகளும் :

சிறைகளில் உள்ள கைதிகளுக்காக 'எ', 'பி', என்ற இரு பிரிவுகள் மட்டுமே உள்ளன. காவலில் வைக்கப்படுவதற்கு விசாரணையிலுள்ள கைதிகளுக்கு சிறப்பு வகுப்பு, நீதிமன்றத்தால் அளிக்கப்படுகிறது. ஒரு கைதியின் சமூகத் தகுதி, கல்வி, வாழ்க்கைத்தரம், நடத்தை, முன்வரலாறு, சொந்தமாக வைத்துள்ள சொத்து விவரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அக்கைதிக்கு 'எ' வகுப்பு அரசால் வழங்கப்படுகிறது, சமூகத் தகுதி, கல்வி, பழக்க வழக்கம் ஆகியவற்றால் உயர் வாழ்க்கை முறையில் பழக்கப்பட்டிருக்கும் சிறைக்கைதிகள் 'எ' வகுப்புப் பெறத் தகுதியுடையவராவர். முற்றிலும் நாகரீகமற்ற முறையில் அல்லது, நன்னடத்தையற்ற முறையில் நடந்து கொண்ட குற்றத்தை செய்ததற்காக தண்டிக்கப்பட்ட எவருக்கும் 'எ' வகுப்பு அளிக்கப்பட மாட்டாது. சமுதாயத்திற்கு எதிராகக் குற்றங்கள் புரிந்த கைதிகளும், சிறையில் 'எ' வகுப்புப் பெறத் தகுதியுடையவரல்லர். 'எ' வகுப்பைச் சேராத இதர சிறைக் கைதிகள் 'பி' வகுப்பைச் சேர்ந்தவர்களாவர்.

5. (அ) (1) உணவு—சாதாரண உணவு முறை :

'எ' வகுப்புச் சிறைக் கைதிகளுக்கு அளிக்கப்படும் உணவு பின்வரும் நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது :—

(1) சைவ உணவருந்தும் வேலை செய்யும் கைதிகள் ;
(2) சைவ உணவருந்தும் வேலை செய்யாக் கைதிகள் ;
(3) அசைவ உணவருந்தும் வேலை செய்யும் கைதிகள் ;
(4) அசைவ உணவருந்தும் வேலை செய்யாக் கைதிகள்.

'எ' வகுப்புக் கைதிகள் தங்களுடைய சொந்தச் செலவில் பழங்களையும், பிஸ்கட்டு, கோகோ, ஹார்லிக்ஸ் போன்ற உணவுப் பொருட்களையும் வாங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். 'பி' வகுப்புச் சிறைக் கைதிகளுக்கு வரையறுத்த அளவிற்கு சைவ உணவு மட்டுமே வழங்கப்படுகிறது. மருத்துவ அலுவலர், கைதிகளுக்கு மருத்துவக் காரணங்களுக்காக, பால், இறைச்சி, முட்டை, ரொட்டி, வெண்ணெய் மற்றும் பழங்கள் ஆகியவற்றைக் கொடுக்க அனுமதி வழங்கலாம்.

(2) திருத்தியமைக்கப்பட்ட, மேம்படுத்தப்பட்ட உணவு :

தமிழ்நாடு சிறை சீர்திருத்தக் குழு பரிந்துரைத்ததின் பேரிலும், ஏழாவது நிதிக் குழுவின் பரிந்துரையின் பேரிலும் மத்திய அரசால் அளிக்கப்பட்ட பண உதவியைக் கொண்டும் 1982 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் திருத்தப்பட்ட, மேம்படுத்தப்பட்ட, உணவு முறை, அனைத்து மத்திய சிறைகள், மாநில மகளிர் சிறை, வேலூர், தனிக் கிளைச் சிறைகள் மற்றும் திறந்தவெளிச் சிறைகளில் அடைக்கப்படும் அனைத்து 'பி' வகுப்பு தண்டனை பெற்ற கைதிகளுக்காகவும் மற்றும் சாதாரண காவல் மற்றும் விசாரணையிலுள்ள கைதிகளுக்காகவும் அறிமுகப்படுத்தப்பட்டது, இப்புதிய மேம்படுத்தப்பட்ட, திருத்தப்பட்ட உணவு முறையின் கீழ் புளிச் சாதம், தேங்காய்ச் சாதம் மற்றும் தயிர் சாதம் போன்ற பல்வேறு உணவுகள் பொருத்தமான கூட்டுக் கறியுடன் வழங்கப்படுகின்றன. இவ்வுணவை மேலும் சத்து கொண்டதாக மாற்றவும், சிறைக் கைதிகள் விரும்பும் வகையில் செய்யவும் 1984 செப்டம்பரில் இவ்வுணவு வகையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. இப்புதிய திருத்தப்பட்ட, மேம்படுத்தப்பட்ட உணவுமுறைக்கு முன்பிருந்த உணவு முறையின் கீழ் வழங்கப்பட்டு வந்த சோளம் போன்ற தானியங்கள் முற்றிலுமாக நீக்கப்பட்டு, அதற்குப் பதில் மில் அரிசி வழங்கப்பட்டு வருகிறது. கைக்குத்தல் அரிசியினால் தயாரிக்கப்பட்ட உணவை சிறைக் கைதிகள் விரும்பாததால், அரசு ஜூன் 1986-ல் இம்மாநில சிறைகளில் உள்ள சிறைக் கைதிகளுக்கு வழங்கப்படும் கைக்குத்தல் அரிசிக்குப் பதில் மில் அரிசி வழங்க ஆணை பிறப்பித்துள்ளது.



(3) உணவுக்கான செலவு :

(அ) பல்வேறு வகைச் சிறைக் கைதிகளுக்கு நாளொன்றுக்கு ஒருவருக்கு உணவுக்காக ஆகும் தோராயமான செலவு குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

(1) 'எ' வகுப்பு சிறைக் கைதிகள் :

| | ரூ. பை. |
|---|---|
| சைவ உணவருந்தும் வேலை செய்யும் சிறைக்கைதி ஒருவருக்கு .. .. .. .. | 11.87 |
| சைவ உணவருந்தும் வேலை செய்யா சிறைக்கைதி ஒருவருக்கு .. .. .. .. | 11.02 |
| அசைவ உணவருந்தும் வேலை செய்யும் சிறைக் கைதி ஒருவருக்கு .. .. .. .. | 11.23 |
| அசைவ உணவருந்தும் வேலை செய்யா சிறைக் கைதி ஒருவருக்கு .. .. .. .. | 9.35 |

(2) 'பி' வகுப்புச் சிறைக் கைதிகள், சாதாரண காவலில் வைக்கப்பட்டவர்கள், விசாரணையிலுள்ள சிறைக் கைதிகள் ஆகியோருக்கு திருத்தியமைக்கப்பட்ட, மேம்படுத்தப்பட்ட உணவு வகைகள் வழங்குவதற்கான செலவு வருமாறு :—

| (1) | அரிசி உணவு. (2) ரூ. பை. | கோதுமை உணவு. (3) ரூ. பை. |
|---|---|---|
| வேலை செய்வோர் மற்றும் வேலை செய்யாதோர் .. .. | 5.65 | 5.44 |

(4) சிறப்புணவு :

பொங்கல், சுதந்திர தினம் ஆகிய நாட்களில் சிறைக் கைதிகள் ஒவ்வொருவருக்கும் ரூ. 2 கூடுதல் செலவில் சிறப்புணவு வழங்கப்படுகிறது.

(ஆ) உடையும், படுக்கையும் :

'எ' வகுப்புச் சிறைக் கைதிகள் சொந்தப் படுக்கையைப் பயன்படுத்தவும், வேலை நேரத்தைத் தவிர, மற்ற நேரங்களில் சொந்த உடையைப் பயன்படுத்தவும் அனுமதிக்கப்படுகிறார்கள். வேலை நேரத்தில் அவர்கள் சிறைச்சாலை உடையில் இருக்க வேண்டும். 'எ' வகுப்புச் சிறைக் கைதிகள் அவர்களின் உறவினர்களைக் காணும்போது தங்கள் சொந்த உடைகளை அணியலாம். 'பி' வகுப்புச் சிறைக் கைதிகள் எல்லா நேரங்களிலும் சிறைச்சாலை உடைகளையே அணிய வேண்டும்.

(இ) சோப்பு முதலியன :

எண்ணெய் தேய்த்துக் கொள்வதற்காக சிறைக் கைதி ஒவ்வொருவருக்கும் திங்களுக்கொருமுறை 30 கிராம் எண்ணெய் வழங்கப்படுகிறது. மேலும் அவர்களுக்கு சிகைக்காய்த்தூளும், சலவை சோப்பும் வழங்கப்படுகிறது. கோயம்புத்தூர் மத்திய சிறையிலுள்ள நூற்பாலையில் வேலை செய்யும் சிறைக் கைதிகளுக்குக் கூடுதல் எண்ணெய் வழங்கப்படுகிறது. நன்னடத்தை உடைய அனைத்து வகுப்புச் சிறைக் கைதிகளும் தங்களுடைய நண்பர்கள் அல்லது உறவினர்களிடமிருந்து இரு வாரங்களுக்குத் தேவையான சோப்பு, எண்ணெய், பற்பொடி ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள்.

(ஈ) நேர்க்காணலும், கடிதங்களும் :

'எ' வகுப்பு சிறைக் கைதிகள் வாரத்திற்கு ஒருமுறை கடிதம் எழுதுவதற்கும், பெறுவதற்கும், இரு வாரங்களுக்கு ஒரு முறை ஒரு சமயத்தில் மூவருடன் அரை மணி நேரம் கலந்துரையாடவும் அனுமதிக்கப்படுகிறார்கள். 'பி' வகுப்பு சிறைக் கைதிகள் மாதத்திற்கு இரு கடிதங்கள் எழுதுவதற்கும், பெறுவதற்கும், மேலும் இரு வாரங்களுக்கு ஒருமுறை ஒரு சமயத்தில் மூவருடன் அரை மணி நேரம் கலந்துரையாடவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

(உ) செய்தித் தாள்களும், குறித்த கால வெளியீடுகளும் :—

அரசுச் செலவில் 'பி' வகுப்புச் சிறைக் கைதிகளுக்குக் கீழ்க்கண்ட நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன :—

(1) தினமணி ;
(2) அண்ணா ;
(3) தினத்தந்தி ;
(4) தினமலர் ;
(5) இந்து.

'எ' வகுப்புச் சிறைக்கைதிகள் தங்கள் சொந்தச் செலவில் அரசு ஏற்பளித்த செய்தித் தாள்களை வாங்கிக்கொள்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். அனைத்து வகுப்புச் சிறைக் கைதிகளும் தங்கள் சொந்தச் செலவில் அரசு ஏற்பளித்த பத்திரிகைகளை வாங்கிக் கொள்ளவும் அனுமதிக்கப்படுகின்றனர். இது தவிர, சிறைக் கைதிகளின் பயனுக்காக நல்ல தரமான புத்தகங்கள் சிறை நூலகத்தில் வைக்கப்படுகின்றன. உள்ளூர் நூலக ஆணைக் குழுவிடமிருந்தும், புத்தகங்கள் பெறப்பட்டு சிறைக் கைதிகளுக்கு வழங்கப்படுகின்றன. சிறைக் கண்காணிப்பாளர்கள் தேவையெனக் கருதினால், பள்ளிக் கல்வி இயக்குநரைக் கலந்தாலோசித்துத் தயாரிக்கப்பட்ட பயனுள்ள புத்தகங்களின் பட்டியலிலுள்ள புத்தகங்களை வாங்குவதற்கு இயலும் வகையில் அப்பட்டியல் சிறைக் கண்காணிப்பாளர்களுக்கு அனுப்பப்படுகிறது.



(ஊ) இதர சலுகைகள்:

'எ' வகுப்புச் சிறைக் கைதிகள் மேசை, நாற்காலி, கொசுவலை ஆகியவற்றைப் பயன்படுத்தவும், சமையலுக்கும், அருந்துவதற்கும், தேவைப்படும் அவர்களது சொந்த பாத்திரங்கள், புகையிலை ஆகியவை போன்ற பிற வசதிகளைப் பயன்படுத்தவும் அனுமதிக்கப்படுகிறார்கள். தண்டனைச் சிறைக் கைதிகள் அவர்களுடைய நன்னடத்தையைப் பொறுத்தும், அவர்கள் அனுபவித்துள்ள தண்டனைக் காலத்தைக் கணக்கிட்டும், இரவுக் காவற்காரர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் காவலர்கள் என நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவர் ஆவர். சிறைக் கைதிகளின் தேவையை நிறைவு செய்வதற்காக அனைத்து மத்திய சிறைகளிலும், புதுக்கோட்டையிலுள்ள பார்ஸ்டல் பள்ளியிலும் முடிவெட்டுபவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். சிறை சீர்திருத்தம் குறித்த அனைத்திந்திய குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் நவீன காலத்திற்கேற்ப இரு துண்டுகளும், இரு சோடி உடைகளும், வழங்குவதற்குப் பதிலாக இரு துண்டுகளும், மூன்று சோடி உடைகளும், மூன்று சோடி உள்ளாடைகளும் (பாவாடை/சோளி, கச்சை) பெண் கைதிகளுக்கு அளிக்கப்பட வேண்டுமென அரசு கட்டளையிட்டுள்ளது.

பாலூட்டும் பெண் கைதிகளுக்கு $\frac{1}{2}$ லிட்டர் பால் அளிக்கப்பட வேண்டுமென்றும், பெண் கைதிகளுடன் இருக்கும் ஓராண்டுக்கும் குறைவான குழந்தைகளுக்கு மருத்துவ அதிகாரியின் பரிந்துரையின் பேரில் 'கிளாஸ்க்கோ' அல்லது 'அமுல்' போன்ற குழந்தை உணவு அளிக்கப்பட வேண்டுமென்றும் அரசு கட்டளையிட்டுள்ளது.

(எ) பொழுதுபோக்கு வசதிகள்:

ஞாயிற்றுக் கிழமைகள் மற்றும் சிறை விடுமுறை நாட்களில் மத்தியச் சிறைகளிலுள்ள எல்லாச் சிறைக் கைதிகளும், கைப்பந்து, கபடி, பூப்பந்து ஆகிய விளையாட்டுக்களை விளையாடவும், வேலூரிலுள்ள மாநில மகளிர் சிறையின் பெண் சிறைக் கைதிகள் வளைபந்து விளையாடவும் அனுமதிக்கப்படுகின்றனர். ஆழ்நிலை தியானமுறை, அனைத்து மத்திய சிறைச் சாலைகளிலும், வேலூர் மாநில மகளிர் சிறையிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும், மகரிஷி நிறுவனம் மூலம் விரும்பும் சிறைக் கைதிகளுக்கு கற்பிக்கப்படுகிறது. சென்னையிலுள்ள மத்திய சிறை, சிறைக் கைதிகளுக்கு, சென்னை யோகாசன ஆலயம் மூலம் யோகாசன வகுப்புகள் நடத்த அரசு அனுமதித்துள்ளது.

**6. சிறைக் கைதிகளுக்கான செய் தொழிலும், சிறைகளில் தொழிற்சாலைகளும்:**

கடுங்காவல் தண்டனை பெற்ற சிறைக் கைதிகள் சிறையில் பலவித வேலைகளில் அமர்த்தப்படுகிறார்கள். சிறைக் கைதிகள் விடுதலையடைந்த பின்பு அவர்களுக்குப் புது வாழ்வு கிடைக்க வகை செய்வதே அதன் நோக்கமாகும். எனவே, பயனில்லா வேலை மற்றும் உற்பத்தியை நோக்கமாகக் கொண்டிராத வேலைகள் தவிர்க்கப்படுகின்றன. சிறை வேலை, கடின உழைப்பு, நடுத்தர உழைப்பு, எளிய உழைப்பு என்று மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மருத்துவ அலுவலரின் ஆலோசனையின்படி சிறைக் கைதிக்கு உரிய வேலை கொடுக்கப்படுகிறது. சிறைக் கைதிகள் விடுதலைக்குப் பின் அவர்களுக்கு உதவிடும் வகையில் தச்சு வேலை, தையல் வேலை, நெசவு வேலை, சாயம் தோய்த்தல், கருமார் வேலை, தோல் பொருட்கள் செய்யும் பணி, புத்தகம் கட்டுதல், காகிதம் செய்தல், சோப்பு செய்தல் மற்றும் பினாயில் செய்தல் ஆகிய தொழில்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. சிறைக் கைதிகள் தங்கள் விடுதலைக்குப்பின் தங்களைச் சொந்தத் தொழிலில் ஈடுபடுத்திக் கொள்ளும் வகையில், நவீன வேளாண்மை முறைகள், பால் பண்ணை ஆகிய தொழில்களிலும் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். கோவை மத்திய சிறையில் நெசவுப் பிரிவு மற்றும் சாயப் பிரிவு அடங்கிய துணி ஆலை ஒன்றுள்ளது. மத்திய சிறைகள், வேலூரிலுள்ள மாநில மகளிர் சிறை, புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப் பள்ளி, புழலிலுள்ள ஆண்கள் பிற்காப்பு இல்லம் ஆகியவை ஒவ்வொன்றிலுமுள்ள தொழில்களின்|வாழ்க்கைத் தொழில்களின் பட்டியல், இணைப்பு V–ல் குறிக்கப்பட்டுள்ளது.

**7. எளிய சிறு தொழில்கள்:**

தமிழ்நாடு சிறைச் சீர்திருத்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், எட்டு மத்திய சிறைகளிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும் உள்ள சிறைக் கைதிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்காக அரசு கீழ்க்காணும் எளிய சிறு தொழில்களைத் தொடங்கியுள்ளது:—

(1) செங்கல் கட்டுமானத் தொழில்.

(2) குழாய்களைப் பழுது பார்த்து இணைத்தல்.

(3) எளிய மின் இணைப்புப் பயிற்சி.

(4) வண்ணம் பூசுதல் (பெயர்ப் பலகை எழுதுதல் உட்பட).

சிறைகளில் தொடங்கப்பட்டுள்ள எளிய சிறு தொழில்களைக் காட்டும் பட்டியல் இணைப்பு VI-ல் கொடுக்கப்பட்டுள்ளது.





மேற்கண்ட தொழில்களில், பயிற்சி பெற்ற சிறைக் கைதிகள் குறைந்த முதலீட்டில் சொந்தமாகத் தொழில் நடத்தி தங்கள் பிழைப்புக்கேற்ற வருமானம் தேடிக் கொள்ளலாம். மேலும், வேலூர் மாநில மகளிர் சிறையிலுள்ள 20 பெண் கைதிகளுக்கு ஒவ்வோராண்டும் வேலூர் ''நேரு யுவக்கேந்திரா'' பயிற்சியாசிரியர்கள் மூலம் தையல் தொழிலில் பயிற்சியளிக்கப்பட வேண்டும் என்றும், தையல் தொழிலில் தேர்ச்சி பெற்றவர்கள் அரசினர் தொழில் நுட்ப நிறுவனத் தேர்வுக்கு அனுப்பப்பட வேண்டுமென்றும் அரசு கட்டளையிட்டுள்ளது.

**8. சிறைக் கைதி அலுவலர்கள்:**

சிறைக் கைதிகள், கீழ்க்காணும் விதங்களில் பணிக்கொடை பெறத் தகுதியுள்ளவர்களாவார்கள்.—

| | | பணிக்கொடையின் வீதம் (ஒரு திங்களுக்கு) ரூ. பை |
|---|---|---|
| (1) | சிறைக் கைதி இரவுக் காவலர்கள் .. | 0.50 |
| (2) | சிறைக் கைதி மேற்பார்வையாளர்கள் .. | 1.00 |
| (3) | சிறைக் கைதி காவலர்கள் .. .. | 2.00 |

**9. சிறைக் கைதிகளுக்கான ஊதியம் ஈட்டும் திட்டம்:**

அனைத்து மத்திய சிறைகளிலும், வேலூர் மாநில மகளிர் சிறையிலும், சிறைக் கைதிகள் ஊதியம் ஈட்டும் திட்டம் தற்போது செயலிலுள்ளது. இத் திட்டத்தின் கீழ், சிறைக் கைதி ஒருவருக்கு நாளொன்றுக்கு வழங்கப்படக்கூடிய ஊதிய விதங்கள் பின் வருமாறு.—

| | | ரூ. பை. |
|---|---|---|
| (1) | தேர்ச்சி பெற்றத் தொழிலாளர்கள் .. | 1.00 |
| (2) | ஓரளவு தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் | 0.50 |
| (3) | தேர்ச்சி பெறாத தொழிலாளர்கள் .. | 0.25 |

**10. மருந்து, துப்புரவு வசதிகள்:**

சிறைகளில் போதுமான மருத்துவ, துப்புரவு வசதிகள் உள்ளன. ஒவ்வொரு மத்திய சிறையிலும், வேலூர் மாநில மகளிர் சிறையிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும் மருத்துவமனை உள்ளது. அதில் பகுதி நேர மருத்துவ அலுவலர் ஒருவரும் (அம்மாவட்டத்தில் மாவட்ட மருத்துவ அதிகாரி

அல்லது மாவட்ட மருத்துவ அலுவலர் வேறு ஊரில் இருந்தால், உள்ளூரிலுள்ள அரசு மருத்துவமனை அல்லது மருத்துவக் கல்லூரியிலுள்ள சிவில் மருத்துவரின் பதவி நிலையிலுள்ள மருத்துவ அலுவலர்), ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவி மருத்துவரும், ஒரு செவிலியரும், ஒன்று அல்லது இரண்டு மருந்தாக்குநரும், 2 அல்லது 3 செவிலியர் உதவியாளர்களும் உள்ளனர். கண் மருத்துவர் மற்றும் மருத்துவ அதிகாரியின் பரிந்துரையின் பேரில் அரசு செலவில், தேவைப்படுகின்ற கைதி களுக்கு மூக்குக் கண்ணாடியும் வழங்கப்படுகிறது. மேலும், சிறையைப் பார்வையிடும் பல் மருத்துவரால் கைதிகளுக்குப் பல் நோய் சிகிச்சையும் அளிக்கப்படுகிறது. வேலூர் மத்தியச் சிறையில் தொழுநோய் கைதிகள் தனியாகப் பிரிக்கப்பட்டு, தனிக் கூடங்களில் வைக்கப்படுகின்றனர். இவர்களைக் கவனித் துக் கொள்வதற்காக இயற்கை முறை மருத்துவர் அமர்த்தப் பட்டுள்ளார். மன நிலை சரியில்லாத கைதிகள், மன நோய்க் குற்றவாளிகள் ஆகியோர் அரசினர் தலைமையிட மருத்துவ மனை உளநோய் மருத்துவர்கள் பரிந்துரையின் பேரில் சென்னை அரசு மனநலக் காப்பகத்திற்கு அனுப்பப்படுகின்றனர். அகில இந்தியச் சிறை சீர்திருத்தக் குழுப் பரிந்துரையின் அடிப்படை யில், கைதியின் உடல் நலம் மிகவும் கடுமையாகப் பாதிக்கும் போதும், ஆபத்தான நிலையில் இருக்கும் போதும், மருத்துவ மனையில் அவருடைய நண்பர்களையும், உறவினர்களையும் கைதியைத் தினந்தோறும் பார்க்க அனுமதித்து அரசு உத்தர விட்டுள்ளது.

அனைத்து மத்திய சிறைகளிலும், வேலூர் மாநில மகளிர் சிறையிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும், தனிக் கிளைச் சிறைகளிலும் மற்றும் அநேகமாக எல்லா கிளைச் சிறைகளிலும் தண்ணீர் வசதியுடன் கூடிய நீரடிக் கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம் மாநிலத்திலுள்ள எல்லா சிறைகளி லும் இம்மாதிரியான வசதியை ஏற்படுத்துவதே அரசின் நோக்க மாகும். எஞ்சியுள்ள கிளைச் சிறைகளிலும் இத்தகைய வசதி களைச் செய்து தரும் பணி, படிப்படியாக நிறைவேற்றப்படும் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும்.

### 11. கைதிகளுக்குக் கல்வி வசதி அளித்தல்:

கைதிகளுக்குச் சிறையில் கல்வி வசதி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மத்தியச் சிறையிலும் தகுதி பெற்ற ஆசிரியர்களைக் கொண்ட தொடக்கப்பள்ளி உள்ளது. முதியோர் கல்வி கற் பிக்க, சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு சிறைகளில் புதிய முறையில் கைதிகளுக்குக் கல்வி புகட்டப்படு கின்றது. சிறைக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, சிறைக் கண்காணிப்பாளர்கள், சிறந்த கல்வி நிறுவனங்களி லிருந்து ஆசிரியர்களையும், விரிவுரையாளர்களையும் வர வழைத்துச் சிறை விடுமுறை நாட்களிலும், ஞாயிற்றுக் கிழமை களிலும் விரிவுரையாற்ற ஏற்பாடு செய்கிறார்கள். அஞ்சல் வழிக்





கல்வி மூலம் முதுகலைப் பட்டப் படிப்புத் தேர்வும், பி.ஜி.எல். பி.எல்., பி.எட்., எம்.எட்., போன்ற தொழில் கல்வித் தேர்வு களையும் எழுத கைதிகள் அனுமதிக்கப்படுகிறார்கள். இது தொடர்பாக புத்தகங்களை வாங்கும் செலவு, தேர்வுக் கட்ட ணம் குறித்த செலவு, இதர இடைநிகழ் செலவு ஆகிய செலவுகள் முழுவதையும் அரசு ஏற்றுக் கொள்கிறது. கைதிகள் தேர்வில் தேர்ச்சி பெறாவிட்டால், மறு முறையும் அரசு செலவில் தேர்வு எழுதலாம். இது போன்று மொத்தம் மூன்று தடவை தேர்வுக் குச் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். கைதிகள் தேர்வு எழுதச் செல்லும்போது அவர்கள் சொந்த உடையிலேயே தேர்வு எழுத அனுமதிக்கப்படுகிறார்கள். அதே போன்று அவர்களைக் காவல் காத்து அழைத்துச் செல்லும் வழித்துறைக் காவலர்களும், சாதா ரண உடை அணிந்து செல்கின்றனர்.

நீதி அல்லது மதம் சம்பந்தமாக போதனைகள் என்ற பெய ரால் மதமாற்றம் செய்தல் கூடாது என்ற நிபந்தனையுடன் சிறையில், மதம், நீதிநெறி வகையான போதனைகளும் விருப்பப் படும் கைதிகளுக்கு அனுமதிக்கப்படுகின்றன.

### 12. இளைஞர் சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை:

இப் பள்ளியில், 18 வயதிலிருந்து 23 வயதுவரை உள்ள இளங் குற்றவாளிகள் சேர்க்கப்படுகின்றனர். இப்பள்ளி மாண வர்களுக்குக் கீழே கொடுக்கப்பட்டுள்ள தொழில்களில் அல்லது வாழ்க்கைத் தொழில் கல்வியில் பயிற்சி அளிக்கப்படுகிறது:—

(1) தச்சு வேலை.
(2) கருமார் வேலை.
(3) புத்தகம் கட்டுதல்.
(4) தையல் வேலை.
(5) வேளாண்மை.
(6) கட்டுமான வேலை.
(7) சலவைத் தொழில்.
(8) பாண்டு இசைக் கருவி பயிற்சி.
(9) சமையல் வேலை போன்ற வீட்டு வேலைகள்.

இப்பள்ளியில் உள்ளவர்கள் அங்கிருந்து விடுதலை செய்யப் பட்ட பின்னர் வேலை தேடிக் கொள்ள இயலும் பொருட்டு, அவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இங்குள்ள துயிற்கூடம் ஒன்று இளங் குற்றவாளிகளுக்கான இடமாக மாற் றப்பட்டு, அங்கு 24—25 வயதுத் தொகுதியைச் சேர்ந்த இளங் குற்றவாளிகள் வைக்கப்படுகின்றனர். இவர்கள் இங்கு 25 வயது வரை வைக்கப்படுகின்றனர். புதுக்கோட்டை இளைஞர் சீர்

திருத்தப்பள்ளியிலுள்ள துயிற்கூடம், 1894 ஆம் ஆண்டு சிறைகள் சட்டத்தின் கீழ் ''சிறையாக'' அறிவிக்கப்பட்டுள்ளது. சீர்திருத்தப் பள்ளியிலிருந்து விடுதலை செய்யப்பட்டவர்களின் புது வாழ்வுக்காக, இயந்திரங்கள், பசு அல்லது எருமை வாங்க நிதி உதவி வழங்கப்படுகிறது. இவ்வகையாக, அவர்களுக்கு அளிக்கப்படும் நிதி உதவி அவர்களிடமிருந்து எளிய தவணையில் வசூலிக்கப்படுகிறது.

தமிழ்நாடு சிறைச் சீர்திருத்த கமிஷன் பரிந்துரையின் அடிப்படையில், கைதிகள், பணியாளர் ஒருவரின் பொறுப்பில் 15 நாட்களுக்குத் திறந்த வெளியில் ஒரு கூடாரத்தின் கீழ்த் தங்கியிருக்க இயலும் வகையில், இளைஞர் சீர்திருத்தப் பள்ளியைச் சேர்ந்த 25 பேர்களுக்கு ஆண்டு முகாமிற்கு ஏற்பாடு செய்யும் திட்டத்திற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது.

**13. ஆடவர் பிற்காப்பு இல்லம், புழல்:**

சீர்திருத்தப் பள்ளிகளிலிருந்தும், சீர்திருத்தப் பள்ளி சாராத பிற நிறுவனங்களிலிருந்தும் வெளி வரும் அத்தகையோர் ஆதாயம் தரத் தக்க சொந்தத் தொழில் புரிந்து, நல்லமுறையில் வாழ்வை அமைத்துக் கொள்ள இயலும் வகையில், இரண்டு ஆண்டுகளுக்குத் தச்சு வேலை, உலோக வேலை, தையல் வேலை ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதே இந்த ஆடவர் பிற்காப்பு இல்லத்தின் நோக்கமாகும். பயிற்சிக் காலத்தில் இவர்களுக்கு இலவசமாக உணவு, உடை, இருப்பிடம் அளிக்கப்படுவதோடு, முதலாண்டில் நாள் ஒன்றுக்கு ரூ. 1.50 வீதமும், இரண்டாம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு ரூ. 2.00 வீதமும் பயிற்சி உதவித் தொகை வழங்கப்படுகிறது. மத்திய சிறைகளில் உள்ள 'பி' வகுப்புக் கைதிகள், சாதாரண காவல் கைதிகள், விசாரணைக் கைதிகள் ஆகியோருக்கு வழங்கப்படும் திருத்தியமைக்கப்பட்ட மேம்பட்ட உணவு, இப்பிற்காப்பு இல்லத்தில் உள்ளவர்களுக்கும் வழங்கப்படுகிறது.

**14. சிறைப் பார்வையாளர்கள்:**

மாஜிஸ்ட்ரேட்டுகளையும், நீதிபதிகளையும் மற்றும் மருத்துவம், நல்வாழ்வு, தொழில்கள், தீயணைப்புப்பணிகள், ஏனைய துறைகளிலிருந்து நியமிக்கப்படும் அரசு சார்புள்ள பார்வையாளர்களைத் தவிர, இத்துறையில் நாட்டமுள்ள பொது மக்கள், முக்கியமாக, சமூகப் பணியாளர்கள், உளநோய் மருத்துவ வல்லுநர்கள், உள நூல் வல்லுநர்கள் மற்றும் சமூகவியலாளர்கள் ஆகியோர் ஒவ்வொரு சிறையிலும் அரசு சார்பற்ற சிறைப் பார்வையாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். கைதிகளை நடத்தும் விதம், சிறைகளை நிர்வகிப்பது தொடர்பான சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறை விதிகள் ஆகியன சிறைகளில் உரியவாறு செயற்படுத்தப்படுகின்றனவா என்று தெரிந்து



கொள்ளவும், சிறைகளில் பல பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிடுவதும், கைதிகள் எவரேனும் அவர்களிடம் புகார் செய்தால் அதனைக் கேட்டு விசாரணை செய்வதும் பார்வையாளர்களின் கடமைகளாகும். சிறைப் பார்வையாளரின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாகும்.

**15. சிறைவாசிகளை விடுப்பில் விடுவித்தல்:**

கைதிகள் தங்களது குடும்பத் தேவைகளைக் கவனிப்பதற்காக, சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்பு அலுவலரின் அறிக்கையைப் பெற்ற பிறகு அவர்களுக்கு அரசால் விடுப்பு அளிக்கப்படுகிறது. அதிகார வரம்புடைய சம்பந்தப்பட்ட நன்னடத்தை அலுவலர், கைதிகளின் முதல் விடுப்புக் கோரிக்கை சம்பந்தப்பட்ட எல்லா இனங்களிலும், உள்ளூர்க் காவல்துறை உதவி ஆய்வாளரைக் கலந்தாலோசித்து தனது அறிக்கையை அரசுக்கு அனுப்புகிறார். அதன் பிறகு அனுமதிக்கப்படும் விடுப்பிற்கான கோரிக்கைகளின் மீதான தனது அறிக்கையை, நன்னடத்தை அலுவலர் உள்ளூர்க் காவல் துறை உதவி ஆய்வாளரைக் கலந்து ஆலோசிக்காமலேயே அரசுக்கு அனுப்புகிறார். ஐந்து ஆண்டு சிறைத் தண்டனை அனுபவித்துள்ளவரும், இதுவரையில் விடுப்பில் செல்லாதவருமான கைதிகளுக்கு முதலில் ஒரு மாத விடுப்பு அளிக்கப்படுகிறது. அதன் பிறகு, கடைசியாக விடுப்பில் சென்று திரும்பிய நாளிலிருந்து இரண்டாண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்த பிறகு மீண்டும் விடுப்பு அளிக்கப்படுகிறது. இன்னும் 3 ஆண்டுக் காலம் மட்டுமே சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டிய கைதிகளுக்கு அவர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு இயலும் வண்ணம், ஒவ்வோர் ஆண்டுக்கும் ஒரு மாதம் என்ற வீதத்தில் அவர்களுக்கு விடுப்பு அளிக்கப்படுகிறது.

இவற்றோடு, கைதிகள் தங்களுடைய நெருங்கிய உறவினர்களான தந்தை/தாய்/கணவன்/மனைவி/சொந்த மகன்/சொந்த மகள்/சொந்த சகோதரி/சொந்த சகோதரன் மிகவும் ஆபத்தான நிலையில் நோய்வாய்ப்பட்டிருந்தாலோ அல்லது இறந்து போனாலோ அவர்களைச் சென்று பார்க்கவும், நெருங்கிய உறவினர்களான சொந்த மகன்/சொந்த மகள்/சொந்த சகோதரன்/சொந்த சகோதரி ஆகியோரின் திருமணத்தில் கலந்து கொள்வதற்காகவும், அவசர கால விடுப்பு அனுமதிக்கப்படுகிறது. இத்தகைய அவசர கால விடுப்பு ஓர் ஆண்டிற்கு 15 நாட்களுக்கு மேற்படக் கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு அளிக்கப்படுகிறது. இத்தகைய விடுப்புகள், ஒரு கைதிக்கு 4 முறைகளில் சிறையில் அக்கைதியின் நடத்தை நன்முறையில் இருந்தால் மட்டுமே வழங்கப்படுகிறது.

[1987 ஏப்ரல் 25

**16. தண்டனைக் குறைப்பு:**

கைதிகளின் நன்னடத்தை, வேலை செய்யும் ஆர்வம் ஆகிய
வற்றை வளர்க்கவும், ஊக்கமளிக்கவும் பலவிதமான தண்டனைக்
குறைப்புகள் கைதிகளுக்கு அனுமதிக்கப்படுகின்றன. கைதிகளின்
நன்னடத்தைக்காக ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் தண்டனை
குறைப்பும், அவர்கள் செய்யும் சிறந்த பணிக்காக ஒரு மாதத்
திற்கு இரண்டு நாட்கள் தண்டனைக் குறைப்பும் சாதாரண
வகை தண்டனைக் குறைப்புகளாக அளிக்கப்படுகின்றன.
சிறைப் பணிகளுக்காக ஞாயிறு அன்றும், ஏனைய சிறை விடு
முறை நாட்களிலும் சமையற்காரர்களாகவும், துப்புரவு செய்
வோராகவும் பணிபுரிய வேண்டிய கைதிகளுக்கு இவ்விதிகளின்
கீழ் அவர்கள் ஈட்டிய ஏனைய தண்டனைக் குறைப்போடு மூன்று
மாதத்திற்கு மூன்று நாட்கள் தண்டனைக் குறைப்பும் வழங்கப்
படுகிறது. தண்டனைக் கைதிகளாக இருந்து பின்னர் கைதிக்
காவலர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு மாதத்திற்கு எட்டு
நாட்கள் தண்டனைக் குறைப்பு வழங்கப்படுகிறது. சிறைகளில்
ஒழுங்கு அல்லது கட்டுப்பாட்டை பேணிவரும் கைதிகளுக்கு
சிறைக் கண்காணிப்பாளரால் சிறப்புத் தண்டனைக் குறைப்பாக
ஓர் ஆண்டிற்கு 30 நாட்களும், சிறந்த நற்பணிக்காக சிறப்புத்
தண்டனைக் குறைப்பாக சிறைத் துறை தலைமை இயக்குநரால்
ஓர் ஆண்டிற்கு 60 நாட்களும் அளிக்கப்படுகின்றன. கருத்தடை
அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் கைதிகளுக்கு உயரளவு
ஓராண்டுக்கால சிறப்புத் தண்டனைக் குறைப்பும், இரத்த
தானம் செய்யும் கைதிகளுக்கு ஒரு சமயத்தில் 15 நாட்கள்
தண்டனைக் குறைப்பும் அளிக்கப்படுகின்றன. மேற்கண்ட தண்
டனைக் குறைப்புகளைத் தவிர ஆயுள் தண்டனையடைந்த
மற்றும் மூன்றாண்டுகளுக்கு மேல் தண்டனையடைந்த கைதி
களை முன்னதாக விடுதலை செய்வது குறித்த ஆலோசனை
யைக் குழு பரிசீலனை செய்கிறது.

அந்தக் கைதியின் கடந்த கால நன்னடத்தை பற்றிய குறிப்பு
களையும், உள்ளூர் அதிகாரிகளின், அதாவது மாவட்ட ஆட்சித்
தலைவர், நன்னடத்தை அலுவலர், சிறைக் கண்காணிப்பாளர்
ஆகியோர் அளித்த அறிக்கையையும் பரிசீலித்து, அச்சிறை
கைதியை அவருக்கு அளிக்கப்பட்ட சிறைத் தண்டனைக் கால
அளவு முடிவடைவதற்கு முன்னரே விடுவிக்க அரசின் பரிசீலனைக்
காக இக்குழு தனது பரிந்துரையை அரசுக்கு அனுப்பி வைக்
கிறது.

சென்னை உயர்நீதிமன்றம் டபிள்யூ. பி. எண் 3430/82,
நாள் 2–11–1983-ல் ஆயுள் தண்டனையடைந்த கைதிகளை
முன் விடுதலை செய்வது குறித்து பரிசீலனை செய்வதற்காக
பின்பற்றத் தக்கதான சில வழி முறைகளைத் தனது தீர்ப்பில்
வெளியிட்டுள்ளது. மேற்காணும் கருத்துக்களின் அடிப்படை
யில், அரசு ஆயுள் தண்டனை அடைந்த கைதிகளை முன் விடு
தலை செய்வது குறித்து பரிசீலனை செய்வதற்காகப் பின்பற்றத்



1987 ஏப்ரல் 25]

தக்கதான வழி முறைகளை நிர்ணயித்து ஆணை பிறப்பித்துள்
ளது. இந்த ஆணையின்படி, ஒரு ஆயுள் தண்டனை அடைந்த
கைதி $10\frac{1}{2}$ ஆண்டுகள் தண்டனை அனுபவிக்க வேண்டும். $10\frac{1}{2}$
ஆண்டுகள் தண்டனை அனுபவித்த ஆயுள் தண்டனையடைந்த
கைதிகளின் நேர்வு மட்டுமே முன் விடுதலைக்காக 'ஆலோசனைக்
குழுவால் பரிசீலனை செய்யப்படுகின்றன. ஆலோசனைக் குழு
மற்றும் சிறைக் கண்காணிப்பாளருக்கான படிவங்களை அரசு
நிர்ணயித்ததுடன், நன்னடத்தை அலுவலர் மற்றும் மாவட்ட
ஆட்சித் தலைவர் ஆகியோரின் படிவங்களையும் மாற்றியமைத்
துள்ளது.

குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 433-ஏ பிரிவின்
ஆளுகைக்குட்பட்ட ஆயுள் தண்டனை பெற்ற கைதிகள் (அதாவது
18–12–1978 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ தண்டனை
யடைந்தவர்கள்) அவர்கள் 14 ஆண்டுக் காலம் தண்டனை
அனுபவித்த பின்பே ஆலோசனைக் குழுவால் முன் விடுதலைக்காக
பரிசீலனை செய்யப்படுகிறார்கள். இவ்வகையான நேர்வுகள்
18–12–1992-க்குப் பின்னர்தான் பரிசீலனைக்கு வரும்.

65 வயதுக்கு மேற்பட்ட ஆண் கைதிகளுக்கும், 55 வயதிற்கு
மேற்பட்ட பெண் கைதிகளுக்கும் முதல் முறையாகத் தண்டனை
மட்டும் அளிக்கப்பட்டிருந்து அவர்கள் ஈட்டிய தண்டனைக்
குறைப்பு உட்பட $2\frac{1}{2}$ ஆண்டுகள் அவர்கள் சிறைத் தண்டனை
அனுபவித்து இருந்தால் ''வயது மூப்புத் திட்டத்தின்'' கீழ்
அவர்களை விடுதலை செய்ய அவர்கள் ஆலோசனை குழுவால்
பரிசீலைன செய்யப்படுவதற்குத் தகுதி உடையவர்களாவார்கள்.
மாநிலச் சிறைகள் நடைமுறை நூல் விதிகளில் குறிப்பிட்டவாறு,
சிறை மருத்துவ அதிகாரி, 'சான்றிதழ் வழங்குவதன் பேரில்,
நோயுற்ற ஆயுள் தண்டனைக் கைதிகள் அவர்களது தண்டனைக்
காலம் முடிவடைவதற்கு முன்னரே விடுதலை செய்யப் பரிசீலனை
செய்யப்படுகிறது.

புதுக்கோட்டை சீர்திருத்தப்பள்ளியிலுள்ளோரைப் பொறுத்த
வரையில், தண்டனைக் காலம் முடியுமுன் விடுதலை செய்யும்
முறை செயலில் உள்ளது. ஆனால் இது குறித்துப் பின்பற்றப்
படுகிற நடைமுறை வேறாகும். இம்முறை ''நல்லிணக்கத்தின்
பேரில் விடுதலை செய்தல் அல்லது விடுவித்தல்'' என்று அழைக்கப்
படுகிறது. 1925 ஆம் ஆண்டு சீர்திருத்தப் பள்ளிகள் சட்டத்தின்
(தமிழ்நாடு சட்டம் 5/1926) 15 ஆம் பிரிவைச் சேர்ந்த (1)
உட்பிரிவின்படி, நல்லிணக்கத்தின் பேரில் விடுதலை செய்யக்
கருதப்பட்டுள்ளோரின் பெயர்களையும், அவர்கள் பெற்ற
வாழ்க்கைத் தொழில் பயிற்சி குறித்த விவரங்களையும், உரிய
விசாரணைகள் செய்து, அவற்றின் மூலம் பெற்ற தகவலை
பார்வையிடும் குழுவிடம் தாக்கல் செய்ய இயலும் வகையில்
அக்குழு கூடுவதற்கு 6 வாரங்களுக்கு முன்னர் வெளியூர்களா
யிருந்தால் அந்தந்த மாவட்டங்களிலுள்ள நன்னடத்தை அலு
வலர்களுக்கும், சென்னை மாநகரைப் பொறுத்த மட்டில்

[1987 ஏப்ரல் 25

தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளருக்கும், சீர்திருத்தப் பள்ளி கண்காணிப்பாளர் அனுப்பி வைக்க வேண்டும். நல் லிணக்கத்தின் பேரில் விடுதலை செய்வதற்காகப் பார்வையிடும் குழு பரிந்துரைத்துள்ள கைதிகள் பற்றி பரிசீலித்து பின்னர் சிறைத் துறைத் தலைமை இயக்குநர் ஆணை பிறப்பிக்கிறார்.

17. கைதிகளின் நலன் :

தற்போது கைதிகள் நல அலுவலர் பதவிகள் மொத்தம் 10 உள்ளன. அதாவது மத்திய சிறைகள் ஒவ்வொன்றிலும் ஒரு பதவி வீதம் எட்டு மத்திய சிறைகளில் எட்டு பதவிகளும், வேலூரில் மாநில மகளிர் சிறையில் ஒரு பதவியும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியில் ஒரு பதவியும் உள்ளன. இந்த நல அலுவலர், சிறையின் விதிமுறைகளுக்கேற்ப, கைதிகளுக்கு அவ்வப் போது வேண்டிய உதவிகளை அளித்தும் அவர்கள் உறவினர் களுடன் கடிதத் தொடர்பு கொள்ள உதவி செய்தும் வருகிறார். மேலும், தனிப்பட்ட முறையில் மேல்முறையீடு செய்ய வசதி இல்லாத கைதிகளுக்கு மேல்முறையீடு செய்யவும் உதவி செய் கிறார்.

பெண் கைதிகளின் குழந்தைகள் 6 வயதுக்குள் இருந்தால் அக் குழந்தைகள் தாயோடு, சிறையில் வைக்கப்படுகின்றனர். அக் குழந்தைகளுக்காக ஒரு குழந்தைகள் காப்பகமும், வேலூர் மாநில மகளிர் சிறையில் செயல்பட்டு வருகிறது. அவர்களைச் சரியான முறையில் வைத்துப் பராமரிக்க ஒருவரும் முன்வராவிட்டால் அக்குழந்தைகள் 6 வயது அடைந்தவுடன், சென்னை மாநகர சேர்ந்தவர்களாயிருந்தால் சென்னையிலுள்ள பால மந்திர் மருத்துவமனைக்கும், மாநிலத்திலுள்ள இதர பாகங்களைச் சேர்ந் தவர்களாயிருந்தால் மதுரை காந்தி கிராமத்திலுள்ள குழந்தை கள் இல்லத்திற்கும் அனுப்பப்படுகின்றனர்.

ஒவ்வொரு மத்திய சிறையிலும் கைதிகளின் பயனுக்காக பண்பாட்டுக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த பண் பாட்டுக் குழு சிறைக் கைதிகளின் நன்மைக்காக சிறைக்குள் குறிப் பிட்ட காலத்திற்கொருமுறை திரைப்படம் காட்டுகிறது. மேலும் வெளியில் உள்ளவர்களைக் கொண்டு, பலவகை கேளிக்கை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் ஏற்பாடு செய்கிறது.

மத்திய சிறைகள் அனைத்திலும் கைதிகளுக்காகச் சிற்றுண்டி விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. தங்கள் கணக்கில் பணம் வைத்திருக்கும் கைதிகளும், பணிக்கொடை ஈட்டும் கைதிகளும் இந்த சிற்றுண்டி விடுதி வசதியை பயன்படுத்த அனுமதிக்கப்படு கின்றனர். இந்தியக் குடியரசுத் தலைவரால், கருணை மனு நிராகரிக்கப்பட்டு, மரண தண்டனை நிறைவேற்றப்பட இருக்கும் கைதியின் நெருங்கிய உறவினர்களான தந்தை/தாய்/மனைவி/ கணவன்/மகன்/மகள்/சொந்த சகோதரன்/சொந்த சகோதரி

1987 ஏப்ரல் 25]



ஆகிய நெருங்கிய உறவினர்கள் 5 நபர்களுக்கு மேற்படாமல் அக் கைதி தூக்கிலிடப்படுவதற்கு முன் வந்து பார்த்து திரும்பு வதற்கு வசதியாக, தமிழ் நாட்டிலுள்ள எவ்விடத்திலிருந்தும் குறைந்த வழித்தடம் மூலம் குறைந்த பட்ச வகுப்பில் புகை வண்டி அல்லது சாலை வழிப்பயண போக்குவரத்துச் செலவு களை அனுமதிக்க, எல்லா மத்திய சிறைகள், புதுக்கோட்டையி லுள்ள சீர்திருத்தப் பள்ளி மற்றும் வேலூர் மாநில மகளிர் சிறை ஆகியவற்றின் கண்காணிப்பாளர்களுக்கு, அரசு அதிகாரம் அளித் துள்ளது.

18. கைதிகளுக்கு இலவச சட்ட உதவி :

விசாரணைக் கைதிகளுக்கும், தண்டனை அடைந்த கைதி களுக்கும், தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக் குழு இலவச சட்ட உதவி அளித்து வருகிறது. கைதிகளுக்குச் சட்ட உதவி அளிப்பதற்காக இக் குழு பணி வழக்குரைஞர்களை அனைத்து நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கிறது.

19. சிறைகளில் புகார்ப் பெட்டிகள் வைத்தல் :

அரசு பிறப்பித்துள்ள ஆணைகளின்படி எல்லா மத்திய சிறை களிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும், வேலூர் மாநில மகளிர் சிறையிலும் கைதிகள் தங்கள் குறைகளைத் தெரிவிக்க இயலும் வகையில் புகார் மனுக்களைத் தாக்கல் செய்ய முத்திரையிடப்பட்ட புகார் பெட்டிகள் கைதிகளுக்கு எளிதில் எட்டும் இடங்களில் வைக்கப்பட்டுள்ளன. கைதிகளுக்கு எழுது பொருட்கள் கொடுக்கப்படுகின்றன. புகார்/குறை மனுக்கள் போடப்பட்டுள்ள பெட்டிகள் ஒவ்வொரு மாதத்தில் முதல் பணி நாளில், சிறை அதிகாரிகளால், மாவட்ட செசன்ஸ் நீதிபதிகளின் முன்னிலையில் கொண்டு வரப்படுகின்றன; அவை ஒவ்வொன்றையும் அவர்கள் திறந்து அம் மனுக்களை ஆய்வு செய்து, சிறை அதிகாரிகள் அல்லது அரசு அல்லது சிறைத் துறைத் தலைமை இயக்குநர் நடவடிக்கை எடுக்க வேண்டிய வற்றின் பகுதி நகல்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்புவர். கைதிகள் கொடுக்கும் புகார்களின் மீது நடவடிக்கை எடுக்கப் படுகிறது.

சில மத்திய சிறைகளிலிருந்து சிறை அதிகாரிகள் புகார்ப் பெட்டிகளின் அடிப்பலகையினைக் கழற்றி, புகார் மனுக்களை எடுப்பதாக கைதிகளிடமிருந்து புகார் வந்ததையடுத்து, இதனைத் தவிர்ப்பதற்காக, முறைகேடு செய்ய இயலாவண்ணம் இரும்பினால் தயாரிக்கப்பட்ட புகார் பெட்டிகள் மேற்காணும் நிறுவனங்களில் தற்போது வைக்கப்பட்டுள்ளன.

[1987 ஏப்ரல் 25

ஒவ்வொரு சிறையில் இருக்கும் புகார்ப் பெட்டிகளின் எண்ணிக்கை வருமாறு :—

| தொடர் எண். | சிறையின் பெயர். | பெட்டிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | சென்னை மத்தியச் சிறை .. .. | 3 |
| 2 | வேலூர் மத்தியச் சிறை .. .. | 3 |
| 3 | கடலூர் மத்தியச் சிறை .. .. | 3 |
| 4 | திருச்சிராப்பள்ளி மத்தியச் சிறை .. | 3 |
| 5 | சேலம் மத்தியச் சிறை .. .. | 3 |
| 6 | கோயம்புத்தூர் மத்தியச் சிறை .. | 3 |
| 7 | மதுரை மத்தியச் சிறை .. .. | 3 |
| 8 | பாளையங்கோட்டை மத்தியச் சிறை | 3 |
| 9 | புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளி | 3 |
| 10 | மகளிருக்கான மாநிலச் சிறை, வேலூர். | 2 |

20. குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்புப் பணிகள்:

குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்புப் பணியானது குற்றவாளிகளின் சுற்றுப்புற சூழ்நிலையையும் அவர்கள் நடந்து கொள்ளும் விதம் பற்றியும், பிணையப் பத்திரத்தின் உரிய காலத்திற்கு முன்கூட்டியே நன்னடத்தை ஜாமீன் பேரில் பதன் பேரில் விடுதலையான குற்றவாளிகள், அளிப்பிலிருந்தும், சீர்திருத்தப் பள்ளியிலிருந்தும், பார்ஸ்டல் பள்ளி இல்லத்திலிருந்தும் விடுதலை செய்யப்பட்டவர்கள் ஒழுக்கக் கண்காணிப்பு குறித்தும் விசாரிப்பது, கண்காணிப்பது அவர்களைப் பற்றி ஆகியோர் மன்றங்களுக்குத் தகவல் கொடுப்பது முதலியன ஆகும். நீதித்துறைத் தலைமை இயக்குநரின் முழுக் கட்டுப்பாட்டிற்கும், சிறைக் கண்காணிப்பதற்கும் உட்பட்ட நன்னடத்தைக் கண்காணிப்பு



1987 ஏப்ரல் 25]

பிரிவு, தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளரின் நேரடிப் பொறுப்பில் உள்ளது. வட்டார நன்னடத்தை அலுவலர் ஒருவரைக் கொண்ட நன்னடத்தை ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றும் இப் பிரிவில் உள்ளது.

21. தமிழ்நாடு விடுதலையடைந்த கைதிகளின் உதவிச் சங்கம்:—

தமிழ்நாடு விடுதலை பெற்ற கைதிகள் உதவிச் சங்கம் 1921-ல் அமைக்கப்பட்டது. தற்செயலாகக் குற்றம் புரிபவர்களும், இளம் குற்றவாளிகளும் கைதேர்ந்த குற்றம் புரிகிறவர்களாக மாறுவதைத் தடுக்கும் நோக்குடன், கைதிகளுக்குப் புதுவாழ்வு அமைத்துக் கொடுத்தல், அவர்களுக்குத் தேவைப்படும் பலவித உதவிகள் செய்து கொடுத்தல், அவர்களின் நலனுக்காக சட்டங்களை இயற்றுதல், ஏற்கெனவே இருக்கும் சட்டங்களை நல்ல முறையில் பயன்படுத்தி புதிய சட்டங்களை இயற்றுதல் ஆகியவை இச் சங்கத்தின் நோக்கங்களாகும். விடுதலை செய்யப்பட்ட கைதிகள், சிறு தொழில்களை மேற்கொண்டு நடத்தவும், கருவிகள், தேநீர்கெட்டில், தையல் இயந்திரங்கள் ஆகியவற்றை வாங்குவதற்கும், இச்சங்கம் உதவித் தொகை கொடுக்கிறது. மேலும், புகை வண்டி அல்லது பேருந்துக் கட்டணத்திற்கான உதவித் தொகையையும், தொழில்களில் பயிற்சி பெறுவதற்கும், வேலை வாய்ப்பைத் தேடிக் கொள்ளவும், வழிக்காட சட்ட உதவி பெறுவதற்கும் முதியோர் உதவிப் பணம் பெறுவதற்கும், உதவித் தொகை அளிப்பதோடு, ஆடைகள், மூக்குக் கண்ணாடி முதலியவற்றையும் வழங்குகிறது.

அரசால், இச்சங்கத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 18,000 உதவி மானியமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது.

22. [illegible]னை மாநகரிலும், செங்கற்பட்டு மாவட்டத்திலும் உள்ள தண்டனைக் கைதிகளை வைப்பதற்கென ஒரு புதிய சிறையை புழலில் (செங்குன்றம்) கட்டுதல் :—

புழல் கிராமத்தில் தற்போது சிறைத் துறைக்குச் சொந்தமான நிலத்தில் நவீன அடிப்படையில் ஒரு புதிய சிறையைக் கட்டும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. தற்போது சென்னையிலுள்ள மத்தியச் சிறை, புழலிலுள்ள புதிய இடத்திற்கு விரைவில் மாற்றப்பட உள்ளது.

[1987 ஏப்ரல் 25

23. சிறை சீர்திருத்தக் குழு:—

தண்டனை பெற்றவர்கள் சிறையிலிருந்து விடுதலையான
பிறகு சமுதாயத்தில் கண்ணியமாகவும், நேர்மையுடனும் வாழ்க்கை
நடத்தும் வகை ., அவர்களுக்குப் புது வாழ்வு அளிப்பதும்,
அவர்களுக்கு சமூகத்துல் மதிப்பை ஏற்படுத்துவதும் இம்மாநிலத்
தில் சிறைச் சீர்திருத்தத்தின் முக்கிய நோக்கமாகும்; இவ்வாறாக
நல்ல குடிமக்களாக வாழ அவர்களுக்குப் புது வாழ்வு அளிக்கப்
படுகிறது. இம்மாநிலச் சிறை நிர்வாகத்தில் செய்ய வேண்டிய
மேம்பாடுகள் குறித்து பரிசீலிப்பதற்கும், இச்செயல் நோக்கத்திற்
காக பொருத்தமான சீர்திருத்தங்களைத் தெரிவிக்க வேண்டி
யும், 1978 பிப்ரவரியில் சிறை சீர்திருத்தக் குழுவை அரசு நியமித்
தது. பாட்னா உயர் நீதி மன்ற ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி
ஆர். எல். நரசிம்மன், ஐ.சி.எஸ். (ஓய்வு பெற்றவர்) அவர்
கள் இக்குழுவின் தலைவர் ஆவார். முன்னாள் சிறைத் துறைத்
தலைவர் திரு. எஸ். எம். டயஸ் அவர்களும் பேராசிரியர் டாக்டர்
வெங்கோபாராவ் (உளவியல் மருத்துவப் பேராசிரியர் மற்றும்
உளவியல் துறைத் தலைவர்) அவர்களும் இதன் உறுப்பினர்
களாவர். சிறைகள் மற்றும் கைதிகள் தொடர்பாக பல பரிந்
துரைகளை இக் குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. இந்த
அறிக்கை முழுவதும் மொத்தம் 223 பரிந்துரைகளாக வகைப்
படுத்தப்பட்டுள்ளன. அரசு இது வரை 99 பரிந்துரைகளை
ஏற்றுக் கொண்டுள்ளது. மீதமுள்ள 124 பரிந்துரைகளில், 55
பரிந்துரைகளை அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. மாநிலத்தின்
நிதி ஆதாரத்தைக் கருத்தில் கொண்டு, நிதிச் செலவு சம்பந்தப்
பட்ட இக் குழுவின் ஏனைய பரிந்துரைகளுக்கும், சிறை சட்டங்
களில் திருத்தம் செய்வதற்கும் அரசு கவனம் செலுத்தி வருகிறது.

24. அனைத்திந்திய சிறை சீர்திருத்தக் குழுவின் அறிக்கை :—

(நீதிபதி திரு. ஏ. என். முல்லா இதன் தலைவர் ஆவார்.)

இந்தியாவின் எல்லா மாநிலங்களிலுமுள்ள சிறைகள் நிரு
வாகத்தில் செய்யப்பட வேண்டிய மேம்பாடுகள் குறித்து பரி
சீலிப்பதற்கும், செயல் படுத்தப்பட வேண்டிய தக்க சீர்திருத்தங்
களைத் தெரிவிக்கும் பொருட்டும், நீதிபதி திரு. ஏ. என். முல்லா
தலைமையில் குழு ஒன்றை மத்திய அரசு நியமித்தது. மத்திய
அரசிடமிருந்து வந்த அறிக்கையில் 656 பரிந்துரைகள் உள்ளன.
முல்லா குழு அளித்த பரிந்துரைகள் குறித்து சிறைத் துறைத்
தலைமை இயக்குநருடன் கலந்தாலோசித்து ஆய்வு செய்யப்பட்டு
வருகிறது. ஏற்கெனவே பகுப்பாய்வு செய்யப்பட்ட சில பரிந்
துரைகளின் மீதான இந்த அரசின் கருத்து மத்திய அரசுக்கு
அனுப்பப்பட்டு வருகிறது. மொத்தமுள்ள 656 பரிந்துரை
களில் 382 பரிந்துரைகளின் மீதான தமிழக அரசின் குறிப்புரைகள்
மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டு விட்டன. எஞ்சியுள்ள 274
பரிந்துரைகள் தமிழக அரசின் பரிசீலனையில் இருந்து
வருகின்றன.



1987 ஏப்ரல் 25]

25. 1987–88 ஆம் ஆண்டில் செயல்படுத்த உத்தேசித்துள்ள சிறை நிருவாக மேம்பாட்டுத் திட்டங்கள் :—

| தொடர் எண். (1) | திட்டத்தின் பெயர். (2) | செலவு. (3) (ரூபாயில்). |
|---|---|---|
| 1 | சிறைகள்—கிளைச் சிறைகள் சில தெரிந்தெடுக்கப்பட்ட கிளைச் சிறைகளுக்கு நீரடிக் கழிப்பிட வசதி ஏற்படுத்துதல் .. .. .. .. | 5,84,000 |
| 2 | பாளையங்கோட்டை, மதுரை, வேலூர் இடங்களிலுள்ள மத்திய சிறைகளுக்கு அம்பாசிடர் கார் வாங்குவதும் இதற்கான சிறைக் காவலர்களை நியமித்தலும் .. .. .. | 2,79,000 |
| 3 | அரசு குறிப்பிட்டுள்ள நெறிமுறையின் அடிப்படையில் கிளைச் சிறைகளுடன் இணைத்துள்ள கிளைக் கருவூலங்களைக் காவல் காக்க 30 இரண்டாம் நிலைக் காவலர் பதவிகளை ஏற்படுத்துதல் .. .. .. | 2,76,000 |
| 4 | கோவை மத்தியச் சிறையில் கூடுதல் கண்காணிப்பாளருக்கு குடியிருப்புக் கட்டிடங்களும், சேலம் மத்தியச் சிறையில் துணைச் சிறை அலுவலருக்குக் குடியிருப்புக் கட்டிடங்களும் கட்டுதல் .. | 3,03,000 |
| | மொத்தம் .. | 14,42,000 |

26. ஏழாவது நிதிக் குழுவின் பரிந்துரைகள்:—

அனைத்து மாநிலங்களிலுள்ள சிறைகளின் நிருவாகத் தரத்தை மேம்படுத்துவதன் அவசியம் பற்றி ஏழாம் நிதிக் குழு பெரிதும் வலியுறுத்தியது. கைதி ஒருவருக்கு நாளொன்றுக்கு 6 ரூபாய் செலவிடப்பட வேண்டுமென்றும், தற்போதுள்ள சிறைகளை விரிவுப் படுத்துவதன் மூலமும் புதிய சிறைகளைக் கட்டுவதன் மூலமும்

[1987 எப்ரல் 25

சிறைகளில் அதிக எண்ணிக்கையில் கைதிகளை வைக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்றும், இக்குழு வலியுறுத்தியுள்ளது. அதன் படி, 1979–80 முதல் 1983–84 வரையிலான கால அளவிற்கு வருவாய்ச் செலவு வகையில் ரூ. 631 இலட்சமும், மூலதனச் செலவு வகையில் ரூ. 862 இலட்சமும் ஒதுக்கீடு செய்யும்படி இக் குழு பரிந்துரைத்தது. மூலதனச் செலவின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியுதவியானது தற்போதுள்ள சிறைகளில் இடவசதியைப் பெருக்குவதற்காகவும், வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக வும் முற்றிலுமாகப் பயன்படுத்தப்பட்டு விட்டது. வருவாயினச் செலவின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதி உதவியும் சிறைச்சாலைகளுக் கான பின் வரும் திட்டங்களை நிறைவேற்றிய வகையில் முற்றிலு மாகப் பயன்படுத்தப்பட்டுவிட்டன. கிளைச் சிறைகளை வரு வாய்த்துறையின் கட்டுப்பாட்டிலிருந்து சிறைத் துறையின் நிரு வாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருதல், கைதிகளுக்குச் சத்துணவுத் திட்டத்தை துவக்குதல், சிறைகளில் எளிய வாழ்க் கைத் தொழில் திட்டங்களைத் தொடங்குதல், ஊதியம் ஈட்டுத் திட்டத்தினைச் செயற்படுத்துதல் மற்றும் கைதிகளுக்குக் கூடுதல் படுக்கை, உடைகள் மற்றும் பாத்திரங்கள் வழங்குதல் போன் றவை. இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை முழுவதும் பயன்படுத்தப்பட்டு விட்டது.



1987 எப்ரல் 25]

34. உரிமையியல் நீதிமன்றங்களில் தமிழில் தீர்ப்பு வழங்கு தல்—உயர் நீதி மன்றத்தின் கீழுள்ள நடுவர் மன்றங்கள், வருகை குறித்த நீதிமன்றங்கள், வருவாய் நீதி மன்றங்கள் உட்பட உரிமையியல் நீதிமன்றங்களில் 1-2-1982 ஆம் நாளிலிருந்து தமிழில் தீர்ப்பு வழங்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

35. 1986–87 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட திட்டங்கள்—

(1) தமிழ்நாட்டில் குற்ற வழக்கு தொடர்வதற்குரிய இயக்ககம் அமைத்தல்.

(2) மாவட்டங்களிலுள்ள அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துனர்களுக்கு சட்டப் புத்தகங்கள் வழங்கும் பொருட்டு ரூ. 64,000-க்கு அனுமதி வழங்கியது.

(3) கன்னியாகுமரி மாவட்டம் தக்கலையைச் சேர்ந்த பத்ம நாபபுரத்திலுள்ள நீதித் துறைக் கூடுதல் முதல் வகுப்பு மாஜிஸ்ட்டு ரேட்டு நீதி மன்றத்தில் அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்து நருக்கான (நிலை—II) அலுவலக அறை கட்டுவதற்கு ரூ. 16,000 க்கு அனுமதி வழங்கியது.

(4) எரணியல் என்ற இடத்தில் அரசு குற்றவியல் உதவி வழங்கு நடத்துநர்களுக்கு (நிலை-II) அலுவலக அறை கட்டு வதற்கு ரூ. 16,000-க்கு அனுமதி வழங்கியது.

(5) குழித்துறையில் அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்களுக்கு (நிலை-II) அலுவலக அறை கட்டுவதற்கு ரூ. 16,000-க்கு அனுமதி வழங்கியது.

(6) செங்கல்பட்டு, புதுக்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்களுக்குச் சட்டப் புத்தகங்கள் வழங்குவதற்காக முறையே ரூ. 21,000, ரூ. 6,000-க்கு அனுமதி வழங்கியது.

(7) பெரியார் மாவட்டத்தில் அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துனர் (நிலை-I) பதவி ஒன்றுக்கும், அலுவலக உதவியாளர் பதவி ஒன்றுக்கும் அனுமதி வழங்கியது.

(8) அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துனர் (நிலை-II) பதவியை, அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர் (நிலை-I) ஆக பதவி உயர்த்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

(9) தருமபுரி. வழக்குரைஞர் சங்கத்திற்கு தனியாக அறை கட்டுவதற்காக ரூ. 88,000-க்கு அனுமதி வழங்கியுள்ளது.

(10) (நீதிமுறை) கட்டளைச் சேவகர்களைக் காவல் பணியிலிருந்து விடுவிப்பதை கருத்தில் கொண்டு நடப்பு ஆண்டில் உரிமையியல் நீதிமன்றம் ஒவ்வொன்றிலும் இரு காவலர் வீதம் 32 காவலர்கள் பதவிகளைப் படிப்படியாக அனுமதிக்க வேண்டி உயர் நீதி மன்றத்தின் செயற்குறிப்பை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. ரூ. 450—10—570—15—720 என்ற ஊதிய விகிதத்தில் 15 காவலர் பதவிகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

(11) இம்மாநிலத்திலுள்ள அனைத்து உரிமையியல் நீதிமன்றங்களிலும், (நீதிமுறை) கட்டளைச் சேவகர்கள் ஒன்று சேர்ந்து பணியாற்றும் பொருட்டு நீண்ட பெஞ்சுகளையும் சாய்வு மேஜைகளையும் வழங்குவதற்காக ரூ. 2,45,000-க்கு அனுமதி வழங்கியது.

(12) உதகமண்டலத்திலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில் நூலகம் அமைத்தல்.

(13) சேலம் மாவட்டத்திலுள்ள உரிமையியல் நீதிமன்றங்களில் பயன்படுத்துவதற்கு இரும்பு அலமாரிகள் வழங்குதல்.

(14) எழும்பூர், பெருநகர் தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றத்தில் பயன்படுத்துவதற்கு இரும்பு நிலை அடுக்கம் (பதிவேடு) வாங்குவதற்காக ரூ. 30,000-க்கு அனுமதி வழங்கியது.

(15) சென்னை, மாநகர் உரிமையியல் நீதிமன்றத்தின் தீர்ப்பாணை வரைவெழுதும் பிரிவிற்காக, இளநிலை உதவியாளர்களை உதவியாளர்களாக நிலை உயர்த்தவும், 8 உதவியாளர்கள், 15 தட்டச்சர்கள், 2 பதிவுரு எழுத்தர்கள் ஆகிய கூடுதல் பணியாளர்களை ஏற்படுத்தவும் அனுமதி வழங்கியது.

(16) சென்னை மாநகர் உரிமையியல் நீதிமன்றத்தில், பணிச் சுமையைக் குறைக்கும் பொருட்டு, தற்காலிக கூடுதல் (Sheristadar) செரஸ்தார் பதவியைக் கூடுதலாக ஏற்படுத்தவும் பதிவுரு எழுத்தர் ஒருவரை நியமிக்கவும் அரசு அனுமதி வழங்கியது.

(17) மாநகர் உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் வழக்கு ஆவணங்களைப் பராமரிக்கும் பொருட்டு, 38 இரும்பு அலமாரிகள் வாங்குவதற்கும், உதவியாளர் ஒருவர், அலுவலக உதவியாளர், ஆகிய கூடுதல் பதவிகளை ஏற்படுத்தவும் அரசு அனுமதி வழங்கியது.

(18) மிகவும் அதிகரித்துள்ள பணிகளைச் சமாளிக்கும் பொருட்டு 3 மேல்முறையீட்டு ஆய்வாளர்கள், 3 நீதிமன்ற அதிகாரிகள், 5 இளநிலை உதவியாளர்கள் ஆகிய தற்காலிக கூடுதல் பணியாளரை ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியது.



(19) சென்னை, உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியின் அறையை அலங்கரிக்கும் பொருட்டு, அலங்காரக்குழல் விளக்குகள், நவீன மேசை நாற்காலிகள் ஆகியவற்றுக்காக, ரூ. 1 20,000-க்கு அரசு அனுமதி வழங்கியது.

(20) சென்னை, உயர்நீதிமன்றத்தில் கருத்தரங்கு கூடத்திற்கு புதிய மேசை நாற்காலிகள் வாங்குவதற்காக ரூ. 68,075-க்கு அரசு அனுமதி வழங்கியது.

(21) சென்னை, உயர்நீதிமன்றத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட ரிட் பிரிவிற்காக இரும்பு நிலை அடுக்கம் (பதிவேடு) வாங்குவதற்காக ரூ. 65,500-க்கு அரசு அனுமதி வழங்கியது.

(22) உயர்நீதிமன்றத்தின் ஆங்கிலப் பதிவேடு பிரிவிற்காக இரும்பு நிலை அடுக்கம் (பதிவேடு) வாங்கும் பொருட்டு, ரூ. 2,73,800-க்கு அரசு அனுமதி வழங்கியது.

(23) சென்னை, மாநகர் உரிமையியல் நீதிமன்றத்திற்கு எலக்ட்ரானிக் ஸ்டென்சில் கட்டர் ( Electronic Stencil cutter) வாங்குவதற்காக ரூ. 28,000-க்கு அரசு அனுமதி வழங்கியது.

(24) சென்னை, உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு கூடுதலாக 3 தற்காலிக நேர்முக உதவியாளர்களை நியமிக்க அரசு அனுமதி வழங்கியது.

36. நீதிபதி பதவிகளை நிரப்புதல்.—காலியாகவுள்ள மாவட்ட முன்சீப் பதவிகளுக்கும், நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு பதவிகளுக்கும், ஆட்களைத் தேர்ந்தெடுத்து நியமிக்குமாறு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைக் குழுவிற்கு அரசு கடிதம் எழுதியுள்ளது.

37. 1984, 1985, 1986 ஆகிய மூன்று ஆண்டுகளில் சென்னை உயர்நீதிமன்றத்திலும், சார்நிலை நீதிமன்றங்களிலும் (உரிமையியல், குற்றவியல்) தாக்கல் செய்யப்பட்ட, முடிவு செய்யப்பட்ட, முடிவு செய்யப்படாமலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை பற்றிய புள்ளி விவரங்களைக் குறிப்பிடும் விவர அறிக்கை இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.

1984, 1985 மற்றும் 1986 ஆம் ஆண்டுகளில் சென்னை உயர்நீதிமன்றம் சார் பட்ட விசாரணையிலுள்ள வழக்குகள் பற்றிய புள்ளிவிவரங்கள் வருமாறு :—





நிலை நீதிமன்றங்கள் (சிவில்) ஆகியவற்றில் தாக்கல் செய்யப்பட்ட முடிவு செய்யப்

| வழக்குகளின் தன்மை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| உயர்நீதி மன்றம், சென்னை :— | | | | | | | | | | | | |
| | 1984 | | | | 1985 | | | | 1986 | | | |
| 1 சிவில் வழக்குகள் .. .. | 918 | 2,927 | 352 | 2,575 | 789 | 3,364 | 300 | 3,064 | 815 | 3,879 | 374 | 3,505 |
| 2 உயில் தொடர்பான அசல் தரப்பு வழக்குகள். | 20 | 69 | 8 | 61 | 29 | 90 | 9 | 81 | 21 | 102 | 2 | 100 |
| 3 இல்வாழ்க்கை தொடர்பான அசல் தரப்பு வழக்குகள். | 41 | 99 | 37 | 62 | 44 | 106 | 23 | 83 | 42 | 126 | 45 | 81 |
| 4 நடுவர் தீர்ப்புச் சட்டத்தின் கீழ் மனு | 62 | 167 | 39 | 128 | 37 | 165 | 28 | 137 | 36 | 173 | 35 | 138 |
| 5 இந்திய வாரிசுரிமை சட்டத்தின் கீழ் மனு. | 243 | 384 | 242 | 142 | 291 | 433 | 266 | 167 | 389 | 556 | 294 | 262 |
| 6 ஏனைய அசல் தரப்பு மனுக்கள் .. | 107 | 303 | 114 | 189 | 184 | 373 | 127 | 246 | 158 | 404 | 138 | 266 |
| 7 நிறுவனங்கள் சங்கங்கள் கலைப்பு தொடர்பான வழக்குகள். | 81 | 233 | 50 | 183 | 47 | 230 | 46 | 184 | 59 | 243 | 26 | 217 |
| 8 நிறுவனம் தொடர்பான ஏனைய மனுக்கள். | 42 | 62 | 17 | 45 | 45 | 90 | 41 | 49 | 32 | 81 | 39 | 42 |
| 9 தேர்தல் மனுக்கள் .. .. | 12 | 18 | 5 | 13 | 6 | 19 | 11 | 8 | 1 | 9 | 6 | 3 |
| 10 நொடிப்பு நிலை தொடர்பான மனுக்கள். | 74 | 110 | 51 | 59 | 64 | 123 | 54 | 69 | 78 | 147 | 57 | 90 |
| 11 நிறைவேற்று மனுக்கள் .. .. | 121 | 175 | 148 | 27 | 143 | 170 | 139 | 31 | 158 | 189 | 118 | 71 |
| 12 நிறுவனம் தொடர்பான விண்ணப்பங்கள். | 836 | 1,293 | 613 | 680 | 557 | 1,237 | 658 | 579 | 770 | 1,349 | 488 | 861 |
| 13 அவதூறு தொடர்பான விண்ணப்பங்கள். | 206 | 390 | 166 | 224 | 294 | 518 | 258 | 260 | 309 | 569 | 315 | 254 |

| வழக்குகளின் தன்மை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்கு களின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவு றாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்கு களின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவு றாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்கு களின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவு றாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| | 1984 | | | | 1985 | | | | 1986 | | | |
| பல்வகை விண்ணப்பங்கள்— | | | | | | | | | | | | |
| 14 தொடிப்பு நிலை மனுக்கள் தொடர்பான கோப்புகள். | 395 | 558 | 446 | 112 | 337 | 449 | 326 | 123 | 351 | 474 | 281 | 193 |
| 15 முதலாம் மேல்முறையீடுகள் .. | 872 | 5,114 | 354 | 4,760 | 1,089 | 5,844 | 522 | 5,327 | 1,309 | 6,636 | 677 | 5,959 |
| 16 அசல் தரப்பு மேல்முறையீடுகள் | 219 | 733 | 109 | 624 | 192 | 816 | 96 | 720 | 289 | 1,009 | 166 | 843 |
| 17 முத்திரைப் பத்திரம் தொடர்பான மேல்முறையீடுகள். | 110 | 422 | 132 | 290 | 113 | 409 | 81 | 328 | 222 | 550 | 142 | 408 |
| 18 ரிட் மேல்முறையீடுகள் .. .. | 1,218 | 3,416 | 1,432 | 1,984 | 1,195 | 3,179 | 1,093 | 2,086 | 1,396 | 3,482 | 1,111 | 2,371 |
| 19 இரண்டாம் மேல் முறையீடுகள் .. | 2,089 | 9,458 | 1,073 | 8,385 | 2,158 | 10,543 | 1,015 | 9,528 | 2,288 | 11,816 | 1,018 | 10,798 |
| 20 ஆணைக்கு எதிரான மேல்முறையீடுகள். | 782 | 2,988 | 192 | 2,796 | 932 | 3,728 | 218 | 3,510 | 1,214 | 4,724 | 427 | 4,297 |
| 21 மேல்முறையீட்டு ஆணைக்கு எதிரான மேல்முறையீடுகள். | 78 | 238 | 15 | 223 | 86 | 309 | 12 | 297 | 88 | 385 | 16 | 369 |
| 22 சிவில் மறு விசாரணை மனுக்கள் .. | 4,934 | 10,398 | 3,961 | 6,437 | 4,551 | 10,988 | 2,802 | 8,186 | 4,284 | 12,470 | 3,418 | 9,052 |
| 23 வரி வழக்குகள் .. .. .. | 2,200 | 7,873 | 566 | 7,307 | 2,667 | 8,974 | 679 | 8,295 | 2,039 | 10,384 | 480 | 9,904 |
| 24 வரி வழக்கு மனுக்கள் .. .. | 502 | 917 | 401 | 516 | 840 | 1,356 | 847 | 509 | 571 | 1,080 | 422 | 658 |
| 25 பிற நீதி மன்றங்களிலிருந்து அனுப்பப் படுகிற வழக்குகள். | 12 | 34 | .. | 34 | 19 | 53 | 2 | 51 | 10 | 61 | .. | 61 |
| 26 இல்வாழ்க்கை தொடர்பான வழக்குகள் | 25 | 76 | 20 | 56 | 31 | 87 | 25 | 62 | 22 | 85 | .. | 85 |
| 27 ரிட் மனுக்கள் .. .. .. | 12,943 | 37,902 | 7,873 | 30,029 | 13,539 | 43,568 | 6,456 | 37,112 | 14,303 | 51,615 | 8,113 | 43,502 |
| 28 உச்ச நீதிமன்ற (இசைவு மனுக்கள்) | 144 | 294 | 168 | 126 | 559 | 685 | 92 | 593 | 62 | 655 | 546 | 109 |
| 29 தனி நடுவர்மன்ற மேல்முறையீடுகள் | 68 | 610 | .. | 610 | 34 | 644 | 2 | 642 | 53 | 695 | 5 | 690 |
| 30 அவதூறு தொடர்பான மேல்முறையீடுகள். | 3 | 17 | 9 | 8 | 10 | 18 | 8 | 10 | 9 | 19 | 3 | 16 |

| வழக்குகளின் தன்மை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவு பெறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவு பெறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவு பெறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| 31 வணிகக்குறி தொடர்பான மேல் முறையீடுகள். | 11 | 26 | .. | 26 | 6 | 32 | .. | 32 | 10 | 42 | 1 | 41 |
| 32 வணிகக்குறி தொடர்பான இரண்டாம் மேல் முறையீடுகள். | .. | 3 | .. | 3 | .. | 3 | .. | 3 | 1 | 4 | .. | 4 |
| 33 பல்வகை வழக்குகள் .. .. | 39,057 | 79,074 | 29,664 | 49,410 | 27,683 | 87,093 | 30,739 | 56,354 | 41,396 | 97,750 | 31,197 | 66,553 |
| மாநகர சிவில் நீதிமன்றம், சென்னை— | | | | | | | | | | | | |
| 1 சிவில் வழக்குகள் .. .. .. | 10,780 | 25,798 | 11,296 | 14,502 | 11,031 | 25,523 | 9,811 | 15,712 | 10,617 | 26,329 | 10,877 | 15,452 |
| 2 சிவில் பல்வகை வழக்குகள் .. | 24,556 | 48,358 | 26,109 | [illegible]14 | 32,772 | 52,621 | 28,352 | 24,269 | 33,537 | 57,806 | 33,132 | 24,674 |
| 3 சிவில் மேல் முறையீடுகள் .. .. | 734 | 1,130 | 580 | 550 | 750 | 1,330 | 758 | 572 | 577 | 1,149 | 698 | 451 |
| 4 சிவில் பல்வகை மேல்முறையீடுகள் | 361 | 539 | 311 | 228 | 369 | 547 | 390 | 199 | 263 | 462 | 291 | 171 |
| 5 நிறைவேற்று நடைமுறைகள் .. | 2,876 | 5,695 | 2,894 | 2,801 | 3,174 | 5,975 | 3,129 | 2,846 | 2,864 | 5,710 | 2,602 | 3,108 |
| சிறு வழக்கு நீதிமன்றம், சென்னை — | | | | | | | | | | | | |
| 1 சிவில் வழக்குகள் .. .. .. | 5,026 | 7,752 | 4,621 | 3,140 | 4,422 | 7,564 | 4,048 | 3,516 | 4,317 | 7,833 | 5,172 | 2,661 |
| 2 சிவில் பல்வகை வழக்குகள் .. | 16,344 | 26,209 | 17,740 | 8,469 | 17,790 | 23,259 | 16,656 | 6,603 | 21,089 | 27,692 | 19,395 | 8,397 |
| 3 ஆணை நிறைவேற்று நடைமுறைகள் | 883 | 2,341 | 1,362 | 979 | 1,980 | 1,959 | 397 | 1,562 | 690 | 2,252 | 562 | 1,690 |
| மாவட்ட நீதிமன்றங்கள் — | | | | | | | | | | | | |
| 1 சிவில் வழக்குகள் .. .. .. | 1,668 | 1,751 | 1,515 | 236 | 1,355 | 1,591 | 1,412 | 179 | 1,622 | 1,801 | 1,564 | 237 |
| 2 சிவில் மேல் முறையீடுகள் .. .. | 4,072 | 5,921 | 2,869 | 3,052 | 3,539 | 5,591 | 3,278 | 2,313 | 2,986 | 5,299 | 3,057 | 2,242 |
| 3 சிவில் பல்வகை மேல்முறையீடுகள் .. | 1,766 | 2,646 | 1,706 | 940 | 1,587 | 2,427 | 1,372 | 1,055 | 1,526 | 2,581 | 1,254 | 1,327 |
| 4 சிவில் பல்வகை வழக்குகள் .. | 36,727 | 42,016 | 35,397 | 6,619 | 24,803 | 31,422 | 27,627 | 3,795 | 34,144 | 37,939 | 33,253 | 4,686 |
| 5 ஆணை நிறைவேற்று மனுக்கள் .. | 324 | 406 | 286 | 120 | 279 | 399 | 276 | 123 | 439 | 562 | 351 | 211 |
| 6 நொடிப்பு நிலை தொடர்பான மனுக்கள். | 2 | 3 | 2 | 1 | 2 | 4 | 3 | 1 | .. | 1 | 1 | .. |

| வழக்குகளின் தன்மை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவு பெறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| துணை நீதிமன்றங்கள்— | | | | |
| 1 சிவில் வழக்குகள் .. .. | 19,137 | 33,873 | 14,866 | 19,007 |
| 2 சிவில் பல்வகை வழக்குகள் .. | 1,17,812 | 1,45,342 | 1,09,060 | 36,282 |
| 3 சிவில் மேல் முறையீடுகள் .. | 5,182 | 10,197 | 5,012 | 5,18[illegible] |
| 4 சிவில் பல்வகை மேல் முறையீடுகள் | 2,868 | 5,245 | 2,283 | 2,9[illegible] |
| 5 ஆணை நிறைவேற்று மனுக்கள் .. | 6,198 | 11,019 | 5,583 | 5,4[illegible] |
| 6 நொடிப்பு நிலை தொடர்பான மனுக்கள். | 629 | 1,287 | 610 | 677 |
| மாவட்ட முன்சீப் நீதிமன்றம்— | | | | |
| 1 சிவில் வழக்குகள் .. .. | 96,981 | 2,02,808 | 86,954 | 1,15,854 |
| 2 சிவில் பல்வகை வழக்குகள் .. | 3,18,408 | 4,19,753 | 3,05,395 | 1,14,358 |
| 3 நிறைவேற்று மனுக்கள் .. | 47,942 | 88,729 | 45,734 | 42,995 |
| 4 நொடிப்பு நிலை தொடர்பான மனுக்கள். | 122 | 268 | 166 | 102 |

| வழக்குகளின் தன்மை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவு பெறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவு பெறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| துணை நீதிமன்றங்கள்— | | | | | | | | |
| 1 சிவில் வழக்குகள் | 10,158 | 29,165 | 11,641 | 17,524 | 13,917 | 31,441 | 11,579 | [illegible],862 |
| 2 சிவில் பல்வகை வழக்குகள் | 1,07,105 | 1,43,387 | 1,11,438 | 31,949 | 1,12,340 | 1,44,289 | 1,06,378 | 37,911 |
| 3 சிவில் மேல் முறையீடுகள் | 5,061 | 10,247 | 4,720 | 5,527 | 4,354 | 9,881 | 4,320 | 5,561 |
| 4 சிவில் பல்வகை மேல் முறையீடுகள் | 2,138 | 5,102 | 1,985 | 3,117 | 1,935 | 5,052 | 2,039 | 3,013 |
| 5 ஆணை நிறைவேற்று மனுக்கள் | 5,508 | 10,844 | 5,215 | 5,629 | 7,088 | 12,717 | 6,545 | 6,182 |
| 6 நொடிப்பு நிலை தொடர்பான மனுக்கள். | [illegible] | 1,281 | 606 | 675 | 1,333 | 2,008 | 839 | 1,189 |
| மாவட்ட முன்சீப் நீதிமன்றம்— | | | | | | | | |
| 1 சிவில் வழக்குகள் | 85,691 | 2,01,645 | 74,443 | 1,27,102 | 91,561 | 2,18,663 | 80,985 | 1,37,678 |
| 2 சிவில் பல்வகை வழக்குகள் | 2,84,894 | 3,69,252 | 2,54,296 | 1,14,956 | 2,65,488 | 3,79,844 | 2,56,401 | 1,23,443 |
| 3 நிறைவேற்று மனுக்கள் | 41,985 | 84,980 | 40,629 | 44,351 | 41,367 | 85,718 | 42,723 | 42,995 |
| 4 நொடிப்பு நிலை தொடர்பான மனுக்கள். | 215 | 318 | 102 | 219 | 185 | 401 | 179 | 222 |

சென்னை உயர்நீதி மன்றத்திலும் (குற்றவியல்) சார்நிலை நீதிமன்றங்களிலும் 1984, விசாரணையிலுள்ள வழக்குகள் பற்றிய புள்ளி விவரங்கள் :—

| வழக்குகளின் தன்மை. (1) | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (2) | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. (3) | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (4) | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. (5) |
|---|---|---|---|---|
| | 1984 | | | |
| உயர்நீதி மன்றம், சென்னை — | | | | |
| 1 பிற நீதிமன்றங்களிலிருந்து அனுப்பப்படும் விசாரணைகள். | 11 | 21 | 14 | .. |
| 2 குற்றவியல் வழக்கு மேல்முறையீடுகள் | 888 | 3,345 | 558 | 2,787 |
| 3 குற்றவியல் மறு விசாரணை மனுக்கள் | 934 | 3,016 | 672 | 2,344 |
| 4 வேறு நீதிமன்றங்களுக்கு அனுப்பப்படும் வழக்குகள். | 4 | 24 | 8 | 16 |
| 5 பல்வகை வழக்குகள் | 9,251 | 13,336 | 8,217 | 5,119 |
| செசன்ஸ் நீதிமன்றங்கள் — | | | | |
| 1 செசன்ஸ் வழக்குகள் | 3,220 | 4,989 | 3,029 | 1,960 |
| 2 குற்றவியல் வழக்கு மேல் முறையீடுகள். | 5,061 | 7,629 | 4,909 | 2,720 |
| 3 குற்றவியல் மறு விசாரணை மனுக்கள் | 1,230 | 1,942 | 1,274 | 668 |
| பெருநகர மாஜிஸ்டிரேட்டுகள் நீதிமன்றம் — முறையான வழக்கு விசாரணைகள் | 2,28,578 | 2,50,304 | 2,30,595 | 1,97,090 |
| நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள்— | | | | |
| 1 மேல் முறையீடுகள் | 862 | 1,110 | 823 | 281 |
| 2 ஏனைய சட்ட வழக்குகள் | 4,17,652 | 5,41,708 | 4,67,102 | 74,606 |
| 3 இந்திய தண்டனை சட்டக் கோவையின் கீழ் வரும் வழக்குகள் | 1,10,658 | 1,73,452 | 1,08,805 | 64,647 |
| 4 குற்றவியல் நடைமுறைக் கோவை வழக்குகள் மற்றும் பல்வகை வழக்குகள். | 31,961 | 34,366 | 31,887 | 2,479 |



ரல் 25]

1985 மற்றும் 1986 ஆம் ஆண்டுகளில் தொடரப்பட்ட, முடிவு செய்யப்பட்ட

| வழக்குகளின் தன்மை. (1) | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (6) | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. (7) | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (8) | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. (9) | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (10) | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. (11) | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (12) | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. (13) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1985 | | | | 1986 | | | |
| உயர்நீதி மன்றம், சென்னை — 1 | 19 | 26 | 16 | 10 | 14 | 24 | 18 | 6 |
| 2 | 968 | 3,755 | 775 | 2,980 | 1,196 | 4,176 | 612 | 3,564 |
| 3 | 838 | 3,182 | 631 | 2,551 | 882 | 3,433 | 824 | 2,609 |
| 4 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 5 | 2,825 | 6,944 | 1,403 | 5,541 | 15,221 | 20,762 | 9,411 | 11,351 |
| செசன்ஸ் நீதிமன்றங்கள் — 1 | 3,218 | 5,178 | 3,120 | 3,058 | 800 | 2,858 | 2,037 | 821 |
| 2 | 4,417 | 7,137 | 4,481 | 2,656 | 3,139 | 5,795 | 4,046 | 1,749 |
| 3 | 867 | 1,535 | 931 | 604 | 966 | 1,570 | 1,010 | 560 |
| பெருநகர மாஜிஸ்டிரேட்டுகள் நீதிமன்றம் | 2,25,796 | 2,45,505 | 2,21,862 | 23,643 | 2,22,879 | 2,46,522 | 2,17,531 | 28,994 |
| நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள்— 1 | 967 | 1,254 | 927 | 327 | 865 | 1,202 | 948 | 254 |
| 2 | 4,90,442 | 5,65,048 | 4,78,157 | 86,891 | 5,21,655 | 6,08,546 | 4,98,638 | 1,09,988 |
| 3 | 1,12,145 | 1,76,792 | 1,07,756 | 69,036 | 1,03,477 | 1,72,513 | 96,043 | 76,470 |
| 4 | 37,500 | 39,979 | 37,264 | 2,715 | 21,383 | 24,098 | 21,030 | 3,068 |

சென்னை-600 008.
135525